# வேளாண்மை–உழவர் நலத்துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2026 – 2027

## மானியக் கோரிக்கை எண். 5


# ர.வினோத்
## வேளாண்மை–உழவர் நலத்துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2026

# பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| முன்னுரை | | 1 |
| 1. | வேளாண்மை | 22-103 |
| 2. | சர்க்கரைத் துறை | 104-132 |
| 3. | தோட்டக்கலை - மலைப்பயிர்கள் | 133-184 |
| 4. | வேளாண்மைப் பொறியியல் | 185-230 |
| 5. | வேளாண்மை விற்பனை - வேளாண் வணிகம் | 231-302 |
| 6. | தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் | 303-331 |
| 7. | விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு | 332-364 |
| 8. | தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை | 365-378 |
| 9. | மானியக் கோரிக்கை | 379-383 |
| நிறைவுரை | | 384-387 |

## முன்னுரை

**"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்**
**உழந்தும் உழவே தலை".**

**-திருக்குறள் 1031**

உலகம், பல தொழில்களைச் செய்து இயங்கினாலும் ஏர்த்தொழிலைச் சார்ந்தே இயங்குகிறது. அதனால், உழவுத் தொழிலே சிறந்தது என்று திருக்குறள் கூறுவதிலிருந்து உழவின் உன்னதத்தை தெள்ளத் தெளிவாக அறிந்து கொள்ள முடிகின்றது.

வேளாண்மையின் முக்கியத்துவத்தை வெள்ளைக்குடி நாகனார் புறநானூற்றுப் பாடலில்

**"பொருபடை தரூஉம் கொற்றமும் உழுபடை**
**ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே."**

எனக்கூறி, ஒரு நாட்டின் **அரசியல் வலிமை, செல்வம் ஆகிய அனைத்திற்கும் உழவுத் தொழிலே அடிப்படை** என்பதை வலியுறுத்தியுள்ளார்.

வேளாண்மைத் தொழிலானது, பெரும்பாலான கிராமப்புர மக்களின் முதன்மையான தொழிலாகவும் அவர்களின் வாழ்வாதாரத்தை நிர்ணயிப்பதாகவும் உள்ளது. வேளாண்மையே நாட்டின் உணவுப் பாதுகாப்பு, பொருளாதார ஏற்றம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மக்களின் வாழ்க்கைத்தரம் ஆகியவற்றில் பெரும்பங்காற்றி நாட்டின் முன்னேற்றத்தினையும் நிர்ணயிக்கும் முதுகெலும்பாக உள்ளது.

## வேளாண்மைத்துறை மற்றும் பிற துறைகளின் தோற்றம்

1863 ஆம் ஆண்டு சென்னை மாகாண ஆளுநர் சர் வில்லியம் டெனிசன் வேளாண்மை தொடர்பான நடைமுறைக் குறிப்புகளை தனது குறிப்புக்குழுவிற்கு சமர்ப்பித்தார். இது வேளாண்மையில் தொடர் முன்னேற்றத்திற்கு

வித்திட்டு, வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ள ஏதுவாயின.

1880-ஆம் ஆண்டு இந்திய பஞ்ச ஆணையம் (Indian Famine Commission) பரிந்துரைத்தப்படி 1882 ஆம் ஆண்டு வேளாண்மைத் துறை தொடங்கப்பட்டது. பின்னர் வருவாய் தீர்வு, நில ஆவணங்கள் மற்றும் வேளாண்மை ஆணையரகப் பணியாக வேளாண்மைத்துறை மறுவடிவமைக்கப்பட்டு, 1905 ஆம் ஆண்டு வேளாண்மை இயக்குநரின் தலைமையில் தனித்துறையாக மறுசீரமைக்கப்பட்டு செயல்படத் தொடங்கியது. தொடக்க காலத்தில் தலைமைச் செயலக அளவில் இதன் பணிகள் வருவாய்த் துறை, பின்னர் திட்டவளர்ச்சித் துறையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நிலையில், வேளாண்மைத்துறை தனியாக உருவாக்கப்பட்டு, அனைத்துப் பணிகளும் அரசு செயலாளரின் கட்டுப்பாட்டிற்கு மாற்றப்பட்டன. காலப்போக்கில்

வேளாண்மைத் துறையிலிருந்து **சர்க்கரைத்துறை** (1969), **வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை** (1977-78), **தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை** (1979-80), **விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத்துறை** (1979-80), **வேளாண்மைப் பொறியியல் துறை** (1980-81) ஆகியவை தனித்துறைகளாக உருவாக்கப்பட்டன. 2022-ஆம் ஆண்டு விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறையின் தலைமையகம் கோயம்புத்தூரிலிருந்து சென்னைக்கு மாற்றப்பட்டது; அதே ஆண்டு சர்க்கரைத்துறை மீண்டும் வேளாண்மை-உழவர் நலத்துறையுடன் இணைக்கப்பட்டதுடன், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையிலிருந்து (2022 ஆம் ஆண்டு முதல்) தமிழ்நாடு உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம் பிரிக்கப்பட்டு குறு, சிறு

மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறைக்கு மாற்றப்பட்டது.

மேலும், 1876-ஆம் ஆண்டு சென்னை சைதாப்பேட்டையில் மாநிலத்தின் முதல் வேளாண்மைக் கல்லூரி தொடங்கப்பட்டு, 1971-ஆம் ஆண்டு கோயம்புத்தூரில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது.

இவ்வாறு, வேளாண்மை – உழவர் நலத்துறையிலிருந்து பல சிறப்புத் துறைகள் உருவாகி, தமிழக வேளாண் வளர்ச்சிக்கு வலுவான நிர்வாக அடித்தளத்தை உருவாக்கியுள்ளன.

தமிழ்நாடு, வேளாண் வளம் மிக்க செழிப்பான நிலங்கள், தேவையான பருவமழைப் பொழிவு, ஏழு விதமான தட்பவெப்ப மண்டலங்கள், விவசாயத்திற்குப் பாசனநீர் வழங்கும் நீர்ப்பாசனத் திட்டங்கள், காலமாற்றத்திற்கு ஏதுவான வளர்ந்து

வரும் அறிவியல் தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய புதிய வேளாண் தொழில்நுட்பங்கள், மக்களின் தேவைக்கேற்ற பல்வேறு வேளாண் பயிர்கள், தோட்டக்கலைப் பயிர்கள் மற்றும் மூலிகைப் பயிர்கள், பயிர்களுக்கேற்ற பயிர் சாகுபடி முறைகள், மதிப்புக் கூட்டுதல் முறைகள், உணவு பதப்படுத்தும் முறைகள் போன்ற பல சிறப்பம்சங்களால் வேளாண்மையில் நாட்டின் முன்னணி மாநிலங்களில் ஒன்றாகத் தொடர்ந்து திகழ்ந்து வருகின்றது.

தமிழ்நாடு அரசு, 'வேளாண்மையில் முன்னேற்றமும், உழவர் நலனில் தொடர்ந்து ஏற்றமும்' என்ற உயர்ந்த நோக்கத்துடன், வேளாண்மை - உழவர் நலத்துறையின் பல்வேறு திட்டங்கள் வாயிலாக வேளாண் விளைச்சலை அதிகரித்து, உழவர்களின் வருமானத்தை உயர்த்தி அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட முயற்சி எடுத்து வருகின்றது.

இயற்கை வழங்கியுள்ள தாய்மண்ணை வளம் மிகுந்த மண்ணாக மீட்டெடுக்க மண் வள மேம்பாடு, விதைகளே நல்ல விளைச்சலுக்கு ஆதாரம் என்பதால் உழவர்களுக்குத் தரமான நல்விதை விநியோகம், சாகுபடிக்குத் தேவையான பாசன நீர் வழங்குதல், விவசாயத்திற்குத் தேவையான மும்முனை மின்சாரம் தொடர்ந்து வழங்குதல், விவசாயிகளின் தேவைக்கேற்ப புதிய உயர் விளைச்சல் இரகங்கள் மற்றும் வீரிய இரகங்களை ஊக்குவித்தல், நீர் மேலாண்மையின் பொருட்டு மாற்றுப்பயிர் சாகுபடியை ஊக்குவித்தல், உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு, மண் நலம் பேணும் உயிர்ம வேளாண்மை மற்றும் இயற்கை வேளாண்மையை ஊக்குவித்தல், நல்விளைச்சலுக்கு ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை, நீர் சேமித்து பல்பயிர் விளைவிக்க நுண்ணீர்ப்பாசனம், காலநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் மேலாண்மைக்கான

வேளாண் காடுகள், பயிரிடும் பருவங்களில் ஆள்பற்றாக்குறையை சமாளிக்க வேளாண் இயந்திரமயமாக்கல், வேளாண் விளைபொருட்களை வீணாக்காமல் விற்பனை செய்து வருமானம் ஈட்ட மதிப்புக்கூட்டுதல், எதிர்கால உபயோகத்திற்காக உணவு பதப்படுத்துதல் போன்ற பல்வேறு சீரிய வேளாண் உத்திகளின் அடிப்படையில் சிறப்பான திட்டங்களை வேளாண்மை – உழவர் நலத்துறை செம்மையாகச் செயல்படுத்தி வருகின்றது.

2030-ஆம் ஆண்டிற்குள் ஐக்கிய நாடுகள் சபை நிர்ணயித்துள்ள "எவரையும் விட்டுவிடா வளர்ச்சி" (Leave No One Behind) என்ற கொள்கையின் அடிப்படையில், நீடித்த வளர்ச்சி இலக்குகளை எய்தும் வகையில், உலகளவில் நேர்மறை மாற்றங்களை ஏற்படுத்தப் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதில் தமிழ்நாடு வேளாண்மை - உழவர்

நலத்துறை, வறுமையின்மை (இலக்கு 1), பட்டினியில்லா நிலை (இலக்கு 2), பாலின சம நிலை (இலக்கு 5), தூய்மையான நீர் மற்றும் சுகாதார வசதிகள் (இலக்கு 6), பொறுப்பான நுகர்வு மற்றும் உற்பத்தி (இலக்கு 12) ஆகிய இலக்குகளை மையமாகக் கொண்டு பல உழவர் நலத் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது.

**வெற்றித் தமிழகம்– தொலைநோக்குத் திட்டம்**

நமது பழம்பெருமை மிக்க, பாரம்பரியம் ததும்பும் தமிழகம் – குறிஞ்சி மண்டலம், வடக்கு மண்டலம், தெற்கு மண்டலம், மத்திய மண்டலம் என நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, அப்பகுதிகளின் இயற்கை வளங்களுக்கேற்ப, அவற்றின் தேவைகளுக்கேற்ப, வாய்ப்புகளுக்கேற்ப உயர்ந்த வேளாண் கட்டமைப்புகள் உருவாக்கப்படும். கொள்முதல் நிலையங்களில் மேம்பட்ட சேமிப்புக்

கொள்கலன்கள் அமைக்கப்பட்டு விளைபொருள் வீணாவதைத் தடுத்து, விவசாயிகளின் உழைப்பையும், உரிமையையும், உற்பத்தியையும் காக்கும் பணி மேற்கொள்ளப்படும். இவ்வாறு விவசாயிகளின் வாழ்வாதார உயர்விற்கான, பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டங்கள் வகுக்கப்படும்.

**பாசன ஆதாரங்கள் மேம்பாடு**

மழையை மட்டுமே நம்பியிருக்கும் விவசாய நிலங்களுக்கு 100 சதவீத பாசன வசதி ஏற்படுத்துதல்; பராமரிப்பின்றிக் கிடக்கும் பல்லாயிரக்கணக்கான சிறு பாசனக் குளங்களைப் புதுப்பித்தல்; நுண்ணீர்ப் பாசனத்தைப் பரவலாக்குதல்; கடற்கரையோர மாவட்டங்களில் நீலப்பசுமைத் தோட்டக்கலைப் பூங்காக்கள் ஆகிய திட்டங்கள் மூலம் பாசன நீர் மேலாண்மையில் தமிழ்நாடு முன்மாதிரி மாநிலமாக மாற்றப்படும்.

**வருவாய் உயர்த்துதல்**

வேளாண் புத்தாக்க நிறுவனங்களுக்கு (Startups) மானியம்; பெருநகரங்களில் வேளாண் வணிக மையங்கள்; தரமான குளிரூட்டப்பட்ட சேமிப்புக் கிடங்குகள்; பனைமரப் பாதுகாப்பு; தென்னை விவசாயிகளுக்கென சிறப்புத் திட்டங்கள்; உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளுக்கு ஊக்கத்தொகை ஆகியவற்றின் வழியாக உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தை வாய்ப்புகள் நம் விவசாயிகளுக்கு உருவாக்கப்படும்.

வறட்சி மண்டலம் சார்ந்த விவசாயிகளுக்கு தனி ஊக்கத்தொகை; செயற்கை நுண்ணறிவு மூலம் உழவர்களுக்கு உடனுக்குடன் தகவல்கள்; நெல்லுக்கும், கரும்புக்கும் குறைந்தபட்ச ஆதரவு விலை; 100 சதவீத பயிர் காப்பீடு; சோலார் பம்பு செட்டு மூலம் தன்னிறைவு மற்றும் கூடுதல் வருமானம் என அனைத்தையும் உறுதி செய்யும்

வகையில், விவசாயிகளின் நலனைக் காக்க "விவசாயிகள் வருமான உயர்வு ஆணையம்" அமைக்கப்பட்டு, விவசாயிகளின் வருமானத்தைக் கணிசமாக உயர்த்துவதற்கான வழிமுறைகள் உருவாக்கப்படும்.

## உயிர்ம வேளாண்மையை ஊக்குவித்தல்

தமிழ்நாடு உயிர்ம வேளாண்மைத் திட்டத்தின் மூலம் உயிர்ம விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை; உயிர்ம வேளாண்மைக்கென தனி பட்டயப் படிப்புக் கல்லூரி, இயற்கை / உயிர்ம வேளாண் விளைபொருட்களைச் சந்தைப்படுத்த வழிவகை செய்தல் போன்ற சீரிய, செம்மையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, இயற்கை மற்றும் உயிர்ம விவசாயத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எய்தப்படும்.

மேற்கூறிய ஆழமான தொலைநோக்குத் திட்டங்கள் வகுக்கப்பட்டு, தமிழ்நாட்டு

விவசாயிகளை வெற்றி விவசாயிகளாக மாற்றி, நம் மண்ணை, நம் மாநிலத்தை **"வெற்றித் தமிழகமாக"** முன்னெடுத்துச் செல்ல, வரும் ஆண்டுகளில் வேளாண்மை-உழவர் நலன் சார்ந்த பல்வேறு திட்டங்கள் உறுதியுடன் செயல்படுத்தப்படும்.

**தமிழ்நாடு அரசின் வேளாண் முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகள்**

மேட்டூர் அணையில் போதிய நீர் இருப்பு இல்லாத காரணத்தால், வழக்கமாக ஜூன் 12 அன்று திறக்கப்படும் காவிரி நீரை இந்த ஆண்டு திறக்க இயலவில்லையெனினும், ரூ.134.83 கோடி மதிப்பிலான குறுவை தொகுப்புத் திட்டம் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டதில் இதுவரை 4.03 இலட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

கடுமையான நிதி நெருக்கடியிலும், விவசாயிகளின் கோரிக்கைகளைக் கனிவுடன் பரிசீலித்து 13.34 இலட்சம் விவசாயிகளுக்கு சுமார் ரூ.6,220 கோடி வரை பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

பயிர் சாகுபடிக்குத் தேவையான தரமான விதைகள், நடவுப்பொருட்கள், உரங்கள், உயிரி கட்டுப்பாட்டுக் காரணிகள் ஆகியவை தேவையான அளவு இருப்பு வைக்கப்பட்டு குறித்த காலத்தில் விவசாயிகளுக்குக் கிடைக்கச் செய்ய இந்த அரசு உறுதி பூண்டுள்ளது.

தற்போது நிலவி வரும் வறட்சி மற்றும் எல்-நினோ சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு கடந்த ஆண்டு எட்டிய இலக்கினை விட சற்றே உயர்த்தி 2026–27ஆம் ஆண்டிற்காக, 125 இலட்சம் மெட்ரிக் டன் உணவுதானிய உற்பத்தி இலக்காக நிர்ணயிக்கப்பட்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன. இவ்விலக்கை அடைவதற்காக,

உற்பத்தித் திறனை உயர்த்துதல் மற்றும் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் வகையில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தோட்டக்கலைப் பயிர்களான காய்கறிகள், பழங்கள், மலர்கள் வாயிலாக விவசாயிகள் தொடர் மற்றும் உயர் வருமானம் பெற இயலும் என்பதால் அவற்றின் பரப்பு விரிவாக்கத்திற்கு அதிக ஊக்கம் அளிக்கப்பட்டு வருகிறது

குறைந்துவரும் வேளாண் தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு வேளாண்மைத் தொழிலை இயந்திரமயமாக்கிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## தமிழ்நாட்டில் வேளாண்மை

தமிழ்நாடு, மித மற்றும் வறண்ட ஈரப்பத வெப்பமண்டல நில அமைப்பைக் கொண்ட

மாநிலமாகும். 1.30 இலட்சம் சதுர கி.மீ. பரப்பளவுடன் இந்தியாவின் 11-வது பெரிய மாநிலமாகவும், 2011 கணக்கெடுப்பின்படி 7.21 கோடி மக்கள் தொகை கொண்ட 7-வது மாநிலமாகவும் விளங்குகிறது. இந்தியாவின் மொத்த நிலப்பரப்பில் தமிழ்நாட்டின் பங்கு 4 சதவீதமும், மக்கள் தொகையில் 6 சதவீதமும், நீர் ஆதாரங்களில் 3 சதவீதமும் ஆகும்.

தமிழ்நாட்டில் 59.71 இலட்சம் எக்டர் பரப்பில் 79.38 இலட்சம் நிலவுடைமைதாரர்கள் பயிரிடுகின்றனர். இவர்களில் 93 சதவீதம் குறு மற்றும் சிறு விவசாயிகளாக, 62 சதவீத நிலப்பரப்பைக் கொண்டுள்ளனர். 7 சதவீத நடுத்தர மற்றும் பெரு விவசாயிகள் 38 சதவீத நிலப்பரப்பைக் கொண்டுள்ளனர். தமிழ்நாட்டின் சராசரி நிலவுடைமைப் பரப்பளவு 0.75 எக்டர் ஆகும்; இது இந்திய சராசரியான 1.08 எக்டரை விடக் குறைவாகும்.

**படம்: 1 – தமிழ்நாட்டின் நிலப் பயன்பாடு 2024-25. (இலட்சம் எக்டர் )**




| | |
|---|---|
| **மொத்த நிலப்பரப்பு** | **130.33 இலட்சம் எக்டர்** |
| பயிரிடு திறன் (%) | 128.96 |
| மொத்த பயிரிடும் பரப்பு | 62.25 இலட்சம் எக்டர் |
| ஒரு முறைக்கு மேல் சாகுபடி செய்யப்பட்ட பரப்பு | 13.99 இலட்சம் எக்டர் |

**(ஆதாரம்: பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை)**

## தமிழ்நாட்டின் சராசரி மழையளவு

தமிழ்நாட்டின் ஆண்டு சராசரி மழையளவு 919.8 மி.மீ. ஆகும். 2025 ஆம் ஆண்டு பெறப்பட்ட மழையளவு 1,025.7 மி.மீ ஆகும்.

## படம்: 2: 2022 முதல் 2025 ஆம் ஆண்டு வரை பருவம் வாரியாக பெறப்பட்ட மழையளவு




**(ஆதாரம்: இந்திய வானிலைத்துறை)**

## பாசன நீர் ஆதாரம்

மாநிலத்தின் பல்வேறு பாசனநீர் ஆதாரங்கள் மூலம் பயன்பெறும் நிகர பாசனப்பரப்பளவு விவரம் பின்வருமாறு.

## அட்டவணை: 1.1– நீர் ஆதாரங்கள் வாரியான நிகர பாசனப்பரப்பு–2024-25

| பாசன ஆதாரம் | எண்ணிக்கை | நிகர பாசனப் பரப்பு (இலட்சம் எக்டர்) | நிகர பாசனப் பரப்பு (%) |
|---|---|---|---|
| கால்வாய்கள் | 2,241 | 6.50 | 21.66 |
| ஏரிகள் | 41,123 | 3.98 | 13.27 |
| குழாய்க் கிணறுகள் & ஆழ்துளைக் கிணறுகள் | 3,76,944 | 5.85 | 19.51 |
| திறந்த வெளிக் கிணறுகள் | 14,70,165 | 13.61 | 45.38 |
| இதரபாசனம் | 46,487 | 0.05 | 0.18 |
| **மொத்தம்** | | **29.99** | **100** |

**ஆதாரம் : பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை**

கிணறு மற்றும் ஆழ்துளைக் கிணறுகள் மூலம் சாகுபடி செய்யப்படும் பரப்பு 65 சதவீதமாகவும், கால்வாய்கள் மூலம் 22 சதவீதமாகவும் ஏரிகள் மூலம் 13 சதவீதமாகவும் உள்ளது.

## படம்: 3 – நீர் ஆதாரங்கள் வாரியான நிகர பாசனப் பரப்பு



## படம்: 4 – தமிழ்நாட்டிலுள்ள 7 வேளாண் தட்ப வெப்ப மண்டலங்கள்



# 1. வேளாண்மை

## 1.1. பயிர்சாகுபடிப் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன் அதிகரித்தல்

தமிழ்நாட்டில் உணவுதானிய உற்பத்தி சராசரியாக **112.94 இலட்சம்** மெட்ரிக் டன்னாக உள்ளது. 2025-26 ஆம் ஆண்டில் பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையின் மூன்றாம் முன்மதிப்பீட்டின்படி (3rd Advance Estimate), **121.58 இலட்சம் மெட்ரிக் டன்** உணவுத்தானிய உற்பத்தி அடையப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, 2026-27 ஆம் ஆண்டிற்கான உணவு தானிய உற்பத்தி இலக்கு **125 இலட்சம் மெட்ரிக் டன் என** நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**அட்டவணை: 1.2. 2026-2027 ஆம் ஆண்டிற்கான செயல்திட்டம்**

| வ. எண் | பயிர்கள் | பரப்பு (இலட்சம் எக்டர்) | உற்பத்தி (இலட்சம் மெ.டன்) | உற்பத்தி திறன் (கிலோ/எக்டர்) |
|---|---|---|---|---|
| 1 | நெல் | 20.80 | 79.00 | 3,798 |
| 2 | சிறுதானியங்கள் | 10.00 | 39.35 | 3,935 |
| 3 | பயறு வகைகள் | 10.00 | 6.65 | 665 |
| **மொத்த உணவு தானியங்கள்** | | **40.80** | **125.00** | **3,064** |
| 4 | எண்ணெய் வித்துக்கள் | 5.80 | 14.00 | 2,484 |
| 5 | பருத்தி | 1.58 | 3.72 * | 400 ** |
| 6 | கரும்பு | 1.45 | 174.65 | 120 *** |
| | **மொத்தம்** | **49.63** | | |

*உற்பத்தி இலட்சம் பொதிகள்: பொதி ஒன்றுக்கு *170* கிலோ

**உற்பத்தித் திறன் -பஞ்சு

***உற்பத்தி திறன் - மெட்ரிக் டன் /எக்டர்

## படம்: 5. உணவு தானிய உற்பத்தி - ஐந்தாண்டு கால சாகுபடிப் பரப்பு மற்றும் உற்பத்தி




## 1.2 வேளாண்மைத் துறையின் முதன்மைத் திட்டங்கள்:

### 1.2.1. தமிழ்நாடு மண்வளப் பாதுகாப்பு இயக்கம்

**i) பசுந்தாள் உர மற்றும் பல தானிய விதைகள் விநியோகம்**

மண் வளத்தை மீட்டெடுத்து, இயற்கை ஊட்டச்சத்து சுழற்சியை வலுப்படுத்தி, நிலத்தின்

உயிர்ம கரிம நிலை மற்றும் நுண்ணுயிர் செயல்பாட்டை மேம்படுத்தும் நோக்கில், ஒரு இலட்சம் ஏக்கரில் பசுந்தாள் உரப் பயிர்கள் சாகுபடி, 22 ஆயிரம் ஏக்கரில் பலதானிய சாகுபடி ஆகியவற்றுக்குத் தேவையான விதைகள் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படும். வளர்ச்சி அடைந்த பசுந்தாள் மற்றும் பலதானியப் பயிர்களை நிலத்திலேயே மடக்கி உழுது மட்கச் செய்து மண்ணில் இயற்கைச் சத்துக்களை அதிகரிப்பதற்காக, உழவு மானியமும் வழங்கப்படும். இத்திட்டம் ரூ.63.50 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

### ii) உயிர்ம வேளாண்மை விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை

உயிர்ம வேளாண்மையை ஊக்குவிக்கும் வகையில் 20,000 ஏக்கரில் ஏக்கருக்கு ரூ.4,000 வீதம், மொத்தம் ரூ.8.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் உயிர்ம வேளாண்மை

மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை வழங்கப்படும்.

பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் உயிர்ம வேளாண்மையில் ஆர்வமுள்ள விவசாயிகளை ஒருங்கிணைத்து 2026–27 ஆம் ஆண்டில் ரூ.3.12 கோடி நிதி ஒதுக்கீட்டில் 150 புதிய உயிர்ம வேளாண்மைத் தொகுப்புகள் அமைக்கப்படவுள்ளன.

இயற்கை வேளாண்மையில் ஈடுபடும் உழவர்களை ஊக்கப்படுத்தும் வகையில், 2026-27 ஆம் ஆண்டு இயற்கை வேளாண்மைக்கான தேசிய இயக்கத்தின் கீழ் இயற்கை வேளாண்மைத் தொகுப்புகள் ரூ.6 கோடி நிதி ஒதுக்கீட்டில் ஏற்படுத்தப்படும்.

**iii) உயிர்ம வேளாண் விவசாயிகளுக்கு உயிர்ம சான்று பதிவு மற்றும் புதுப்பித்தல் கட்டண விலக்கு**

விவசாயிகளை உயிர்ம வேளாண்மையில் ஈடுபடுவதை ஊக்குவிக்க தேசிய உயிர்ம உற்பத்தித் திட்டத்தின் (NPOP) கீழ் புதிதாகப் பதிவு செய்யும் விவசாயிகள் மற்றும் மாறுதல் கால விவசாயிகளுக்கு பதிவுக் கட்டணம் மற்றும் புதுப்பித்தல் கட்டண விலக்கு அளிக்கப்பட்டு, உயிர்ம "வாய்ப்புச் சான்றிதழ்" இலவசமாக வழங்கப்படும்.

**iv) உயிர்ம வேளாண் விவசாயிகளுக்கு நச்சு மதிப்பீடு பரிசோதனைக்கு மானியம்**

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஏற்றுமதி சந்தைகளில் உயிர்ம விளைபொருட்களைச் சந்தைப்படுத்துவதை ஊக்குவிக்கும் வகையில், ரூ.25 இலட்சம் ஒதுக்கீட்டில், தேசிய உயிர்ம உற்பத்தித் திட்டத்தின் (NPOP) கீழ்

சான்றளிக்கப்படும் உயிர்ம விளை பொருட்களுக்கான நச்சு மதிப்பீட்டுப் (Residual Analysis) பரிசோதனைக் கட்டணத்திற்கு முழு மானியம் வழங்கப்படும்.

**v) மண்நல அட்டைகள் வழங்குதல்**

விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த உர மேலாண்மைக்கான உரிய ஆலோசனை வழங்கும் பொருட்டு 2026-27 ஆம் ஆண்டில், ஒரு இலட்சம் விவசாயிகளுக்கு, 2 இலட்சம் மண் நல அட்டைகள் ரூ.4.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் முழு மானியத்தில் வழங்கப்படும்.

மேலும், 3 இலட்சம் மண் நல அட்டைகள் ரூ. 6.16 கோடி நிதி ஒதுக்கீட்டில் 3 இலட்சம் உழவர் அடையாள எண் பெற்ற விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

**vi) மண் நல மேம்பாடு குறித்த விழிப்புணர்வு மற்றும் பிரச்சாரங்கள்**

தமிழ்நாட்டில் காலநிலை மாற்றத்தின் தாக்கங்களை எதிர்கொள்ளும் திறனை விவசாயிகளிடையே மேம்படுத்தும் நோக்கத்தில், ரூ.2 கோடி நிதி ஒதுக்கீட்டில் 4,000 விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் நடத்தப்படும்.

**vii) நிரந்தர மண்புழு உரக்கூடங்கள் அமைத்தல்**

நிரந்தர மண்புழு உரக்கூடங்கள் மூலம் விவசாயிகளுக்குத் தரமான மண்புழு உரம் எளிதில் கிடைப்பதுடன், இரசாயன உரங்களின் பயன்பாடு குறைந்து, மண் வளம் மேம்படும். இத்திட்டம் ரூ.10 கோடி நிதியில் செயல்படுத்தப்படும்.

**viii) திரவ உயிர் உரங்கள் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பயிர் ஊக்கிகள் விவசாயிகளுக்கு வழங்குதல்**

இரசாயன உரங்களின் பயன்பாட்டைக் குறைக்கும் நோக்கத்தில் ஒரு இலட்சம் ஏக்கர்

பரப்பிற்குத் தேவையான திரவ உயிர் உரங்கள் ரூ.4.50 கோடி செலவில் விநியோகிக்கப்படும்.

பயிர்களின் ஊட்டச்சத்துப் பயன்பாட்டுத் திறனை மேம்படுத்திட பருத்திக்கு "காட்டன் பிளஸ்", கரும்பிற்கு "சுகர்கேன் பூஸ்டர்", நெல்லுக்கு "ரைஸ் ப்ளூம்" உள்ளிட்ட பயிர் ஊக்கிகள் ரூ.12.38 கோடி செலவில் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும்.

**ix) பிரச்சனைக்குரிய நிலங்களை சீர்திருத்துதல்**

களர்நிலத்தில், மண் இறுகியும் காற்றோட்டம் இல்லாமலும் இருப்பதால், பயிர்வளர்ச்சி மற்றும் மகசூல் குறையும். இதனால், மண் சீர்சிருத்தம் குறித்து 2,000 ஏக்கரில் செயல்விளக்கம் 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்படும்.

**x) "நீர் மறைய நீர் கட்டும்" பாசனமுறை மற்றும் மெல்லக் கரையும் உரங்களின் பயன்பாட்டு முறைகளை செயல்விளக்கம் மூலம் ஊக்குவித்தல்**

காலநிலை மாற்றத்தின் தாக்கத்தைத் தணித்து, கார்பன் சேமிப்பை (Carbon Sequestration) ஊக்குவிக்கும் வகையில், நேரடி நெல் விதைப்பு, "நீர் மறைய நீர் கட்டும்" பாசன முறை மற்றும் மேம்பட்ட ஊட்டச்சத்து மேலாண்மை தொழில்நுட்பங்களைப் பின்பற்றும் விவசாயிகளுக்கு கார்பன் வர்த்தகத்தின் மூலம் கூடுதல் வருமானம் பெறுவதற்காக, ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் 2,000 ஏக்கரில் செயல் விளக்கங்கள் அமைக்கப்படும்.

தமிழ்நாடு மண்வளப் பாதுகாப்பு இயக்கம் ஐந்தாண்டு இயக்கமாக 2026-27 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு ரூ.600 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும். நடப்பாண்டில்

இந்த இயக்கம் ரூ.122.51 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

### 1.2.2. நெல் விதை உற்பத்தி மற்றும் விநியோக மானியத்திற்கான சிறப்புத் திட்டம்

2026-27 ஆம் ஆண்டில், விவசாயிகளுக்குத் தரமான நெல் விதைகள் உரிய காலத்தில் தடையின்றிக் கிடைப்பதை உறுதி செய்வதற்காக, மாநில அரசு நிதி ஒதுக்கீட்டின் கீழ் நெல் விதை விநியோகம் மற்றும் உற்பத்தி மானியத்திற்கான சிறப்பு தொகுப்புத் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தில் 10 ஆண்டுகளுக்குட்பட்ட மற்றும் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட **14,570 மெட்ரிக் டன்** சான்றளிக்கப்பட்ட நெல் விதைகள், மானிய விலையில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படும். இத்திட்டத்தின் வாயிலாக, தரமான விதைகள் பயன்பாடு அதிகரித்து, விதை மாற்று விகிதம் உயர்த்தப்படும். மேலும், உயர் விளைச்சல் தரும் நெல் இரகங்கள் பரவலாகப் பயிரிடப்பட்டு

மாநிலத்தின் நெல் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன் மேம்படுத்தப்படும்.

தங்களது நிலங்களில் விதைப்பண்ணைகள் அமைத்து, தரமான சான்று பெற்ற நெல் விதைகளை உற்பத்தி செய்து தமிழ்நாடு விதை மேம்பாட்டு முகமைக்கு (TANSEDA) வழங்கும் விதைப்பண்ணை விவசாயிகளுக்கு, கிலோவிற்கு **ரூ.8** வீதம் ஊக்கத்தொகை வழங்கப்படும். இதன் வாயிலாக **7,730 மெட்ரிக் டன்** சான்று நெல் விதைகள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. 2026-27 ஆம் ஆண்டில் நெல் விதை விநியோகம் மற்றும் உற்பத்தி மானியத்திற்கான சிறப்பு தொகுப்பு திட்டம் **ரூ.34.724** கோடி நிதி ஒதுக்கீட்டில், **1,47,250** விவசாயிகள் பயனடையும் வண்ணம் செயல்படுத்தப்படும்.

### 1.2.3. உழவர் செயற்கை நுண்ணறிவுத் திட்டம்

வேளாண்மையில் மின்னணுமயமாக்கலை வலுப்படுத்தும் நோக்கத்தில், செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) மற்றும் இயந்திர வழிக்கற்றல் (Machine Learning) தொழில்நுட்பங்களை ஒருங்கிணைத்து, பயிர் சாகுபடி முதல் அறுவடை வரை தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகள், சந்தை நிலவரங்கள், பூச்சி, நோய் கண்காணிப்பு மற்றும் பரிந்துரை, வானிலை முன்னறிவிப்புகள், அரசு திட்டப் பலன்கள் உள்ளிட்ட அனைத்து வேளாண் சார்ந்த அறிவுசார் சேவைகள் மற்றும் தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு அவர்களது கைப்பேசி மூலமாகவே எளிதில் கிடைக்கச் செய்யும் வகையில் ரூ.2 கோடி மாநில நிதியில் உழவர் செயற்கை நுண்ணறிவுத் திட்டம் செயல்படுத்தப்படும்.

### 1.2.4. தமிழ்நாடு சிறுதானிய இயக்கம்

இத்திட்டம் 2026-27 ஆம் ஆண்டில் ரூ.63.81 கோடி நிதி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதில் மாற்றுப் பயிர் சாகுபடித் திட்டம், கேழ்வரகு சாகுபடிக்கு பின்னேற்பு மானியம், கேழ்வரகு சிறுதளை விநியோகம், சிறுதானிய தொகுப்பு செயல்விளக்கத் திடல்கள், சான்று விதை விநியோகம், விதை உற்பத்தி மானியம், சிறுதானிய சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகள் குழு உருவாக்கம், விவசாயக் குழுக்களுக்கு பயிற்சி அளித்தல், வேளாண் இயந்திர வாடகை மையம் அமைத்தல், முதன்மைப் பதப்படுத்துதல் மையம் அமைத்தல் போன்ற திட்ட இனங்கள் செயல்படுத்தப்பட்டு 4.75 இலட்சம் விவசாயிகள் பயனடைவார்கள்.

### 1.2.5. குறுதானிய இயக்கம்

சாமை, தினை, வரகு, குதிரைவாலி, பனிவரகு போன்ற குறுதானியங்களின் சாகுபடிப் பரப்பை இருமடங்காக அதிகரிக்கும் பொருட்டும்,

குறுதானியங்கள் பயிரிடும் மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றும் நோக்கத்திலும் குறுதானியங்கள் பயிரிடப்படும் 29 மாவட்டங்களில் குறுதானிய இயக்கம் 2026-27 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும். இதில் குறுதானிய சாகுபடிக்கான பின்னேற்பு மானியம், குறுதானிய சிறுதளை விநியோகம் ஆகிய திட்ட இனங்கள் ரூ.7.61 கோடி நிதி ஒதுக்கீட்டில் 14,000 விவசாயிகள் பயனடையும் வண்ணம் செயல்படுத்தப்படுகிறது.

### 1.2.6. அதிக ஊட்டச்சத்து நிறைந்த சீமைத் தினை (Quinoa), பாப்பரை (Buck Wheat), மற்றும் குலசாமை (Brown Top Millet) பயிர்களை அறிமுகப்படுத்துதல்

புரதசத்து, நார்ச்சத்து அதிகமாகவும் குளூட்டன் அளவு குறைவாகவும் உள்ள தானியப்பயிர்களான சீமைத் தினை, பாப்பரை, குலசாமை ஆகிய புதிய

பயிர்கள் செயல்விளக்கத்திடல்கள் வாயிலாக தமிழ்நாட்டில் உள்ள தருமபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, சேலம், நாமக்கல், கோயம்புத்தூர், ஈரோடு, திண்டுக்கல், தேனி, கரூர், திருப்பூர் ஆகிய 11 மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட உள்ளன. இத்திட்டத்தின் வாயிலாக விவசாயப் பெருமக்களுக்கு அதிக வருமானம் கிடைப்பதுடன், பொது மக்களுக்கு அதிக சத்துக்கள் நிறைந்த தானியங்கள் கிடைக்கும் வகையில் ரூ.30 இலட்சம் செலவில் செயல்விளக்கத்திடல்கள் அமைக்கப்படும்.

### 1.2.7. ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்களுக்குப் புதிய கட்டடங்கள்

ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம், பயிர் சாகுபடி ஆலோசனைகள், அரசின் திட்டங்கள் மற்றும் தரமான வேளாண் இடுபொருட்கள் ஒரே இடத்தில் விவசாயிகளுக்கு வழங்க, 2026-27 ஆம் ஆண்டில் சேமிப்புக் கிடங்கு

வசதியுடன் கூடிய 8 ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்களுக்கு புதிய கட்டடங்கள் ரூ.27.818 கோடி நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படவுள்ளன.

### 1.2.8 காட்டுப்பன்றிகளால் பயிர்களுக்கு ஏற்படும் சேதத்தைத் தடுக்க, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் திரவ காட்டுப்பன்றி விரட்டி மானிய விலையில் வழங்குதல்

தமிழ்நாட்டில் அண்மைக் காலங்களில் காட்டுப்பன்றிகளால் வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்கள் அதிக அளவில் சேதமடைந்து வருவதால், விவசாயிகளுக்கு மகசூல் இழப்பு ஏற்பட்டு பொருளாதாரம் பாதிக்கப்படுகிறது. இப்பிரச்சினைக்குத் தீர்வாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் (TNAU) பரிந்துரைத்துள்ள சுற்றுச்சூழலுக்கு உகந்த திரவ காட்டுப்பன்றி விரட்டி, மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ், 75 சதவீத மானியமாக வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களுக்கு ஒரு ஏக்கருக்கு அதிகபட்சமாக ரூ.750 மற்றும் கரும்புப் பயிருக்கு இரண்டு முறை பயன்படுத்துவதற்காக ஒரு ஏக்கருக்கு அதிகபட்சமாக ரூ.1,500 வழங்கப்படும். இத்திட்டம் சுமார் 14,000 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகள் பயன்பெறும் வகையில், ரூ.1.35 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

### 1.2.9.விளைபொருள் வீணாவதைத் தடுக்க தார்ப்பாய்கள் வழங்குதல்

போதிய சேமிப்பு வசதிகள் இல்லாததால், இயற்கை சீற்றங்களிலிருந்து விவசாயிகள் தங்களது வேளாண் விளைபொருட்களைப் பாதுகாப்பதற்கும், அறுவடைக்குப் பின் ஏற்படும் இழப்புகளை தவிர்ப்பதற்காகவும் சென்னை, நீலகிரி நீங்கலாக உள்ள அனைத்து

மாவட்டங்களிலும் 43,350 விவசாயிகள் பயனடையும் வகையில் ரூ.10 கோடி நிதி ஒதுக்கீட்டில் தார்ப்பாய்கள் வழங்கப்படும்.

### 1.2.10. திரவ உயிர் உர உற்பத்தி மையங்களின் கட்டமைப்பை மேம்படுத்துதல்

விவசாயிகளுக்குத் தரமான திரவ உயிர் உரங்கள் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்து, உயிர்ம மற்றும் நிலையான வேளாண்மையை ஊக்குவிக்கும் நோக்கத்தில், தமிழ்நாட்டில் வேளாண்மைத் துறையின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும் 22 திரவ உயிர் உர உற்பத்தி மையங்களின் கட்டமைப்பு மற்றும் உற்பத்தித் திறன் ரூ.3.56 கோடி நிதி ஒதுக்கீட்டில் வலுப்படுத்தப்படும்.

### 1.2.11. புதிய விதை சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல்

விதை சுத்திகரிப்பு செய்து சேமிப்பை வலுப்படுத்தி, சான்றளிக்கப்பட்ட விதைகள் விவசாயிகளுக்கு உரிய காலத்தில் கிடைப்பதை உறுதி செய்யும் நோக்கத்தில், சேலம் மாவட்டம் கங்கவல்லி, தூத்துக்குடி மாவட்டம் கிள்ளிகுளம் மற்றும் விழுப்புரம் மாவட்டம் இருவேல்பட்டு ஆகிய மூன்று இடங்களில் தலா 250 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட விதை சேமிப்புக் கிடங்குகளுடன் கூடிய நவீன விதை சுத்திகரிப்பு நிலையங்கள் ரூ.7.10 கோடி நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படும்.

### 1.2.12. வேளாண் கண்காட்சி

நவீன வேளாண் தொழில்நுட்பங்கள், சிறந்த வேளாண் நடைமுறைகள், மதிப்புக்கூட்டப்பட்ட வேளாண் பொருட்கள், வேளாண் இயந்திரங்கள், இயற்கை வேளாண் முறைகள் குறித்த

விழிப்புணர்வை ஏற்படுத்த, ரூ.3 கோடி மாநில நிதி ஒதுக்கீட்டில் வேளாண் கண்காட்சி நடத்தப்படும்.

இக்கண்காட்சியில் நவீன சாகுபடி முறைகள் மற்றும் வேளாண் புதுமைகள் காட்சிப்படுத்தப்பட்டு, பயிர் உற்பத்தித்திறன் மற்றும் விவசாயிகளின் வருமானத்தை உயர்த்துவதற்கான வழிகாட்டுதல்கள் வழங்கப்படும்.

### 1.2.13. வேளாண் காடுகள் திட்டம்

நாற்றங்கால்கள் எண்ணிக்கையை அதிகரித்து தரமான மரக்கன்றுகள் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்தில், 55 சிறிய, 21 பெரிய, 23 உயர் தொழில்நுட்ப நாற்றங்கால்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றிலும், அரசுப் பண்ணைகளில் உள்ள பிற நாற்றங்கால்களிலும் தரமான மரக்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு வேளாண்மை மற்றும்

தோட்டக்கலைத் துறைகளால் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

தரமான மரக்கன்றுகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கவும், நாற்றங்கால்களை வலுப்படுத்திடவும் 2026-27 ஆம் ஆண்டில் ரூ.17.70 கோடி நிதி ஒதுக்கீட்டில் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 1.2.14. அண்ணல் அம்பேத்கர் வேளாண் உதவி திட்டம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின சிறு, குறு விவசாயிகளின் பொருளாதாரச் சுமையைக் குறைத்து, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில், ஒருங்கிணைந்த பண்ணையம், பசுமைக்குடில்கள், நிழல் வலைக்குடில்கள், சோலார் உலர்த்திகள், சோலார் பம்ப் செட்டுகள், மதிப்புக் கூட்டும் இயந்திரங்கள், பண்ணை இயந்திரங்கள் உள்ளிட்ட உயர் மதிப்பு

வேளாண் திட்டங்களில், வழக்கமான மானியத் தொகைக்கு மேல் கூடுதலாக 20 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. இதற்காக ரூ.32.72 கோடி மாநில நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும், நீர்ப்பாசன வசதியற்ற 300 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளின் புன்செய் நிலங்களில், ஆழ்துளைக் கிணறு அல்லது குழாய்க் கிணறு அமைத்து, மின்மோட்டார் அல்லது சூரிய சக்தி பம்பு செட்டுடன் இணைக்கும் பணிகள் 100 சதவீத மானியத்தில் மேற்கொள்ளப்படும். ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக ரூ.8 இலட்சம் வரை மானியம் வழங்கும் இத்திட்டத்திற்கு ரூ.24 கோடி மாநில அரசு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### 1.2.15. முதலமைச்சரின் உழவர் நல சேவை மையங்கள்

அனைத்து வேளாண் சேவைகளையும் ஒரே குடையின்கீழ் வழங்கிடும் நோக்கத்தில் வேளாண், தோட்டக்கலை மற்றும் வேளாண் பொறியியல் பட்டப்படிப்பு/பட்டயப்படிப்பு முடித்த இளைஞர்களைக் கொண்டு முதலமைச்சரின் உழவர் நல சேவை மையங்கள் அமைக்கப்பட்டன.

இத்திட்டத்தின் கீழ் ரூ.10 இலட்சம் முதல் ரூ.20 இலட்சம் வரை வங்கிக்கடன் பெற்ற பயனாளிகளுக்கு 30% மானியமாக ரூ.3 இலட்சம் முதல் ரூ.6 இலட்சம் வரை வழங்கப்பட்டு வருகிறது. நடப்பாண்டிலும் 214 தகுதியுள்ள பயனாளிகளுக்கு மானியம் வழங்கிட ரூ.9.44 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1.3. பயிர் சாகுபடி விவரம்

### 1.3.1 நெல்

தமிழ்நாட்டு மக்களின் முக்கிய உணவாக அரிசி விளங்குகிறது. நெல் சாகுபடி, உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதோடு, வேளாண்மையில் கிராமப்புர மக்களின் வாழ்வாதாரம் மற்றும் வேலைவாய்ப்பு மேம்பாட்டிலும் முக்கியப் பங்கு வகிக்கிறது.

தமிழ்நாட்டில் நெல் சாகுபடி, கார் / குறுவை / சொர்ணவாரி (ஏப்ரல்-ஜூலை), சம்பா / தாளடி / பிசானம் (ஆகஸ்ட்-நவம்பர்) மற்றும் நவரை / கோடை (டிசம்பர்-மார்ச்), என மூன்று பருவங்களில் மேற்கொள்ளப்படுகிறது.

2026–27 ஆம் ஆண்டில், 20.80 இலட்சம் எக்டரில் நெற்பயிர் பயிரிடப்பட்டு, 79 இலட்சம் மெட்ரிக் டன் நெல் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதிக மகசூல் தரும் நெல் இரகங்களின் செயல்விளக்கங்கள்,

திருந்திய நெல் சாகுபடி (SRI)/இயந்திர நடவு மற்றும் நேரடி விதைப்பு தொழில்நுட்பங்கள் ஒன்றிய மற்றும் மாநில அரசுத் திட்டங்கள் வாயிலாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**தேசிய உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து இயக்கம்-அரிசி**

2026-27 ஆம் ஆண்டில் புதுக்கோட்டை, திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, இராமநாதபுரம், சிவகங்கை, தஞ்சாவூர், திருவண்ணாமலை, கடலூர், தூத்துக்குடி, விருதுநகர் ஆகிய **11 மாவட்டங்களில், ரூ.14.13 கோடி** நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இதில், நேரடி நெல் விதைப்பு தொகுப்பு செயல்விளக்கங்கள், வெள்ளம் / வறட்சியைத் தாங்கும் இரகங்கள்/ செறிவூட்டப்பட்ட நெல் இரகங்கள் சாகுபடிக்கான செயல் விளக்கங்கள், பயிர் சாகுபடி முறை (நெல்-பயறுவகை) சார்ந்த செயல் விளக்கங்கள்,

நுண்ணூட்ட உரக்கலவை விநியோகம், திரவ உயிர் உரங்கள் விநியோகம், பயிர் பாதுகாப்பு மருந்துகளுக்கு உதவித்தொகை, பசுந்தாள் உரவிதை விநியோகம், உயிரி கட்டுப்பாட்டுக் காரணிகள் விநியோகம் ஆகிய இனங்கள் செயல்படுத்தப்பட்டு, **53,666 விவசாயிகள்** பயனடைவார்கள்.

## நெல் ஜெயராமன் அவர்களின் மரபுசார் நெல் இரகங்கள் பாதுகாப்பு இயக்கம்

தமிழ்நாட்டின் பாரம்பரிய நெல் இரகங்களைப் பாதுகாத்து மீட்டெடுக்கும் பொருட்டு பாரம்பரிய இரகங்களைக் கொண்டு விதைப்பண்ணை அமைத்து விதை உற்பத்தி செய்யும் விவசாயிகளை ஊக்கப்படுத்தும் வகையில் பாரம்பரிய நெல் விதைகள் உற்பத்தி ஊக்கத்தொகையாக 110 மெட்ரிக் டன்னுக்கு ரூ.16.50 இலட்சம் வழங்கப்படும். மேலும் விவசாயிகள் பாரம்பரிய நெல் சாகுபடி

மேற்கொள்வதை ஊக்குவிக்கும் வகையில் 150 மெட்ரிக் டன் பாரம்பரிய நெல் விதைகள் ரூ.52.50 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 50 சதவீத மானிய விலையில் விநியோகம் செய்யப்படும். இந்த இயக்கம், 2026-27 ஆம் ஆண்டில் ரூ.69 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

### 1.3.2. சிறுதானியங்கள்

நோய்தடுப்பு, உடல்நலம் பேணுதல் பற்றி ஏற்பட்டுள்ள விழிப்புணர்வு காரணமாக, மக்களிடையே பாரம்பரிய உணவுகளான சோளம், கம்பு, கேழ்வரகு, தினை, சாமை, பனிவரகு, குதிரைவாலி, வரகு முதலியவற்றின் தேவையும், கோழித்தீவனம், கால்நடைத்தீவனம், பயோ எத்தனால் தொழிற்சாலைக்கு மூலப்பொருளாக விளங்கும் மக்காச்சோளத்தின் தேவையும் தமிழ்நாட்டில் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே உள்ளன.

சிறுதானியங்கள் சராசரியாக, 9.54 இலட்சம் எக்டர் பரப்பில், 5.13 இலட்சம் எக்டர் காரீப் பருவத்திலும், 4.41 இலட்சம் எக்டர் இராபி பருவத்திலும் சாகுபடி செய்யப்பட்டு 36.12 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இவற்றில் 2.16 இலட்சம் எக்டர் இறவையிலும் 7.38 இலட்சம் எக்டர் மானாவாரியிலும் பயிரிடப்படுகிறது.

2026-27 ஆம் ஆண்டில், 10 இலட்சம் எக்டர் சாகுபடிப் பரப்பில் 39.35 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தியை அடைய சிறுதானியங்களுக்கென திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஊட்டச்சத்துமிக்க சிறுதானியங்கள், குறுதானியங்களின் சாகுபடிப் பரப்பு மற்றும் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்தில் பின்வரும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

## தேசிய உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து இயக்கம்-ஊட்டச்சத்து மிக்க சிறுதானியங்கள்

ஊட்டச்சத்து மிக்க சிறுதானியங்களின் சாகுபடிப் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கத்தில் இத்திட்டம் 2026-27 ஆம் ஆண்டில் ரூ.43.94 கோடி நிதி ஒதுக்கீட்டில் 26 மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்.

சிறுதானியங்கள் தொகுப்பு செயல்விளக்கத் திடல்கள், சான்று விதை விநியோகம், விதை உற்பத்தி மானியம், உயிர் உரங்கள் விநியோகம், நுண்ணூட்ட உரக்கலவை விநியோகம், சிறுதானியத் திருவிழா போன்ற இனங்கள் செயல்படுத்தப்படும். இத்திட்டம், 4.69 இலட்சம் எக்டரில் செயல்படுத்தப்பட்டு 4.56 இலட்சம் விவசாயிகள் பயனடைவார்கள்.

**மக்காச்சோள உற்பத்தி மேம்பாட்டுத் திட்டம்**

தமிழ்நாட்டில் சராசரியாக 4.5 இலட்சம் எக்டரில் மக்காச்சோளம் பயிரிப்பட்டு 29 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டில் மொத்தம் 54 கோழித் தீவனத் தொழிற்சாலைகள், 7 எத்தனால் தொழிற்சாலைகள் உள்ளன. கோழித் தீவனத்திற்கு ஆண்டிற்கு 27 இலட்சம் மெட்ரிக் டன் மற்றும் எத்தனால் தொழிற்சாலைக்கு 9 இலட்சம் மெட்ரிக் டன் என மொத்தமாக ஆண்டிற்கு 36 இலட்சம் மெட்ரிக் டன் மக்காச்சோளம் தேவைப்படுகிறது.

மக்காச்சோளத்தின் தேவை தமிழ்நாட்டில் தொடர்ந்து அதிகரித்து வருவதன் காரணமாக, சாகுபடிப் பரப்பு மற்றும் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்தில், **தேசிய உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து இயக்கம் – மக்காச்சோளம் திட்டமானது 1.35 இலட்சம் எக்டரில்** ரூ.30.02 கோடி நிதி ஒதுக்கீட்டிலும், **தேசிய**

**வேளாண்மை வளர்ச்சி திட்டம் - மக்காச்சோளம் 5,200 எக்டர் பரப்பளவில்** ரூ.6 கோடி நிதி ஒதுக்கீட்டிலும் 35 மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்.

**1.3.3. பயறுவகைப் பயிர்கள்:**

தமிழ்நாட்டின் வேளாண்மையில் பயறு வகைகள் முக்கியப் பங்காற்றுவதுடன், தனித்துவமான சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதாரப் பயன்களையும் வழங்குகின்றன. பயறு வகைகள் சராசரியாக 7.31 இலட்சம் எக்டரில் சாகுபடி செய்யப்பட்டு எக்டருக்கு 590 கிலோ உற்பத்தித்திறனுடன் 4.32 இலட்சம் மெட்ரிக் டன் அளவிற்கு உற்பத்தி செய்யப்படுகின்றன.

விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தி, நிலையான மற்றும் மீள் திறன்மிக்க வேளாண்மையின் வாயிலாக ஊட்டச்சத்துப் பாதுகாப்பை உறுதி செய்யவும், சமச்சீர்

உணவுக்கான பயறு வகைகள் கிடைப்பதை உறுதி செய்யவும் பயறு உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன், "**பயறு வகைகளில் தன்னிறைவுக்கான இயக்கம்**" தமிழ்நாட்டின் 33 மாவட்டங்களில் 2026-27 ஆம் ஆண்டில் **ரூ.52.41 கோடி** நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும். இதில், சான்றளிக்கப்பட்ட விதை உற்பத்தி மற்றும் விநியோகம், வட்டார அளவில் செயல்விளக்கத்திடல்கள் அமைத்தல், பயிற்சிகள், பயறுவகைகள் பதப்படுத்தும் நிலையங்கள் அமைக்க மானியம் ஆகிய திட்டக்கூறுகள் செயல்படுத்தப்படும்.

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் குழித்தட்டு நாற்று முறையில் துவரை சாகுபடியை ஊக்குவிக்கும் பொருட்டு **ரூ.5.60 கோடி** நிதி ஒதுக்கீட்டில் 13 மாவட்டங்களில் 5,600 எக்டரில் நடவுத் துவரை சாகுபடித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதில் விதைகள், உயிர் உரங்கள், நுண்ணூட்ட உரக்கலவை மற்றும் உற்பத்தியை மேம்படுத்தும் இதர இடுபொருட்களுக்கு மானியம் வழங்கப்படும்.

பயறுவகைகள் சான்று விதை விநியோகத் திட்டம் **ரூ.1.02 கோடி** நிதி ஒதுக்கீட்டில் அனைத்து மாவட்டங்களிலும் (சென்னை மற்றும் நீலகிரி நீங்கலாக) செயல்படுத்தப்படும்.

**மரபுசார் சிறுதானியம் மற்றும் பயறு இரகங்களை பாதுகாத்தல் மற்றும் விதை விநியோகம் செய்தல்.**

தமிழ்நாட்டின் பாரம்பரிய சிறுதானியம் மற்றும் பயறு இரகங்கள் அதிக ஊட்டச் சத்து மற்றும் நோய் எதிர்ப்பு சத்து கொண்டவையாகும். பாரம்பரிய சிறுதானியம் மற்றும் பயறு விதைகளை உற்பத்தி செய்யும் விவசாயிகளை ஊக்கப்படுத்தும் வகையில் 8 மெட்ரிக் டன் விதைகளுக்கு ஊக்கத்தொகையாக ரூ.1.20 இலட்சம் மானியம் வழங்கப்படும். மேலும், பாரம்பரிய சிறுதானிய மற்றும் பயறு சாகுபடியை அதிகரிக்க 18 மெட்ரிக்

டன் விதைகள் ரூ.10.80 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 50 சதவீத மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படும். இத்திட்டம், 2026-27 ஆம் ஆண்டில் ரூ.12 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

### 1.3.4. எண்ணெய்வித்துப் பயிர்கள்

தமிழ்நாட்டில் பயிரிடப்படும் வேளாண் பயிர்களில் எண்ணெய்வித்துகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. தேசிய அளவில் எண்ணெய் வித்துகள் உற்பத்தியில் முன்னணி மாநிலங்களில் ஒன்றாகத் தமிழ்நாடு திகழ்கிறது. நாம் அன்றாடம் உண்ணும் உணவுகளில் கொழுப்புகள், கொழுப்பில் கரையக்கூடிய வைட்டமின்களின் முக்கிய ஆதாரமாக எண்ணெய்வித்துகள் விளங்குகின்றன. கிராமப்புர வாழ்வாதாரத்திற்கும், வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கும் துணைபுரியும் முக்கிய பணப்பயிரான, எண்ணெய்வித்துப் பயிர்கள் ஊட்டச்சத்துப் பாதுகாப்பிற்கும்,

விவசாயிகள் நலனுக்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை ஆற்றுகின்றன.

தமிழ்நாட்டில் எண்ணெய்வித்துப் பயிர்கள் 4.06 இலட்சம் எக்டரில் பயிரிடப்பட்டு, 9.28 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. இதன் சராசரி மகசூல் **ஒரு எக்டருக்கு 2,284 கிலோ கிராம்** ஆகும்

2026-27 **ஆம் ஆண்டில்** "தேசிய உணவு எண்ணெய் இயக்கம் – எண்ணெய்வித்துக்கள்" திட்டத்தை, 26 மாவட்டங்களில் 66,850 எக்டரில் செயல்படுத்த **ரூ.132.11 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த இயக்கம் உணவு எண்ணெய் உற்பத்தியில் தன்னிறைவு அடைதல் என்ற இலக்கை முன்னெடுத்து உள்நாட்டு உணவு எண்ணெய் உற்பத்தியை அதிகரிப்பதையும், உணவு எண்ணெய் இறக்குமதியைக் குறைத்து, அந்நியச் செலாவணியைப் பாதுகாப்பதையும்

விவசாயிகளின் வருவாயை அதிகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த இயக்கத்தில் மதிப்புத் தொடர் தொகுப்புகளில் அதிக விளைச்சல் தரும் புதிய இரக விதைகள் விநியோகம் செய்திட மானியம் வழங்குவதுடன், தொகுப்பு செயல் விளக்கத் திடல்கள் அமைக்க விதைகள் மற்றும் பிற முக்கிய இடுபொருட்கள் வழங்கப்படுகின்றன. அதனுடன், சான்றளிக்கப்பட்ட விதை உற்பத்திக்கும் மானியம் வழங்கப்படுகிறது. மேலும் அறுவடை பின்சார் கட்டமைப்பினை அமைத்தல் மற்றும் மேம்படுத்துதல் மூலமாக பதப்படுத்தும் திறனை உயர்த்தவும், எண்ணெய் பிரித்தெடுக்கும் சதவீதத்தை அதிகரிக்கவும், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள், கூட்டுறவு சங்கங்கள், தனிநபர் மற்றும் தனியார் தொழில் நிறுவனங்களுக்கும் மானியம் வழங்கப்படுகிறது .

பருவநிலை மாற்றங்களினால் ஏற்படும் பயிர் பாதிப்பைக் குறைக்கவும், மண் வளத்தை மேம்படுத்தவும், நெற்பயிருக்கு மாற்றாக பயறுவகைகள் மற்றும் எண்ணெய்வித்துப் பயிர்களை ஊக்குவிக்கும் வகையில், மாற்றுப்பயிர் சாகுபடி திட்டம் **ரூ. 12.50 கோடி** நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

### 1.3.5. பருத்தி

தமிழ்நாட்டில் பருத்தி உற்பத்தித் திறனை மேம்படுத்தும் நோக்கில் பருத்தி உற்பத்தித்திறனுக்கான இயக்கம் 2026-27 முதல் 2030-31 ஆம் ஆண்டு வரை ஐந்தாண்டுத் திட்டமாக ஒன்றிய மாநில அரசு நிதிப்பகிர்வுடன் அறிமுகப்படுத்தப்பட்டு, 2026-27 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.26.21 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் அடர்நடவு சாகுபடி, நெருக்க நடவு சாகுபடி, மிக நீண்ட இழை பருத்தி சாகுபடி, ஒருங்கிணைந்த பயிர்

மேலாண்மை ஆகிய தொழில்நுட்பங்கள் ஊக்குவிக்கப்படுவதோடு விவசாயிகளுக்குத் திறன் மேம்பாட்டு பயிற்சியும் வழங்கப்படும்.

மேலும், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் - பருத்தி இரகங்களின் தரமான விதைகள் உற்பத்தி மற்றும் விநியோகத் திட்டத்தில் விதை உற்பத்தி மற்றும் விநியோகம், நுனிக்கிள்ளுதல், பயறுவகை ஊடுபயிர் சாகுபடி ஆகியவற்றை ஊக்குவிக்க ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்விரு திட்டங்களையும் ஒருங்கிணைத்து ரூ.27.21 கோடி நிதி ஒதுக்கீட்டில் 29,360 எக்டர் பரப்பளவில் 40,000 விவசாயிகள் பயன்பெறும் வகையில் **பருத்தி மறுமலர்ச்சி இயக்கம்** செயல்படுத்தப்படும்.

## 1.4.மின்னணு வேளாண்மை

வேளாண்மைத் துறை, செயற்கை நுண்ணறிவு (AI), இயந்திரக் கற்றல் (Machine

Learning) மற்றும் விவசாயிகளை மையமாகக் கொண்ட மின்னணுத் தளங்கள் மூலம் மின்னணு வேளாண்மையை முன்னெடுத்து வருகிறது. உழவர் செயலியானது, வானிலை ஆலோசனைகள், சந்தை விலைகள், இடுபொருட்களின் இருப்பு, செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான பூச்சி மற்றும் நோய் கண்டறிதல், திட்டத் தகவல்கள் என 24 அத்தியாவசிய சேவைகளை வழங்கி, 20 இலட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளுக்குப் பயனளிக்கிறது.

அக்ரிஸ்டாக், உழவர் பதிவேடு (FR), மின்னணு பயிர் சாகுபடி பரப்பு கணக்கீடு (DCS) மற்றும் புவியிடக் குறியீடு ஆகியவற்றின் மூலம் மின்னணு வேளாண்மைக்கு அடித்தளமிடுகிறது. உழவர் பதிவேட்டில் ஆதார், நில விவரங்கள் மற்றும் விவசாயி விவரங்களை ஒருங்கிணைத்து, ஒரு தனித்துவமான விவசாயி அடையாள

எண்ணை உருவாக்குகிறது. இதன் மூலம் அரசு நலத் திட்டங்கள் வெளிப்படையாகவும், இலக்கு நோக்கியும் வழங்கப்படுவது உறுதி செய்யப்படுகிறது. கிராம முகாம்கள், சுய பதிவு, பொதுச்சேவை மையங்கள் ஆகியவை விவசாயிகளின் இலவசப்பதிவை எளிதாக்குகின்றன.

மின்னணு பயிர் சாகுபடிப் பரப்பு கணக்கீடு, புவிக்குறியிடப்பட்ட செயலிகள் மற்றும் கள சரிபார்ப்பைப் பயன்படுத்தி நிகழ்நேர பயிர்த் தரவுகளைச் சேகரிக்கிறது. இது துல்லியமான பயிர் பரப்பளவு மதிப்பீடு, உற்பத்தி மதிப்பீடு, பயிர்க் காப்பீடு, பேரிடர் சேத மதிப்பீடு, கொள்முதல் திட்டமிடல் மற்றும் வேளாண் புள்ளிவிவரங்கள் சேகரிப்பை சாத்தியமாக்குகிறது. இந்த மின்னணு முன்னெடுப்புகள் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துகின்றன, போலியான தரவுகளை நீக்குகின்றன, தரவுகள் அடிப்படையிலான

கொள்கை உருவாக்கத்தை வலுப்படுத்துவதோடு, நிர்வாகத் திறனையும் அதிகரிக்கின்றன.

தமிழ்நாட்டில் சிறந்த நிர்வாகம் மற்றும் விவசாயிகளின் நலனுக்காக, ஒருங்கிணைந்த மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த வேளாண் சூழலமைப்பை மின்னணு வேளாண்மை உருவாக்கும்.

## 1.5. வேளாண்மைத் துறையின் இதர செயல்பாடுகள்

### 1.5.1 தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை (டான்சிடா)

சான்று விதைகள் மரபணுத் தூய்மை, சிறந்த முளைப்புத் திறன் மற்றும் ஆரோக்கியமான பயிர் வளர்ச்சியை உறுதி செய்வதுடன், விவசாயிகளின் பண்ணை சேமிப்பு விதைகளைவிட 15–25 சதவீதம் வரை கூடுதல் மகசூல் அளிக்கின்றன.

தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை (டான்சிடா) உயர் மகசூல் அளிக்கும் நெல்,

சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துகள் மற்றும் பருத்தி பயிர் இரகங்களின் தரமான விதை உற்பத்தி, கொள்முதல் மற்றும் குறைந்த விலையில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்வதற்கான விதைத் திட்டமிடலை மேற்கொள்ளும் நோக்கத்தில், 2015-16 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. வேளாண்மைத் துறையின் கீழ் 33 அரசு விதைப் பண்ணைகள், 6 மாநில எண்ணெய்வித்துப் பண்ணைகள், 1 மாநில பயறு விதை பெருக்குப் பண்ணை ஆகியவை செயல்பட்டு வருகின்றன. பல்வேறு வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் பல்கலைக் கழகங்களிலிருந்து கொள்முதல் செய்யப்படும் வல்லுநர் விதைகள் இப்பண்ணைகள் மற்றும் விவசாயிகளின் வயல்களில் ஆதார விதைகளாக உற்பத்தி செய்யப்படுகின்றன. பின்னர் விவசாயிகளின் வயல்களில் சான்று விதைகளாகப் பெருக்கப்பட்டு, டான்சிடா மூலம்

கொள்முதல் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

2026-27 ஆம் ஆண்டில், 43,400 மெட்ரிக் டன் சான்று விதைகள் கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதில் 25,000 மெ.டன் நெல், 2,857 மெ.டன் சிறுதானியங்கள், 6,358 மெ.டன் பயறு வகைகள், 9,140 மெ.டன் எண்ணெய்வித்துக்கள், 45 மெ.டன் பருத்தி விதைகள் அடங்கும்.

**அட்டவணை 1.3 : அரசு விதைப் பண்ணைகள்**

| வ. எண் | மாவட்டம் | விதைப் பண்ணைகளின் பெயர்கள் |
|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | பஞ்சுபேட்டை |
| 2 | திருவள்ளூர் | கொளந்தலூர் |
| 3 | கடலூர் | வண்டுராயன்பட்டு |
| 4 | | மிராளூர் |
| 5 | விழுப்புரம் | இருவேல்பட்டு |
| 6 | | காக்குப்பம் |
| 7 | | வானூர் |

| வ. எண் | மாவட்டம் | விதைப் பண்ணைகளின் பெயர்கள் |
|---|---|---|
| 8 | கள்ளக்குறிச்சி | வடக்கனேந்தல் |
| 9 | திருவண்ணாமலை | அத்தியந்தல் |
| 10 | | வாழவச்சனூர் |
| 11 | சேலம் | மேட்டூர் அணை |
| 12 | | டேனிஷ்பேட்டை |
| 13 | தர்மபுரி | பாப்பாரப்பட்டி |
| 14 | திருப்பூர் | பாப்பாங்குளம் |
| 15 | ஈரோடு | பவானி |
| 16 | | சத்தியமங்கலம் |
| 17 | திருச்சிராப்பள்ளி | புதூர்பாளையம் |
| 18 | | நெய்குப்பைபுதூர் |
| 19 | கரூர் | இனுங்கூர் |
| 20 | புதுக்கோட்டை | அண்ணா பண்ணை |
| 21 | தஞ்சாவூர் | சாக்கோட்டை |
| 22 | மயிலாடுதுறை | நாகமங்கலம் |
| 23 | | திருக்கடையூர் |
| 24 | திருவாரூர் | நெடும்பலம் |
| 25 | | காஞ்சிக்குடிகாடு |
| 26 | | கீராந்தி |
| 27 | | தேவாம்பாள்பட்டினம் |
| 28 | | மூங்கில்குடி |
| 29 | மதுரை | விநாயகபுரம் |
| 30 | தேனி | கீழகூடலூர் |
| 31 | விருதுநகர் | தேவதானம் |

| வ. எண் | மாவட்டம் | விதைப் பண்ணைகளின் பெயர்கள் |
|---|---|---|
| 32 | திருநெல்வேலி | கரையிருப்பு |
| 33 | கன்னியாகுமரி | திருப்பதிசாரம் |
| **மாநில எண்ணெய்வித்துப் பண்ணை** | | |
| 34 | காஞ்சிபுரம் | முசரவாக்கம் |
| 35 | கிருஷ்ணகிரி | அகசிபள்ளி |
| 36 | ஈரோடு | பவானிசாகர் |
| 37 | புதுக்கோட்டை | வெள்ளாளவிடுதி |
| 38 | இராணிப்பேட்டை | நவ்லாக் |
| 39 | கடலூர் | நெய்வேலி |
| **மாநில பயறு விதை பெருக்கு பண்ணை** | | |
| 40 | புதுக்கோட்டை | வம்பன் |

## 1.5.2 வேளாண்மை விரிவாக்க மையங்கள் மற்றும் விதை சுத்திகரிப்பு நிலையங்கள்:

வேளாண்மைத் துறையின் கீழுள்ள 885 வேளாண்மை விரிவாக்க மையங்களில், 386 மையங்கள் வட்டார அளவில் முதன்மை மையங்களாக செயல்பட்டு வருகின்றன. விவசாயிகளுக்கு அனைத்து வேளாண்மை தொடர்பான சேவைகளையும் ஒருங்கிணைத்து வழங்கும் நோக்கில், 245 முதன்மை வேளாண்மை

விரிவாக்க மையங்கள் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்களாக (IAEC) மேம்படுத்தப்பட்டுள்ளன.

அனைத்து ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்களின் பணிகளைக் கண்காணிக்க, கண்காணிப்பு கேமராக்கள் மற்றும் பணியாளர்களின் தினசரி வருகையினைக் கண்காணிக்க மின்னணு கைரேகைப் பதிவு இயந்திரங்கள் நிறுவப்பட்டு வருகின்றன.

விவசாயப் பெருமக்களுக்கு தரமான இடுபொருட்கள், அருகிலேயே கிடைத்திட, சேமிப்புக் கிடங்குடன் கூடிய 499 துணை வேளாண்மை விரிவாக்க மையங்கள், குறுவட்ட அளவில் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் 314 மையங்கள் புதிய துணை வேளாண்மை விரிவாக்க மையங்களாக மேம்படுத்தப்பட்டுள்ளன.

வேளாண்மைத் துறையின் கீழ் இயங்கும் 105 விதை சுத்திகரிப்பு நிலையங்கள், ஆண்டிற்கு சராசரியாக 25,000 மெ.டன் சுத்திகரிப்புத் திறனோடு செயல்பட்டு வருகின்றன. மேலும், 23 இடங்களில் புதிய விதை சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் திருவண்ணாமலை மாவட்டம் அத்தியேந்தலில் நவீன விதை சுத்திகரிப்பு நிலையம் புதியதாகக் கட்டப்படவுள்ளது.

**அட்டவணை 1.4 : மாவட்ட வாரியாக வேளாண்மை விரிவாக்க மையங்கள் (AEC)**

| வ. எண் | மாவட்டம் | ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள் | துணை வேளாண்மை விரிவாக்க மையங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | அரியலூர் | 6 | 5 | 11 |
| 2 | செங்கல்பட்டு | 8 | 8 | 16 |
| 3 | கோயம்புத்தூர் | 12 | 14 | 26 |
| 4 | கடலூர் | 14 | 16 | 30 |

| வ. எண் | மாவட்டம் | ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள் | துணை வேளாண்மை விரிவாக்க மையங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 5 | தர்மபுரி | 8 | 9 | 17 |
| 6 | திண்டுக்கல் | 14 | 15 | 29 |
| 7 | ஈரோடு | 14 | 21 | 35 |
| 8 | கள்ளக்குறிச்சி | 9 | 10 | 19 |
| 9 | காஞ்சிபுரம் | 5 | 8 | 13 |
| 10 | கன்னியாகுமரி | 9 | 11 | 20 |
| 11 | கரூர் | 8 | 4 | 12 |
| 12 | கிருஷ்ணகிரி | 10 | 7 | 17 |
| 13 | மதுரை | 13 | 18 | 31 |
| 14 | மயிலாடுதுறை | 5 | 15 | 20 |
| 15 | நாகப்பட்டினம் | 6 | 18 | 24 |
| 16 | நாமக்கல் | 15 | 18 | 33 |
| 17 | பெரம்பலூர் | 4 | 3 | 7 |
| 18 | புதுக்கோட்டை | 13 | 20 | 33 |
| 19 | இராமநாதபுரம் | 11 | 6 | 17 |
| 20 | ராணிப்பேட்டை | 7 | 8 | 15 |
| 21 | சேலம் | 20 | 11 | 31 |
| 22 | சிவகங்கை | 12 | 9 | 21 |

| வ. எண் | மாவட்டம் | ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள் | துணை வேளாண்மை விரிவாக்க மையங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 23 | தென்காசி | 10 | 15 | 25 |
| 24 | தஞ்சாவூர் | 14 | 47 | **61** |
| 25 | தேனி | 8 | 13 | 21 |
| 26 | திருப்பத்தூர் | 6 | 8 | 14 |
| 27 | திருவள்ளூர் | 14 | 20 | 34 |
| 28 | திருவண்ணாமலை | 18 | 24 | 42 |
| 29 | திருவாரூர் | 10 | 32 | 42 |
| 30 | திருநெல்வேலி | 9 | 16 | 25 |
| 31 | திருப்பூர் | 13 | 13 | 26 |
| 32 | திருச்சிராப்பள்ளி | 14 | 10 | 24 |
| 33 | தூத்துக்குடி | 12 | 16 | 28 |
| 34 | வேலூர் | 7 | 7 | 14 |
| 35 | விழுப்புரம் | 13 | 17 | 30 |
| 36 | விருதுநகர் | 11 | 5 | 16 |
| 37 | நீலகிரி | 4 | 2 | **6** |
| **மொத்தம்** | | **386** | **499** | **885** |

## அட்டவணை 1.5: விதை சுத்திகரிப்பு நிலையங்கள்

| வ. எண். | மாவட்டம் | சுத்திகரிப்பு திறன் வாரியாக விதை சுத்திகரிப்பு நிலையங்களின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|---|
| | | 1.5 - 5 மெ. டன் /மணி | 1 மெ. டன் /மணி | 0.5 மெ. டன் /மணி | மொத்தம் |
| 1 | அரியலூர் | | 2 | | 2 |
| 2 | செங்கல்பட்டு | | 1 | 1 | 2 |
| 3 | கோயம்புத்தூர் | | 1 | | 1 |
| 4 | கடலூர் | 1 | 3 | | 4 |
| 5 | தருமபுரி | | 2 | | 2 |
| 6 | திண்டுக்கல் | 1 | 1 | | 2 |
| 7 | ஈரோடு | 1 | 2 | 1 | 4 |
| 8 | கள்ளக்குறிச்சி | | 3 | | 3 |
| 9 | காஞ்சிபுரம் | 1 | 2 | | 3 |
| 10 | கன்னியாகுமரி | | 1 | | 1 |
| 11 | கரூர் | | 1 | 1 | 2 |
| 12 | கிருஷ்ணகிரி | | 1 | 1 | 2 |
| 13 | மதுரை | 1 | 2 | | 3 |
| 14 | மயிலாடுதுறை | | 3 | 1 | 4 |
| 15 | நாகப்பட்டினம் | | | 1 | 1 |
| 16 | நாமக்கல் | | 2 | | 2 |
| 17 | பெரம்பலூர் | | 1 | | 1 |
| 18 | புதுக்கோட்டை | | 4 | 2 | 6 |
| 19 | இராமநாதபுரம் | | 2 | 1 | 3 |
| 20 | இராணிப்பேட்டை | | 2 | 1 | 3 |
| 21 | சேலம் | | 3 | 1 | 4 |
| 22 | சிவகங்கை | | 2 | 1 | 3 |

| வ. எண். | மாவட்டம் | சுத்திகரிப்பு திறன் வாரியாக விதை சுத்திகரிப்பு நிலையங்களின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|---|
| | | 1.5 - 5 மெ. டன் /மணி | 1 மெ. டன் /மணி | 0.5 மெ. டன் /மணி | மொத்தம் |
| 23 | தென்காசி | | | 1 | 1 |
| 24 | தஞ்சாவூர் | | 5 | 3 | 8 |
| 25 | தேனி | | 1 | | 1 |
| 26 | திருப்பத்தூர் | | | | |
| 27 | தூத்துக்குடி | 1 | 1 | | 2 |
| 28 | திருச்சிராப்பள்ளி | | 4 | 2 | 6 |
| 29 | திருநெல்வேலி | | 2 | 1 | 3 |
| 30 | திருப்பூர் | | 2 | | 2 |
| 31 | திருவள்ளூர் | | 2 | 1 | 3 |
| 32 | திருவண்ணாமலை | 2 | 2 | 3 | 7 |
| 33 | திருவாரூர் | | 3 | 3 | 6 |
| 34 | வேலூர் | | | 1 | 1 |
| 35 | விழுப்புரம் | 1 | 2 | 1 | 4 |
| 36 | விருதுநகர் | | 2 | 1 | 3 |
| | மொத்தம் | 9 | 67 | 29 | 105 |

## 1.6. பயிர் பாதுகாப்பு

பயிர்களில் ஏற்படும் பூச்சி மற்றும் நோய் தாக்குதல்களைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த முறையில் பயிர்பாதுகாப்பு மேலாண்மை முறைகளைப் பின்பற்றவும், விவசாயிகளிடையே

உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள் பயன்பாட்டினை ஊக்குவிப்பதற்கும், வேளாண்மைத் துறையிலுள்ள 24 உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் மற்றும் 5 கரும்பு ஒட்டுண்ணி மையங்கள் வாயிலாக உயிரியல் பூச்சிக்கொல்லிகள் உற்பத்தி செய்யப்பட்டு பல்வேறு திட்டங்களில் மானிய விலையில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

2026-27 ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்டுள்ள உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகளின் உற்பத்தி மற்றும் விநியோக விவரங்கள்

| வ. எண் | உயிரி பூச்சிக்கொல்லிகள் மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் | உற்பத்தி மற்றும் விநியோகம் *(கிலோ)* |
|---|---|---|
| 1 | *டிரைகோடெர்மா விரிடி* | 3,89,000 |
| 2 | *சூடோமோனாஸ் புளுரசன்ஸ்* | 3,62,000 |
| 3 | *மெட்டாரைசியம் அனிசோபிலியே* | 1,49,000 |

**1.7. உரம்**

தமிழ்நாட்டில் வேளாண் உற்பத்திக்குத் தேவையான இரசாயன உரங்களின் பயன்பாடு ஆண்டுதோறும் சுமார் 23 இலட்சம் மெட்ரிக் டன்னாக உள்ளது. 2026ஆம் ஆண்டின் காரீப் பருவத்தில் விவசாயிகளின் தேவையைக் கருத்தில் கொண்டு, மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு 5.06 இலட்சம் மெட்ரிக் டன் யூரியா, 1.40 இலட்சம் மெட்ரிக் டன் டி.ஏ.பி, 1.11 இலட்சம் மெட்ரிக் டன் பொட்டாஷ், 4.65 இலட்சம் மெட்ரிக் டன் காம்ப்ளக்ஸ் உரங்கள் மற்றும் 0.74 இலட்சம் மெட்ரிக் டன் சூப்பர் பாஸ்பேட் ஆகியவற்றை ஒதுக்கீடு செய்துள்ளது.

இரசாயன உரங்களின் அளவுக்கு அதிகமான பயன்பாட்டைத் தவிர்த்து, மண்ணின் இயற்கை வளத்தையும் உற்பத்தித் திறனையும் பாதுகாக்கும் வகையில் ஒருங்கிணைந்த உர மேலாண்மை நடைமுறைகள் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக, பசுந்தாள்

உரங்கள், உயிர் உரங்கள் மற்றும் உயிர்ம உரங்களின் பயன்பாட்டின் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. வட்டார அளவில் விவசாயிகளுக்குப் பயிற்சிகள் மற்றும் செயல்விளக்க நிகழ்ச்சிகள் நடத்துவதன் வாயிலாக இரசாயன உரங்களின் மீதான சார்பைக் குறைத்து, நிலையான வேளாண் முறைகளைப் பின்பற்றுவதற்கான வழிகாட்டுதல்கள் வழங்கப்படுகின்றன.

மேலும், விவசாயிகளுக்கு உரங்கள் தடையின்றிக் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில், உர உற்பத்தி நிறுவனங்களிடமிருந்து தேவையான அளவு உரங்களை முன்கூட்டியே கொள்முதல் செய்து இருப்பில் வைத்திருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. உர விநியோகத்தை சீராக மேற்கொள்ளவும், விவசாயிகளின் உற்பத்திச் செலவைக் குறைத்து, மண் வளத்தை நீண்டகால

அடிப்படையில் பாதுகாக்கவும் முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படும்.

**அட்டவணை: 1.6. உரப் பயன்பாடு**

**(இலட்சம் மெட்ரிக் டன்)**

| வ. எண் | உரம் | 2025-26 | 2026-27 (உத்தேசமாக) |
|---|---|---|---|
| 1 | யூரியா | 11.43 | 10.86 |
| 2 | டி.ஏ.பி | 2.69 | 2.56 |
| 3 | பொட்டாஷ் | 2.02 | 1.92 |
| 4 | காம்ப்ளக்ஸ் | 7.89 | 7.50 |
| 5 | சூப்பர்பாஸ்பேட் | 0.96 | 0.91 |
| | **மொத்தம்** | **24.99** | **23.74** |

## தரமான உர விற்பனையை உறுதிப்படுத்துதல்

விவசாயிகளுக்குத் தரமான உரங்கள் மட்டுமே விற்பனை செய்யப்படுவதை உறுதி செய்யும் நோக்கில், மாவட்ட அளவில் தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர்கள் சேகரித்த உர மாதிரிகள் தரப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

ஆண்டிற்கு சராசரியாக 31,040 உர மாதிரிகளைப் பரிசோதனை செய்வதற்கு இலக்கு நிர்ணயிக்கப்படுகிறது.

பரிசோதனைகளில், உரங்களில் ஊட்டச்சத்து குறைபாடு உள்ளிட்ட தரக்குறைபாடுகள் கண்டறியப்படும் நிலையில், சம்பந்தப்பட்ட உற்பத்தியாளர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், தொடர்புடைய சட்ட விதிகளின் கீழும் உரிய சட்ட நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகின்றன.

அவ்வாறே, 2026–27ஆம் ஆண்டிலும் 31,040 உர மாதிரிகளைச் சேகரித்து தரப் பரிசோதனை மேற்கொள்வதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**1.8. ஆய்வகங்கள்**

மண்வளத்திற்கேற்ப விவசாயிகள் பயிரிடுவதை ஊக்குவிக்கவும், உரச்

செலவுகளைக் குறைத்து மண்வளத்தை மேம்படுத்தவும், உரப்பரிந்துரைகளுடன் கூடிய மண் நல அட்டைகள் விநியோகம் செய்து விவசாயிகளுக்கிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த 37 மண்பரிசோதனை நிலையங்கள், 22 நடமாடும் மண் பரிசோதனை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. தரமான வேளாண் இடுபொருட்கள் விவசாயிகளுக்குக் கிடைப்பதை உறுதி செய்ய 14 உரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் (Fertilizer Control Lab), 15 பூச்சிக்கொல்லி ஆய்வகங்கள் (Pesticide Testing Lab), 2 உயிர்ம உர பரிசோதனை ஆய்வகங்கள் (Organic Fertilizer Testing Lab), 1 உயிர் உரத் தரக்கட்டுபாட்டு ஆய்வகம் (Bio Fertilizer Quality Control Testing Lab) மற்றும் 1 உயிரியல் காரணிகள் தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம் (Bio Control agent Testing Lab) ஆகியவை செயல்பட்டு வருகின்றன. மேலும், ஆண்டுக்கு 12.10 இலட்சம் லிட்டர் தரமான திரவ உயிர் உரங்கள் உற்பத்தி செய்ய 22 திரவ உயிர் உர உற்பத்தி மையங்களும்

3,300 மெ.டன் நுண்ணூட்ட உரக்கலவைகள் உற்பத்தி செய்ய 1 நுண்ணூட்ட உரக்கலவை உற்பத்தி மையமும் இயங்கி வருகின்றன.

## அட்டவணை 1.7 ஆய்வு மாதிரிகள் இலக்கு

| வ. எண் | விவரம் | 2026-2027 இலக்கு (எண்கள்) |
|---|---|---|
| 1 | மண் மற்றும் பாசன நீர் மாதிரிகள் | 5.00 இலட்சம் |
| 2 | உரமாதிரிகள் | 28,000 |
| 3 | உயிர்ம உரமாதிரிகள் | 2,000 |
| 4 | உயிர் உர மாதிரிகள் | 1,040 |
| 5 | பூச்சிக்கொல்லி மாதிரிகள் | 21,850 |
| 6 | உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள் | 792 |
| 7 | நுண்ணூட்ட உரக்கலவை உற்பத்தி | 3,300 மெ.டன் |
| 8 | திரவ உயிர் உர உற்பத்தி | 12.10 இலட்சம் லிட்டர் |

**அட்டவணை 1.8 (அ) : மாநிலத்திலுள்ள ஆய்வகங்களின் விவரங்கள்**

| வ. எண் | மாவட்டம் | மண் பரிசோதனை ஆய்வகங்கள் (37 எண்கள்) | நடமாடும் மண் பரிசோதனை ஆய்வகங்கள் (22 எண்கள்) |
|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் | |
| 2 | திருவள்ளூர் | திருவள்ளூர் | திருவள்ளூர் |
| 3 | கடலூர் | கடலூர் | கடலூர் |
| 4 | விழுப்புரம் | விழுப்புரம் | விழுப்புரம் |
| 5 | வேலூர் | மேலாளத்தூர் (குடியாத்தம்) | வேலூர் |
| 6 | திருவண்ணாமலை | திருவண்ணாமலை | திருவண்ணாமலை |
| 7 | சேலம் | சேலம் | சேலம் |
| 8 | நாமக்கல் | நாமக்கல் | திருச்செங்கோடு |
| 9 | தருமபுரி | தருமபுரி | |
| 10 | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி |
| 11 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் |
| 12 | திருப்பூர் | திருப்பூர் | பல்லடம் |
| 13 | ஈரோடு | ஈரோடு | ஈரோடு |
| 14 | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி | |
| 15 | பெரம்பலூர் | பெரம்பலூர் | பெரம்பலூர் |
| 16 | அரியலூர் | அரியலூர் | |
| 17 | கரூர் | கரூர் | கரூர் |
| 18 | புதுக்கோட்டை | குடுமியான்மலை | |
| 19 | தஞ்சாவூர் | ஆடுதுறை | ஆடுதுறை |
| 20 | நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் |
| 21 | திருவாரூர் | திருவாரூர் | திருவாரூர் |
| 22 | மதுரை | மதுரை | மதுரை |

| வ. எண் | மாவட்டம் | மண் பரிசோதனை ஆய்வகங்கள் (37 எண்கள்) | நடமாடும் மண் பரிசோதனை ஆய்வகங்கள் (22 எண்கள்) |
|---|---|---|---|
| 23 | தேனி | தேனி | |
| 24 | திண்டுக்கல் | திண்டுக்கல் | |
| 25 | இராமநாதபுரம் | பரமக்குடி | பரமக்குடி |
| 26 | சிவகங்கை | சிவகங்கை | |
| 27 | விருதுநகர் | விருதுநகர் | அருப்புக்கோட்டை |
| 28 | திருநெல்வேலி | திருநெல்வேலி | திருநெல்வேலி |
| 29 | தூத்துக்குடி | கோவில்பட்டி | கோவில்பட்டி |
| 30 | கன்னியாகுமரி | நாகர்கோவில் | நாகர்கோவில் |
| 31 | நீலகிரி | ஊட்டி | |
| 32 | கள்ளக்குறிச்சி | சின்னசேலம் | |
| 33 | தென்காசி | தென்காசி | |
| 34 | செங்கல்பட்டு | செங்கல்பட்டு | |
| 35 | இராணிப்பேட்டை | இராணிப்பேட்டை | |
| 36 | திருப்பத்தூர் | திருப்பத்தூர் | |
| 37 | மயிலாடுதுறை | மயிலாடுதுறை | |

**அட்டவணை 1.8 (ஆ) : மாநிலத்திலுள்ள ஆய்வகங்களின் விவரங்கள்**

| வ. எண் | மாவட்டம் | உரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் (14 எண்கள்) | பூச்சிக்கொல்லி ஆய்வகங்கள் (12 எண்கள்) |
|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் |
| 2 | விழுப்புரம் | விழுப்புரம் | |
| 3 | வேலூர் | | வேலூர் |
| 4 | சேலம் | சேலம் | சேலம் |

| வ. எண் | மாவட்டம் | உரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் (14 எண்கள்) | பூச்சிக்கொல்லி ஆய்வகங்கள் (12 எண்கள்) |
|---|---|---|---|
| 5 | தருமபுரி | தருமபுரி | தருமபுரி |
| 6 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் |
| 7 | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி |
| 8 | தஞ்சாவூர் | கும்பகோணம் | ஆடுதுறை |
| 9 | நாகப்பட்டினம் | | நாகப்பட்டினம் |
| 10 | திருவாரூர் | திருவாரூர் | |
| 11 | மதுரை | மதுரை | மதுரை |
| 12 | திண்டுக்கல் | திண்டுக்கல் | |
| 13 | இராமநாதபுரம் | பரமக்குடி | |
| 14 | சிவகங்கை | | சிவகங்கை |
| 15 | திருநெல்வேலி | | திருநெல்வேலி |
| 16 | தூத்துக்குடி | கோவில்பட்டி | கோவில்பட்டி |
| 17 | கன்னியாகுமரி | நாகர்கோவில் | |
| 18 | நீலகிரி | ஊட்டி | |

## அட்டவணை 1.8 (இ) : மாநிலத்திலுள்ள ஆய்வகங்களின் விவரங்கள்

| வ. எண் | மாவட்டம் | திரவ உயிர் உர உற்பத்தி மையங்கள் (22 எண்கள்) | உயிரி கட்டுப்பாட்டுக் காரணிகள் உற்பத்தி மையங்கள் (22 எண்கள்) |
|---|---|---|---|
| 1 | திருவள்ளூர் | புழல் | மாதவரம் |
| 2 | கடலூர் | கடலூர் | பண்ருட்டி |
| 3 | விழுப்புரம் | முகையூர் | விழுப்புரம் |
| 4 | வேலூர் | குடியாத்தம் | வேலூர் |

| வ. எண் | மாவட்டம் | திரவ உயிர் உர உற்பத்தி மையங்கள் (22 எண்கள்) | உயிரி கட்டுப்பாட்டுக் காரணிகள் உற்பத்தி மையங்கள் (22 எண்கள்) |
|---|---|---|---|
| 5 | திருவண்ணாமலை | போளூர் | திருவண்ணாமலை |
| 6 | சேலம் | சேலம் | சேலம் |
| 7 | நாமக்கல் | | நாமக்கல் |
| 8 | தருமபுரி | பாலக்கோடு | பாப்பாரப்பட்டி |
| 9 | கோயம்புத்தூர் | | கோயம்புத்தூர் |
| 10 | திருப்பூர் | அவிநாசி | |
| 11 | ஈரோடு | பவானி | பவானி |
| 12 | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி |
| 13 | பெரம்பலூர் | | பெரம்பலூர் |
| 14 | அரியலூர் | ஜெயங்கொண்டம் | திருமானூர் |
| 15 | கரூர் | | கரூர் |
| 16 | புதுக்கோட்டை | குடுமியான்மலை | அன்னவாசல் |
| 17 | தஞ்சாவூர் | சாக்கோட்டை | காட்டுத்தோட்டம் |
| 18 | திருவாரூர் | நீடாமங்கலம் | மன்னார்குடி |
| 19 | மதுரை | திருமங்கலம் | மேலூர் |
| 20 | தேனி | உத்தமபாளையம் | |
| 21 | திண்டுக்கல் | பழனி | நத்தம் |
| 22 | இராமநாதபுரம் | இராமநாதபுரம் | |
| 23 | சிவகங்கை | மானாமதுரை | |
| 24 | விருதுநகர் | | விருதுநகர் |
| 25 | திருநெல்வேலி | | திருநெல்வேலி |
| 26 | தூத்துக்குடி | தூத்துக்குடி | |
| 27 | கன்னியாகுமரி | | கோழிப்போர்விளை |
| 28 | தென்காசி | தென்காசி | |
| 29 | செங்கல்பட்டு | செங்கல்பட்டு | |

**அட்டவணை 1.8 (ஈ) : மாநிலத்திலுள்ள ஆய்வகங்களின் விவரங்கள்**

| வ. எண் | ஆய்வகங்கள் | மாவட்டங்கள் |
|---|---|---|
| 1 | **உயிர்ம உரப் பரிசோதனை ஆய்வகங்கள் (2 எண்கள்)** | கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி |
| 2 | **உயிர் உரத் தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம் (1 எண்)** | திருச்சிராப்பள்ளி |
| 3 | **உயிரியல் காரணிகள் தரக் கட்டுப்பாட்டு ஆய்வகம் (1 எண்)** | திருச்சிராப்பள்ளி |
| 4 | **மாநில பூச்சிக்கொல்லி ஆய்வகம் மற்றும் குறியீட்டு மையங்கள் (3 எண்கள்)** | கடலூர், ஈரோடு, தேனி |
| 5 | **நுண்ணூட்ட உரக்கலவை உற்பத்தி மையம் (1 எண்)** | குடுமியான்மலை (புதுக்கோட்டை) |
| 6 | **மத்திய கட்டுப்பாட்டு ஆய்வகம் (1 எண்)** | குடுமியான்மலை (புதுக்கோட்டை) |
| 7 | **ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை மையங்கள்( 2 எண்கள்)** | காஞ்சிபுரம், மதுரை (விநாயகபுரம்) |
| 8 | **கரும்பு ஒட்டுண்ணி மையங்கள் (5 எண்கள்)** | விழுப்புரம், நாமக்கல் (மோகனூர்) உடுமலைப்பேட்டை (திருப்பூர்) கோபிசெட்டிப்பாளையம் (ஈரோடு) தஞ்சாவூர் |

### 1.8.1. தமிழ் மண்வளம்

விளை நிலங்களின் ஊட்டச்சத்து நிலை, உரம் மற்றும் பயிர்கள் குறித்த பரிந்துரை ஆகியவற்றை அறிந்து கொள்வதற்காக 'தமிழ் மண்வளம்' எனும் இணைய முகப்பு பிரத்யேகமாக செயல்படுகிறது. இதன் வாயிலாக 4,65,570 மண்வள அட்டைகள் பதிவிறக்கம் செய்து விவசாயிகளால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

### 1.8.2. தேசிய தர நிர்ணய அங்கீகாரச் சான்றிதழ் பெற்ற ஆய்வகங்களின் விவரம்

வேளாண்மைத்துறையின் கட்டுபாட்டில் இயங்கும் ஆய்வகங்களில் 36 மண் பரிசோதனை நிலையங்கள், 14 நடமாடும் மண் பரிசோதனை நிலையங்கள் தேசிய தரச்சான்று அங்கீகாரம் (NABL) பெற்றுள்ளன.

மேலும், 14 உரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள், 6 பூச்சிக்கொல்லி ஆய்வகங்கள் தேசிய தர

நிர்ணயச்சான்று பெற்றுள்ளன. மற்ற ஆய்வகங்களுக்கும் தேசிய தர நிர்ணயச்சான்று பெறுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 1.9. வேளாண்மை விரிவாக்க துணைத் திட்டம் (SMAE) – (SSEPERS - ATMA)

வேளாண்மை விரிவாக்க துணைத் திட்டம் (SMAE) என்பது வேளாண்மை மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளின் ஒருங்கிணைந்த செயல்பாடுகள் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் வாயிலாக மேம்பட்ட பயிர் சாகுபடி முறைகளும் நவீன வேளாண்மை தொழில்நுட்பங்களும் விவசாயிகளிடையே கொண்டு சேர்க்கப்படுகின்றன.

அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமைகள் (ATMA) மூலம் விவசாயிகளுக்கான

பயிற்சி, கண்டுணர் சுற்றுலா, செயல்விளக்கங்கள், கிசான் மேளா, விவசாயக் குழுக்கள் அமைத்தல், பண்ணைப்பள்ளிகள் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கான தொழில்நுட்பப் பயிற்சிகள், கண்டுணர் சுற்றுலாக்கள், செயல்விளக்கத்திடல்கள், பண்ணைப் பள்ளிகள் போன்ற செயல்பாடுகள் 2026-27 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**1.9.1. உழவர் பயிற்சி நிலையங்கள்:**

மாநிலம் முழுவதும் 22 உழவர் பயிற்சி நிலையங்கள் (Farmers Training Centres - FTCs) செயல்பட்டு வருகின்றன. இந்நிலையங்களில் விவசாயிகளுக்கும், உழவர் விவாதக் குழு அமைப்பாளர்களுக்கும், பண்ணை மகளிருக்கும் சிறந்த பண்ணை மேலாண்மை முறைகள், நவீன

வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்த செயல்விளக்கங்கள், காலமுறைப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டம் 2026–27 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**1.9.2. மாநில வேளாண்மை விரிவாக்க மேலாண்மை நிலையம் (ஸ்டாமின்), குடுமியான்மலை :**

மாநில வேளாண்மை விரிவாக்க மேலாண்மை நிலையம் (STAMIN) மூலம் வேளாண்மைத் துறையில் பணிபுரியும் விரிவாக்கப் பணியாளர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்களுக்கு நவீன வேளாண் தொழில்நுட்பங்கள், அலுவலக நிர்வாகம், விரிவாக்க மேலாண்மை மற்றும் கணினித் திறன்கள் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டம் 2026–27 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 1.9.3. மாநில வேளாண்மை மேலாண்மை மற்றும் விரிவாக்கப் பயிற்சி நிறுவனம் (SAMETI)

மாநில வேளாண்மை மேலாண்மை மற்றும் விரிவாக்க பயிற்சி நிறுவனம் (SAMETI), வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண் வணிகம் மற்றும் விற்பனை, வேளாண்மைப் பொறியியல் துறை, விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறை, கால்நடை பராமரிப்புத்துறை, மீன்வளத்துறை, வனத்துறை மற்றும் பட்டு வளர்ச்சித்துறையில் பணியாற்றும் அலுவலர்களின் திறன் மேம்பாட்டை உறுதிப்படுத்தும் வகையில் நவீன தொழில்நுட்பங்களில் சிறப்புப் பயிற்சிகளை வழங்குவதோடு, தேசிய அளவிலான திட்டங்களையும் ஒருங்கிணைக்கிறது. மேலும், ஆலோசனை சேவைகள் மற்றும் இணையவழிப் பயிற்சிகளையும் வழங்கி வருகிறது.

### 1.9.4. நீர் மேலாண்மை பயிற்சி மையம், விநாயகபுரம், மதுரை மாவட்டம்:

மதுரை மாவட்டம் விநாயகபுரத்தில் அமைந்துள்ள நீர்மேலாண்மை பயிற்சி மையம் (Water Management Training Centre), நீர் மேலாண்மை, நீர்ப்பாசன முறைகள் மற்றும் நீர் சேமிப்புத் தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சிகளை களப்பணியாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கு வழங்கி வருகிறது.

## 1.10. பேரிடர் மேலாண்மை

தமிழ்நாட்டில் வெள்ளம், வறட்சி, புயல் உள்ளிட்ட இயற்கைப் பேரிடர்கள் அவ்வப்போது ஏற்பட்டு வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களுக்கு கடுமையான சேதத்தை ஏற்படுத்துவதால் பயிர் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் பெருமளவில் பாதிக்கப்படுகிறது. இத்தகைய இயற்கை இடர்ப்பாடுகளால் பாதிக்கப்படும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப்

பாதுகாத்து, வேளாண் பணிகள் தடையின்றி தொடர்ந்து நடைபெற்றிட மாநில அரசு, மாநிலப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து இடுபொருள் மானியத்தை நிவாரணமாக வழங்கி வருகிறது. விவசாயிகள் இழப்புகளிலிருந்து மீண்டு, தங்களது விவசாய நடவடிக்கைகளைத் தொடர உதவும் வகையில் உடனடியாக இந்த நிவாரணமானது வழங்கப்படுகிறது. இச்செயல்பாடு விவசாயிகளின் துயர்துடைக்கும் வகையில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 1.11. விவசாயத்திற்கான இலவச மின்சாரம்

தமிழ்நாட்டில் விவசாயம், கிணறுகள் மற்றும் நிலத்தடி நீர் ஆதாரங்கள் மூலமான நீர்ப்பாசனத்தை பெருமளவில் சார்ந்துள்ளது. விவசாயிகள் இயற்கைப் பேரிடர்களுக்கு இடையில் விவசாயத்தைத் தொடர உதவுவதற்காகவும், மாநிலத்தில் நிலையான வேளாண் உற்பத்தி மற்றும் உணவுப் பாதுகாப்பை

உறுதி செய்திடவும், தமிழ்நாடு அரசு விவசாயத்திற்காகப் பயன்படுத்தும் மின் இணைப்புகளுக்கு இலவச மின்சாரம் வழங்கி வருகிறது.

2026-27 ஆம் ஆண்டில், தற்போதுள்ள 23.98 இலட்சம் வேளாண் மின் இணைப்புகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவதற்காக ரூ.7,432.58 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1.12. வேளாண்மைத் துறை சார்ந்த விருதுகள்

### 1.12.1. திரு. சி. நாராயணசாமி நாயுடு நெல் உற்பத்தித் திறனுக்கான விருது

திருந்திய நெல் சாகுபடி (SRI)/ இயந்திர நடவுத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மாநில அளவில் அதிக உற்பத்தித்திறன் பெறும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில், ஆண்டுதோறும் "திரு. சி. நாராயணசாமி நாயுடு

நெல் உற்பத்தித் திறனுக்கான விருது" வழங்கப்படுகிறது. இந்த விருது ஒவ்வொரு ஆண்டும், குடியரசு தினவிழாவின் போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், சிறப்பு ரொக்கப் பரிசு ரூபாய் 5 இலட்சம், தங்க முலாம் பூசப்பட்ட வெள்ளிப் பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கப்படும்.

### 1.12.2. மாநில அளவிலான பயிர் விளைச்சல் போட்டிக்கான மக்கள் சேவகர் அஞ்சைலயம்மாள் சிறு, குறு விவசாயி விருது

2026-27 ஆம் ஆண்டில் சிறு மற்றும் குறு விவசாயிகளை ஊக்குவிக்கும் நோக்கில், சிறுதானியங்கள், பயறு வகைகள் மற்றும் எண்ணெய்வித்துப் பயிர்களில் அதிக மகசூல் பெறும் விவசாயிகளுக்கு மாநில அளவிலான பயிர் விளைச்சல் போட்டிக்கான '**மக்கள் சேவகர்**

**அஞ்சைலயம்மாள் சிறு, குறு விவசாயி விருது**' வழங்கப்படும்.

2026-27 ஆம் ஆண்டில், இத்திட்டத்திற்காக ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, முதல் பரிசாக ரூ.2.50 இலட்சம், இரண்டாம் பரிசாக ரூ.1.50 இலட்சம் மற்றும் மூன்றாம் பரிசாக ரூ.1.00 இலட்சம் என மொத்தம் 30 பரிசுகள் வழங்கப்படும்.

**1.12.3. மாவட்ட அளவிலான 'வெற்றி விவசாயி விருது':**

புதிய பயிர் இரகங்களைச் சாகுபடி செய்து, நவீன அறிவியல் தொழில்நுட்பங்களை வெற்றிகரமாகக் கடைப்பிடித்து, அதிக உற்பத்தித்திறனைப் பெற்று, பிற விவசாயிகளுக்கு முன்மாதிரியாகத் திகழும் விவசாயிகளை ஊக்குவித்து அங்கீகரிக்கும் நோக்கில், மாவட்ட அளவில் பயிர் விளைச்சல் போட்டிகள் நடத்தப்பட்டு '**வெற்றி விவசாயி விருதுகள்**' வழங்கப்படும்.

இப்போட்டி நெல் (இறவை மற்றும் மானாவாரி), சோளம், கம்பு, மக்காச்சோளம், துவரை, உளுந்து, பச்சைப்பயறு, நிலக்கடலை மற்றும் பருத்தி ஆகிய பயிர்களில் நடத்தப்படும். ஒவ்வொரு பயிரிலும் இரண்டு ஏக்கர் பரப்பளவில் பயிரிட்டு அதிகபட்ச மகசூலைப் பெறும் இரண்டு விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு, முதல் பரிசாக ரூ.50,000/- மற்றும் இரண்டாம் பரிசாக ரூ.25,000/- வழங்கி கௌரவிக்கப்படுவர்.

2026–27 ஆம் ஆண்டில், மேற்கண்ட பயிர்களில் பயிர் விளைச்சல் போட்டிகள் நடத்தி, சிறப்பாகச் செயல்படும் விவசாயிகளுக்கு பரிசுகள் வழங்குவதற்காக ரூ.67.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 1.12.4. பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் பாரம்பரிய நெல் பாதுகாவலர் விருது

தமிழகத்தில் பாரம்பரிய நெல் இரகங்கள் தொன்றுதொட்டு சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. இவ்வகை பாரம்பரிய நெல் இரகங்களைத் தொடர்ந்து சாகுபடி செய்து, அவற்றைப் பாதுகாத்து வரும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில், பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். பாரம்பரிய நெல் பாதுகாவலர் விருது வழங்கப்பட்டு வருகிறது.

நடப்பு 2026-27 ஆம் ஆண்டில், மாநில அளவில் பாரம்பரிய நெற்பயிருக்கான பயிர் விளைச்சல் போட்டி நடத்தப்படும். இதில் அதிக விளைச்சல் பெறும் முதல் ஐந்து விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு, ஒவ்வொரு விவசாயிக்கும் தலா ரூ.1.00 இலட்சம் பரிசுத்தொகை வழங்கப்படும்.

இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக, 2026-27 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.5.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 1.12.5. சிறந்த உயிர்ம விவசாயிக்கான நம்மாழ்வார் விருது

உயிர்ம வேளாண்மையைச் சிறப்பாக மேற்கொண்டு, இதர உழவர்களையும் உயிர்ம வேளாண்மையைப் பின்பற்ற ஊக்குவிக்கும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் 3 விவசாயிகளுக்கு "நம்மாழ்வார் விருது" வழங்கப்படுகிறது.

2026-27 ஆம் ஆண்டிலும் இவ்வகையில் ஐந்து விவசாயிகளுக்கு பாராட்டுப் பத்திரத்துடன் தலா இரண்டு இலட்சம் ரூபாய் ரொக்கப்பரிசு ரூ.11 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் வழங்கப்படும்.

## 1.13. பயிர் காப்பீடு - பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம்

விவசாயிகளின் நலன் மற்றும் வாழ்வாதாரப் பாதுகாப்பை முதன்மைக் குறிக்கோளாகக் கொண்டு செயல்படும் தமிழ்நாடு அரசு, மாநிலத்தின் சாகுபடி முறை மற்றும் வேளாண் காலநிலை சூழ்நிலைகளுக்கு உகந்தவாறு பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தைத் திறம்பட செயல்படுத்தி வருகிறது. தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில் அறிவிக்கை செய்யப்பட்ட பயிர்களை சாகுபடி செய்யும் இணை சாகுபடியாளர்கள் மற்றும் குத்தகைதாரர்கள் உட்பட அனைத்து விவசாயிகளும் (கடன் மற்றும் கடன்பெறா விவசாயிகள்) விருப்பத்தின் பேரில் இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுவர். விதைப்பு / நடவு செய்ய இயலாமை, விதைப்பு / நடவு பொய்த்தல், பயிரில் ஏற்படும் மகசூல் இழப்பு, பயிர் வளர்ச்சிக் காலத்தில் நிகழும் இடர்ப்பாடுகளால் ஏற்படும் பாதிப்புகள், அறுவடைக்குப் பின் ஏற்படும்

இழப்பு மற்றும் பகுதி சார்ந்த இயற்கை இடர்ப்பாடுகள் போன்ற பல்வேறு நிகழ்வுகள் இத்திட்டத்தில் காப்பீடு செய்யப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் உணவு தானியப் பயிர்கள், எண்ணெய் வித்துப் பயிர்கள், பருத்தி மற்றும் கரும்பு போன்ற பல்வேறு வேளாண் பயிர்களும் வருடாந்திர தோட்டக்கலைப் பயிர்களும் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன. விவசாயிகளின் நலன் மற்றும் வாழ்வாதாரம் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில், அறிவிக்கை செய்யப்படும் பயிர்களின் முழு சாகுபடிப் பரப்பளவையும் காப்பீடு செய்து அனைத்து விருப்பமுள்ள விவசாயிகளும் பயன் பெறுவதை உறுதி செய்யும் வகையில், 2026–27 ஆம் ஆண்டில், ரூ.648.55 கோடி நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## 1.14. பிரதம மந்திரி கிசான் சம்மான் நிதி திட்டம் (PM - KISAN)

"பிரதம மந்திரி கிசான் சம்மான் நிதி' திட்டமானது 2019 முதல் விவசாயக் குடும்பங்களின் நிதித் தேவைகளுக்கு ஆதரவளிக்கும் நோக்கத்துடன் ஒன்றிய அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதில், சொந்த நிலம் உடைய தகுதியான விவசாயக் குடும்பங்களுக்கு ஆண்டிற்கு ரூ.6,000/- உதவித் தொகை மூன்று தவணைகளில், விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் நேரடிப் பணப்பரிமாற்றம் (DBT) வாயிலாக ஒன்றிய அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

## 1.15.வேளாண்மைத் துறையில் பணியாளர் அமைப்பு

வேளாண்மைத் துறையானது 4,817 தொழில்நுட்ப அலுவலர்கள், 5,514 அமைச்சுப்

பணியாளர்கள், இதர பணியாளர்கள் என, மொத்தம் 10,331 பணியாளர்களைக் கொண்டு இயங்கி வருகிறது.

**அட்டவணை 1.9. - தொழில்நுட்ப அலுவலர்கள்**

| வ. எண் | பதவி | ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் |
|---|---|---|
| 1 | விதை சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு இயக்குநர் | 1 |
| 2 | வேளாண்மை கூடுதல் இயக்குநர் | 6 |
| 3 | வேளாண்மை இணை இயக்குநர் | 42 |
| 4 | வேளாண்மை துணை இயக்குநர் | 168 |
| 5 | வேளாண்மை உதவி இயக்குநர் | 424 |
| 6 | வேளாண்மை அலுவலர் | 1,060 |
| 7 | துணை வேளாண்மை அலுவலர் | 337 |
| 8 | உதவி விதை அலுவலர் | 509 |
| 9 | உதவி வேளாண்மை அலுவலர் | 2,267 |
| 10 | இதர தொழில்நுட்ப அலுவலர்கள் | 3 |
| **மொத்தம் தொழில்நுட்ப அலுவலர்கள்** | | **4,817** |

## அட்டவணை : 1.10. - அமைச்சு மற்றும் இதர பணியாளர்கள்

| வ. எண் | பதவி | ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் |
|---|---|---|
| 1 | துணை இயக்குநர் (நிர்வாகம்) | 2 |
| 2 | ஆட்சி அலுவலர் | 34 |
| 3 | கண்காணிப்பாளர் | 185 |
| 4 | உதவியாளர் | 642 |
| 5 | இளநிலை உதவியாளர் | 388 |
| 6 | தட்டச்சர் | 366 |
| 7 | கண்காணிப்பாளர் (பிணையம்) | 148 |
| 8 | உதவியாளர் (பிணையம்) | 249 |
| 9 | இளநிலை உதவியாளர் (பிணையம்) | 572 |
| 10 | சுருக்குத் தட்டச்சர் (தரம்-1) | 1 |
| 11 | சுருக்குத் தட்டச்சர் (தரம்-2) | 39 |
| 12 | சுருக்குத் தட்டச்சர் (தரம்-3) | 95 |
| 13 | ஓட்டுநர் | 294 |
| 14 | ஆய்வக உதவியாளர் | 135 |
| 15 | பதிவறை எழுத்தர் | 155 |
| 16 | அலுவலக உதவியாளர் | 586 |
| 17 | காவலர் | 1,072 |
| 18 | தொலைபேசி இயக்குபவர் | 2 |
| 19 | இதர பணியாளர்கள் | 549 |
| **மொத்த தொழில்நுட்பமல்லாத இதர பணியாளர்கள்** | | **5,514** |

## 2.சர்க்கரைத்துறை

"வான்பொய்ப்பினுந் தான்பொய்யா
மலைத்தலைய கடற்காவிரி
புனல்பரந்து பொன்கொழிக்கும்
விளைவறா வியன்கழனிக்
கார்க்கரும்பின் கமழாலைத்
தீத்தெறுவிற் கவின்வாடி
நீர்ச்செறுவி னீணெய்தற்
பூச்சாம்பும் புலத்தாங்கட்..."

- **பட்டினப்பாலை** (5-12),

பட்டினப்பாலை, சோழ நாட்டின் வேளாண் வளத்தைச் சிறப்பாக எடுத்துரைக்கும் போது, "கார்க் கரும்பின் கமழாலை" எனும் தொடரின் மூலம் மணம் கமழும் கரும்பு ஆலைகளைக் குறிப்பிடுகிறது. இது சங்கக்காலத்திலேயே கரும்பு பரவலாகப் பயிரிடப்பட்டதையும், கரும்பைப் பதப்படுத்தும் ஆலைகள் இருந்ததையும்

எடுத்துக்காட்டுகிறது. இத்தகைய இலக்கியக் குறிப்பு, தமிழ்நாட்டில் கரும்பு சாகுபடி மற்றும் கரும்பு பதப்படுத்தும் தொழில்நுட்பம் தொன்மையானது என்பதற்கான முக்கியச் சான்றாக விளங்குகிறது.

.........

சர்க்கரைத்துறையின் கீழ் தமிழ்நாடு சர்க்கரைக் கழகம், தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையம் லிமிடெட் ஆகியன செயல்பட்டு வருகின்றன. சர்க்கரைத்துறையின் மூலம் புதிய சர்க்கரை ஆலைகள் அமைத்தல், சர்க்கரை ஆலைகளின் விரிவாக்கம், கரும்பு சாகுபடி மேம்பாடு, கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் செயல்பாடுகளைக் கண்காணித்தல், கரும்பு சாகுபடிப் பகுதிகளை சர்க்கரை ஆலைகளுக்கு ஒதுக்கீடு செய்தல் போன்ற பணிகளுடன் கரும்பு உற்பத்தித்திறனை அதிகப்படுத்தவும், சாகுபடி செலவினங்களைக்

குறைக்கவும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் சுமார் 1,10,000-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கரும்பு சாகுபடியில் ஈடுபட்டு வருகின்றனர். மாநிலத்தின் வேளாண் பொருளாதாரத்திலும், கிராமப்புர மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிலும் கரும்பு உற்பத்தி மற்றும் அதனைச் சார்ந்த சர்க்கரைத் தொழில் முக்கியப் பங்களிப்பை வழங்குகின்றன. கரும்பு சாகுபடி முதல் சர்க்கரை உற்பத்தி, துணைத் தயாரிப்புகளின் மதிப்புக்கூட்டல் மற்றும் தொடர்புடைய சேவைகள் வரையிலான தொழில்துறைச் சங்கிலி வாயிலாக நேரடியாகவும், மறைமுகமாகவும் இலட்சக்கணக்கானோருக்கு வேலைவாய்ப்பு மற்றும் வருவாய் வாய்ப்புகள் உருவாகின்றன.

தேசிய அளவில் சர்க்கரை உற்பத்தியில் தமிழ்நாடு 5-வது இடத்தை வகிக்கிறது.

மாநிலத்தின் ஆண்டு சர்க்கரைத் தேவையான சுமார் 18 இலட்சம் மெட்ரிக் டன்களை ஈடு செய்யும் வகையில், கரும்பின் உற்பத்தித்திறனை உயர்த்துதல், சாகுபடிப் பரப்பை திறன்பட பயன்படுத்துதல், நவீன வேளாண் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல் மற்றும் சர்க்கரை ஆலைகளின் செயல்திறனை மேம்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் சர்க்கரை உற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கரும்பு ஒரு முக்கிய வணிக மற்றும் பணப்பயிராக இருந்து வருகிறது. மேலும் சர்க்கரை, மதிப்புக் கூட்டப்பட்ட சர்க்கரை, எரிசாராயம், எத்தனால், காகிதம், மின்சாரம், இயற்கை உரம் ஆகியவை தயாரிப்பதற்கு கரும்பு மூலப்பொருளாக இருந்து வருகிறது. தமிழ்நாட்டில் 16 கூட்டுறவு, 2 பொதுத்துறை, 22 தனியார் என மொத்தம் 40 சர்க்கரை ஆலைகள் உள்ளன. இவற்றுள்

2025-26 ஆம் அரவைப் பருவத்தில் 12 கூட்டுறவு, 2 பொதுத்துறை, 15 தனியார் என மொத்தம் 29 சர்க்கரை ஆலைகள் அரவை துவங்கி செயல்பட்டு வருகின்றன.

**2.1. கரும்பு சாகுபடி**

தமிழ்நாட்டில் கரும்பு சாகுபடி சராசரியாக 1.29 இலட்சம் எக்டர் பரப்பளவில் மேற்கொள்ளப்படுகிறது. இதன் சராசரி உற்பத்தித்திறன் எக்டருக்கு 113 மெட்ரிக் டன் ஆகும். மாநிலத்தில் உற்பத்தியாகும் மொத்த கரும்பில் சுமார் 65 முதல் 75 சதவீதம் சர்க்கரை ஆலைகளுக்கு மூலப்பொருளாக பயன்படுத்தப்படுகிறது.

**அட்டவணை 2.1: கரும்பு சாகுபடி மேற்கொள்ளப்படும் முதல் ஐந்து மாவட்டங்கள்**

| வ. எண் | மாவட்டம் | கரும்பு சாகுபடிப் பரப்பு (எக்டர்) | உற்பத்தி (இலட்சம் மெட்ரிக் டன்) | உற்பத்தித் திறன் (மெட்ரிக் டன்/ எக்டர்) |
|---|---|---|---|---|
| 1 | கள்ளக்குறிச்சி | 22,931 | 24.84 | 108 |
| 2 | ஈரோடு | 18,983 | 21.47 | 113 |
| 3 | விழுப்புரம் | 12,242 | 10.65 | 87 |
| 4 | கடலூர் | 12,169 | 11.60 | 95 |
| 5 | திருவண்ணாமலை | 11,707 | 11.86 | 101 |

(**ஆதாரம்: பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, தமிழ்நாடு அரசு**)

## 2.2. சர்க்கரைஆலைகளுக்கான கரும்பு பதிவுப் பரப்பு

கூட்டுறவு, பொதுத்துறை மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகளால் 2024-25 நடவுப்பருத்தில் 1 இலட்சம் எக்டர் கரும்புப் பரப்பு பதிவு செய்யப்பட்டுள்ளது. நடவுப்பருவம் 2025-26–ல் 31.07.2026 வரை 0.82 இலட்சம் எக்டர் கரும்புப் பரப்பு சர்க்கரை ஆலைகளால் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**2.3. கரும்பு அரவை (பருவம் அக்டோபர் முதல் செப்டம்பர் வரை)**

2024-25 அரவைப்பருவத்தில் 83.74 இலட்சம் மெ.டன் கரும்பு அரவை செய்யப்பட்டுள்ளது. நடப்பு 2025-26 அரவைப் பருவம் 01.10.2025 ல் தொடங்கி 30.09.2026 அன்று முடிவடையும். 31.07.2026 வரை 72.48 இலட்சம் மெ.டன் கரும்பு அரவை செய்யப்பட்டுள்ளது. மேலும், நடப்பு பருவம் முடியும் தருவாயில் (30.09.2026 வரை) 85 இலட்சம் மெ.டன் கரும்பு அரவையை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**2.4. சர்க்கரைக் கட்டுமானம் (Sugar Recovery)**

2024-25 அரவைப் பருவத்தில் சர்க்கரைக் கட்டுமானம் 8.75% ஆகும். நடப்பு 2025-26 அரவைப் பருவத்தில் 31.07.2026 வரை 8.93% ஆக உள்ள சர்க்கரைக் கட்டுமானம் இந்த அரவைப் பருவம் முடியும் போது (30.09.2026 அன்று) 9.50% ஆக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**2.5. பயன்பாட்டுத்திறன் (Capacity Utilization)**

கடந்த 2024-25 அரவைப்பருவத்தில் இயங்கிய 30 கூட்டுறவு, பொதுத்துறை மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகளில் 45% பயன்பாட்டுத்திறன் அடையப்பட்டுள்ளது. நடப்பு 2025-26 அரவைப் பருவத்தில் (30.09.2026 வரை) 48% பயன்பாட்டுத் திறன் அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**2.6. கரும்பு விலை**

கரும்பு டன் ஒன்றுக்கு 2024 - 25 அரவைப் பருவத்திற்கு மத்திய அரசு அறிவித்த நியாயமான மற்றும் ஆதாயவிலைக்கு (ரூ.3151/-) மேல் தமிழ்நாடு அரசால் ரூ.349/-சிறப்பு ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டு மொத்தம் டன் ஒன்றுக்கு ரூ.3,500/- கரும்பு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

2025-26 அரவைப் பருவத்திற்கு கரும்பு டன் ஒன்றுக்கு மத்திய அரசால் நியாயமான

மற்றும் ஆதாய விலையாக ரூ.3290.50 அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்க்கரைத் தொழிலை ஊக்குவிக்கும் நோக்கில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2025-26 ஆம் அரவைப் பருவத்தில் சர்க்கரை ஆலைகளுக்குப் பதிவு செய்து கரும்பு வழங்கும் விவசாயிகளை "**வெற்றி விவசாயிகளாக**" மாற்ற கரும்பு ஊக்கத்தொகையாக டன் ஒன்றுக்கு ரூ.709.50 என அறிவித்துள்ளார். இதனால் 9.50% வரை சர்க்கரைக் கட்டுமானம் அடையும் சர்க்கரை ஆலைகளில் பதிவு செய்த கரும்பு விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு ரூ.4,000/- கிடைக்கப்பெறும். அதற்கு மேல் சர்க்கரைக் கட்டுமானம் அடையும் சர்க்கரை ஆலைகளின் கரும்பு விவசாயிகளுக்கு ரூ.4,000/-த்திற்கும் மேல் கரும்பு விலை கிடைக்கப்பெறும்.

## 2.7. பிரதம மந்திரி தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (PM-RKVY)

கரும்பு சாகுபடிப் பரப்பு மற்றும் சர்க்கரைக் கட்டுமானத்தை அதிகரிக்கும் நோக்குடன் 2026-27 ஆம் ஆண்டில் பிரதம மந்திரி தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அதிக மகசூல், அதிக சர்க்கரைக் கட்டுமானம் கொண்ட கரும்பு இரகங்களின் வல்லுநர் விதைக் கரும்பு, திசு வளர்ப்பு நாற்றுகள், பருசீவல் நாற்றுகள், ஒரு பருவிதைக் கரணைகள், சோகை உரித்தல், நிழற் வலைக்கூடம் அமைத்தல், சோகை தூளாக்குதல் மற்றும் பரப்புதல், நுண்ணூட்டக் கலவை வழங்குதல் மற்றும் உயிர் உரங்கள் வழங்குதல் ஆகிய இனங்களுக்கு மானியம் வழங்க ரூ.9.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.8. விதைக் கரும்பு மானியத்திட்டம்

கரும்பு சாகுபடியில் இயந்திர அறுவடையை ஊக்குவித்து செலவினத்தைக் குறைத்திட,

அகலப்பார் முறையில் உயர் விளைச்சல் மற்றும் உயர் சர்க்கரைக் கட்டுமானம் கொண்ட கரும்பு இரகங்களை நடவுச்செய்ய முன்வரும் கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் பதிவு செய்துள்ள கரும்பு விவசாயிகளின் நலன் கருதி, 2026 – 27 ஆம் ஆண்டில் 50 சதவீத மானியத்தில் பருசீவல் நாற்றுகள் மற்றும் ஒரு பருவிதைக் கரணைகள் வழங்கும் திட்டம் ரூ.9.36 கோடி மதிப்பீட்டில் 17,315 ஏக்கர் பரப்பளவில் செயல்படுத்தப்படும்.

**2.9. இணைமின் திட்டம்**

கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் உற்பத்திச் செலவைக் குறைக்கவும், பணப்புழக்கத்தை மேம்படுத்தவும், 183 மெகாவாட் திறன் கொண்ட 12 இணை மின் உற்பத்தித் திட்டங்களை, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் (TANGEDCO) (தற்போதைய தமிழ்நாடு பசுமை ஆற்றல் கழகம்-

TNGECL) மூலம் செயல்படுத்துமாறு தமிழ்நாடு அரசால் உத்தரவிடப்பட்டுள்ளது. தற்போது, கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் அங்கீகரிக்கப்பட்ட 12 இணைமின் உற்பத்தித் திட்டங்களில், 108 மெகாவாட் திறன் கொண்ட ஏழு திட்டங்கள் (செங்கல்ராயன், வேலூர், செய்யார், தருமபுரி, எம்.ஆர்.கே, அறிஞர் அண்ணா மற்றும் பெரம்பலூர் சர்க்கரை ஆலைகளில்) ஏற்கனவே செயல்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டு இயக்கத்தில் உள்ளன.

கள்ளக்குறிச்சி – I கூட்டுறவு சர்க்கரை ஆலையில் இணைமின் திட்டப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளதால் விரைவில் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும். மீதமுள்ள மூன்று கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் (கள்ளக்குறிச்சி – II, சுப்பிரமணிய சிவா மற்றும் மோகனூர்) 75 மெகாவாட் இணைமின் உற்பத்தித் திட்டப் பணிகள் முடுக்கிவிடப்பட்டு TNGECL மூலம் விரைவில் செயல்பாட்டிற்குக் கொண்டு

வரப்படும். தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலை மீண்டும் இயக்கப்படும் போது இணைமின் உற்பத்தித் திட்டம் செயல்படுத்தப்படும்.

தற்போது பயன்பாட்டிலுள்ள 7 இணைமின் உற்பத்தி நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் உபரி மின்சாரம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் (TANGEDCO) மின் கட்டமைப்புக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. 2015-16 அரவைப் பருவத்திலிருந்து 2025-26 அரவைப் பருவம் வரை, மொத்தமாக 59.69 கோடி யூனிட் மின்சாரம் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. மேலும், 2025-26 அரவைப் பருவத்தில் (31.07.2026 வரை) 4.08 கோடி யூனிட் மின்சாரம் TANGEDCO-விற்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

## வரைபடம் 2.1: செயல்பாட்டிலுள்ள 7 இணைமின் திட்டங்கள் மூலம் மின்சார ஏற்றுமதி செய்யப்பட்ட விவரங்கள்




## 2.10. எத்தனால் உற்பத்தி

தமிழ்நாட்டில் அமைந்துள்ள அமராவதி மற்றும் மோகனூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் 1993-94 ஆம் ஆண்டில் 55 KLPD உற்பத்தித் திறன் கொண்ட எரிசாராய வடிப்பாலைகள்(Distilleries) நிறுவப்பட்டு இயங்கி வருகின்றன. மேலும் இவ்வாலைகளில் 2007- ஆம் ஆண்டு முதல் 30 KLPD உற்பத்தித்

திறன் கொண்ட எத்தனால் ஆலைகள் நிறுவப்பட்டு எத்தனால் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

### 2.10.1. கள்ளக்குறிச்சி I கூட்டுறவு சர்க்கரை ஆலையில் எத்தனால் உற்பத்தி குறித்த சாத்தியக்கூறு ஆய்வு

சர்க்கரை ஆலைகளில் கரும்பின் துணைவிளைபொருட்களை உற்பத்தி செய்து, ஆலைகளை மேம்படுத்துவதற்காக, கள்ளக்குறிச்சி I கூட்டுறவு சர்க்கரை ஆலையில், கள்ளக்குறிச்சி II மற்றும் செங்கல்ராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் கூட்டமைப்பின் (Consortium) பேரில் நாளொன்றுக்கு 100 கிலோ லிட்டர் உற்பத்தித் திறன்கொண்ட எத்தனால் வடிப்பாலை அமைப்பது குறித்து விரிவான திட்ட அறிக்கை (DPR) மற்றும் சாத்தியக்கூறு அறிக்கை (Feasibility report) தயாரிக்க ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.11. தமிழ்நாடு சர்க்கரைக் கழகம்

தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் 1974 ஆம் ஆண்டு, நிறுவனச் சட்டம், 1956-ன் கீழ் அரசு நிறுவனமாக நிறுவப்பட்டது. புதிய சர்க்கரை ஆலைகளை நிறுவுதல், ஏற்கனவே செயல்பட்டு வரும் சர்க்கரை ஆலைகளின் விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ளுதல், கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் உற்பத்தியாகும் உபபொருட்களை முறையாகப் பயன்படுத்தி, அவற்றின் மதிப்பை உயர்த்தும் வகையில் பல்வேறு செயலாக்க மற்றும் மதிப்புக்கூட்டல் நடவடிக்கைகளை மேற்கொள்வது மற்றும் அத்தகைய சர்க்கரை ஆலைகளுக்கு தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு இக்கழகம் நிறுவப்பட்டது.

தற்போது, தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் கீழ் தஞ்சாவூர் மாவட்டம் குருங்குளத்தில்

அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை மற்றும் பெரம்பலூர் மாவட்டம் எறையூரில் பெரம்பலூர் சர்க்கரை ஆலை ஆகிய இரு பொதுத்துறை நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. அவற்றின் செயல்பாடுகள் கீழ்க்கண்டவாறு:

### அட்டவணை 2.2 : தமிழ்நாடு சர்க்கரைக் கழக ஆலைகளின் செயல்பாடுகள்

| வ. எண் | பொருள் | அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை | | பெரம்பலூர் சர்க்கரை ஆலை | |
|---|---|---|---|---|---|
| | | 2024-25 | 2025-26 | 2024-25 | 2025-26 |
| 1 | கரும்பு அரவை (இலட்சம் மெ. டன்) | 1.26 | 1.29 | 1.54 | 1.17 |
| 2 | சர்க்கரைக் கட்டுமானம் (சதவீதம்) | 7.70 | 8.00 | 8.60 | 9.11 |
| 3 | சர்க்கரை உற்பத்தி (மெ.டன்) | 0.97 | 1.03 | 1.32 | 1.09 |
| 4 | அரவைத்திறன் (சதவீதம்) | 29 | 30 | 30 | 23 |

## 2.12. தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையம்

தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையம் 11.11.1961 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டு 31.05.1962ல் தொடங்கி செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனம் தமிழ்நாட்டில் உள்ள 16 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் மற்றும் 2 பொதுத்துறை சர்க்கரை ஆலைகளை உறுப்பினர்களாகக் கொண்டு இயங்கி வருகிறது. தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையம், இதனுடன் இணைக்கப்பெற்ற உறுப்பினர் ஆலைகளின் பணிகளை ஒருங்கிணைத்தல், தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குதல், மையப்படுத்தப்பட்ட கொள்முதல் செய்தல், சர்க்கரை மற்றும் உபபொருட்களை விற்பனை செய்தல், தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் இணையம் மற்றும் இதர நிறுவனங்களில் உறுப்பினர் ஆலைகளின் பிரதிநிதியாக செயல்படுதல், ஆலைகளின்

செயல்பாட்டுத் திறனை மேம்படுத்தும் பொருட்டு அவ்வப்போது பயிற்சி மற்றும் ஆய்வுக் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தல் ஆகிய பணிகளை மேற்கொண்டு வருகிறது.

## 2.13. உயிரியல் ஆய்வு மையம்

கரும்புக்கென பிரத்யேகமாகச் செயல்படும் உயிரியல் ஆய்வு மையம் தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையத்தின் கீழ் இயங்கி வருகிறது. செங்கல்பட்டில் உள்ள இம்மையம் 1982 - ஆம் ஆண்டு முதல் கரும்பு சாகுபடிக்குத் தேவைப்படும் உயிரியல் இடுபொருட்களான உயிர் உரங்கள் மற்றும் உயிரியல் பூச்சிக் கொல்லிகளைத் தயாரித்து கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகள் மூலமாக கரும்பு விவசாயிகளுக்கு வழங்கி வருகிறது. மேலும், விவசாயத்தில் அவ்வப்போது உள்ள புதிய தொழில்நுட்பங்களை கரும்பு விவசாயிகளுக்குத் தெரிவிக்கும் விதமாக தமிழில் "கரும்புக்கரங்கள்"

இதழ் வெளியிடப்பட்டு, சர்க்கரை ஆலைகளின் உறுப்பினர்களாக உள்ள வேளாண் பெருமக்களுக்கு விநியோகிக்கப்படுகிறது.

## அட்டவணை 2.3 : உயிர் உரங்கள் மற்றும் உயிரி பூச்சிக்கொல்லிகள் உற்பத்தி

| வ. எண் | உயிர் உரங்கள் மற்றும் உயிரி பூச்சிக்கொல்லிகள் | உயிர் உரங்கள் உற்பத்தி | | | |
|---|---|---|---|---|---|
| | | 2022-23 | 2023-24 | 2024-25 | 2025-26 |
| 1 | அசிட்டோபாக்டர் (லிட்டர்) | 62300 | 39250 | 22502 | 47800 |
| 2 | பாஸ்போபாக்டீரியா (லிட்டர்) | 30600 | 19850 | 12950 | 24000 |
| 3 | டிரைக்கோடெர்மா விரிடி (லிட்டர்) | 2630 | 2350 | 2350 | 1670 |
| 4 | சூடோமோனாஸ் (லிட்டர்) | 2952 | 3095 | 2425 | 1550 |
| 5 | பயோ இனாகுலம் (கிலோ) | 7170 | 7650 | 4793 | 2924 |
| 6 | ஆர்பஸ்குலர் மைகோரைசா (கிலோ) | 7000 | 10510 | - | 2000 |
| 7 | மெட்டாரைசியம் (லிட்டர்) | 3882 | 6239 | 3036 | 3967 |
| 8 | பேசில்லஸ் துரிஞ்ஜியன்சிஸ் (லிட்டர்) | 1109 | 1600 | 775 | 1076 |

## அட்டவணை 2.4 : உயிர் உரங்கள் மற்றும் உயிரி பூச்சிக்கொல்லிகள் விற்பனை அளவு மற்றும் மதிப்பு

| வ. எண் | உயிர் உரங்கள் மற்றும் உயிரி பூச்சிக்கொல்லிகள் | உயிர் உரங்கள் விற்பனை அளவு | | | | மதிப்பு (ரூபாய் கோடி) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2022 - 2023 | 2023 - 2024 | 2024 - 2025 | 2025 - 2026 | 2022 - 2023 | 2023 - 2024 | 2024 - 2025 | 2025 - 2026 |
| 1 | அசிட்டோபாக்டர் (லிட்டர்) | 62550 | 36785 | 22502 | 47800 | 1.26 | 0.73 | 0.51 | 0.93 |
| 2 | பாஸ்போபாக்டீரியா (லிட்டர்) | 30600 | 18953 | 12975 | 24000 | 0.62 | 0.37 | 0.28 | .49 |
| 3 | டிரைக்கோடெர்மா விரிடி (லிட்டர்) | 2630 | 2172 | 2350 | 1670 | 0.07 | 0.06 | 0.07 | 0.05 |
| 4 | சூடோமோனாஸ் (லிட்டர்) | 2952 | 3034 | 2425 | 1550 | 0.08 | 0.09 | 0.08 | 0.04 |
| 5 | பயோ இனாகுலம் (கிலோ) | 7005 | 7706 | 4790 | 2920 | 0.09 | 0.07 | 0.05 | 0.03 |
| 6 | ஆர்பஸ்குலர் மைகோரைசா (கிலோ) | 7000 | 11805 | 1020 | 2000 | 0.01 | 0.04 | 0.01 | 0.01 |
| 7 | மெட்டாரைசியம் (லிட்டர்) | 3382 | 6269 | 3010 | 3967 | 0.11 | 0.18 | 0.09 | 0.11 |
| 8 | பேசில்லஸ் துரிஞ்ஜியன்சிஸ் (லிட்டர்) | 1109 | 1597 | 775 | 1076 | 0.02 | 0.03 | 0.02 | 0.02 |

## 2.14. சர்க்கரை ஆராய்ச்சி நிறுவனம், வேலூர்

சர்க்கரை ஆராய்ச்சி நிறுவனம் 1987 ஆம் ஆண்டு வேலூரில் நிறுவப்பட்டது. சர்க்கரை பொறியியல் மற்றும் சர்க்கரை காய்ச்சுதலுக்கான சான்றிதழ் படிப்பை வழங்குவதே இதன் நோக்கமாகும். 34 ஆண்டுகளில், இதுவரை 705 மாணவர்கள் SBCC - படிப்பிலும் (Sugar Boiling Certificate Course), 19 ஆண்டுகளில், 207 மாணவர்கள் SECC - படிப்பிலும் (Sugar Engineering Certificate Course) தேர்ச்சிபெற்றுள்ளனர். மேலும், சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் ஊழியர்கள் மற்றும் தொழில்நுட்ப அலுவலர்களுக்கு புத்தாக்கப் பயிற்சிகள் நடத்துதல், சர்க்கரை ஆலைகளுக்கு தொழில்நுட்ப மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்கும் நோக்கில், சர்க்கரை மற்றும் தொடர்புடைய இரசாயனப் பொருட்களின் தரம், தூய்மை மற்றும் நிர்ணயிக்கப்பட்ட தரநிலைகளுக்கு ஏற்புடைய தன்மை

ஆகியவற்றை மதிப்பீடு செய்வதற்கான முறையான பகுப்பாய்வு, தரச் சரிபார்ப்பு மற்றும் தரக் கட்டுப்பாட்டு பணிகளை மேற்கொள்வது, தேவைப்படும் சர்க்கரை ஆலைகளுக்கு விதைக் குழம்பு (Seed Slurry) தயாரித்து வழங்குவது போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது.

**பிற செயல்பாடுகள்:**

- அனைத்து கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளிலிருந்தும் (International Commission for Uniform Methods of Sugar Analysis) ICUMSA - 9 மற்றும் ICUMSA-10 முறைகள் மூலம் சர்க்கரை பகுப்பாய்வு செய்யப்படுகிறது.
- இணைமின் உற்பத்தி ஆலைகளில் நீர் சுத்திகரிப்பு நிலையம் (Water Treatment Plant) மற்றும் குளிரூட்டும் கோபுர செயல்திறனைக் கண்காணிக்கிறது.

- இணைமின் உற்பத்தி ஆலை நுகர்வு இரசாயன பகுப்பாய்வு செய்யப்படுகிறது. அதன் முடிவுகளின் அடிப்படையில் ஆலைகளால் பணம் செலுத்தப்பட்டு வருகிறது.
- தனியார் சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் தொழில்நுட்பப் பணியாளர்களின் திறன் மேம்பாடு மற்றும் தொழில்நுட்ப அறிவைப் புதுப்பிக்கும் நோக்கில், புத்தூட்டப் பயிற்சிகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன.

**2.15. திசு வளர்ப்பு ஆய்வுக்கூடம்**

**திசு வளர்ப்பு முறையில் நோயற்ற கரும்பு நாற்றுகள் உற்பத்தி:**

கள்ளக்குறிச்சி-I கூட்டுறவு சர்க்கரை ஆலையில் உள்ள திசு வளர்ப்பு ஆய்வகம், தமிழகத்தில் உள்ள கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் கரும்பு விவசாயிகளின் நலனுக்காக தரமான திசு வளர்ப்பு

நாற்றுகளை உற்பத்தி செய்து, விநியோகம் செய்து வருகிறது.

**திசு வளர்ப்பு தொழில்நுட்பத்தால் ஏற்படும் நன்மைகள் பின்வருமாறு:**

- வளர் நுனியைப் பயன்படுத்துவதன் மூலம் நோயற்ற தரமான திசு வளர்ப்பு நாற்றுகள் உறுதி செய்யப்படுகின்றன. இதனால் சிறந்த மகசூல் மற்றும் தரம் சாத்தியமாகிறது.
- மரபணுத் தூய்மை உறுதி செய்யப்படுகிறது.
- உற்பத்திப் பருவத்தைச் சார்ந்திராமல், ஆண்டு முழுவதும் தொடர்ந்து திசு வளர்ப்பு நாற்றுகள் உற்பத்தி செய்யப்படுவது சாத்தியமாகிறது.
- பழமையான மற்றும் சிதைவுற்ற கரும்பு வகைகளின் அசல் வீரியத்தையும் உற்பத்தித் திறனையும் மீட்டெடுப்பதும் சாத்தியமாகிறது.

கள்ளக்குறிச்சி – I கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 2026-27 ஆம் ஆண்டில் 1.50 இலட்சம் திசு வளர்ப்பு நாற்றுகள் உற்பத்தி செய்யப்படும்.

### 2.16. விற்பனை வருவாய்

#### 2.16.1. சர்க்கரை விற்பனை

கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளினால் உற்பத்தி செய்யப்படும் சர்க்கரை, ஒன்றிய அரசின் மாதாந்திர ஒதுக்கீட்டின்படி தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையத்தால் விற்பனை செய்யப்படுகிறது.

2026-27 ஆம் ஆண்டில் 2,16,000 மெ.டன் சர்க்கரை விற்பனை செய்து ரூ.1,080 கோடி வருவாய் ஈட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

#### 2.16.2. கரும்புச் சக்கை விற்பனை

சர்க்கரை ஆலை மற்றும் இணைமின் நிலைய எரிபொருள் தேவைக்கு எஞ்சிய கரும்பு

சக்கையானது மின்னணு ஒப்பந்தப்புள்ளி மூலம் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் மற்றும் இதர நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

2026-27 ஆம் ஆண்டில் 35,000 மெ.டன் உபரி கரும்பு சக்கை விற்பனை செய்து ரூ.12.25 கோடி வருவாய் ஈட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**2.16.3. கரும்புக் கசண்டு விற்பனை**

கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளால் உற்பத்தி செய்யப்படும் கரும்புக் கசண்டு அமராவதி மற்றும் மோகனூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் உள்ள வடிப்பாலைகளின் தேவையினை நிறைவு செய்த பின்னர் மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் தனியார் வடிப்பாலைகள், கால்நடை தீவன உற்பத்தியாளர்கள் மற்றும் இதர

பயன்பாட்டாளர்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

2026-27 ஆம் ஆண்டில் 1,12,800 மெ.டன் கரும்பு கசண்டு விற்பனை செய்து ரூ 152.80 கோடி வருவாய் ஈட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 2.16.4. எரிசாராயம் விற்பனை வருவாய்

#### 2.16.4.1 அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை

அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை வடிப்பாலையில் 10.00 இலட்சம் லிட்டர் எரிசாராயம் உற்பத்தி செய்து ரூ.5.50 கோடி வருவாய் ஈட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

#### 2.16.4.2. மோகனூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை

மோகனூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை வடிப்பாலையில் 15.00 இலட்சம் லிட்டர் எரிசாராயம் உற்பத்தி செய்து ரூ.8.25 கோடி வருவாய் ஈட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 2.16.5. எத்தனால் விற்பனை வருவாய்

#### 2.16.5.1 அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை

அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை வடிப்பாலையில் 5.00 இலட்சம் லிட்டர் எத்தனால் உற்பத்தி செய்து ரூ.2.88 கோடி வருவாய் ஈட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

#### 2.16.5.2. மோகனூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை

மோகனூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை வடிப்பாலையில் 5.00 இலட்சம் லிட்டர் எத்தனால் உற்பத்தி செய்து ரூ.2.88 கோடி வருவாய் ஈட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 3. தோட்டக்கலை - மலைப்பயிர்கள் துறை

தமிழ்நாட்டில், வேளாண்மை சார்ந்த பொருளாதார வளர்ச்சியில் தோட்டக்கலைப் பயிர்கள் முக்கியப் பங்கு வகித்து பொருளாதாரத்தை உயர்த்தும் உந்துசக்தியாகத் திகழ்கின்றன. பழங்கள், காய்கறிகள், மலர்கள், மலைப்பயிர்கள், நறுமண மற்றும் சுவைதாளிதப் பயிர்கள், மருத்துவப் பயிர்கள் உள்ளிட்ட பல்வேறு தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடி, விவசாயிகளுக்கு அதிக வருவாயை ஈட்டித் தருவதோடு, ஊட்டச்சத்துப் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, மாற்று வேளாண் வேலை வாய்ப்புகளை உருவாக்கி பொருளாதாரத்தையும் வலுப்படுத்துகின்றன.

தமிழ்நாட்டில் நிலவும் பல்வேறு வேளாண் காலநிலை மண்டலங்கள் மற்றும் மண் வளங்களைச் சிறப்பாகப் பயன்படுத்தி, அதிக மதிப்பும் சந்தைத் தேவையும் கொண்ட

தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பளவு மற்றும் உற்பத்தியை அதிகரிப்பதில் இத்துறை தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது. நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த நுண்ணீர்ப் பாசனத்தை ஊக்குவித்தல், நவீன சாகுபடித் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல், அடர் நடவு சாகுபடியை விரிவுபடுத்துதல் மற்றும் பூச்சி, நோய்களைத் திறம்படக் கையாளுதல், அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை, குளிர்சாதன வசதிகள் ஆகியவற்றின் மூலம் நிலையான தோட்டக்கலை வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், தரமான நடவுச் செடிகள் தொடர்ச்சியாகக் கிடைப்பதே உயர் உற்பத்தித்திறனுக்கு அடிப்படையாகும். இதனை உறுதி செய்யும் வகையில் அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் வாயிலாக வீரிய ஒட்டு நாற்றுகள், தரமான விதைகள் மற்றும் நோய் எதிர்ப்புத் திறன் கொண்ட உயர்தர நடவுப் பொருட்கள் உற்பத்தி

செய்யப்பட்டு, விவசாயிகளுக்குத் தடையின்றி வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறு, விவசாயிகளின் வாழ்வாதார மேம்பாடு, ஊட்டச்சத்துப் பாதுகாப்பு மற்றும் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி ஆகிய முக்கிய நோக்கங்களையும் ஒருங்கிணைத்து, செயல்படுவதே இந்த அரசின் முக்கிய நோக்கமாகும்.

**இவற்றில், புதிய முயற்சியாக ஏற்றுமதியை ஊக்குவிக்கும் வகையில் நடவு முதல் ஏற்றுமதி வரையிலான நன்னெறி வேளாண்மைத் தொழில்நுட்பங்களுக்கான திட்டம், தரமான நடவுப்பொருட்கள் உடனுக்குடன் கிடைப்பதை உறுதி செய்திட மாபெரும் நடவுச் செடி பண்ணை அமைத்தல், ஊட்டச்சத்துப் பாதுகாப்பை உறுதி செய்திட தமிழ்நாடு தளிர்க்கீரைகள் திட்டம் மற்றும் தென்னை உற்பத்தியைப் பெருக்கிட**

**தென்னை டானிக் மற்றும் பூச்சி, நோய் மேலாண்மைக்கான திட்டங்களும் 2026-27ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படவுள்ளன.**

### 3.1. தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடி பரப்பு

தமிழ்நாட்டில் 2024-25 ஆம் ஆண்டில் பழங்கள் 3.37 இலட்சம் எக்டர், காய்கறிகள் 3.65 இலட்சம் எக்டர், தோட்டப்பயிர்கள் 7.45 இலட்சம் எக்டர், சுவைதாளிதப் பயிர்கள் 1.06 இலட்சம் எக்டர், மருத்துவ மற்றும் நறுமணப் பயிர்கள் 0.13 இலட்சம் எக்டர் மற்றும் மலர்கள் 0.48 இலட்சம் எக்டர் என மொத்தம் 16.14 இலட்சம் எக்டர் பரப்பளவில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு, 242 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி அடையப்பெற்றுள்ளது.

## அட்டவணை 3.1: தோட்டக்கலைப் பயிர்கள் - சாகுபடி பரப்பு, உற்பத்தி, உற்பத்தித் திறன்

| வ.எண் | தோட்டக்கலைப் பயிர் வகை | 2024-25 (இறுதி மதிப்பீடு) | | | 2025-26 (இரண்டாம் முன் மதிப்பீடு) | | | 2026-27 (முன்மொழியப் பட்டது) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | சாகுபடி பரப்பு (இலட்சம் எக்டர்) | உற்பத்தி (இலட்சம் மெட்ரிக் டன்கள்) | உற்பத்தித் திறன் (மெ.டன்கள் / எக்டர்) | சாகுபடி பரப்பு (இலட்சம் எக்டர்) | உற்பத்தி (இலட்சம் மெட்ரிக் டன்கள்) | உற்பத்தித் திறன் (மெ.டன்கள் / எக்டர்) | சாகுபடி பரப்பு (இலட்சம் எக்டர்) | உற்பத்தி (இலட்சம் மெட்ரிக் டன்கள்) | உற்பத்தித் திறன் (மெ.டன்கள் / எக்டர்) |
| 1 | பழங்கள் | 3.37 | 77.35 | 22.98 | 3.40 | 78.59 | 23.12 | 3.67 | 84.96 | 23.12 |
| 2 | காய்கறிகள் | 3.65 | 98.17 | 26.89 | 3.56 | 96.45 | 27.03 | 4.48 | 121.02 | 27.03 |
| 3 | தோட்டப் பயிர்கள் | 7.45 | 54.27 | 7.28 | 7.58 | 55.25 | 7.29 | 7.74 | 56.40 | 7.29 |
| 4 | சுவை தாளிதப் பயிர்கள் | 1.06 | 4.13 | 3.90 | 1.06 | 4.37 | 4.11 | 1.25 | 5.12 | 4.11 |
| 5 | மருத்துவ மற்றும் நறுமணப் பயிர்கள் | 0.13 | 0.94 | 7.32 | 0.13 | 0.98 | 7.56 | 0.15 | 1.16 | 7.56 |
| 6 | மலர்கள் | 0.48 | 6.72 | 13.87 | 0.49 | 6.84 | 13.91 | 0.57 | 8.00 | 13.91 |
| | **மொத்தம்** | **16.14** | **241.57** | **14.97** | **16.24** | **242.49** | **14.94** | **17.87** | **276.68** | **15.48** |

## வரைபடம் 3.1: தமிழ்நாடு - தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி பரப்பு 2024-25




## அட்டவணை 3.2: தமிழ்நாடு - தோட்டக்கலைப் பயிர் சாகுபடி பரப்பில் தேசிய அளவிலான நிலை

| முதலிடம் | இரண்டாமிடம் | மூன்றாமிடம் |
|---|---|---|
| 1. மரவள்ளி<br>2. மல்லிகை<br>3. கிராம்பு<br>4. புளி | 1. வாழை<br>2. கொக்கோ<br>3. சம்பங்கி<br>4. கருணைக்கிழங்கு<br>5. கறிவேப்பிலை<br>6. ஜாதிக்காய்<br>7. சாமந்தி | 1. தென்னை<br>2. பெருநெல்லி<br>3. மிளகு<br>4. தர்பூசணி |
| **ஆதாரம்**: இறுதி மதிப்பீடு 2024-25, தோட்டக்கலை புள்ளியியல் பிரிவு, வேளாண்மை – உழவர் நலத்துறை, புது தில்லி | | |

## வரைபடம் 3.2: தமிழ்நாடு - தோட்டக்கலைப் பயிர்கள் உற்பத்தி 2024-25




## அட்டவணை 3.3: தமிழ்நாடு - தோட்டக்கலைப் பயிர் உற்பத்தியில் தேசிய அளவிலான நிலை

| முதலிடம் | இரண்டாமிடம் | மூன்றாமிடம் |
|---|---|---|
| 1. மரவள்ளி<br>2. தென்னை<br>3. மல்லிகை<br>4. கிராம்பு<br>5. புளி | 1. ஜாதிக்காய்<br>2. கருணைக் கிழங்கு<br>3. கறிவேப்பிலை<br>4. மஞ்சள்<br>5. சம்பங்கி | 1. பெருநெல்லி<br>2. வாழை<br>3. தர்பூசணி<br>4. சாமந்தி |
| **ஆதாரம்**: இறுதி மதிப்பீடு 2024-25, தோட்டக்கலை புள்ளியியல் பிரிவு, வேளாண்மை – உழவர் நலத்துறை, புது தில்லி | | |

## அட்டவணை 3.4: தமிழ்நாடு - தோட்டக்கலைப் பயிர் உற்பத்தித் திறனில் தேசிய அளவிலான நிலை

| முதலிடம் | இரண்டாமிடம் | மூன்றாமிடம் |
|---|---|---|
| 1. பெருநெல்லி | 1. ஜாதிக்காய் | 1. கொய்யா |
| 2. முள்ளங்கி | 2. கிராம்பு | 2. சாமந்தி |
| 3. முட்டைகோஸ் | 3. கறிவேப்பிலை | 3. மல்லிகை |
| 4. மஞ்சள் | 4. மரவள்ளி | 4. தென்னை |
| | 5. பலா | 5. பூண்டு |
| **ஆதாரம்**: இறுதி மதிப்பீடு 2024-25, தோட்டக்கலை புள்ளியியல் பிரிவு, வேளாண்மை – உழவர் நலத்துறை, புது தில்லி | | |

### 3.1.1: பழங்கள்

## வரைபடம் 3.3: தமிழ்நாட்டின் முக்கியப் பழங்கள்



## அட்டவணை 3.5: பழங்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படும் மாவட்டங்கள் (2024-25)

| வ. எண் | பழங்கள் | பரப்பு (எக்டர்) | பழங்கள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 1 | மா | 1,45,354 | கிருஷ்ணகிரி (32,887 எக்டர்), திண்டுக்கல் (15,849 எக்டர்), தருமபுரி (12,467 எக்டர்), திருவள்ளூர் (11,464 எக்டர்), தேனி (9,137 எக்டர்). |
| 2 | வாழை | 1,14,256 | ஈரோடு (22,140 எக்டர்), கோயம்புத்தூர் (9,397 எக்டர்), தூத்துக்குடி (8,777 எக்டர்), தேனி (6,698 எக்டர்), திருநெல்வேலி (5,887 எக்டர்). |
| 3 | தர்பூசணி | 20,341 | செங்கல்பட்டு (6,134 எக்டர்), விழுப்புரம் (3,589 எக்டர்), திருவண்ணாமலை (2,405 எக்டர்), திருவள்ளூர் (1,929 எக்டர்), சேலம் (820 எக்டர்). |
| 4 | கொய்யா | 14,248 | திண்டுக்கல் (2,184 எக்டர்), மதுரை (1,817 எக்டர்), விருதுநகர் (1,289 எக்டர்), கடலூர் (1,122 எக்டர்), விழுப்புரம் (842 எக்டர்). |
| 5 | எலுமிச்சை | 12,507 | தென்காசி (3,163 எக்டர்), திண்டுக்கல் (2,281 எக்டர்), திருச்சிராப்பள்ளி (1,001 எக்டர்), விருதுநகர் (849 எக்டர்), தூத்துக்குடி (844 எக்டர்). |

| வ. எ ண் | பழங்கள் | பரப்பு (எக்டர்) | பழங்கள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 6 | இதர பழங்கள் (நெல்லி, சப்போட்டா, பலா உட்பட) | 29,851 | திண்டுக்கல் (5,507 எக்டர்), தேனி (2,868 எக்டர்), சேலம்(1,853 எக்டர்), திருநெல்வேலி (1,666 எக்டர்), நாமக்கல் (1,617 எக்டர்) |
| பழப்பயிர்கள் மொத்த சாகுபடி பரப்பு = 3,36,557 எக்டர் | | | |

## 3.1.2: காய்கறிகள்

### வரைபடம் 3.4: தமிழ்நாட்டின் முக்கியக் காய்கறிகள்



## அட்டவணை: 3.6: காய்கறிகள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படும் மாவட்டங்கள் (2024-25)

| வ. எண் | காய்கறிகள் | பரப்பு (எக்டர்) | காய்கறிகள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 1 | மரவள்ளி | 1,04,893 | கள்ளக்குறிச்சி (19,826 எக்டர்), நாமக்கல் (19,647 எக்டர்), சேலம் (17,227 எக்டர்), தருமபுரி (14,774 எக்டர்), ஈரோடு (6,801 எக்டர்). |
| 2 | சின்ன வெங்காயம் | 44,143 | பெரம்பலூர் (7,385 எக்டர்), திருச்சிராப்பள்ளி (6,208 எக்டர்), தூத்துக்குடி (5,503 எக்டர்), நாமக்கல் (4,617 எக்டர்), திண்டுக்கல் (3,292 எக்டர்). |
| 3 | தக்காளி | 39,941 | தருமபுரி (12,207 எக்டர்), கிருஷ்ணகிரி (10,260 எக்டர்), சேலம் (3,722 எக்டர்), திண்டுக்கல் (2,377 எக்டர்), திருப்பூர் (2,000 எக்டர்). |
| 4 | வெண்டை | 19,995 | தருமபுரி (3,721 எக்டர்), சேலம் (2,776 எக்டர்), திருவண்ணாமலை (1,648 எக்டர்), திருப்பத்தூர் (1,117 எக்டர்). கிருஷ்ணகிரி (1,015 எக்டர்) |
| 5 | கத்தரி | 20,301 | தருமபுரி (3,488 எக்டர்), சேலம் (2,109 எக்டர்), திருவண்ணாமலை (1,805 எக்டர்), கிருஷ்ணகிரி (1,557 எக்டர்), கள்ளக்குறிச்சி (985 எக்டர்). |

| வ. எண் | காய்கறிகள் | பரப்பு (எக்டர்) | காய்கறிகள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 6 | இதர காய்கறிகள் (முருங்கை, பச்சை மிளகாய், பீன்ஸ் உட்பட) | 1,35,728 | கிருஷ்ணகிரி (27,363 எக்டர்), திண்டுக்கல் (15,096 எக்டர்), தருமபுரி (11,794 எக்டர்), நீலகிரி (8,039 எக்டர்), சேலம் (6,905 எக்டர்), |
| **காய்கறிகள் மொத்த சாகுபடி பரப்பு = 3,65,001 எக்டர்** | | | |

### 3.1.3: தோட்டப்பயிர்கள் / மலைப்பயிர்கள்

**வரைபடம் 3.5: தமிழ்நாட்டின் முக்கிய தோட்டப்பயிர்கள் / மலைப்பயிர்கள்**



## அட்டவணை: 3.7: தோட்டப்பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படும் மாவட்டங்கள் (2024-25)

| வ. எண் | தோட்டப் பயிர்கள் | பரப்பு (எக்டர்) | தோட்டப்பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 1 | தென்னை | 5,03,976 | கோயம்புத்தூர் (94,047 எக்டர்), திருப்பூர் (81,311 எக்டர்), தஞ்சாவூர் (43,429 எக்டர்), திண்டுக்கல் (31,783 எக்டர்), தேனி (25,864 எக்டர்). |
| 2 | முந்திரி | 81,895 | அரியலூர் (30,437 எக்டர்), கடலூர் (29,261 எக்டர்), புதுக்கோட்டை (5,725 எக்டர்), விழுப்புரம் (3,181 எக்டர்), தேனி (2,763 எக்டர்). |
| 3 | தேயிலை | 69,667 | நீலகிரி (55,829 எக்டர்), கோயம்புத்தூர் (11,194 எக்டர்), தேனி (1,629 எக்டர்), திருநெல்வேலி (804 எக்டர்), கன்னியாகுமரி (208 எக்டர்). |
| 4 | காபி | 33,369 | திண்டுக்கல் (11,123 எக்டர்), நீலகிரி (7,406 எக்டர்), சேலம் (7,141 எக்டர்), தேனி (2,720 எக்டர்), நாமக்கல் (2,397 எக்டர்). |
| 5 | ரப்பர் | 28,133 | கன்னியாகுமரி (28,042 எக்டர்), நீலகிரி (46 எக்டர்). தென்காசி (42 எக்டர்), கோயம்புத்தூர் (3 எக்டர்). |

| வ. எண் | தோட்டப் பயிர்கள் | பரப்பு (எக்டர்) | தோட்டப்பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 6 | இதர தோட்டப் பயிர்கள் (பாக்கு, பனை, வெற்றிலை உட்பட) | 28,069 | சேலம் (4,129 எக்டர்), கோயம்புத்தூர் (3,761 எக்டர்) தருமபுரி (2,869 எக்டர்), இராமநாதபுரம் (2,595 எக்டர்), தூத்துக்குடி (2,589 எக்டர்). |
| **தோட்டப்பயிர்கள் மொத்த சாகுபடி பரப்பு = 7,45,101 எக்டர்** | | | |

## 3.1.4: சுவை தாளிதப் பயிர்கள்

### வரைபடம் 3.6: தமிழ்நாட்டின் முக்கிய சுவை தாளிதப் பயிர்கள்



## அட்டவணை: 3.8: சுவை தாளித மற்றும் மணம் கூட்டும் பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படும் மாவட்டங்கள் (2024-25)

| வ. எண் | சுவை தாளித பயிர்கள் | பரப்பு (எக்டர்) | சுவை தாளித பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 1 | மிளகாய் | 41,268 | இராமநாதபுரம் (15,343 எக்டர்), தூத்துக்குடி (14,609 எக்டர்), சிவகங்கை (2,639 எக்டர்), விருதுநகர் (1,545 எக்டர்), தருமபுரி (1,441 எக்டர்) |
| 2 | மஞ்சள் | 26,375 | தருமபுரி (8,584 எக்டர்), சேலம் (5,815 எக்டர்), ஈரோடு (4,505 எக்டர்), கள்ளக்குறிச்சி (2,224 எக்டர்), நாமக்கல் (1,944 எக்டர்). |
| 3 | புளி | 13,855 | திண்டுக்கல் (3,103 எக்டர்), தேனி (1,875 எக்டர்), மதுரை (1,054 எக்டர்), ) தருமபுரி (990 எக்டர்). கிருஷ்ணகிரி (848 எக்டர் |
| 4 | மிளகு | 7,935 | நாமக்கல் (2,758 எக்டர்), திண்டுக்கல் (1,605 எக்டர்), சேலம் (1,509 எக்டர்), நீலகிரி (978 எக்டர்), கன்னியாகுமரி (306 எக்டர்). |
| 5 | கொத்தமல்லி | 4,759 | தூத்துக்குடி (1,849 எக்டர்), இராமநாதபுரம் (1,303 எக்டர்), விருதுநகர் (1,063 எக்டர்), தருமபுரி (179 எக்டர்), திருப்பத்தூர் (82 எக்டர்). |

| வ. எண் | சுவை தாளித பயிர்கள் | பரப்பு (எக்டர்) | சுவை தாளித பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 6 | இதர சுவை தாளிதப் பயிர்கள் (ஏலக்காய், கறி வேப்பலை, பூண்டு உட்பட) | 11,784 | கோயம்புத்தூர் (2,154 எக்டர்), நீலகிரி (1,871 எக்டர்), திண்டுக்கல் (1,689 எக்டர்), தேனி (1,683 எக்டர்), கிருஷ்ணகிரி (960 எக்டர்). |
| **சுவை தாளிதப் பயிர்கள் மொத்த சாகுபடி பரப்பு = 1,05,976 எக்டர்** | | | |

## 3.1.5: மருத்துவ மற்றும் நறுமணப் பயிர்கள்

### வரைபடம் 3.7: தமிழ்நாட்டின் முக்கிய மருத்துவ மற்றும் நறுமணப் பயிர்கள்



## அட்டவணை: 3.9: மருத்துவ மற்றும் நறுமணப் பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படும் மாவட்டங்கள் (2024-25)

| வ. எண் | மருத்துவ மற்றும் நறுமணப் பயிர்கள் | பரப்பு (எக்டர்) | மருத்துவ மற்றும் நறுமணப் பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 1 | கண்வலிக்கிழங்கு | 6,092 | திண்டுக்கல் (2,864 எக்டர்), திருப்பூர் (2,627 எக்டர்), கரூர் (547 எக்டர்), திருச்சிராப்பள்ளி (30 எக்டர்), விருதுநகர் (10 எக்டர்). |
| 2 | மருந்துக் கூர்க்கன் | 1,858 | கள்ளக்குறிச்சி (795 எக்டர்), திருவண்ணாமலை (640 எக்டர்), சேலம் (244 எக்டர்), திருச்சிராப்பள்ளி (51 எக்டர்), பெரம்பலூர் (35 எக்டர்). |
| 3 | பால்மரோசா | 441 | தருமபுரி (234 எக்டர்), திருவண்ணாமலை (133 எக்டர்), கள்ளக்குறிச்சி (62 எக்டர்), கோயம்புத்தூர் (5 எக்டர்), சேலம் (3 எக்டர்). |
| 4 | எலுமிச்சைப் புல் | 296 | திருவண்ணாமலை 279 எக்டர்), திருநெல்வேலி (5 எக்டர்), திருப்பூர் (4 எக்டர்). |
| 5 | நீல அவுரி | 269 | விழுப்புரம் (221 எக்டர்), திருவண்ணாமலை (9 எக்டர்) |

| வ. எண் | மருத்துவ மற்றும் நறுமணப் பயிர்கள் | பரப்பு (எக்டர்) | மருத்துவ மற்றும் நறுமணப் பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 6 | இதர பயிர்கள் (துளசி, நித்தியகல்யாணி, சென்னா உட்பட) | 3,834 | விருதுநகர் (1177 எக்டர்), தூத்துக்குடி (433 எக்டர்), திருநெல்வேலி (290 எக்டர்), மதுரை (257 எக்டர்), திண்டுக்கல் (186 எக்டர்). |
| **மருத்துவ மற்றும் நறுமணப் பயிர்கள் மொத்த சாகுபடி பரப்பு = 12,790 எக்டர்** | | | |

## 3.1.6: மலர்கள்

### வரைபடம் 3.8: தமிழ்நாட்டின் முக்கிய மலர் பயிர்கள்



## அட்டவணை: 3.10: மலர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படும் மாவட்டங்கள் (2024-25)

| வ. எண் | மலர்கள் | பரப்பு (எக்டர்) | மலர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 1 | மல்லிகை | 17,172 | மதுரை (1,893 எக்டர்), திண்டுக்கல் (1,361 எக்டர்), திருவள்ளூர் (1,219 எக்டர்)., திருவண்ணாமலை (1,216 எக்டர்), ஈரோடு (1,178 எக்டர்), |
| 2 | சாமந்தி | 10,792 | கிருஷ்ணகிரி (4,944 எக்டர்), தருமபுரி (2,651 எக்டர்), சேலம் (1,205 எக்டர்), திருவண்ணாமலை (639 எக்டர்), விழுப்புரம் (216 எக்டர்). |
| 3 | சம்பங்கி | 6,764 | தருமபுரி (2,248 எக்டர்), திருவண்ணாமலை (1,661 எக்டர்), ஈரோடு (516 எக்டர்), திண்டுக்கல் (497 எக்டர்), மதுரை (184 எக்டர்). |
| 4 | ரோஜா | 4,265 | கிருஷ்ணகிரி (1,878 எக்டர்), தருமபுரி (650 எக்டர்), திருவண்ணாமலை (307 எக்டர்), சேலம் (222 எக்டர்), நாமக்கல் (203 எக்டர்). |
| 5 | செவ்வந்தி | 4,219 | கிருஷ்ணகிரி (2,401 எக்டர்), திருவண்ணாமலை (540 எக்டர்), தருமபுரி (372 எக்டர்), ஈரோடு (105 எக்டர்), தேனி (102 எக்டர்). |

| வ. எண் | மலர்கள் | பரப்பு (எக்டர்) | மலர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 6 | இதர மலர்கள் (அரளி, கோழிக் கொண்டை, கனகாம்பரம் உட்பட) | 5,222 | சேலம் (1,556 எக்டர்), கிருஷ்ணகிரி(861 எக்டர்), நாமக்கல் (592 எக்டர்) தருமபுரி (501 எக்டர்), திண்டுக்கல் (392 எக்டர்),. |
| **மலர்கள் மொத்த சாகுபடி பரப்பு = 48,434 எக்டர்** | | | |

## 3.2. ஒன்றிய, மாநில நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

### 3.2.1: துளி நீரில் அதிக பயிர் - தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம்

நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி அதன் மூலம் பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகப்படுத்துவதிலும், விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்குவதிலும் நுண்ணீர்ப் பாசனத் தொழில்நுட்பம் முக்கியப் பங்கு வகிக்கிறது.

பாரம்பரிய பாசன முறைகளைத் தவிர்த்து, நுண்ணீர்ப் பாசனத் தொழில்நுட்பத்தைக் கடைப்பிடித்து, நீர் பயன்பாட்டுத் திறனை

மேம்படுத்துவதன் மூலம் தமிழ்நாட்டில் வேளாண் சாகுபடிப் பரப்பு உயர்த்தப்படுவதோடு, பாசனநீர்ப் பற்றாக்குறையையும் குறைக்க இயலும்.

நுண்ணீர்ப் பாசன அமைப்புகள் நிறுவ ஒன்றிய அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி சிறு/குறு விவசாயிகளுக்கு 55 சதவீத மானியமும், இதர விவசாயிகளுக்கு 45 சதவீத மானியமும் வழங்கப்படுகிறது. இந்த மானியத்திற்கான நிதி 60 சதவீதம் ஒன்றிய அரசு, 40 சதவீதம் மாநில அரசு என்ற வகையில் பகிரப்படுகிறது. இத்திட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து மாநில அரசு சிறு/குறு விவசாயிகளுக்கு கூடுதலாக 45 சதவீத மானியமும் இதர விவசாயிகளுக்கு 30 சதவீத மானியமும் வழங்குவதன் மூலம் சிறு/குறு விவசாயிகளுக்கு 100% மானியமும் இதர விவசாயிகளுக்கு 75% மானியம் கிடைக்கப் பெறுகிறது. இதனுடன் நுண்ணீர் பாசன அமைப்புகளுக்கான 5% சரக்கு மற்றும் சேவை

வரியையும் அனைத்து விவசாயிகளுக்கும் மாநில அரசே ஏற்கிறது.

2026-27-ஆம் ஆண்டில் 90,200 எக்டர் பரப்பில் ரூ.788.37 கோடி நிதியில் 95,000 விவசாயிகள் பயன்பெறும் நோக்கில் இத்திட்டம் பின்வரும் திட்ட இனங்களுடன் செயல்படுத்தப்படும்.

1. **நுண்ணீர்ப் பாசன அமைப்புகள் நிறுவுதல்**: 90,000 எக்டர் பரப்பில் ரூ. 782.44 கோடி நிதியில் 94,730 விவசாயிகளுக்கு நுண்ணீர் பாசன அமைப்புகள் அமைத்து தரப்படும்.

2. **வன உரிமைச்சட்டத்தின் மூலம் பட்டா பெற்றவர்களுக்கு நுண்ணீர் பாசன அமைப்புகள் நிறுவுதல்** :
இச்சட்டத்தின் கீழ் விவசாயம் செய்ய உரிமம் பெற்ற 270 விவசாயிகளுக்கு 200 எக்டர் பரப்பில் ரூ.2.60 கோடி நிதியில் நுண்ணீர்ப் பாசன அமைப்புகள் அமைத்துத் தரப்படும்.

3. **இதர செயல்பாடுகள் (துணை நீர் மேலாண்மை செயல்பாடுகள்):**

விவசாயிகள் நுண்ணீர்ப் பாசன அமைப்புகள் நிறுவுவதை ஊக்குவிக்கும் வகையில் நீர் சேகரிப்பு அமைப்பு அமைத்தல், பாதுகாக்கப்பட்ட குறு வட்டங்களில் ஆழ்துளை / குழாய்க் கிணறு அமைத்தல், பாசனக் குழாய்கள் வழங்குதல், டீசல்/மின் மோட்டார்கள் நிறுவுதல் ஆகிய இனங்களுக்கு 50% மானியம் வழங்கப்படும். இவ்வாண்டு ரூ.3.33 கோடி நிதியில் 1,700 விவசாயிகள் பயனடையும் வகையில் இந்த இனங்கள் செயல்படுத்தப்படும்

### 3.2.2: தேசிய தோட்டக்கலை இயக்கம் (NHM)

ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சி இயக்கத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டம், ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின்

60:40 என்ற நிதி பங்களிப்புடன் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம், 2026-27 ஆம் ஆண்டில் தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு விரிவாக்கம், பாதுகாக்கப்பட்ட சூழலில் பயிர் சாகுபடி, காளான் வளர்ப்பு, நீர் சேமிப்பு அமைப்புகள் உருவாக்குதல், மகரந்த சேர்க்கையை தேனீ வளர்ப்பின் மூலம் ஊக்குவித்தல், பழைய தோட்டங்களைப் புதுப்பித்தல், சிறப்பு செயல்பாடுகள் திட்ட இனத்தின் கீழ் சீமைக் கருவேல மரங்களை அகற்றி மிளகாய் சாகுபடியை ஊக்குவித்தல், அறுவடைப் பின்செய் மேலாண்மை மற்றும் சந்தைப்படுத்துதலுக்கான கட்டமைப்புகள் ஆகிய இனங்களுடன் ரூபாய் 150.00 கோடி நிதியில் செயல்படுத்தப்படும்.

### 3.2.3: பிரதம மந்திரியின் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (PM RKVY)- விரிவான திட்ட அறிக்கைகள் அடிப்படையிலான திட்டம் (DPR based projects )

விவசாயப் பெருமக்களுக்குத் தரமான இடுபொருட்கள் மற்றும் கட்டமைப்பு வசதிகளை வழங்கி, நவீன தோட்டக்கலைத் தொழில்நுட்பங்களை ஊக்குவிப்பதன் மூலம் தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தி, உற்பத்தித்திறன் மற்றும் அவர்களின் வருமானத்தை மேம்படுத்தும் நோக்கில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

2026–27 ஆம் ஆண்டில், ரூ.20.50 கோடி நிதி ஒதுக்கீட்டில் நிரந்தரப் பந்தல் அமைத்தல், மா, கொய்யா, தக்காளி, முருங்கை, சின்ன வெங்காயம் ஆகிய பயிர்களை ஏற்றுமதிக்கு உகந்த தரத்தில் உற்பத்தி செய்ய நன்னெறி வேளாண் முறைகளை ஊக்குவித்தல் போன்ற

இனங்களைக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படும்..

**3.2.4. மாற்றுப் பயிர் சாகுபடித் திட்டம்:**

புகையிலை சாகுபடிப் பரப்பளவைக் குறைத்து, விவசாயிகளை காய்கறி சாகுபடிக்கு மாற்றுவதன் மூலம் மாற்றுப் பயிர் சாகுபடியை ஊக்குவித்து, வேளாண் உற்பத்தி, வருவாய் மற்றும் நிலையான வேளாண் வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2026-27 – ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.15 இலட்சம் நிதியில் செயல்படுத்தப்படும்.

**3.2.5. வேளாண் காடுகள் (Agro Forestry):**

வேளாண் காடுகளின் பரப்பினை அதிகரித்து, உற்பத்தித் திறனை மேம்படுத்தி, கிராமங்களில் வேலை வாய்ப்பினை ஊக்குவித்து, வருமானத்தை பெருக்குவதுடன் தரமான நடவுப் பொருட்கள் உற்பத்தியை மேம்படுத்தும் வகையில்

தேக்கு, மகோகனி, சந்தனம், செம்மரம், வேங்கை, போன்ற உயர்தர மரக்கன்றுகளை உற்பத்தி செய்து வழங்குவதற்குத் தேவையான நவீன நாற்றங்கால் கட்டமைப்புகளை ஏற்படுத்துவதும் இத்திட்டத்தின் நோக்கங்களாகும்.

2026-27 – ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.9.15 கோடி நிதியில் செயல்படுத்தப்படும்.

**3.2.6.: பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டம் (PKVY):**

மண் வளத்தைப் பாதுகாத்து மேம்படுத்துதல், இயற்கை வளங்களின் நிலையான பயன்பாட்டை உறுதி செய்தல், மண்ணின் ஊட்டச்சத்து மறுசுழற்சியை ஊக்குவித்தல் மற்றும் வெளிப்புற இடுபொருட்களின் மீதான சார்பினைக் குறைத்தல் ஆகியவற்றின் மூலம் இயற்கை வள அடிப்படையிலான ஒருங்கிணைந்த மற்றும் காலநிலை மாற்றத்தைத் தாங்கும் நிலையான வேளாண் முறைகளை ஊக்குவிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மேலும், தொகுப்பு

அடிப்படையிலான உயிர்ம வேளாண்மையை ஊக்குவித்து, உயிர்ம உற்பத்தி, சான்றளிப்பு மற்றும் சந்தைப்படுத்தலுக்குத் தேவையான ஆதரவுகள் வழங்கப்படுகின்றன.

2026-27 ஆம் ஆண்டில், இத்திட்டம் 25 தொகுப்புகளில் ரூ.51.07 இலட்சம் நிதியில் செயல்படுத்தப்படும்.

### 3.2.7.: இயற்கை வேளாண்மைக்கான தேசிய இயக்கம் (NMNF):

பண்ணைக்கு வெளியில் இருந்து வாங்கப்படும் இடுபொருட்களின் சார்பினைக் குறைத்து, சாகுபடி செலவைக் குறைப்பதன் மூலம் விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தும் மாற்று வேளாண்மை முறைகளை ஊக்குவிப்பதே இத்திட்டத்தின் நோக்கம். மேலும், மாநிலத்தில் பின்பற்றப்பட்டு வரும் இயற்கை வேளாண்மை நடைமுறைகளை சேகரித்து, சரிபார்த்து மற்றும் ஆவணப்படுத்துவதும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களுள் ஒன்றாகும்.

அதேபோல், இயற்கை வேளாண்மை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல், திறன் மேம்பாடு, செயல்விளக்கப் பணிகளை ஊக்குவித்தல் ஆகியவற்றை மேற்கொள்வதுடன், இயற்கை வேளாண் பொருட்களுக்கு தேசிய மற்றும் சர்வதேச சந்தைகளில் விற்பனை வாய்ப்புகளை உருவாக்க தரநிலைகள், சான்றிதழ் நடைமுறைகள் மற்றும் வர்த்தக முத்திரை அமைப்புகளை உருவாக்குவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

2026-27 ஆம் ஆண்டில், ரூ.2.087 கோடி நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**3.2.8: தேசிய மூங்கில் இயக்கம் (NBM)**

இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம் காடு அல்லாத பகுதிகளில் அரசு மற்றும் தனியார் நிலங்களில் மூங்கில் பயிரிடும் பரப்பளவை அதிகரிப்பதாகும். மேலும், திறன் மேம்பாடு, விழிப்புணர்வு ஏற்படுத்துதல், அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மையை மேம்படுத்தி மூங்கில்

உற்பத்தியில் முழுமையான வளர்ச்சி அடைவது போன்ற பிற நோக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டம் 2026–27 ஆம் ஆண்டில், 220 எக்டர் பரப்பளவில் ரூ.1.66 கோடி நிதியில் செயல்படுத்தப்படும்.

### 3.2.9: தேசிய சமையல் எண்ணெய் இயக்கம் – எண்ணெய்ப் பனை (NMEO-OP)

எண்ணெய்ப் பனை பயிரிடும் பரப்பளவை அதிகரித்து உள்நாட்டு உணவு எண்ணெய் உற்பத்தியை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மேலும், விவசாயிகளுக்கு உறுதியான வருமானத்தை வழங்க சாத்தியமான விலை (Viability Price (VP)) மற்றும் அதற்கான இடைவெளி நிதியுதவி (Viability Gap Payment (VGP)) மூலம் ஆதரவு அளிப்பதும், நடவுப் பொருட்கள், பாசன வசதிகள், பராமரிப்பு மற்றும் கருவிகள் ஆகியவற்றிற்கு உதவி வழங்குவதும்

இத்திட்டத்தில் அடங்கும். இந்தத் திட்டம் விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தவும், நாட்டின் எண்ணெய்த் தேவையை நிறைவு செய்யவும் முக்கியப் பங்கு வகிக்கிறது.

2026–27 ஆம் ஆண்டில், 300 எக்டர் பரப்பளவில் ரூ.2.04 கோடி நிதியில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**3.2.10. தென்னைக்கான சிறப்புத் திட்டம்**

தென்னை ஆண்டு முழுவதும், விவசாயிகளுக்கு வருமானம் தரும் பல்லாண்டுப் பயிராகும். அதன் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் நோக்கில், மாநில அரசும் தென்னை வளர்ச்சி வாரியமும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன.

தமிழ்நாட்டில் தென்னை 5.04 இலட்சம் எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு,

ஆண்டுதோறும் சுமார் 670 கோடி தேங்காய்கள் அதாவது, எக்டருக்கு சராசரியாக 13,300 தேங்காய்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

தென்னைக்கான சிறப்புத் திட்டத்தின் கீழ், தென்னை பயிர் பரப்பு விரிவாக்கம், தென்னந்தோப்புகளில் வாழை, ஜாதிக்காய் மற்றும் செடி மிளகு ஊடுபயிரிடுதல், தென்னை டானிக் வழங்குதல், தென்னை வேர்வாடல் நோய் கட்டுப்படுத்த கோகோகான் நுண்ணுயிர்க் கலவை வழங்குதல் மற்றும் தென்னையில் ரூகோஸ் சுருள் வெள்ளை ஈக்களின் தாக்குதலைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை (IPM) போன்ற இனங்கள் செயல்படுத்தப்படும்.

2026-27 ஆம் ஆண்டிலும், மாநில அரசு மற்றும் தென்னை வளர்ச்சி வாரியத் திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு, தென்னை உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன் மேம்படுத்தப்படும்.

### 3.2.11. தோட்டக்கலைப் பயிர்களுக்கான பயிர்க் காப்பீடு:

காலநிலை மாற்றம் மற்றும் எதிர்பாராத இயற்கை இடர்ப்பாடுகளால் தோட்டக்கலைப் பயிர்களின் வளர்ச்சி மற்றும் மகசூல் பாதிக்கப்பட்டு, விவசாயிகள் பெருமளவில் பொருளாதார இழப்புகளை எதிர்கொண்டு வருகின்றனர். இத்தகைய சூழலில், இயற்கைப் பேரிடர்களால் ஏற்படும் பயிர் இழப்புகளுக்கு உரிய இழப்பீடு வழங்குவதன் மூலம் விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கும் நோக்கில் பயிர்க் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், இத்திட்டம் உற்பத்தி சார்ந்த இடர்ப்பாடுகளிலிருந்து விவசாயிகளைப் பாதுகாப்பதுடன், அவர்களின் கடன் பெறும் தகுதியை உறுதிப்படுத்தி, வேளாண் தொழிலின் நிலைத்தன்மையையும் மேம்படுத்துகிறது.

இத்திட்டம் காரீப், சிறப்பு மற்றும் இராபி பருவங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வாழை, கத்தரி, வெண்டை, முட்டைக்கோஸ், கேரட், கொத்தமல்லி, பூண்டு, இஞ்சி, வெங்காயம், உருளைக்கிழங்கு, சிவப்பு மிளகாய், தக்காளி, மரவள்ளிக்கிழங்கு மற்றும் மஞ்சள் ஆகிய 14 அறிவிக்கை செய்யப்பட்ட தோட்டக்கலைப் பயிர்களுக்கு காப்பீட்டு பாதுகாப்பு வழங்கப்பட்டு வருகிறது.

2026–27 ஆம் ஆண்டில், இத்திட்டம் ரூ.30.70 கோடி மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும். காலநிலை மாற்றங்கள், இயற்கை பேரழிவுகள், பூச்சி மற்றும் நோய் தாக்குதல்களிலிருந்து தென்னையை பாதுகாக்க நடைமுறையிலுள்ள தென்னை மரக் காப்பீட்டுத் திட்டம் (CPIS-Coconut Palm Insurance Scheme) செயல்படுத்தப்படும்.

வானிலை மாற்றங்களால் ஏற்படும் இழப்புகளிலிருந்து விவசாயிகளைப் பாதுகாக்க மறுசீரமைக்கப்பட்ட வானிலை சார்ந்த பயிர்க் காப்பீட்டுத் திட்டம் (Restructured

Weather Based Crop Insurance Scheme - RWBCIS) செயல்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன.

**3.3. மாநிலத் திட்டங்கள்**

**3.3.1: மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம் (SHDS)**

மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பாரம்பரிய தோட்டக்கலைப் பயிர்கள், மருத்துவப்பயிர்கள், மலர்ப்பயிர்கள், சுவைதாளிதப் பயிர்கள், தென்னை மற்றும் தர்பூசணி பரப்பு விரிவாக்கம், மாடித்தோட்டத் தளைகள் வழங்குதல், செங்குத்துத் தோட்டம், நீரியல் தோட்டம், மொட்டை மாடியில் நிழல்வலைக்குடில் அமைப்புகள், காய்கறி விதைத் தளை மற்றும் பழச்செடித் தொகுப்புகள் விநியோகம், தளிர்க்கீரை வளர்ப்பை ஊக்குவித்தல், தென்னையில் ஊடுபயிர் சாகுபடியை ஊக்குவித்தல், தேவை அடிப்படையிலான திட்ட இனங்கள், நீலகிரி

மாவட்டத்தில் உயிர்ம வேளாண்மையை ஊக்குவித்தல் போன்ற திட்ட இனங்களுடன் 100 சதவீத மாநில அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது.

2026-27-ஆம் நிதியாண்டில் இத்திட்டம் ரூ.65.0953 கோடி நிதியில் செயல்படுத்தப்படும்.

**3.3.2: பனை பாதுகாப்பு இயக்கம் (PPM)**

பனை பாதுகாப்பு இயக்கத்தின் கீழ் பனை விதைகள் விநியோகம், பனங்கன்றுகள் விநியோகம், பனை மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் கூடம் அமைத்தல் போன்ற திட்டக்கூறுகள் தோட்டக்கலைத் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும், பெண்களுக்குப் பனை ஓலையில் இருந்து பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி மற்றும் கருவிகள் வழங்குதல், பனை மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்க பயிற்சி மற்றும் உபகரணங்கள் வழங்குதல், போன்ற

திட்டக்கூறுகள் தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2026-27 ஆம் ஆண்டில் ரூ.2.1047 கோடி நிதியில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## 3.4: தோட்டக்கலைத்துறையின் கட்டமைப்பு வசதிகள்

### 3.4.1: அரசு தோட்டக்கலைப் பண்ணைகள்

தமிழ்நாட்டில், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் கீழ் 37 மாவட்டங்களில், 74 அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன.

**அட்டவணை 3.11.: மாநிலத்தில் உள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணைகள்**

| வ எண் | மாவட்டம் | அரசு தோட்டக்கலைப் பண்ணையின் பெயர் | அமைக்கப்-பட்ட வருடம் | பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|---|
| 1 | அரியலூர் | கீழப்பழுவூர் | 2018 | 7.580 |
| 2 | சென்னை | மாதவரம் | 1980 | 2.000 |
| 3 | கோயம்புத்தூர் | ஆனைக்கட்டி | 1986 | 12.000 |
| 4 | கோயம்புத்தூர் | கண்ணம்பாளையம் | 2001 | 11.200 |
| 5 | கடலூர் | விருதாச்சலம் | 1975 | 10.430 |
| 6 | கடலூர் | நெய்வேலி | 1985 | 39.525 |

| வ எண் | மாவட்டம் | அரசு தோட்டக்கலைப் பண்ணையின் பெயர் | அமைக்கப்பட்ட வருடம் | பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|---|
| 7 | தருமபுரி | போலயம்பள்ளி | 2013 | 2.730 |
| 8 | தருமபுரி | வட்டார நாற்றங்கால் மையம், தருமபுரி | 2020 | 0.250 |
| 9 | திண்டுக்கல் | சந்தையூர் | 2018 | 15.190 |
| 10 | திண்டுக்கல் | சிறுமலை | 1980 | 56.400 |
| 11 | திண்டுக்கல் | தாண்டிக்குடி | 1985 | 5.450 |
| 12 | திண்டுக்கல் | கொடைக்கானல் | 1961 | 1.650 |
| 13 | ஈரோடு | பகுத்தம்பாளையம் | 2018 | 10.000 |
| 14 | செங்கல்பட்டு | ஆத்தூர் | 1961 | 12.240 |
| 15 | கள்ளக்குறிச்சி | அ. சாத்தனூர் | 2018 | 10.000 |
| 16 | காஞ்சிபுரம் | விச்சந்தாங்கல் | 1982 | 23.250 |
| 17 | காஞ்சிபுரம் | மேல்கதிர்பூர் | 1982 | 42.630 |
| 18 | காஞ்சிபுரம் | மேலொட்டிவாக்கம் | 1982 | 20.600 |
| 19 | காஞ்சிபுரம் | பிச்சிவாக்கம் | 1982 | 34.000 |
| 20 | கன்னியாகுமரி | கன்னியாகுமரி | 1922 | 6.570 |
| 21 | கன்னியாகுமரி | பேச்சிப்பாறை | 1967 | 6.000 |
| 22 | கரூர் | முதலைப்பட்டி | 1978 | 24.250 |
| 23 | கிருஷ்ணகிரி | திம்மாபுரம் | 1952 | 9.620 |
| 24 | கிருஷ்ணகிரி | ஜீனூர் | 1980 | 123.445 |
| 25 | மதுரை | பூஞ்சுத்தி | 2012 | 5.765 |
| 26 | நாகப்பட்டினம் | வண்டுவாஞ்சேரி | 2018 | 6.540 |
| 27 | நாகப்பட்டினம் | புஷ்பவனம் | 2021 | 9.920 |
| 28 | நாமக்கல் | செம்மேடு | 1974 | 11.100 |

| வ எண் | மாவட்டம் | அரசு தோட்டக்கலைப் பண்ணையின் பெயர் | அமைக்கப்-பட்ட வருடம் | பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|---|
| 29 | நாமக்கல் | படசோலை | 1989 | 22.670 |
| 30 | பெரம்பலூர் | வெங்கலம் | 2018 | 4.720 |
| 31 | புதுக்கோட்டை | குடுமியான்மலை | 1974 | 118.680 |
| 32 | புதுக்கோட்டை | வல்லத்திராக்கோட்டை | 1977 | 521.200 |
| 33 | புதுக்கோட்டை | நாட்டுமங்கலம் | 1985 | 53.020 |
| 34 | இராமநாதபுரம் | ஓரியூர் | 2013 | 14.770 |
| 35 | இராணிப்பேட்டை | நவ்லாக் | 1981 | 85.400 |
| 36 | சேலம் | மாபெரும் பழப்பண்ணை கருமந்துறை | 1981 | 419.770 |
| 37 | சேலம் | மணியார்குன்றம் | 1982 | 100.000 |
| 38 | சேலம் | கருமந்துறை | 1981 | 39.350 |
| 39 | சேலம் | முள்ளுவாடி | 1985 | 48.400 |
| 40 | சேலம் | சிறுமலை | 1987 | 8.000 |
| 41 | சேலம் | ஏற்காடு | 1975 | 4.052 |
| 42 | சிவகங்கை | தேவகோட்டை | 1985 | 81.190 |
| 43 | சிவகங்கை | நேமம் | 1979 | 38.770 |
| 44 | சிவகங்கை | கிளாதரி | 2019 | 12.810 |
| 45 | தஞ்சாவூர் | ஆடுதுறை | 1984 | 6.650 |
| 46 | தஞ்சாவூர் | மருங்குளம் | 1966 | 10.770 |
| 47 | தேனி | பெரியகுளம் | 1950 | 9.430 |
| 48 | தூத்துக்குடி | கீழவல்லநாடு | 2019 | 2.668 |
| 49 | திருநெல்வேலி | வன்னிக்கோனேந்தல் | 2018 | 9.860 |
| 50 | திருப்பூர் | சங்கராமநல்லூர் | 2018 | 10.120 |

| வ எண் | மாவட்டம் | அரசு தோட்டக்கலைப் பண்ணையின் பெயர் | அமைக்கப்பட்ட வருடம் | பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|---|
| 51 | திருவாரூர் | மூவாநல்லூர் | 2018 | 5.825 |
| 52 | திருவள்ளூர் | ஈக்காடு கண்டிகை | 2020 | 3.620 |
| 53 | திருவண்ணாமலை | புதூர்செக்கடி | 2018 | 12.760 |
| 54 | திருவண்ணாமலை | வட்டார நாற்றங்கால் பண்ணை, ஜமுனாமரத்தூர் | 2020 | 0.680 |
| 55 | திருவண்ணாமலை | வட்டார நாற்றங்கால் பண்ணை, போளூர் | 2020 | 1.520 |
| 56 | திருப்பத்தூர் | கூடப்பட்டு | 1961 | 10.080 |
| 57 | திருப்பத்தூர் | தகரக்குப்பம் | 1985 | 34.400 |
| 58 | திருச்சிராப்பள்ளி | தொரக்குடி | 2015 | 5.340 |
| 59 | வேலூர் | அகரம்சேரி | 2020 | 34.530 |
| 60 | விருதுநகர் | பூவாணி | 1967 | 9.460 |
| 61 | விருதுநகர் | ஸ்ரீவில்லிப்புத்தூர் | 1982 | 46.270 |
| 62 | விருதுநகர் | ஆதித்தநேந்தல் | 2020 | 0.810 |
| 63 | விழுப்புரம் | எலவளப்பாக்கம் | 2021 | 7.000 |
| 64 | நீலகிரி | கல்லார் | 1900 | 8.820 |
| 65 | நீலகிரி | பர்லியார் | 1871 | 6.250 |
| 66 | நீலகிரி | தேவாலா | 1978 | 80.000 |
| 67 | நீலகிரி | பழவியல் நிலையம், குன்னூர் | 1948 | 10.460 |
| 68 | நீலகிரி | தும்மனட்டி | 1956 | 9.800 |
| 69 | நீலகிரி | நஞ்சநாடு | 1917 | 64.000 |
| 70 | நீலகிரி | கோல்கிரைன் | 1989 | 20.400 |
| 71 | நீலகிரி | பழப் பதனிடும் நிலையம், குன்னூர் | 1965 | 0.113 |

| வ எண் | மாவட்டம் | அரசு தோட்டக்கலைப் பண்ணையின் பெயர் | அமைக்கப்-பட்ட வருடம் | பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|---|
| 72 | நீலகிரி | காட்டேரி | 1975 | 16.956 |
| 73 | நீலகிரி | தொட்டபெட்டா | 1969 | 2.520 |
| 74 | தென்காசி | நடுவக்குறிச்சி | 2025 | 3.237 |
| மொத்தம் | | | | 2537.486 |

பழங்கள், தோட்டப்பயிர்கள், சுவை தாளிதப் பயிர்கள், மூலிகைகள் மற்றும் மலர்கள் ஆகியவற்றின் தரமான மற்றும் இனத்தூய்மையான நடவுச் செடிகள் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் அரசுத் திட்டங்கள் மூலமாகவும், நேரடியாகவும் வழங்கப்படுகின்றன. மேலும், இப்பண்ணைகள் நவீன தொழில்நுட்பங்களை விளக்கும் மாதிரிப் பண்ணைகளாக விளங்குவதுடன் நிலமற்ற வேளாண் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் மையங்களாகவும் செயல்பட்டு வருகின்றன.

2026-2027 ஆம் ஆண்டில் 17.69 கோடி குழித்தட்டு மற்றும் காய்கறி நாற்றுகள் உள்ளிட்ட 21.03 கோடி நடவுச்செடிகள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது, மேலும், 202.75 மெட்ரிக் டன் உண்மை நிலை (Truthfuly labelled) காய்கறி விதைகள், 774.30 மெட்ரிக் டன் மண்புழு உரம், 63.45 மெட்ரிக் டன் உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள், 41,500 லிட்டர் திரவ உயிர் உரங்களும் 16.30 மெட்ரிக் டன் திட உயிர் உரங்களும் அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் மற்றும் பூங்காக்களில் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### 3.4.2: பூங்காக்கள் மற்றும் தோட்டங்கள்

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, 8 மாவட்டங்களில் 24 பூங்காக்களைப் பராமரித்து வருகிறது. இப்பூங்காக்கள் பொதுமக்களின் இயந்திரமயமான வாழ்க்கைச் சூழல் நிலவும் இக்கால கட்டத்தில் மன அழுத்தம்

குறைந்து புத்துணர்ச்சியும், மனமகிழ்வையும், நேர்மறையான எண்ணங்களையும் ஏற்படுத்தும் தளங்களாக விளங்குகின்றன. மேலும் பல்வேறு வகையான தாவரங்கள், மலர்கள் பிற தோட்டக்கலைப் பயிர்களை நேரடியாக அறிந்துகொள்ளும் வகையில் மாணவர்களுக்கு பயனுள்ள கற்றல் மற்றும் செயல்விளக்கக் களங்களாகவும் விளங்கி வருகின்றன.

**அட்டவணை 3.12: மாநிலத்தில் உள்ள அரசு தோட்டக்கலைப் பூங்காக்கள்**

| வ. எண் | மாவட்டம் | பூங்காக்களின் பெயர் | அமைக்கப் பட்ட வருடம் | பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|---|
| 1 | சென்னை | தோட்டக்கலைப் பூங்கா, மாதவரம் | 2018 | 8.928 |
| 2 | சென்னை | செம்மொழிப் பூங்கா, சென்னை | 2010 | 3.614 |
| 3 | சென்னை | தோட்டக்கலைப் பாரம்பரியப்பூங்கா, வண்ணாரப்பேட்டை | 2021 | 1.560 |
| 4 | சென்னை | கலைஞர் நூற்றாண்டு பூங்கா, தேனாம்பேட்டை | 2024 | 5.218 |
| 5 | கன்னியாகுமரி | சுற்றுச்சூழல் பூங்கா, கன்னியாகுமரி | 2018 | 6.070 |

| வ. எண் | மாவட்டம் | பூங்காக்களின் பெயர் | அமைக்கப் பட்ட வருடம் | பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|---|
| 6 | இராமநாதபுரம் | பாலை மரபணுப் பூங்கா, அச்சடிப்பிரம்பு | 2015 | 10.117 |
| 7 | சேலம் | ரோஜா தோட்டம், ஏற்காடு | 2005 | 2.000 |
| 8 | சேலம் | மரபணுப் பூங்கா, ஏற்காடு | 2012 | 9.608 |
| 9 | சேலம் | அண்ணா பூங்கா, ஏற்காடு | 1999 | 1.844 |
| 10 | சேலம் | ஏரி பூங்கா, ஏற்காடு | 2018 | 1.252 |
| 11 | சேலம் | அரசு தாவரவியல் பூங்கா – 1, ஏற்காடு | 2012 | 8.520 |
| 12 | சேலம் | அரசு தாவரவியல் பூங்கா – 2, ஏற்காடு | 2012 | 7.600 |
| 13 | தென்காசி | சுற்றுச்சூழல் பூங்கா, குற்றாலம் | 2012 | 14.890 |
| 14 | திருவண்ணாமலை | கலைஞர் நூற்றாண்டு பூங்கா திருவண்ணாமலை | 2024 | 3.640 |
| 15 | திண்டுக்கல் | ரோஜா பூங்கா மற்றும் கொய்மலர் செயல் விளக்க மையம், கொடைக்கானல் | 2012 | 4.080 |
| 16 | திண்டுக்கல் | பிரையண்ட் பூங்கா மற்றும் அண்ணா பூங்கா, கொடைக்கானல் | 1900 | 8.200 |
| 17 | திண்டுக்கல் | செட்டியார் பூங்கா, கொடைக்கானல் | 1980 | 2.020 |

| வ. எண் | மாவட்டம் | பூங்காக்களின் பெயர் | அமைக்கப் பட்ட வருடம் | பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|---|
| 18 | நீலகிரி | காட்டேரி பூங்கா, காட்டேரி | 2012 | 2.000 |
| 19 | நீலகிரி | தேயிலை பூங்கா, தொட்டபெட்டா | 2015 | 1.600 |
| 20 | நீலகிரி | சிம்ஸ் பூங்கா, குன்னூர் | 1874 | 11.340 |
| 21 | நீலகிரி | அரசு ரோஜா பூங்கா, உதகை | 1995 | 14.400 |
| 22 | நீலகிரி | அரசு தாவரவியல் பூங்கா, உதகை | 1848 | 22.000 |
| 23 | நீலகிரி | மரவியல் பூங்கா, உதகை | 2008 | 1.580 |
| 24 | நீலகிரி | ஜான் சல்லிவன் பூங்கா, கோத்தகிரி | 2024 | 4.080 |
| | | | மொத்தம் | 156.161 |

நாகப்பட்டினம் மாவட்டம் நாகூரில் நெய்தல் பூங்கா, கடலூர் மாவட்டம், வடலூரில் தோட்டக்கலைப் பூங்கா, கன்னியாகுமரி மாவட்டத்தில் முல்லைப் பூங்கா ஆகிய பூங்காக்கள் அமைக்கும் பணிகளுடன் ஏற்காடு, அரசு தாவரவியல் பூங்காவில் தாவர அலங்கார வடிவத் தோட்டம், உதகை அரசு தாவரவியல்

பூங்காவினை மேம்படுத்தும் பணிகளும் தற்போது நடைபெற்றுவருகின்றன.

### 3.4.3: மகத்துவ மையங்கள்

உயர் தொழில்நுட்ப சாகுபடிக்கான செயல்விளக்கத்திடல்கள் அமைத்தல், விவசாயிகளுக்கு உயர்தொழில்நுட்ப சாகுபடி முறைகள் குறித்து பயிற்சி வழங்குதல் மற்றும் தரமான நாற்றுகள்/நடவுப் பொருட்களை வழங்கும் நோக்கத்துடன் பயிர் சார்ந்த முறையில் ஏழு மகத்துவ மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதனுடன், மேலும் இரண்டு மகத்துவ மையங்கள் தருமபுரி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன.

**அட்டவணை 3.13: மகத்துவ மையங்கள் விபரம்**

| வ. எண் | மகத்துவ மையம் | இடம் |
|---|---|---|
| 1. | கொய் மலர்கள் | தளி, கிருஷ்ணகிரி மாவட்டம் |
| 2. | காய்கறிகள் | ரெட்டியார் சத்திரம், திண்டுக்கல் மாவட்டம். |

| வ. எண் | மகத்துவ மையம் | இடம் |
| --- | --- | --- |
| 3. | மலைக் காய்கறிகள் | நஞ்சநாடு, நீலகிரி மாவட்டம். |
| 4. | வெப்ப மண்டலப் பழப்பயிர்கள் | கஞ்சநாயக்கன்பட்டி, திருச்சி |
| 5 | பாரம்பரிய மலர்கள் | திருப்பரங்குன்றம், மதுரை மாவட்டம். |
| 6. | தேனீ வளர்ப்பு | பேச்சிப்பாறை, கன்னியாகுமரி மாவட்டம். |
| 7. | மலர்களுக்கான அறுவடைப் பின்சார் மேலாண்மை மற்றும் சிப்பமிடல் தொழில்நுட்ப மகத்துவ மையம் | தளி, கிருஷ்ணகிரி மாவட்டம் |

## 3.5: மாநில தென்னை நாற்றுப்பண்ணைகள்

விவசாயிகளின் தென்னை நாற்றுத் தேவையை நிறைவு செய்யவும், தரமான தென்னை நாற்றுகளை வழங்கவும், 23 மாநில தென்னை நாற்றுப்பண்ணைகள் மற்றும் 16 தென்னை ஒட்டு மையங்கள் தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகின்றன.

2026-27 ஆம் ஆண்டில் 13.91 இலட்சம் தென்னை நாற்றுகள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

## அட்டவணை 3.14: மாநில தென்னை நாற்றுப் பண்ணைகள்

| வ. எண் | மாவட்டம் | பண்ணை | நிறுவப்பட்ட ஆண்டு | பரப்பு (எக்டர்) |
|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | பிச்சிவாக்கம் | 1968 | 3.00 |
| 2 | திருவள்ளூர் | மாதவரம் | 1975 | 4.21 |
| 3 | கடலூர் | நெய்வேலி | 1984 | 150.00 |
| 4 | இராணிப்பேட்டை | நவ்லாக் | 1974 | 53.81 |
| 5 | திருவண்ணாமலை | வாழவச்சனூர் | 2015 | 0.97 |
| 6 | சேலம் | டேனிஷ்பேட்டை | 1977 | 9.66 |
| 7 | கிருஷ்ணகிரி | பி.ஜி.புதூர் | 1970 | 2.31 |
| 8 | கோயம்புத்தூர் | ஆழியார் நகர் | 1995 | 8.12 |
| 9 | ஈரோடு | பவானிசாகர் | 1984 | 1.92 |
| 10 | புதுக்கோட்டை | வெள்ளாளவிடுதி | 1985 | 2.00 |
| 11 | தஞ்சாவூர் | பட்டுக்கோட்டை | 1946 | 3.39 |
| 12 | மயிலாடுதுறை | மல்லியம் | 1962 | 1.51 |
| 13 | தேனி | வைகை அணை | 1964 | 6.72 |
| 14 | இராமநாதபுரம் | தேவிப்பட்டினம் | 1961 | 2.63 |
| 15 | இராமநாதபுரம் | உச்சிப்புளி | 1960 | 5.31 |
| 16 | சிவகங்கை | எஸ்.வி.மங்களம் | 2004 | 0.55 |
| 17 | விருதுநகர் | தேவதானம் | 1957 | 2.25 |
| 18 | தென்காசி | செங்கோட்டை | 1958 | 0.64 |
| 19 | தென்காசி | வடகரை | 1964 | 1.74 |

| வ. எண் | மாவட்டம் | பண்ணை | நிறுவப்பட்ட ஆண்டு | பரப்பு (எக்டர்) |
|---|---|---|---|---|
| 20 | தூத்துக்குடி | கிள்ளிகுளம் | 1962 | 4.72 |
| 21 | கன்னியாகுமரி | புத்தளம் | 1966 | 1.96 |
| 22 | திருவாரூர் | வடுவூர் | 2019 | 6.07 |
| 23 | திருச்சி | தொரக்குடி | 2024 | 5.00 |
| | மொத்தம் | | | 278.49 |

### 3.5.1: தென்னை ஒட்டுண்ணி வளர்ப்பு மையங்கள்:

தமிழகத்தில் தருமபுரி, ஈரோடு, சேலம், கிருஷ்ணகிரி மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் செயல்படும் தென்னை ஒட்டுண்ணி வளர்ப்பு மையங்களில் தென்னை மரங்களை தாக்கும் கருந்தலைப்புழு மற்றும் ரூகோஸ் சுருள் வெள்ளை ஈ ஆகியவற்றைக் கட்டுப்படுத்த முறையே பிரக்கோனிட் மற்றும் கிரைசோபெர்லா ஒட்டுண்ணிகள் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

நடப்பு ஆண்டில் இவ்வொட்டுண்ணிகளின் உற்பத்தி தற்போதுள்ள மையங்களுடன் கூடுதலாக தஞ்சாவூர், திருப்பத்தூர் ஆகிய மாவட்டங்களிலும் தொடங்கப்படும்.

2026-27 ஆம் ஆண்டில் கோயம்புத்தூர், தேனி, விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் புதிய *கிரைசோபெர்லா* உற்பத்தி மையங்களும், கன்னியாகுமரி மாவட்டத்தில் *ஜசாரியா ஃபுமோசோரோசியா* உற்பத்தி மையமும் அமைக்கப்படும்.

3.6 : **தோட்டக்கலைப் பயிற்சி மையங்கள்** :

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை 4 பயிற்சி மையங்களை நடத்தி வருகிறது. தமிழ்நாடு தோட்டக்கலை மேலாண்மை நிலையம், சென்னை மாதவரத்திலும், தோட்டக்கலைப் பயிற்சி மையம், புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலையிலும், உழவர் பயிற்சி மையம், நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்திலும், தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம், கிருஷ்ணகிரி மாவட்டம் தளியிலும் இயங்கி வருகின்றன. விவசாயிகளுக்கு தோட்டக்கலைப் பயிர்கள்

சாகுபடியில் உயர் தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி வழங்குவதே மேற்கூறிய பயிற்சி நிலையங்களின் நோக்கமாகும்.

### 3.6.1: ஈராண்டு தோட்டக்கலைப் பட்டயப் படிப்பு (Two Years Diploma in Horticulture)

தோட்டக்கலைத்துறையின்கீழ் செயல்படும், சென்னை மாதாவரத்தில் உள்ள தமிழ்நாடு தோட்டக்கலை மேலாண்மை நிலையம், கிருஷ்ணகிரி மாவட்டம் தளியில் உள்ள தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் மற்றும் திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார் சத்திரத்தில் உள்ள காய்கறி மகத்துவ மையம் ஆகிய பயிற்சி நிலையங்களில் ஆண்டு தோறும் தலா 50 மாணவர்களுக்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் அங்கீகாரம் பெற்று, ஈராண்டு பட்டயப்படிப்பு பயிற்றுவிக்கப்படுகிறது.

## 3.7 : அலுவலர்கள், பணியாளர்கள் விபரம்

தோட்டக்கலை - மலைப்பயிர்கள் துறையின் கீழ் வட்டார, மாவட்ட மற்றும் மாநில அளவில் கீழ்க்கண்ட அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

### அட்டவணை 3.15: அலுவலர்கள், பணியாளர்கள்

| வ. எண் | பணியிட விபரம் | மொத்த பணியிடம் |
|---|---|---|
| **அ.** | **தொழில்நுட்ப அலுவலர்கள்** | |
| 1. | தோட்டக்கலை கூடுதல் இயக்குநர் | 2 |
| 2. | தோட்டக்கலை இணை இயக்குநர் | 6 |
| 3. | தோட்டக்கலை துணை இயக்குநர் | 44 |
| 4. | தோட்டக்கலை உதவி இயக்குநர் | 397 |
| 5. | தோட்டக்கலை அலுவலர் | 443 |
| 6. | துணை தோட்டக்கலை அலுவலர் | 123 |
| 7. | உதவி தோட்டக்கலை அலுவலர் | 1,674 |
| 8. | உதவி விதை அலுவலர் | 5 |
| | **மொத்தம் (அ)** | **2,694** |
| **ஆ.** | **அமைச்சுப் பணியாளர்கள்** | |
| 9. | இதர அலுவலர் பணியிடங்கள் விவரம் (துணை இயக்குநர் (நிர்வாகம்), முதன்மை கணக்கு அலுவலர், ஆட்சி அலுவலர், கணக்கு அலுவலர், உதவிக் கணக்கு அலுவலர், கண்காணிப்பாளர், உதவியாளர், இளநிலை உதவியாளர் மற்றும் இதர பணியிடங்கள் | 1,345 |
| | **மொத்தம் (அ + ஆ)** | **4,039** |

## 4. வேளாண்மைப் பொறியியல் துறை

வேளாண்மைப் பொறியியல் துறை 1981 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு, தனித் துறையாக செயல்பட்டு வருகிறது. மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு, நீர் மேலாண்மை, வேளாண் இயந்திரமயமாக்குதல், வேளாண்மையில் சூரிய ஆற்றல் பயன்பாடு, வேளாண் விளைபொருட்களை மதிப்புக் கூட்டுதல், கட்டமைப்புப் பணிகள் ஆகிய வேளாண் பொறியியல் தொடர்பான பல்வேறு செயல்பாடுகளை விவசாயிகளின் நலனுக்காக மேற்கொள்ள, வேளாண்மைப் பொறியியல் துறை பல்வேறு திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தி வருகிறது.

### 4.1. மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு

தமிழ்நாட்டில் மழைநீர் சேகரிப்புத் திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளித்து,

வேளாண்மைப் பொறியியல் துறையால் நிலவளம், நீர்வளம், நீர் மேலாண்மை ஆகியவற்றை மேம்படுத்திட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**4.1.1. பண்ணைக்குட்டைகள் உருவாக்குதலும் தூர்வாருதலும்**

மழைக்காலங்களில் வீணாகும் மழை நீரினை முறையாக சேமித்துப் பயன்படுத்துவதற்காக 500 விவசாயிகள் பயனடையும் வகையில், தனிநபர் விவசாயிகளின் நிலங்களில் 100 சதவீத மானியத்தில் புதிய பண்ணைக் குட்டைகள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் உருவாக்கப்பட உள்ளன. விவசாயிகளின் நிலங்களில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள பண்ணைக் குட்டைகளின் மழைநீர் சேமிப்புத்திறனை அதிகரிப்பதற்காக வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்களைக் கொண்டு, தூர்வாரும் பணிகளுக்கு ஒரு பண்ணைக்குட்டைக்கு 75

சதவீத மானியம் என்ற அடிப்படையில் அதிகபட்சமாக ரூ.15,000/-மானியத்தில் 500 பண்ணைக் குட்டைகளைத் தூர்வாரும் பணிகள் ரூ.75 இலட்சம் செலவில் மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

### 4.1.2. அண்ணல் அம்பேத்கர் வேளாண் உதவித் திட்டம்

நீர்ப்பாசன வசதியில்லாத 300 தனிநபர் ஆதிதிராவிடர், பழங்குடியினர் விவசாயிகளின் நிலங்களில், நீர்ப்பாசன ஆதாரமாக ஆழ்துளை அல்லது குழாய்க் கிணறுகள் 100 சதவீத மானியத்தில், அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு ரூ.8 இலட்சம் என்ற அடிப்படையில், மின்மோட்டார் அல்லது சூரிய சக்தி பம்புசெட்டுடன் அமைக்கும் திட்டம் ரூ.24 கோடி மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

### 4.1.3. ஆயிரம் ஏக்கர் பாசனப் பரப்பை உருவாக்கிட நீர் ஆதாரங்களை ஏற்படுத்துதல்

நிலத்தடி நீர் பாதுகாக்கப்பட்ட குறுவட்டங்களில், நீர்ப்பாசன வசதியில்லாத இதரப் பிரிவைச் சார்ந்த தனிநபர் விவசாயிகளின் நிலங்களில், ஆழ்துளை அல்லது குழாய்க் கிணறுகள் அமைக்க சிறு, குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கு 60 சதவீத மானியமாக அதிகபட்சம் ரூ.1.20 இலட்சமும், இதர விவசாயிகளுக்கு 50 சதவீத மானியமாக அதிகபட்சம் ரூ.1 இலட்சமும் பின்னேற்பு மானியமாக வழங்கப்படும். மேலும், இத்திட்டம் விவசாயிகளின் சொந்த விருப்பத்தின் பேரில் நடைமுறையில் உள்ள சூரிய சக்தி பம்புசெட்டுகள் திட்டம் மற்றும் நுண்ணீர்ப் பாசனத் திட்டத்துடன் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படும். மேலும், ஆழ்துளை அல்லது குழாய்க்கிணறு அமைத்த பின்பு விவசாயி நீர் இறைக்கும் அமைப்பினை தனது சொந்த விருப்பத்தின் பேரில் மின்

இணைப்பு வாயிலாகவோ அல்லது ஆயில் என்ஜினைக் கொண்டோ அமைத்துக் கொள்ளலாம். இத்திட்டம் 500 தனிநபர் விவசாயிகள் பயன்பெறும் வகையில் ரூ.6 கோடி மாநில நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

### 4.1.4. சீமைக் கருவேல மரங்களைஅகற்றும் திட்டம்

தமிழ்நாட்டின் பெரும்பாலான மாவட்டங்களில் அடர்ந்து படர்ந்துள்ள சீமைக் கருவேல மரங்கள், வேளாண் உற்பத்திக்கும் சுற்றுச்சூழல் சமநிலைக்கும் பெரும் சவாலாக உருவெடுத்துள்ளன. இச்சீமைக் கருவேல மரங்கள் காட்டுப்பன்றிகளின் புகலிடமாக இருப்பதால், அவை அருகிலுள்ள விளைநிலங்களுக்குள் புகுந்து பயிர்களைத் தொடர்ந்து சேதப்படுத்தி இழப்பை ஏற்படுத்துகின்றன. இதனைக் கருத்தில் கொண்டு, நடப்பாண்டில் அரசு மற்றும் தனியார் நிலங்களில் உள்ள சீமைக் கருவேல மரங்களை

அகற்றி, காட்டுப்பன்றிகளின் ஊடுருவலைக் கட்டுப்படுத்தி, மண்வளம் மற்றும் சுற்றுச்சூழலை பாதுகாத்திடும் வகையில் இத்திட்டம் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மூலமாக ரூ.4 கோடி மாநில நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

### 4.1.5. சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மேற்கு மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளின் அருகே உள்ள கிராமங்களின் நீர்பிடிப்புப் பகுதிகளில் மண் மற்றும் நீர் வளங்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடன், ஓடை பராமரிப்பு, நிலச்சரிவுத் தடுப்பு போன்ற நில மேம்பாட்டுப்பணிகளும், மக்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்தும் பணிகளும் செயல்படுத்தப்படுகின்றன.

நீலகிரி, கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், திண்டுக்கல், தேனி, மதுரை, விருதுநகர், திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 11 மாவட்டங்களின் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி கிராமங்கள் மற்றும் தருமபுரி, கிருஷ்ணகிரி, கள்ளக்குறிச்சி, நாமக்கல், திண்டுக்கல், ஈரோடு, சேலம், திருப்பத்தூர், திருவண்ணாமலை, திருச்சிராப்பள்ளி மற்றும் வேலூர் ஆகிய 11 மாவட்டங்களின் கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதி கிராமங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் மண் மற்றும் நீர்வளப்பாதுகாப்புப் பணிகள் பழங்குடியினர் விவசாயிகளுக்கு 90 சதவீதம், ஆதிதிராவிடர் விவசாயிகளுக்கு 80 சதவீதம், இதர விவசாயிகளுக்கு 50 சதவீதம் மற்றும் சமுதாய

நிலங்களுக்கு 100 சதவீதம் என்ற மானிய அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன.

### 4.1.6.அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம்

பல்நோக்கு நீர்த்தேக்கங்களில் வண்டல் மண் படிவதைத் தடுத்து அணைகளின் கொள்ளளவு குறையாமல் இருப்பதற்காக வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் மண் வளப்பாதுகாப்பு மற்றும் நீர்வடிப்பகுதி மேலாண்மைப் பணிகளான தாவரப் போர்வையுடன் கூடிய வயல் வரப்புகள், கம்பிவலைத் தடுப்பணைகள், தடுப்பணைகள், வண்டல்மண் படிவு கண்காணிப்பு நிலையங்கள், ஓடையோர கம்பிவலை தடுப்புச் சுவர்கள் போன்றவை உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ், நடப்பாண்டில், ரூ.18.22 கோடி மதிப்பீட்டில் 478 ஓடை பராமரிப்புப் பணிகளும், 1,420 எக்டர்

பரப்பளவில் மண்வளப் பாதுகாப்புப் பணிகளும் மேற்கொள்ளப்படும்.

### 4.1.7. கடற்கரையோர தோட்டக்கலைத் திட்டம்

தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில் உவர்நீருக்கு மேலே இருக்கும் நன்னீரினை பாசனத்திற்காக விவசாய நிலங்களில் பயன்படுத்த நன்னீர் சேமிப்புக் கிணறுகள் அமைத்திடும் பொருட்டு, ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக ரூ.1.5 இலட்சம் அல்லது மொத்த மதிப்பீட்டுச் செலவில் 75 சதவீதம் இவற்றில் எது குறைவோ அத்தொகை பின்னேற்பு மானியமாக வழங்கப்படும். நடப்பாண்டில், முன்னோடி திட்டமாக, 10 நன்னீர் சேமிப்புக் கிணறுகள் ரூ.15 இலட்சம் மானியத்தில் அமைக்கப்படும். இத்திட்டத்தில், நன்னீர் சேமிப்புக் கிணறுகள் அமைக்கப்படுவதோடு, 10 எக்டர் பரப்பில் தோட்டக்கலைப் பயிர்களான மிளகாய் மற்றும் கொத்தமல்லி சாகுபடியும் மேற்கொள்ளப்படும்.

இத்திட்டம் சூரிய சக்தி பம்புசெட்டுகள் அமைத்தல் மற்றும் நுண்ணீர்ப்பாசனத் திட்டங்களுடன் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படும். இதற்கென, மொத்தமாக ரூ.49.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.1.8. வேளாண்மைப் பொறியியல் துறைக்குச் சொந்தமான இயந்திரங்களைப் பயன்படுத்தி மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகளை அமைத்தலும் பராமரித்தலும்

மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகளில் புதர் அகற்றும் பணிகள், தூர்வாரும் பணிகள் தவிர தேவையான பழுதுபார்ப்புப் பணிகளும் சாத்தியமான இடங்களில் புதிய மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளும் உருவாக்கப்படவுள்ளன. நடப்பாண்டில், வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்களைக் கொண்டு ரூ.2 கோடி செலவில் 300 மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகள் மேம்படுத்தப்படுவதுடன், 50 நீர்

சேகரிப்புக் கட்டமைப்புகள் புதியதாக அமைக்கப்படும்.

### 4.2. நீர் மேலாண்மை

சிக்கனமான நீர்ப்பாசனத்திற்கு நீர் மேலாண்மை அவசியமாகும். நீர் மேலாண்மையினைக் கடைப்பிடிப்பதன் வாயிலாக விவசாயிகள் குறைவான நீரினைக் கொண்டு அதிக பரப்பளவில் பயிர் சாகுபடி செய்து, வருமானத்தினை அதிகரிக்க இயலும்.

#### 4.2.1. விவசாயிகளுக்கு மானியத்தில் மின்மோட்டார் பம்புசெட்டுகள் வழங்குதல்

புதிய மின்மோட்டார் வாங்க இயலாத விவசாயிகள், மானியத்தில் நான்கு நட்சத்திர தரச்சான்று பெற்ற புதிய மின் மோட்டார் பம்புசெட்டு வாங்கவும், திறன் குறைந்த பழைய மின் மோட்டார் பம்புசெட்டுகள் பயன்படுத்தும் விவசாயிகள், அதனை மாற்றி அதிக திறனுடைய

நான்கு நட்சத்திர தரச்சான்று பெற்ற புதிய மின்மோட்டார் பம்புசெட்டுகள் வாங்குவதற்கும், ஒன்றிய மாநில அரசு நிதி பங்களிப்புடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ஒரு விவசாயிக்கு ஒரு மின்மோட்டார் பம்புசெட்டு வாங்கிட ஆகும் மொத்த தொகையில் 50 சதவீதம் அல்லது ரூ.15,000/- இவற்றில் எது குறைவோ அத்தொகை பின்னேற்பு மானியமாக விவசாயியின் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படும். நடப்பாண்டில், 1,000 விவசாயிகளுக்கு ரூ.1.5 கோடி நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

### 4.2.2. டெல்டா மாவட்டங்களில் ‘சி‘ மற்றும் ‘டி‘ பிரிவு வாய்க்கால்களைத் தூர் வாருதல்

டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர், திருச்சிராப்பள்ளி மற்றும் அரியலூரில் உள்ள காவிரி, வெண்ணாறு, வெள்ளாறு

மற்றும் கல்லணைக் கால்வாய் வடிநிலப் பகுதிகளின் 'சி' மற்றும் 'டி' பிரிவு வாய்க்கால்களில் பாசன நீர் கடைமடை விவசாயிகளின் நிலங்களுக்குத் தங்குதடையின்றி செல்வதற்கு, நடப்பாண்டில், ரூ.10 கோடி நிதி ஒதுக்கீட்டில் 2,535 கிலோமீட்டர் நீளத்திற்கு தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**4.3.வேளாண் இயந்திரமயமாக்குதல்**

விதைப்பு முதல் அறுவடை வரை அனைத்து வேளாண் பணிகளையும் துரிதமாகவும், திறம்படவும் மேற்கொள்ள வேளாண் இயந்திரங்களின் பயன்பாடு அவசியமாகியுள்ளது. எனவே, வேளாண் இயந்திரமயமாக்குதலுக்கான துணை இயக்கத் திட்டம், ஒன்றிய அரசின் 60 சதவீத நிதிப் பங்களிப்புடனும், மாநில அரசின் 40 சதவீத நிதிப் பங்களிப்புடனும் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் கீழ்க்கண்ட செயல்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

### 4.3.1. தனிநபர் விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் மானியத்தில் வழங்குதல்

வேளாண் இயந்திரமயமாக்குதலுக்கான துணை இயக்கத் திட்டத்தில் வேளாண் பணிகளுக்கு ஏற்ற வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளான டிராக்டர், சுழற்கலப்பை, கொத்துக்கலப்பை, சுழலும் சட்டிப்பலுகு, வரப்பு செதுக்கி சேறு பூசும் கருவி, பவர்டில்லர், நெல்நாற்று நடவு செய்யும் இயந்திரம், விதை மற்றும் உரமிடும் கருவி, விசைக்களையெடுப்பான், டிரோன், விசைத்தெளிப்பான், புதர் அகற்றும் கருவி, தட்டை வெட்டும் கருவி, நெல் அறுவடை இயந்திரம், பல்வகைப் பயிர் கதிரடிக்கும் இயந்திரம், தென்னை ஓலை துகளாக்கும் கருவி, வைக்கோல் கட்டு கட்டும் இயந்திரம், குழி தோண்டும் கருவி, தேயிலை பறிக்கும் கருவி, நிலப்போர்வை அமைக்கும் கருவி, மஞ்சள்

தோண்டும் கருவி, நடமாடும் நெல் உலர்த்தும் இயந்திரம் போன்ற பல்வேறு வேளாண் இயந்திரங்கள், கருவிகள் மற்றும் விவசாயிகள் விளைவித்த விளைபொருட்களை பண்ணை அளவிலேயே உலரவைத்து மதிப்புக்கூட்டிட ஏதுவாக சூரியக்கூடார உலர்த்திகள், மதிப்புக்கூட்டும் இயந்திரங்கள் மற்றும் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் உருவாக்கப்பட்ட புதுமையான வேளாண் இயந்திரங்களான எளிதில் நகர்த்தி எடுத்து செல்லக்கூடிய கால்நடைக் கொட்டகை, மோட்டார் மூலம் இயங்கும் எளிதில் நகர்த்தக்கூடிய தானியம் சேகரிக்கும் இயந்திரம், என்ஜின் மூலம் இயக்கக்கூடிய கரும்புக் கட்டுகளை லாரியில் ஏற்றும் இயந்திரம் போன்றவற்றை தனிநபர் விவசாயிகள் வாங்குவதற்கு மானியம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தில், சிறு, குறு, ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண் விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் விலையில் 50 சதவீதம், இதர விவசாயிகளுக்கு 40 சதவீதம் அல்லது அரசால் நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச மானியத் தொகை, இவற்றில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படுகிறது. மேலும், ஆதிதிராவிடர், பழங்குடியினர் பிரிவைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள், கருவிகள் வாங்கிட நடைமுறையில் வழங்கப்படும் 50 சதவீதம் மானியத்துடன் மாநில நிதியிலிருந்து கூடுதலாக 20 சதவீதம் சேர்த்து மொத்தமாக 70 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. இதற்கென தேவைப்படும் ரூ.21.21 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், இதரப்பிரிவைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகளுக்கு நெல் நாற்று நடவு செய்யும் இயந்திரம் மற்றும் விசைக்களையெடுக்கும்

கருவி ஆகியவற்றுடன் நடப்பாண்டில் புதிதாக சேர்க்கப்பட்ட தட்டை வெட்டும் கருவி வாங்குவதற்கு நடைமுறையில் வழங்கப்படும் 50 சதவீதம் மானியத்துடன் மாநில நிதியிலிருந்து கூடுதலாக 10 சதவீதம் மானியம் சேர்த்து, மொத்தமாக 60 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. இதற்கென ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நடப்பாண்டில், 24,000 விவசாயிகள் பயன்பெறும் வகையில், வேளாண் இயந்திரங்கள், கருவிகள், சூரிய கூடார உலர்த்திகள், மதிப்புக்கூட்டும் இயந்திரங்கள் ஆகியவற்றை விவசாயிகள் மானியத்தில் வாங்கிட ரூ.227.20 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.3.2. வன உரிமைச் சட்டத்தின் (FRA) கீழ் பட்டா பெற்றுள்ள மலைவாழ் விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் மானியத்தில் வழங்குதல்

வன உரிமைச் சட்டத்தின்கீழ் நில உடைமை பெற்றுள்ள பழங்குடியினர் விவசாயிகள், சிறு மற்றும் குறு விவசாயிகளாக இருப்பதால் சிறிய வகை இயந்திரங்கள் மற்றும் கருவிகளான பவர்டில்லர்கள், விசைக்களையெடுப்பான்கள், புதர் அகற்றும் கருவிகள் 90 சதவீத மானியத்தில் ரூ.1 கோடி நிதி ஒதுக்கீட்டில் வேளாண் இயந்திரமயமாக்குதலுக்கான துணை இயக்கத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும்.

### 4.3.3. வேளாண் இயந்திர வாடகை மையங்கள் அமைத்தல்

பண்ணை ஆற்றல் (Farm Power) குறைவாக உள்ள மாவட்டங்களில் வேளாண்

இயந்திரமயமாக்குதலைப் பரவலாக்க, கிராம அளவிலான வேளாண் இயந்திர வாடகை மையங்கள், மகளிர் சுய உதவிக் குழுக்கள் (DAY-NRLM), உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள், ஊராட்சிகள் மற்றும் கூட்டுறவு அமைப்புகள் பயன்பெறும் வகையில் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும். ஒவ்வொரு மையத்திற்கும் 80 சதவீத மானியமாக அதிகபட்சம் ரூ.8 இலட்சம் வழங்கப்படும். மேலும், "சர்வதேச பெண் விவசாயிகள் ஆண்டு 2026"-ஐ முன்னிட்டு மொத்த ஒதுக்கீட்டில், 30 சதவீதம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, வேளாண் இயந்திரமயமாக்கலை ஊக்குவித்து, வேளாண் விளைபொருட்கள் மதிப்புக் கூட்டுவது போன்ற முன்னெடுப்புகளின் வாயிலாக, வேளாண் துறையில் பெண்களின் பங்கு வலுப்படுத்தப்படும்.

அதேபோல, கிராமப்புர இளைஞர்கள், தொழில் முனைவோர், விவசாயிகள், மகளிர் சுய உதவிக் குழுக்கள் (DAY-NRLM), உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள், ஊராட்சிகள் மற்றும் கூட்டுறவு அமைப்புகள் பயன்பெறும் வகையில் வட்டார அளவிலான வேளாண் இயந்திர வாடகை மையங்கள் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும். இதற்கென ஒவ்வொரு மையத்திற்கும் 40 சதவீத மானியமாக அதிகபட்சம் ரூ.10 இலட்சம் வழங்கப்படும்.

நடப்பாண்டில், 50 கிராம அளவிலான வேளாண் இயந்திர வாடகை மையங்களும், 5 வட்டார அளவிலான வேளாண் இயந்திர வாடகை மையங்களும் ரூ.4.50 கோடி மானியத்தில் அமைக்கப்படும்.

### 4.3.4. பயிர் சாகுபடி மற்றும் மதிப்புக் கூட்டுதலுக்கான ஒருங்கிணைந்த வேளாண் இயந்திர வாடகை வணிக மையம்

வேளாண்மையில் நிலவும் வேலையாட்கள் பற்றாக்குறை மற்றும் விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்காத நிலையை எதிர்கொள்ள, பயிர் சாகுபடி மற்றும் மதிப்புக் கூட்டுதலுக்கான வேளாண் இயந்திரங்களை வாடகை அடிப்படையில் வழங்கிட, ரூ.25 இலட்சம் மதிப்பிலான பயிர் சாகுபடி மற்றும் மதிப்புக் கூட்டுதலுக்கான 50 ஒருங்கிணைந்த வேளாண் இயந்திர வாடகை வணிக மையங்கள் ரூ.8.13 கோடி மானியத்தில் மாநில அரசு நிதியுதவியுடன் அமைக்கப்படும்.

இத்திட்டம் ஆதிதிராவிடர், பழங்குடியினர், பெண் தொழில் முனைவோர், வேளாண்மைப் பொறியியலில் பட்டயம் அல்லது பட்டப்படிப்பு பெற்ற இளைஞர்களுக்கு 75 சதவீத

மானியத்திலும், இதர தொழில் முனைவோருக்கு 50 சதவீத மானியத்திலும் செயல்படுத்தப்படும்.

### 4.3.5. வேளாண் இயந்திரங்கள் பழுது நீக்கிப் பராமரிக்கும் மையங்கள் அமைத்தல்

கிராமப்புர இளைஞர்கள் மற்றும் தொழில் முனைவோர்களின் மூலம் வேளாண் இயந்திரங்கள் மற்றும் சூரியசக்தி பம்புசெட்டுகள் பழுதுநீக்கிப் பராமரிக்கும் மையங்கள் நிறுவப்படும். இத்திட்டத்தில் வேளாண்மைப் பொறியியல் துறையின் அரசு இயந்திரக் கலப்பை பணிமனைகளில் நடத்தப்படும் வேளாண் இயந்திரங்கள் இயக்கம், பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு குறித்த பயிற்சி சான்றிதழ் பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ், நடப்பாண்டில் வேளாண் இயந்திரங்கள் பழுது நீக்கிப் பராமரிக்கும் ஒவ்வொரு மையத்திற்கும் 50 சதவீத மானியமாக அதிகபட்சம் ரூ.7.5 இலட்சம் வீதம், 15 மையங்கள்

அமைத்திட ரூ.1.12 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.3.6. பயிர் சாகுபடியில் தொடக்கம் முதல் இறுதி வரை இயந்திரமயமாக்கம்

பயிர் சாகுபடியில் அனைத்து நிலைகளிலும் இயந்திரமயமாக்கலை ஊக்குவிப்பதன் மூலம், பணிகளை உரிய காலத்தில் முடித்து, சாகுபடிச் செலவைக் குறைத்து, விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்க இயலும். இதனை செயல்படுத்தும் வகையில், மக்காச்சோளம், நிலக்கடலை, உளுந்து, தென்னை ஆகிய பயிர்களில் உழவு முதல் பயிர்க்கழிவு மேலாண்மை வரையிலான அனைத்துப் பணிகளிலும் இயந்திரமயமாக்கல் குறித்தான செயல்விளக்கங்கள், 225 ஏக்கர் பரப்பளவில் வேளாண் தொழில்நுட்ப தொழில்முனைவோர் மூலம் 100 சதவீத மானிய உதவியுடன்

ரூ.46.37 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

### 4.3.7. நவீன வேளாண் இயந்திரங்கள், கருவிகள் குறித்த மாபெரும் கண்காட்சி

விவசாயிகளிடையே பல்வேறு பயிர்கள் மற்றும் வேளாண் பணிகளுக்கு ஏற்ற நவீன மற்றும் புதுமையான வேளாண் இயந்திரங்கள், கருவிகள் மற்றும் உபகரணங்களின் பயன்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில், நடப்பாண்டில், நவீன வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் மாபெரும் கண்காட்சி தஞ்சாவூர் மாவட்டத்தில் நடத்தப்படும்.

### 4.3.8. டிராக்டர், அறுவடை இயந்திரம், பிற வேளாண் இயந்திரங்கள் மற்றும் மண் அள்ளும் இயந்திரம் இயக்குவதற்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி

கிராமப்புர இளைஞர்கள் மற்றும் விவசாயிகளுக்கு டிராக்டர், அறுவடை இயந்திரம்,

மண் அள்ளும் இயந்திரம், பவர் டில்லர், விசைக் களையெடுப்பான், நெல்நாற்று நடவு இயந்திரம் உள்ளிட்ட வேளாண் இயந்திரங்களின் இயக்கம், பழுதுநீக்கம் மற்றும் பராமரிப்பு தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படும். தரமான முறையில் பயிற்சி வழங்கிட, வேளாண்மைப் பொறியியல் துறையின் அரசு இயந்திரக் கலப்பைப் பணிமனைகளில் உள்ள ஓட்டுநர் பாவனைப் பயிற்சி சாதனங்கள் (Simulator) மூலம் பயிற்சிகள் அளிக்கப்படும். நடப்பாண்டில், 448 கிராமப்புர இளைஞர்கள் மற்றும் விவசாயிகளுக்கு ரூ.51.50 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் பயிற்சிகள் வழங்கப்படும்.

### 4.3.9. "வெற்றி வான்மகள்" திட்டம்

ஐக்கிய நாடுகள் சபை 2026 ஆம் ஆண்டை "சர்வதேச பெண் விவசாயிகள் ஆண்டு" என அறிவித்துள்ள நிலையில், பெண்களை ட்ரோன் உரிமையாளர்களாக உருவாக்குவதன் மூலம்

உரம் மற்றும் பூச்சிக்கொல்லி தெளித்தல், பயிர் கண்காணிப்பு உள்ளிட்ட வேளாண் பணிகளை எளிதாக மேற்கொள்ள வழிவகை செய்யப்படும்.

இத்திட்டத்தில், 100 மகளிர் உட்பட மொத்தம் 500 தகுதியுடைய நபர்களுக்கு, அரசு செலவில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் ட்ரோன் இயக்குபவர் பயிற்சி மற்றும் ட்ரோன் இயக்குபவர் உரிமம் (Drone Pilot Licence) வழங்கப்படும். மேலும், ரூ.2.50 கோடி நிதி ஒதுக்கீட்டில், பயிற்சி பெற்ற 50 மகளிருக்கு ட்ரோன்கள் வாங்க 50 சதவீதம், அதிகபட்சமாக ரூ.5 இலட்சம் வரை மானியம் வழங்கப்படும்.

### 4.3.10. உழவர் செயலியில் உள்ள இ-வாடகை 2.0 தளம் வாயிலாக வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை வாடகைக்கு வழங்கும் திட்டம்

வேளாண் உற்பத்தியினை அதிகரித்திட, வேளாண் இயந்திரமயமாக்குதல் சேவைகளை தமிழ்நாடு முழுவதும் வலுப்படுத்துவது

அவசியமாகிறது. வேளாண்மைப் பொறியியல் துறை, டிராக்டர், மண் தள்ளும் இயந்திரம், மண் அள்ளும் இயந்திரம், நெல் அறுவடை இயந்திரம் போன்ற வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை தேவைப்படும் விவசாயிகளுக்கு அரசு நிர்ணயித்த குறைந்த வாடகையில் வழங்குகிறது. மழையினால் நனைந்து வீணாகும் நெல்மணிகளை உலரவைத்து சேமிக்க டிராக்டரால் இயங்கக்கூடிய நடமாடும் நெல் உலர்த்தும் இயந்திரங்கள், டிராக்டருடன் மணிக்கு ரூ.500/- என்ற அரசு நிர்ணயித்த குறைந்த வாடகையில் வழங்கப்படுகின்றன, விவசாயிகள், தங்களுக்கேற்ற வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளைத் தங்கள் இருப்பிடத்திலிருந்தே முன்பதிவு செய்யவும், வாடகைத் தொகையை ஆன்லைனில் செலுத்தவும் உழவர் செயலியில் துறையால் ஏற்படுத்தப்பட்டுள்ள இ-வாடகை 2.0 மென்பொருள் வசதி பயன்படுகிறது.

வேளாண்மைப் பொறியியல் துறையில் விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்கப்படும் வேளாண் இயந்திரங்களின் எண்ணிக்கை மற்றும் வாடகை விவரங்கள் கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## அட்டவணை.4.1. வேளாண்மைப் பொறியியல் துறையில் உள்ள இயந்திரங்கள் மற்றும் வாடகை விவரம்

| வ. எண் | இயந்திரத்தின் விவரம் | எண்ணிக்கை | வாடகை விவரம் |
|---|---|---|---|
| **நில மேம்பாட்டிற்கான இயந்திரங்கள்** | | | |
| 1 | மண் தள்ளும் இயந்திரம் (Bull Dozer) | 85 | ரூ.1,230/- மணிக்கு |
| 2 | டிராக்டர் (Tractor) | 515 | ரூ. 500/- மணிக்கு |
| 3 | சிறு டிராக்டர் (Mini Tractor) | 6 | ரூ.460/- மணிக்கு |
| 4 | டிராக்டரால் இயங்கக்கூடிய நடமாடும் நெல் உலர்த்தும் இயந்திரங்கள் (Tractor Operated Paddy Mobile dryer) | 6 | ரூ. 500/- மணிக்கு டிராக்டருடன் |

| வ. எண் | இயந்திரத்தின் விவரம் | எண்ணிக்கை | வாடகை விவரம் |
|---|---|---|---|
| 5 | டிராக்டர்களுக்கான இணைப்பு கருவிகள் (Tractor operated implements) | 3,130 | ரூ. 500/- மணிக்கு டிராக்டருடன் |
| 6 | சக்கர வகை நெல் அறுவடை இயந்திரம் (Paddy Combine Harvester – Wheel Type) | 19 | ரூ.1,160/- மணிக்கு |
| 7 | டிராக் வகை நெல் அறுவடை இயந்திரம் (Paddy Combine Harvester – Track Type) | 45 | ரூ.1,880/- மணிக்கு |
| 8 | சக்கர வகை மண் அள்ளும் இயந்திரம் (Backhoe with Front end loader) | 70 | ரூ.890/- மணிக்கு |
| 9 | சக்கர வகை சிறிய மண் அள்ளும் இயந்திரம் ( Mini Backhoe with Front end loader) | 10 | ரூ.650/- மணிக்கு |
| 10 | டிராக் வகை மண் அள்ளும் இயந்திரம் (Crawler Excavator) | 10 | ரூ.1,910/- மணிக்கு |
| 11 | கரும்பு அறுவடை செய்யும் இயந்திரம் மற்றும் இன்ஃபீல்டர்கள் (Sugarcane Harvester with infielders) | 6 | ரூ.5,120/- மணிக்கு |

| வ. எண் | இயந்திரத்தின் விவரம் | எண்ணிக்கை | வாடகை விவரம் |
|---|---|---|---|
| 12 | வாகனத்துடன் இயங்கக்கூடிய தேங்காய் பறிக்கும் இயந்திரம் (Truck Operated Coconut Hoist) | 20 | ரூ.450/- மணிக்கு |
| 13 | கனரக மரம் அறுக்கும் கருவிகள் (Heavy Duty Chain Saws) | 805 | ரூ.85/- மணிக்கு (எரிபொருள் மற்றும் ஆட்கூலி செலவு நீங்கலாக) |
| 14 | டிராக்டரால் இயங்கக்கூடிய நீர் இறைக்கும் பம்புகள் (Tractor Operated Pumpsets) | 33 | ரூ.500/- மணிக்கு டிராக்டருடன் |
| **சிறுபாசனத்திற்கான இயந்திரங்கள்** | | | |
| 15 | சுழல் விசைத்துளைக் கருவிகள் (Rotary Drills) | 23 | மீட்டர் ஒன்றிற்கு ரூ.130/- |
| 16 | பெர்குஷன் துளைக் கருவி (Percussion Drill) | 1 | நாள் ஒன்றிற்கு ரூ.300/- |
| 17 | சிறு விசைத்துளைக் கருவிகள் (Mini Drills) | 10 | மீட்டர் ஒன்றிற்கு ரூ.70/- |
| 18 | கைத்துளைக் கருவிகள் (Hand Boring Sets) | 9 | மீட்டர் ஒன்றிற்கு ரூ.30/- |

| வ. எண் | இயந்திரத்தின் விவரம் | எண்ணிக்கை | வாடகை விவரம் |
|---|---|---|---|
| 19 | பாறை வெடிக் கருவி (Rock Blasting Unit) | 1 | வெடிப்பு ஒன்றிற்கு ரூ.250/- |
| 20 | நிலத்தடி நீர் ஆய்வுக் கருவிகள் (Resistivity Meters) | 23 | ஆய்வு ஒன்றிற்கு ரூ.500/- |
| 21 | மின்னியல் ஆய்வுக் கருவிகள் (Electrical Loggers) | 2 | குழாய்க் கிணறு ஒன்றிற்கு ரூ.1,000/- |

- வரிசை எண். 15 முதல் 21 வரையிலான இயந்திரங்களுக்குத் தேவையான எரிபொருள் (டீசல்), வேலையாட்கள், குழாய்கள், கூழாங்கற்கள் மற்றும் பொருட்களை எடுத்துச்செல்வதற்கான வாகனச் செலவு ஆகியவை சம்பந்தப்பட்ட விவசாயிகளைச் சார்ந்தது.
- நடமாடும் நெல் உலர்த்தும் இயந்திரத்தின் பர்னருக்குத் தேவையான எரிபொருள் செலவு மற்றும் கூடுதல் வேலையாட்களுக்கான

செலவு ஆகியன இவ்வாகனத்தை வாடகைக்கு எடுத்துச் சென்று பயன்படுத்துகின்ற சம்பந்தப்பட்ட விவசாயிகள் அல்லது அரசு நிறுவனங்களைச் சார்ந்தது.

### அட்டவணை.4.2. மாவட்ட வாரியாக விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்கப்படும் வேளாண் இயந்திரங்களின் விவரங்கள்

| வரிசை எண் | மாவட்டம் | மண் தள்ளும் இயந்திரம் | டிராக்டர் | டிராக்டரால் இயங்கக்கூடிய நடமாடும் நெல் உலர்த்தும் இயந்திரம் | நெல் அறுவடை இயந்திரம் | டிராக் வகை மண் அள்ளும் இயந்திரம் | சக்கர வகை மண் அள்ளும் இயந்திரம் | கரும்பு அறுவடை செய்யும் இயந்திரம் மற்றும் இன்ஃபீல்டர்கள் | வாகனத்துடன் இயங்கக்கூடிய தேங்காய் பறிக்கும் இயந்திரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 1 | 5 | | 1 | | 1 | | |
| 2 | செங்கல்பட்டு | 3 | 9 | | 3 | | 2 | | |
| 3 | திருவள்ளூர் | 3 | 14 | 1 | 1 | | 2 | 1 | |
| 4 | கடலூர் | 4 | 59 | 1 | 5 | 1 | 3 | 1 | 1 |
| 5 | விழுப்புரம் | 3 | 13 | | | 1 | 2 | 1 | |

| வரிசை எண் | மாவட்டம் | மண் தள்ளும் இயந்திரம் | டிராக்டர் | டிராக்டரால் இயங்கக்கூடிய நடமாடும் நெல் உலர்த்தும் இயந்திரம் | நெல் அறுவடை இயந்திரம் | டிராக் வகை மண் அள்ளும் இயந்திரம் | சக்கர வகை மண் அள்ளும் இயந்திரம் | கரும்பு அறுவடை செய்யும் இயந்திரம் மற்றும் இன்ஃபீல்டர்கள் | வாகனத்துடன் இயங்கக்கூடிய தேங்காய் பறிக்கும் இயந்திரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | கள்ளக்குறிச்சி | 2 | 10 | | | | 2 | 1 | |
| 7 | வேலூர் | 1 | 7 | | | 1 | 1 | | |
| 8 | இராணிப்பேட்டை | 1 | 7 | | | | 1 | | |
| 9 | திருப்பத்தூர் | 1 | 6 | | | | 1 | | 1 |
| 10 | திருவண்ணா-மலை | 2 | 18 | | 2 | | 2 | 1 | |
| 11 | சேலம் | 5 | 20 | | | 1 | 3 | | 1 |
| 12 | நாமக்கல் | 3 | 15 | | | 1 | 2 | | |
| 13 | தருமபுரி | 2 | 11 | | | | 2 | | 1 |
| 14 | கிருஷ்ணகிரி | 2 | 10 | | | | 2 | | 1 |
| 15 | கோயம்புத்தூர் | 3 | 12 | | | 1 | 2 | | 2 |
| 16 | ஈரோடு | 3 | 16 | | 2 | | 2 | | 2 |
| 17 | திருப்பூர் | 4 | 14 | | | | 3 | | 2 |
| 18 | திருச்சிராப்பள்ளி | 3 | 16 | | 2 | 1 | 3 | | |

| வரிசை எண் | மாவட்டம் | மண் தள்ளும் இயந்திரம் | டிராக்டர் | டிராக்டரால் இயங்கக்கூடிய நடமாடும் நெல் உலர்த்தும் இயந்திரம் | நெல் அறுவடை இயந்திரம் | டிராக் வகை மண் அள்ளும் இயந்திரம் | சக்கர வகை மண் அள்ளும் இயந்திரம் | கரும்பு அறுவடை செய்யும் இயந்திரம் மற்றும் இன்ஃபீல்டர்கள் | வாகனத்துடன் இயங்கக்கூடிய தேங்காய் பறிக்கும் இயந்திரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 19 | அரியலூர் | 2 | 6 | | 3 | | 2 | | |
| 20 | பெரம்பலூர் | 1 | 4 | | | | 1 | 1 | |
| 21 | கரூர் | 2 | 8 | | | | 2 | | |
| 22 | புதுக்கோட்டை | 2 | 16 | | | | 2 | | 2 |
| 23 | தஞ்சாவூர் | 3 | 46 | 1 | 7 | | 1 | | |
| 24 | திருவாரூர் | 2 | 38 | 1 | 12 | | | | |
| 25 | நாகப்பட்டினம் | 1 | 19 | 1 | 7 | | | | |
| 26 | மயிலாடுதுறை | 1 | 18 | 1 | 7 | | | | |
| 27 | மதுரை | 4 | 13 | | 3 | 1 | 2 | | 1 |
| 28 | திண்டுக்கல் | 3 | 13 | | | | 2 | | 2 |
| 29 | தேனி | 3 | 8 | | 1 | | 2 | | 1 |
| 30 | விருதுநகர் | 2 | 11 | | | 1 | 2 | | 1 |
| 31 | ராமநாதபுரம் | 3 | 11 | | 1 | | 2 | | |
| 32 | சிவகங்கை | 2 | 12 | | 1 | | 20 | | |
| 33 | திருநெல்வேலி | 2 | 10 | | 3 | 1 | 2 | | 1 |

| வரிசை எண் | மாவட்டம் | மண்தள்ளும் இயந்திரம் | டிராக்டர் | டிராக்டரால் இயங்கக்கூடிய நடமாடும் நெல் உலர்த்தும் இயந்திரம் | நெல் அறுவடை இயந்திரம் | டிராக் வகை மண் அள்ளும் இயந்திரம் | சக்கர வகை மண் அள்ளும் இயந்திரம் | கரும்பு அறுவடை செய்யும் இயந்திரம் மற்றும் இன்ஃபீல்டர்கள் | வாகனத்துடன் இயங்கக்கூடிய தேங்காய் பறிக்கும் இயந்திரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 34 | தென்காசி | 1 | 10 | | 2 | | 1 | | |
| 35 | தூத்துக்குடி | 4 | 12 | | 1 | | 3 | | 1 |
| 36 | நீலகிரி | 1 | 1 | | | | | | |
| 37 | கன்னியாகுமரி | | 3 | | | | | | |
| **மொத்தம்** | | 85 | 521 | 6 | 64 | 10 | 80 | 6 | 20 |

மேலும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்க வேளாண் இயந்திரங்கள், கருவிகள் மற்றும் தனியாருக்குச் சொந்தமான வேளாண் இயந்திரங்களை விவசாயிகள் எளிதில் வாடகைக்குப் பெற்றுப் பயன்பெறும் வகையில் உழவர் செயலியில் உள்ள “இ-வாடகை 2.0” தளத்தில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இத்தளத்தின் வாயிலாக, விவசாயிகள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தனியார் வேளாண் இயந்திர உரிமையாளர்களுக்கிடையே வேளாண்மைப் பொறியியல் துறை ஒருங்கிணைப்பாளராக செயல்படுகிறது. இத்தளத்தில் இதுவரை, 1,359 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்களும், 6,246 தனியார் வேளாண் இயந்திர உரிமையாளர்களும், ஆக மொத்தம் 7,605 சேவைதாரர்கள், 7,931 வேளாண் இயந்திரங்களையும் 7,026 வேளாண் கருவிகளையும் விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்குவதற்காக பதிவு செய்துள்ளனர்.

### 4.3.11. நிவாரணப் பணிகளை மேற்கொள்ள பேரிடர் மேலாண்மை இயந்திரங்கள்

இயற்கைப் பேரிடர் நிகழ்வுகளான கனமழை மற்றும் வெள்ளப்பெருக்கு நேரங்களில், பெருவெள்ளத்தினால் விவசாய நிலங்களில்

ஏற்படும் மணல் திட்டுகளை அகற்றுதல், சூறைக் காற்றினால் சாய்ந்த மரங்களை அகற்றுதல், தாழ்வான மழைநீர் தேங்கும் பகுதிகளில் மழைநீரை இறைத்து வெளியேற்றுதல், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை வழங்குதல் மற்றும் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லுதல் போன்ற வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக, வேளாண்மைப் பொறியியல் துறையில் 85 மண் தள்ளும் இயந்திரங்களும், 80 சக்கர வகை மண் அள்ளும் இயந்திரங்களும், 73 டிப்பிங் டிரெய்லர்களும், 805 கனரக மரம் அறுக்கும் கருவிகளும், டிராக்டரால் இயங்கக்கூடிய 33 நீர் இறைக்கும் பம்புகளும், 5 பேரிடர் கால நிவாரண ஊர்திகளும் பயன்பாட்டில் உள்ளன.

### 4.3.12. வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்களை வாடகைக்கு வழங்கும் சேவையை வலுப்படுத்துதல்

வேளாண் இயந்திரங்களை வாடகைக்கு வழங்கும் திட்டத்தினை நடப்பாண்டில் வலுப்படுத்துவதற்காக, வேளாண் இயந்திரமயமாக்குதலுக்கான துணை இயக்கத் திட்டத்தின்கீழ், 60 டிராக்டர்கள், அதற்குரிய இணைப்புக் கருவிகள், நெல் அறுவடை இயந்திரங்கள் மற்றும் நெல் அறுவடை இயந்திரத்தைச் சுமந்து செல்லும் வாகனங்கள் போன்ற 343 வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் ரூ.18.62 கோடி மதிப்பீட்டில் வேளாண்மைப் பொறியியல் துறைக்கென கொள்முதல் செய்யப்படும்.

### 4.3.13. வரப்பு செதுக்கி சேறு பூசும் கருவியின் தொழில்நுட்பத்தினை விவசாயிகளிடையே பரவலாக்கம் செய்தல்

வேளாண்மைப் பொறியியல் துறையின் டிராக்டரால் இயங்கக்கூடிய வரப்பு செதுக்கி சேறு பூசும் கருவியின் மூலம் நெல் வயல்களில் வரப்பு செதுக்கும் தொழில்நுட்பம் 250 ஏக்கரில் விவசாயிகளிடையே பரவலாக்கம் செய்யப்படும். இச்செயல்விளக்கம் ஏக்கர் ஒன்றிற்கு அதிகபட்சமாக ரூ.500/- என்ற வீதத்தில் ரூ.1.25 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்படும்.

### 4.4. வேளாண்மையில் சூரிய ஆற்றல் பயன்பாடு

புதுப்பிக்கத்தக்கதான சூரிய ஆற்றலின் பயன்பாட்டினை அதன் அடிப்படையிலான நவீன தொழில்நுட்பங்கள் வாயிலாகப் பரவலாக்குவதால் விவசாயிகள் எரிபொருளுக்கு செலவிடும் தொகை சேமிக்கப்பட்டு, விவசாயிகளின்

வருமானம் அதிகரிப்பதுடன் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்பட்டு, நீடித்த நிலையான வேளாண்மைக்கும் வழிவகுக்கிறது.

### 4.4.1. சூரிய சக்தியால் இயங்கும் மின்வேலி அமைப்புகள்

வனவிலங்குகளான யானை, மான், காட்டுப்பன்றி, காட்டெருமை போன்ற விலங்குகளாலும், இதர கால்நடைகளாலும் பயிர்களுக்கு ஏற்படும் சேதத்தைக் குறைத்திட, விவசாயிகளுக்கு சூரிய மின்வேலி அமைப்புகள் மானிய உதவியுடன் அமைக்கப்படும். யானைகள் தவிர பிற விலங்குகளுக்கு 5 வரிசை, 7 வரிசை, 10 வரிசை வேலிக்கம்பிகளுடன் கூடிய சூரிய மின்வேலி அமைப்புகளும், யானைகளை விரட்டிட கூடுதலாகத் தொங்கும் சூரிய மின்வேலி அமைப்புகளும் நிறுவப்படும்.

நடப்பாண்டில், சூரிய மின்வேலி அமைப்புகள் 50 சதவீத மானியத்தில் ரூ.2 கோடி நிதி ஒதுக்கீட்டில் நிறுவப்படும். மேலும் ஆதிதிராவிடர்,

பழங்குடியினர் பிரிவைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகளுக்கு கூடுதலாக 20 சதவீத மானியம் மாநில நிதியிலிருந்து வழங்கப்படும்.

### 4.4.2. சூரிய சக்தி பம்புசெட்டுகள் அமைக்கும் திட்டம்

விவசாயிகளின் இறவைப் பாசனத்திற்கான மின்சாரத் தேவையை பூர்த்தி செய்வதோடு, நீடித்த நிலையான வேளாண் உற்பத்தியை உறுதி செய்யும் வகையில், நடப்பாண்டில் 1,000 விவசாயிகள் பயன்பெறும் வகையில் ரூ.23.06 கோடி மானியத்தில் சூரிய சக்தி பம்புசெட்டுகள் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ், ஆதிதிராவிடர், பழங்குடியினர் பிரிவைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகளுக்கு 80 சதவீத மானியத்திலும், ஆதிதிராவிடர், பழங்குடியினர் பிரிவைச் சார்ந்த இதர விவசாயிகள், பொது பிரிவைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகளுக்கு

70 சதவீத மானியத்திலும் மற்றும் இதர விவசாயிகளுக்கு 60 சதவீத மானியத்திலும் சூரிய சக்தி பம்புசெட்டுகள் அமைக்கப்படும்.

### 4.4.3. சூரியக் கூடார உலர்த்திகள்

வேளாண் விளைபொருட்களைப் போதிய அளவு உலர்த்தி மதிப்புக் கூட்டுவதன் வாயிலாக, விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தும் நோக்கில், பாலிகார்பனேட் தகடுகளாலான பசுமைக்குடில் வகை சூரியக் கூடார உலர்த்திகள் மானியத்துடன் அமைக்கப்படும். இத்திட்டத்தின்கீழ், ஆதி திராவிடர், பழங்குடியினர், சிறு, குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கு மொத்த விலையில் 50 சதவீத மானியமாக அதிகபட்சம் ரூ.4.40 இலட்சம் வரையிலும், இதர விவசாயிகளுக்கு 40 சதவீத மானியமாக அதிகபட்சம் ரூ.3.52 இலட்சம் வழங்கப்படும். மேலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பிரிவைச் சார்ந்த சிறு, குறு

விவசாயிகளுக்கு மாநில நிதியிலிருந்து கூடுதலாக 20 சதவீத மானியம் வழங்கப்படும். நடப்பாண்டில், இத்திட்டம் ரூ.5.06 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

### 4.5. விவசாயிகளுக்கு மானியத்தில் கதிரடிக்கும் களம் அமைத்துக் கொடுத்தல்

விவசாயிகள் தாங்கள் விளைவித்த தானியப் பயிர்களைக் கதிரடித்து, உலர்த்தி, பாதுகாப்பாக சேமித்து வைக்கவும், அறுவடைக்குப் பிந்தைய தானிய இழப்புகளைக் குறைக்கவும், இந்நிதியாண்டில், 100 விவசாயிகளுக்கு அவர்களின் நிலங்களில் கதிரடிக்கும் களம் அமைக்க பின்னேற்பு மானியமாக 50 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ.2.80 இலட்சம் என்ற வகையில், மொத்தம் ரூ.2.80 கோடி மானியம் வழங்கப்படும்.

## 4.6. கட்டமைப்புப் பணிகள்

### 4.6.1. கட்டுமானம், புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள்

வேளாண்மை – உழவர் நலத்துறையின் கீழ் செயல்பட்டுவரும் வேளாண்மைத் துறை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை, விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறை ஆகிய துறைகளின் கட்டுமானம், புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகளின் மதிப்பீடுகளுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் வேளாண்மைப் பொறியியல் துறையால் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், வேளாண்மைப் பொறியியல் துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறைக்கான கட்டுமானப் பணிகள் மற்றும் மேம்பாட்டுப் பணிகள் வேளாண்மைப் பொறியியல் துறையால்

மேற்கொள்ளப்படுகின்றன. வேளாண்மைப் பொறியியல் துறைக்குச் சொந்தமான வேளாண் இயந்திரங்கள், கருவிகள் ஆகியவற்றைப் பாதுகாப்பாக வைத்திட வேளாண் இயந்திரக் கூடாரங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. நடப்பாண்டில், 5 வேளாண் இயந்திரக் கூடாரங்கள் ரூ.1.08 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும். மேலும், 5 வேளாண்மைப் பொறியியல் விரிவாக்கம் மற்றும் பயிற்சி மையங்கள் திருக்கோவிலூர், காரைக்குடி, முசிறி, தாராபுரம், கும்பகோணம் ஆகிய இடங்களில் மொத்தம் ரூ.4.60 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**4.7. நிர்வாக அமைப்பு**

நடப்பாண்டில், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் வேளாண்மைப் பொறியியல் துறைக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள 115 உதவிப் பொறியாளர் (வே.பொ)

பணியிடங்களுக்கான பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது.

## அட்டவணை.4.3. வேளாண்மைப் பொறியியல் துறை பணியாளர்களின் விவரம்

| வ. எண் | பணியிட விவரம் | ஒப்பளிக்கப்பட்ட எண்கள் |
|---|---|---|
| 1 | தலைமைப் பொறியாளர் (வே.பொ.) | 1 |
| 2 | தலைமைப் பொறியாளர் (வே.பொ.), நபதி | 1 |
| 3 | கண்காணிப்புப் பொறியாளர் (வே.பொ.) | 14 |
| 4 | செயற் பொறியாளர் (வே.பொ.) | 42 |
| 5 | உதவி செயற் பொறியாளர் (வே.பொ.) | 103 |
| 6 | உதவிப் பொறியாளர் (வே.பொ.) / இளநிலைப் பொறியாளர் (வே.பொ.) | 755 |
| 7 | தொழில்நுட்ப மற்றும் பிற பணியாளர்கள் | 1,490 |
| 8 | அமைச்சுப் பணியாளர்கள் | 1,460 |
| | **மொத்தம்** | **3,866** |

## 5. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை

வேளாண் சந்தைப்படுத்தல் என்பது இலாபகரமான வேளாண்மையின் அடித்தளமாகும். இது விவசாயிகளின் விளைபொருட்களுக்கு உரிய இலாபகரமான விலையைப் பெறுவதற்கு உற்பத்தியையும் சந்தையையும் இணைக்கும் முக்கிய பாலமாக செயல்படுகிறது. வேளாண்மையின் வெற்றி என்பது உற்பத்தி அதிகரிப்பில் மட்டுமல்லாமல், விவசாயிகள் தங்களின் விளைபொருட்களை சரியான இடத்தில், சரியான நேரத்தில் மற்றும் நியாயமான விலையில் விற்பனை செய்யும் திறனிலும் அமைந்துள்ளது. திறமையான வேளாண் சந்தைப்படுத்தல் என்பது விலை நிர்ணயத்தில் வெளிப்படைத்தன்மையை ஏற்படுத்தி, அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைத்து, மதிப்புக்கூட்டலை ஊக்குவித்து, நுகர்வோர் செலுத்தும்

தொகையில் விவசாயிகளின் பங்கினை அதிகரிப்பதாகும். இதன் முக்கியத்துவத்தை உணர்ந்த தமிழ்நாடு அரசு, உழவர் சந்தைகள், ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள், முதன்மை பதப்படுத்தும் மையங்கள், குளிர்பதனக் கிடங்குகள், உணவுப் பூங்காக்கள் மற்றும் ஏற்றுமதி சார்ந்த கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி, விவசாயிகளின் சந்தை அணுகலை மேம்படுத்தி வருமான உயர்வை உறுதி செய்து வருகிறது.

வேளாண் சந்தைப்படுத்தலின் முக்கியத்துவம் பண்டைய தமிழ் இலக்கியங்களிலேயே வலியுறுத்தப்பட்டுள்ளது. உலகப் புகழ்பெற்ற தமிழ் பொதுமறையான திருக்குறள், உழவுத் தொழிலும் வாணிபமும் சமூகத்தின் அடிப்படையாக விளங்குவதை எடுத்துரைக்கிறது. மேலும் சங்ககால இலக்கியங்களான பட்டினப்பாலை, மதுரைக்காஞ்சி ஆகிய நூல்கள், பண்டைய

தமிழகத்தின் செழிப்பான சந்தைகள், ஒழுங்குபடுத்தப்பட்ட வணிகம், வேளாண் விளைபொருட்களின் சேமிப்பு மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகள் குறித்து விரிவாக விளக்குகின்றன.

**2026-27 ஆம் ஆண்டு செயல்படுத்தவுள்ள புதிய முன்னெடுப்புகள்**;

கிராமப்புரங்களில் தொழில்முனைவுத் திறனை ஊக்குவித்து, இளைஞர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கி, ஏற்றுமதி வளர்ச்சியை வலுப்படுத்தும் வகையில் “உற்பத்தியிலிருந்து உலகளாவிய வணிகத்தளம் வரை” என்ற நோக்கில், இத்துறை புதிய உத்திகளை திட்டமிட்டு செயல்படுத்தவுள்ளது.

வேளாண் பெருங்குடி மக்களின் வருமானத்தை உயர்த்தும் நோக்கத்துடன், ரூ.23 கோடி மதிப்பீட்டில் சென்னையில் “**தமிழ்நாடு விவசாயிகள் வருமான**

**மேம்பாட்டு ஆணையம்**” நிறுவப்படும். பல்வேறு துறை சார்ந்த நிபுணர்களை உள்ளடக்கிய இவ்வாணையம், தொடர்புடைய பங்குதாரர்களுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு, கள ஆய்வுகளை மேற்கொண்டு, ஆராய்ச்சி, கொள்கை ஆதரவு, சந்தைத் தலையீடுகள் மற்றும் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு விவசாயிகளின் வருமானத்தை உயர்த்துவதற்கான உத்திகளை அரசுக்குப் பரிந்துரைக்கும்.

வேளாண் சந்தைப்படுத்தல் தொடர்பான தரவுகளை ஒருங்கிணைத்து, புவியியல் தகவல் அமைப்பு (GIS) அடிப்படையிலான கட்டமைப்பு வரைபட அமைப்பை உருவாக்கும் நோக்கில், “**வேளாண் நுண்ணறிவு மற்றும் சந்தை மகத்துவ மையம்**” **(Agricultural Intelligence and Market Excellence Centre)** ரூ.4 கோடி நிதி ஒதுக்கீட்டில் நிறுவப்படும். இம்மையம் வாயிலாக செயற்கை

நுண்ணறிவு (AI) மற்றும் முன்னறிவிப்பு பகுப்பாய்வு (Predictive Analytics) தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி சந்தை விலை மற்றும் வரத்து குறித்து முன்னறிவிப்புகள் வழங்கப்படும். மேலும், ஏற்றுமதி மற்றும் உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் (FPOs) தொடர்பான தரவுகளைப் பகுப்பாய்வு செய்வதுடன், தரவு அடிப்படையில் முடிவு எடுப்பதற்கு ஏதுவாக நிகழ்நேர தரவுப் பலகைகள் (Real-time Dashboards) உருவாக்கப்படும்.

தக்காளி, வெங்காயம் போன்ற எளிதில் அழுகக்கூடிய வேளாண் விளைபொருட்களின் விலை வீழ்ச்சியடையும் காலங்களில், விரைவாக சந்தை விலையை நிலைப்படுத்தும் வகையில் "**சந்தை இடையீட்டுத் திட்டம் – விலை நிலைப்படுத்துதல் நிதி (MIS-PSRF)**" தமிழ்நாடு வேளாண்மை விற்பனை வாரியத்தால் 2026-27 ஆம் ஆண்டில், ரூ.4.26 கோடி மாநில நிதியில் ஏற்படுத்தப்படும்.

விவசாயிகள், வேளாண் தொழில் முனைவோர் மற்றும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு தொழில்முறை வேளாண்மைக்கான வழிகாட்டுதல்கள், தகவல் தொழில்நுட்பப் பரிமாற்றம், வேளாண் வணிகத்திற்கான ஆலோசனைகள் வழங்கிட, "**வேளாண் வணிக வழிகாட்டு மையம்**" ரூ. 50 இலட்சம் மாநில நிதியில் அமைக்கப்படும்.

நடப்பாண்டில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் நிலையான வளர்ச்சியடைய **உழவர் உற்பத்தியாளர் நிறுவன மேலாண்மைப் பிரிவு** (FPC Management Cell) அமைக்கப்படும். உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் நிதி மற்றும் நிர்வாக அறிக்கைகள் சமர்ப்பிக்க அதிகபட்சமாக ரூ.10,000 வழங்கப்படும். மேலும், தலைமைச் செயல் அலுவலர் ஊதியத்தில் 50 சதவீதம் (அதிகபட்சம் மாதம் ரூ.12,500/-) மானியமாக வழங்கப்படும். சிறந்த நடைமுறைகள், சந்தை

இணைப்பு, மதிப்புக்கூட்டல் மற்றும் நிலையான வருவாய் ஈட்டுதல் தொடர்பான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளும் மண்டல அளவிலான கண்காட்சிகளும் நடத்தப்படும். இத்திட்டம் நடப்பாண்டில் ரூ.5 கோடி மாநில நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

மேலும் தென்னை விவசாயிகளுக்கு நிலையான சந்தை வாய்ப்பினை உருவாக்கிடவும், தேங்காயில் மதிப்புக்கூட்டுதல், பதப்படுத்துதல், வணிகக் குறியீடு, சந்தைப்படுத்தல், ஏற்றுமதி மேம்பாடு போன்ற சேவைகளை ஒருங்கிணைத்து செயல்படுத்துவதன் மூலம் விவசாயிகளின் வருமானத்தை உயர்த்திடவும் “**தமிழ்நாடு தென்னை பதப்படுத்தும் கழகம்**” நிறுவப்படும்.

## 5.1 வேளாண்மை விற்பனை

### 5.1.1 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள்

தமிழ்நாட்டில் வேளாண் விளை பொருட்களின் விற்பனையை முறைப்படுத்தி, இடைத்தரகர்கள் இன்றி விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கச் செய்யும் பொருட்டு ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. இவை தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) சட்டம், 1987 மற்றும் அதன் விதிகள் 1991-இன்படி உருவாக்கப்பட்டுள்ளன. தற்போது 27 விற்பனைக்குழுக்களின் கட்டுப்பாட்டில் 285 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் செயல்பட்டு வருகின்றன.

விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை நேரடியாக விற்பனை செய்யும் பொதுவான களமாக ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் விளங்குகின்றன. இங்கு விவசாயிகள் மறைமுக

ஏல முறையில் பங்குபெற்றுத் தங்கள் விளைபொருட்களுக்கு சிறந்த விலை பெறுகின்றனர்.

ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் விளைபொருட்களுக்கு சரியான எடை, தரத்திற்கேற்ற விலை நிர்ணயம் செய்யப்படுவதால் விவசாயிகள் உரிய விலை பெறுகின்றனர். இச்சேவைக்காக விவசாயிகளிடமிருந்து எவ்விதக் கட்டணமும் வசூலிக்கப்படுவதில்லை. வணிகர்களிடம் இருந்து விளைபொருட்களின் விற்பனை மதிப்பில் 1 சதவீதம் மட்டுமே சந்தைக் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

மேலும், விவசாயிகளுக்குப் பொருளீட்டுக் கடனாக அதிகபட்சம் ரூ.5 இலட்சமும், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு ரூ.10 இலட்சமும் 5 சதவீத வட்டியில் 6 மாத காலத்திற்கு (மஞ்சளுக்கு மட்டும் ஒரு வருடம்) வழங்கப்படுகிறது. வணிகர்களுக்குப்

பொருளீட்டுக்கடனாக அதிகபட்சம் ரூ.2 இலட்சம், 9 சதவீத வட்டியில் வழங்கப்படுகிறது.

நடப்பாண்டில், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் வாயிலாக 56 இலட்சம் மெட்ரிக் டன் அளவிலான விளைபொருட்கள் வர்த்தகத்தை முறைப்படுத்தவும் ரூ.77 கோடி பொருளீட்டுக்கடன் வழங்கவும் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் உள்ள 322 சேமிப்புக் கிடங்குகளுக்கு, (4.55 இலட்சம் மெ. டன் கொள்ளளவு) கிடங்கு மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை ஆணையத்தின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. இந்த சேமிப்புக் கிடங்குகளில் விவசாயிகள் மற்றும் வணிகர்கள் தங்களது வேளாண் விளைபொருட்களை சேமித்து வைத்து அவற்றின் மதிப்பில் 80 சதவீதம் வரை மின்னணு மாற்றத்தகு கிடங்கு ரசீது மூலம்

அட்டவணையிடப்பட்ட வணிக வங்கிகளில் கடன் பெறலாம்.

## அட்டவணை: 5.1 மாவட்ட மற்றும் விற்பனைக்குழு வாரியாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மற்றும் மின்னணு வேளாண் சந்தைகள்

அலகு (எண்களில்)

| வ. எண் | மாவட்டம் | விற்பனைக் குழு | ஒழுங்குமுறை விற்பனை கூடங்களின் பெயர் மற்றும் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|
| | | | மொத்தம் | மின்னணு தேசிய வேளாண் சந்தைகள் | மின்னணு அல்லாத வேளாண் சந்தைகள் |
| 1 | காஞ்சிபுரம் | 1. காஞ்சிபுரம் | 3 | காஞ்சிபுரம், உத்திரமேரூர், சுங்குவார்சத்திரம் (3) | - |
| 2 | செங்கல்பட்டு | | 4 | மதுராந்தகம் (1) | திருக்கழுக் குன்றம், அச்சரப்பாக்கம், செங்கல்பட்டு (3) |
| 3 | திருவள்ளூர் | | 8 | திருவள்ளூர், செங்குன்றம், திருத்தணி, ஊத்துக்கோட்டை (4) | பொன்னேரி, பள்ளிப்பட்டு, கும்மிடிப்பூண்டி, நசரத்பேட்டை (4) |

| வ. எ ண் | மாவட்டம் | விற்பனைக் குழு | ஒழுங்குமுறை விற்பனை கூடங்களின் பெயர் மற்றும் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|
| | | | மொத்தம் | மின்னணு தேசிய வேளாண் சந்தைகள் | மின்னணு அல்லாத வேளாண் சந்தைகள் |
| 4 | கடலூர் | 2. கடலூர் | 11 | விருத்தாசலம், கடலூர், பண்ருட்டி, காட்டுமன்னார் கோயில், குறிஞ்சிப்பாடி, சேத்தியாதோப்பு, ஸ்ரீமுஷ்ணம், வேப்பூர் | திட்டக்குடி, புவனகிரி சிதம்பரம், (3) |
| 5 | விழுப்புரம் | 3. விழுப்புரம் | 11 | திண்டிவனம், திருக்கோவிலூர், விழுப்புரம், செஞ்சி, அவலூர்பேட்டை, மரக்காணம், விக்கிரவாண்டி, வளத்தி (8) | திருவெண்ணெய் நல்லூர், அனந்தபுரம், மேல்சித்தாமூர் (3) |
| 6 | கள்ளக்குறிச்சி | 4. கள்ளக்குறிச்சி | 8 | மணலூர்பேட்டை, உளுந்தூர்பேட் டை, சின்னசேலம், கள்ளக்குறிச்சி, தியாகதுருகம், சங்கராபுரம் (6) | மூங்கில் துறைப்பட்டு, திருநாவலூர், (2) |
| 7 | வேலூர் | 5. வேலூர் | 3 | வேலூர், குடியாத்தம் (2) | காட்பாடி (1) |
| 8 | திருப்பத்தூர் | | 3 | திருப்பத்தூர், வாணியம்பாடி (2) | ஆம்பூர் (1) |

| வ. எண் | மாவட்டம் | விற்பனைக் குழு | ஒழுங்குமுறை விற்பனை கூடங்களின் பெயர் மற்றும் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|
| | | | மொத்தம் | மின்னணு தேசிய வேளாண் சந்தைகள் | மின்னணு அல்லாத வேளாண் சந்தைகள் |
| 9 | இராணிப் பேட்டை | | 6 | ஆற்காடு, காவேரிப்பாக்கம், கலவை, அம்மூர் (4) | திமிரி, அரக்கோணம் (2) |
| 10 | திருவண்ணா மலை | 6. திருவண்ணா மலை | 18 | திருவண்ணாம லை, ஆரணி, வந்தவாசி, சேத்துப்பட்டு, செய்யாறு, போளூர், செங்கம், புதுப்பாளையம், வாணாபுரம், வேட்டவலம், மங்கலமாமண்டூர், தேசூர், தூசி, கீழ்பென்னாத்தூர், ஆதமங்கலம்புதூர் (15) | பெரணமல்லூர், தெள்ளார், நாயுடுமங்கலம் (3) |
| 11 | சேலம் | 7. சேலம் | 14 | சேலம், ஆத்தூர், மேச்சேரி, வாழப்பாடி, தம்மம்பட்டி, ஓமலூர், கெங்கவல்லி, கருமந்துறை , எடப்பாடி, கொங்கணாபுரம் (10) | தலைவாசல், சங்ககிரி, கொளத்தூர், காடையாம்பட்டி (4) |
| 12 | நாமக்கல் | 8. நாமக்கல் | 7 | திருச்செங்கோடு, பரமத்திவேலூர், நாமகிரிப்பேட்டை (3) | நாமக்கல், ராசிபுரம், சோளக்காடு, சேந்தமங்கலம் (4) |

| வ. எ ண் | மாவட்டம் | விற்பனைக் குழு | ஒழுங்குமுறை விற்பனை கூடங்களின் பெயர் மற்றும் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|
| | | | மொத்தம் | மின்னணு தேசிய வேளாண் சந்தைகள் | மின்னணு அல்லாத வேளாண் சந்தைகள் |
| 13 | தருமபுரி | 9. தருமபுரி | 7 | தருமபுரி, பாலக்கோடு, பென்னாகரம், அரூர் (4) | பாப்பிரெட்டி பட்டி, கம்பைநல்லூர், பாப்பாரப்பட்டி (3) |
| 14 | கிருஷ்ணகிரி | | 9 | கிருஷ்ணகிரி, ஓசூர், ஊத்தங்கரை, போச்சம்பள்ளி (4) | கெலமங்கலம், காவேரிப் பட்டினம், பர்கூர், இராயக் கோட்டை, தேன்கனிக் கோட்டை (5) |
| 15 | கோயம்புத்தூர் | 10. கோயம்புத்தூர் | 10 | அன்னூர், காரமடை, கோயம்புத்தூர், சூலூர், ஆனைமலை, பொள்ளாச்சி, மலையடிப் பாளையம், நெகமம், கிணத்துக்கடவு, தொண்டாமுத்தூர் (10) | - |
| 16 | திருப்பூர் | 11. திருப்பூர் | 15 | குன்னத்தூர், காங்கேயம், வெள்ளக்கோவில், தாராபுரம், மூலனூர், அலங்கியம், முத்தூர், திருப்பூர், அவினாசி, சேவூர், பல்லடம், உடுமலைப் பேட்டை, மடத்துக்குளம், பெதப்பம்பட்டி, பொங்கலூர் (15) | - |

| வ. எண் | மாவட்டம் | விற்பனைக் குழு | ஒழுங்குமுறை விற்பனை கூடங்களின் பெயர் மற்றும் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|
| | | | மொத்தம் | மின்னணு தேசிய வேளாண் சந்தைகள் | மின்னணு அல்லாத வேளாண் சந்தைகள் |
| 17 | ஈரோடு | 12. ஈரோடு | 18 | ஈரோடு, அவல்பூந்துறை, கொடுமுடி, சிவகிரி, சித்தோடு, பவானி, பூதப்பாடி, அந்தியூர், மயிலம்பாடி, கவுந்தப்பாடி, கோபிசெட்டிப்பாளையம், நம்பியூர், வெள்ளாங்கோவில், சத்தியமங்கலம், புஞ்சை புளியம்பட்டி, தாளவாடி, பெருந்துறை, எழுமாத்தூர் (18) | - |
| 18 | திருச்சிராப்பள்ளி | 13. திருச்சிராப்பள்ளி | 10 | மணப்பாறை, துறையூர், லால்குடி, திருச்சிராப்பள்ளி, மண்ணச்சநல்லூர், துவரங்குறிச்சி, தாத்தையங்கார்பேட்டை, காட்டுப்புதூர் (8) | தொட்டியம், புள்ளம்பாடி (2) |
| 19 | கரூர் | | 4 | கரூர், இரும்பூதிப்பட்டி (2) | குளித்தலை, சின்னதாராபுரம் (2) |
| 20 | பெரம்பலூர் | 14. பெரம்பலூர் | 2 | பெரம்பலூர் (1) | பூலாம்பாடி (1) |

| வ. எண் | மாவட்டம் | விற்பனைக் குழு | ஒழுங்குமுறை விற்பனை கூடங்களின் பெயர் மற்றும் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|
| | | | மொத்தம் | மின்னணு தேசிய வேளாண் சந்தைகள் | மின்னணு அல்லாத வேளாண் சந்தைகள் |
| 21 | அரியலூர் | | 4 | அரியலூர், ஜெயங்கொண்டம், ஆண்டிமடம் (3) | மேலணிக்குழி (1) |
| 22 | புதுக்கோட்டை | 15. புதுக்கோட்டை | 10 | ஆலங்குடி, அறந்தாங்கி, இலுப்பூர் (3) | புதுக்கோட்டை, கந்தர்வ கோட்டை, ஆவுடையார்கோவில், கீரனூர், கீரமங்கலம், பொன்னமராவதி, கறம்பக்குடி (7) |
| 23 | தஞ்சாவூர் | 16. தஞ்சாவூர் | 13 | தஞ்சாவூர், வல்லம், ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை, பாபநாசம், பூதலூர், கும்பகோணம் (7) | அதிராமப் பட்டினம், அம்மாப் பேட்டை, மதுக்கூர், பேராவூரணி, திருப்பனந்தாள், பாப்பாநாடு (6) |
| 24 | திருவாரூர் | 17. திருவாரூர் | 8 | குடவாசல், வலங்கைமான், திருத்துறைப் பூண்டி, மன்னார்குடி, திருவாரூர், பூந்தோட்டம், வடுவூர் (7) | கொரடாச்சேரி (1) |

| வ. எண் | மாவட்டம் | விற்பனைக் குழு | ஒழுங்குமுறை விற்பனை கூடங்களின் பெயர் மற்றும் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|
| | | | மொத்தம் | மின்னனு தேசிய வேளாண் சந்தைகள் | மின்னனு அல்லாத வேளாண் சந்தைகள் |
| 25 | நாகப்பட்டினம் | 18. நாகப்பட்டினம் | 4 | கீவளூர், வேதாரண்யம், திருப்பூண்டி (3) | நாகப்பட்டினம் (1) |
| 26 | மயிலாடுதுறை | | 4 | குத்தாலம், மயிலாடுதுறை, செம்பனார் கோவில், சீர்காழி (4) | - |
| 27 | மதுரை | 19. மதுரை | 6 | திருமங்கலம், உசிலம்பட்டி, மேலூர், மதுரை, வாடிப்பட்டி (5) | டி.கல்லுப்பட்டி (1) |
| 28 | தேனி | 20. தேனி | 7 | தேனி, கம்பம், போடிநாயக்கனூர், சின்னமனூர், ஆண்டிப்பட்டி (5) | உத்தமபாளையம், பெரியகுளம் (2) |
| 29 | திண்டுக்கல் | 21. திண்டுக்கல் | 8 | திண்டுக்கல், ஒட்டன்சத்திரம், பழனி, நத்தம், வத்தலகுண்டு, கோபால்பட்டி, வடமதுரை (7) | வேடசந்தூர் (1) |

| வ. எண் | மாவட்டம் | விற்பனைக் குழு | ஒழுங்குமுறை விற்பனை கூடங்களின் பெயர் மற்றும் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|
| | | | மொத்தம் | மின்னணு தேசிய வேளாண் சந்தைகள் | மின்னணு அல்லாத வேளாண் சந்தைகள் |
| 30 | இராமநாதபுரம் | 22. இராமநாதபுரம் | 6 | இராமநாதபுரம், பரமக்குடி, கமுதி, திருவாடானை, இராஜசிங்க மங்கலம், முதுகுளத்தூர் (6) | - |
| 31 | விருதுநகர் | 23. விருதுநகர் | 7 | விருதுநகர், இராஜபாளையம், சாத்தூர், அருப்புக் கோட்டை (4) | ஸ்ரீவில்லிபுத்தூர், வத்திராயிருப்பு, வெம்பக்கோட்டை (3) |
| 32 | சிவகங்கை | 24. சிவகங்கை | 7 | சிவகங்கை, மானாமதுரை, சிங்கம்புணரி, காரைக்குடி, தேவகோட்டை (5) | திருப்புவனம், இளையான்குடி (2) |
| 33 | திருநெல் வேலி | 25. திருநெல் வேலி | 4 | அம்பாசமுத்திரம், வள்ளியூர், திருநெல்வேலி, திசையன்விளை (4) | - |
| 34 | தென்காசி | | 7 | தென்காசி, சங்கரன்கோவில், பாவூர்சத்திரம், திருவேங்கடம், ஆலங்குளம், கடையநல்லூர் (6) | சிவகிரி (1) |

| வ. எண் | மாவட்டம் | விற்பனைக் குழு | ஒழுங்குமுறை விற்பனை கூடங்களின் பெயர் மற்றும் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|
| | | | மொத்தம் | மின்னணு தேசிய வேளாண் சந்தைகள் | மின்னணு அல்லாத வேளாண் சந்தைகள் |
| 35 | தூத்துக்குடி | | 9 | கோவில்பட்டி, தூத்துக்குடி, புதூர், கடம்பூர், கழுகுமலை, ஸ்ரீவைகுண்டம், விளாத்திகுளம், எட்டையபுரம், சாத்தான்குளம் (9) | - |
| 36 | நீலகிரி | 26. நீலகிரி | 4 | குன்னூர், உதகமண்டலம் (2) | கோத்தகிரி, கூடலூர் (2) |
| 37 | கன்னியாகுமரி | 27. கன்னியாகுமரி | 6 | வடசேரி, களியக்காவிளை, திங்கள்சந்தை, குலசேகரம், தொடுவட்டி (5) | ஈத்தாமொழி (1) |
| | மொத்தம் | | 285 | 213 | 72 |

இந்த நிதி ஆண்டில், கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் வரத்து அதிகமுள்ள திருவண்ணாமலை மாவட்டம் போளூர் மற்றும் இராணிப்பேட்டை மாவட்டம் அம்மூர் ஆகிய இரு ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் தலா 1000 மெ.டன்

கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்குகள், ரூ.4.80 கோடி நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படும்.

## 5.1.2 மின்னணு தேசிய வேளாண் சந்தை (eNAM)

மின்னணு தேசிய வேளாண் சந்தை என்பது இந்தியாவில் உள்ள வேளாண் சந்தைகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து, நாடு முழுவதும் ஒரே வேளாண் சந்தையாக உருவாக்கும் டிஜிட்டல் தளமாகும்.

தமிழ்நாட்டில் உள்ள மொத்தம் 285 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில், மின்னணு தேசிய வேளாண் சந்தைத் திட்டம், தற்போது 213 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மின்னணு தேசிய வேளாண் சந்தை மூலம் தேங்காய் உட்பட

253 வேளாண் விளைபொருட்கள் வர்த்தகம் செய்யப்படுகின்றன. தற்போது இணையவழி வாயிலாக ஏல முறை மேற்கொள்வதால் விளைபொருட்களின் தரத்திற்கேற்ற நியாயமான விலை விவசாயிகளுக்குக் கிடைக்கப் பெறுவதுடன் விளைபொருட்களுக்கான தொகை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்படுகிறது.

தேசிய அளவில், e-NAM சந்தைகளின் எண்ணிக்கை, சந்தைகளுக்கிடையேயான வர்த்தகம் (Inter-Mandi) மற்றும் மின்னணு (e-Payment) முறையில் விவசாயிகளுக்குப் பணப்பட்டுவாடா செய்வது ஆகியவற்றில் தேசிய அளவில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது.

மின்னணு தேசிய வேளாண் சந்தையில் இணைக்கப்பட்டுள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் எண்ணிக்கை, நீடித்த நிலையான வளர்ச்சி இலக்கில் (SDG-Goal 2) தேசிய அளவிலான குறியீடாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மாநிலத்தின் அனைத்து ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களிலும் இணையதள வர்த்தகத்தை மேற்கொள்ள 9,955 வர்த்தகர்களுக்கு **ஒன்றுபட்ட ஒற்றை உரிமம்** (Unified Single Licence) வழங்கப்பட்டுள்ளது.

**வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ள கட்டமைப்பு வசதிகள் - இணைப்பு -I**

## 5.2 வேளாண் வணிகம்

### 5.2.1. **உழவர் சந்தை**

விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை இடைத்தரகர்கள் இன்றி நேரடியாக நுகர்வோருக்கு விற்பனை செய்து நியாயமான விலையைப் பெறவும், பொதுமக்கள் தரமான பசுமையான காய்கறிகள் மற்றும் பழங்களை வாங்க உதவும் முக்கியமான முனையமாகவும் "**உழவர் சந்தைகள்**" விளங்குகின்றன. இதன்படி தமிழ்நாட்டில் 194 உழவர் சந்தைகள் செயல்பட்டு வருவதில் 93 உழவர் சந்தைகளுக்கு இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் ஆணையத்தின் சான்றிதழ் (FSSAI) பெறப்பட்டுள்ளது.

உழவர் சந்தைகளில் விவசாயிகளால் விற்கப்படும் விளைபொருட்களின் விலை

மொத்த சந்தை விலையை விடக் கூடுதலாகவும், நுகர்வோருக்குச் சில்லரை விலையை விடக் குறைவாகவும் கிடைத்திட ஏதுவாக, காய்கனிகளுக்கு அன்றாடம் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. இவ்வாறு நிர்ணயம் செய்யப்படும் விலையினை அனைவருக்கும் வெளிப்படையாக தெரிவித்திடும் வண்ணம் 50 உழவர் சந்தைகளில் மின்னணு விலைப்பலகைகள் நிறுவப்பட்டுள்ளன. இவ்வாண்டில், மேலும் 59 உழவர் சந்தைகளில் மின்னணு விலைப்பலகைகள் ரூ.2.04 கோடி செலவில் நிறுவப்படும்.

உழவர் சந்தைகளில், நாளொன்றுக்கு சராசரியாக 8,200 விவசாயிகள், ரூ.11 கோடி மதிப்புள்ள 2,500 மெட்ரிக் டன் காய்கறிகள் மற்றும் பழங்களை 3 இலட்சம் நுகர்வோருக்கு

விற்பனை செய்கின்றனர். உழவர் சந்தைகளில் விற்பனை செய்யப்படும் பொருட்களின் அன்றாட விலை விவரங்கள் 'உழவர்' கைப்பேசி செயலி மற்றும் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் இணையதளம் www.agrimark.tn.gov.in. வாயிலாகப் பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்படுகின்றன.

**அட்டவணை : 5.2 மாவட்ட வாரியாக உழவர் சந்தைகள்**

| வ. எண் | மாவட்டம் | எண்ணிக்கை | உழவர் சந்தைகள் |
|---|---|---|---|
| 1 | அரியலூர் | 2 | அரியலூர், ஜெயங்கொண்டம் |
| 2 | கோயம்புத்தூர் | 8 | ஆர்.எஸ்.புரம், சிங்காநல்லூர், பொள்ளாச்சி, மேட்டுப்பாளையம், குறிச்சி, சூலூர், வடவள்ளி, சுந்தராபுரம் |
| 3 | கடலூர் | 6 | கடலூர், சிதம்பரம், விருத்தாச்சலம், பண்ருட்டி, வடலூர், காட்டுமன்னார் கோவில் |
| 4 | தருமபுரி | 6 | தருமபுரி, பென்னாகரம், |

| வ. எண் | மாவட்டம் | எண்ணிக்கை | உழவர் சந்தைகள் |
|---|---|---|---|
| | | | பாலக்கோடு, ஏ.ஜெட்டிஅள்ளி, அரூர், காரிமங்கலம் |
| 5 | திண்டுக்கல் | 6 | திண்டுக்கல், பழனி, சின்னாளப்பட்டி, கொடைக்கானல், வத்தலக்குண்டு, வேடசந்தூர் |
| 6 | ஈரோடு | 6 | சம்பத்நகர், கோபிச்செட்டிப் பாளையம், சத்தியமங்கலம், பெரியார் நகர், பெருந்துறை, தாளவாடி |
| 7 | காஞ்சிபுரம் | 4 | காஞ்சிபுரம், படப்பை, சுங்குவார்சத்திரம், குன்றத்தூர் |
| 8 | செங்கல்பட்டு | 9 | பல்லாவரம், செங்கல்பட்டு, மேடவாக்கம், நங்கநல்லூர், மதுராந்தகம், கீழ்க்கட்டளை, ஜமீன்ராயப்பேட்டை, கூடுவாஞ்சேரி, திருக்கழுக்குன்றம் |
| 9 | கன்னியாகுமரி | 2 | வடசேரி, மயிலாடி |
| 10 | கரூர் | 6 | கரூர், குளித்தலை, வேலாயுதம்பாளையம், பள்ளப்பட்டி, வெங்கமேடு, காந்திகிராமம் |
| 11 | கிருஷ்ணகிரி | 5 | ஓசூர், கிருஷ்ணகிரி, |

| வ. எண் | மாவட்டம் | எண்ணிக்கை | உழவர் சந்தைகள் |
|---|---|---|---|
| | | | காவேரிப்பட்டினம், தேன்கனிக்கோட்டை, அவலப்பள்ளி |
| 12 | மதுரை | 7 | அண்ணாநகர், சொக்கிக்குளம், பழங்காநத்தம், உசிலம்பட்டி, திருமங்கலம், மேலூர், ஆனையூர் |
| 13 | நாகப்பட்டினம் | 2 | நாகப்பட்டினம், வேதாரண்யம் |
| 14 | மயிலாடுதுறை | 2 | மயிலாடுதுறை, சீர்காழி |
| 15 | நாமக்கல் | 6 | நாமக்கல், திருச்செங்கோடு, இராசிபுரம், குமாரபாளையம், பரமத்திவேலூர், மோகனூர் |
| 16 | நீலகிரி | 4 | உதகமண்டலம், குன்னூர், கோத்தகிரி, கூடலூர் |
| 17 | பெரம்பலூர் | 2 | பெரம்பலூர், வேப்பந்தட்டை |
| 18 | புதுக்கோட்டை | 7 | புதுக்கோட்டை, அறந்தாங்கி, ஆலங்குடி, கந்தர்வகோட்டை, கறம்பக்குடி, விராலிமலை, பொன்னமராவதி |
| 19 | இராமநாதபுரம் | 3 | இராமநாதபுரம், பரமக்குடி, கமுதி |
| 20 | சேலம் | 13 | சூரமங்கலம், அம்மாபேட்டை, ஆத்தூர், |

| வ. எண் | மாவட்டம் | எண்ணிக்கை | உழவர் சந்தைகள் |
|---|---|---|---|
| | | | தாதகாப்பட்டி, மேட்டூர், ஆட்டையாம்பட்டி, அஸ்தம்பட்டி, இளம்பிள்ளை, தம்பம்பட்டி, ஜலகண்டாபுரம், எடப்பாடி, வாழப்பாடி, மேச்சேரி |
| 21 | சிவகங்கை | 5 | சிவகங்கை, தேவகோட்டை, காரைக்குடி, திருப்பத்தூர், சிங்கம்புணரி |
| 22 | தஞ்சாவூர் | 6 | தஞ்சாவூர், கும்பகோணம், பட்டுக்கோட்டை, திருக்காட்டுப்பள்ளி, பாபநாசம், பேராவூரணி |
| 23 | தேனி | 7 | தேனி, கம்பம், போடிநாயக்கனூர், பெரியகுளம், தேவாரம், ஆண்டிப்பட்டி, சின்னமனூர் |
| 24 | திருநெல்வேலி | 5 | பாளையங்கோட்டை, கண்டியப்பேரி, மேலப்பாளையம், அம்பாசமுத்திரம், என்.ஜி.ஓ காலனி |
| 25 | தென்காசி | 2 | சங்கரன்கோவில், தென்காசி |
| 26 | திருப்பூர் | 6 | உடுமலைப்பேட்டை, திருப்பூர் (வடக்கு), திருப்பூர் (தெற்கு), |

| வ. எண் | மாவட்டம் | எண்ணிக்கை | உழவர் சந்தைகள் |
|---|---|---|---|
| | | | பல்லடம், காங்கேயம், தாராபுரம் |
| 27 | திருவள்ளூர் | 6 | திருத்தணி, திருவள்ளூர், அம்பத்தூர், பருத்திப்பட்டு, நாரவாரிக்குப்பம், பேரம்பாக்கம் |
| 28 | திருவண்ணா மலை | 8 | திருவண்ணாமலை, போளூர், ஆரணி, செய்யார், செங்கம், வந்தவாசி, கீழ்பென்னாத்தூர், தாமரைநகர் |
| 29 | திருவாரூர் | 7 | திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி-1, திருவாரூர், நீடாமங்கலம், முத்துப்பேட்டை, மன்னார்குடி-2, வலங்கைமான் |
| 30 | திருச்சிராப்பள் ளி | 8 | அண்ணாநகர், கே.கே.நகர், துறையூர், மணப்பாறை, முசிறி, துவாக்குடி, லால்குடி, மண்ணச்சநல்லூர் |
| 31 | தூத்துக்குடி | 2 | தூத்துக்குடி , கோவில்பட்டி |
| 32 | வேலூர் | 6 | வேலூர், காட்பாடி, குடியாத்தம், காகிதப்பட்டறை, பேரணாம்பட்டு, பள்ளிகொண்டா |
| 33 | இராணிப் பேட்டை | 2 | இராணிப்பேட்டை, ஆற்காடு |
| 34 | திருப்பத்தூர் | 3 | திருப்பத்தூர், |

| வ. எண் | மாவட்டம் | எண்ணிக்கை | உழவர் சந்தைகள் |
|---|---|---|---|
| | | | நாட்றாம்பள்ளி, வாணியம்பாடி |
| 35 | விழுப்புரம் | 4 | திண்டிவனம், விழுப்புரம், செஞ்சி, விக்கிரவாண்டி |
| 36 | கள்ளக்குறிச்சி | 3 | சங்கராபுரம், உளுந்தூர்பேட்டை, கள்ளக்குறிச்சி |
| 37 | விருதுநகர் | 8 | அருப்புக்கோட்டை, இராஜபாளையம்,. ஸ்ரீவில்லிபுத்தூர், விருதுநகர், சிவகாசி, சாத்தூர், காரியாப்பட்டி, தளவாய்புரம் |
| | **மொத்தம்** | **194** | |

உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், சுய உதவிக் குழுக்கள், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, கூட்டுறவுத் துறை ஆகியவற்றுக்கும் உழவர் சந்தைகளில் கடைகள் ஒதுக்கப்பட்டு, வேளாண் விளைபொருட்கள், மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள் மற்றும் தோட்டக்கலை இடுபொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. மாலை நேரத்தில் இயங்கும் 37 உழவர் சந்தைகளில் சிறுதானியங்கள், பருப்பு வகைகள் உள்ளிட்ட வேளாண்

விளைபொருட்கள் விற்பனை செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் சென்னையில் உள்ள பல்லாவரம், ஆவடி உழவர் சந்தைகளை நவீன ஒருங்கிணைந்த உழவர் சந்தைகளாக மறுசீரமைக்கவும், பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள வேப்பந்தட்டை உழவர் சந்தையினை எளம்பலூருக்கு இடமாற்றம் செய்யவும், திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி-I உழவர் சந்தையினை மீள பழைய இடத்திற்கே மாற்றம் செய்து புதிய கட்டடம் அமைக்கவும், 10 உழவர் சந்தைகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்திடவும், ரூ.20 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

மேலும், உயிர்ம வேளாண்மை முறையில் சாகுபடி செய்து விளைவிக்கப்படும் விளைபொருட்கள் அதிக அளவில் நுகர்வோருக்கு நேரடியாகச் சென்றடையும்

வகையிலும், விவசாயிகள் இவ்வாறான விளைபொருட்களை சிரமமின்றி விற்பனை செய்து இலாபகரமான விலை பெற்றிடவும் உழவர் சந்தைகளில் வாரம் ஒரு நாள் உயிர்ம வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்ய உரிய வசதிகள் செய்து தரப்படும்.

### 5.2.2 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள்

விவசாயிகளை ஒருங்கிணைத்து, உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களாக, கம்பெனி சட்டம் 1956/2013-இன் கீழ் பதிவு செய்து, அவர்தம் விளைபொருட்களை சந்தைப்படுத்தி, நல்ல விலை கிடைப்பதற்கும், அவர்களை வர்த்தகர்களாக மாற்றுவதற்கும், தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பினால் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**அட்டவணை**: 5.3 **மாவட்ட வாரியாக இத்துறை மற்றும் பிற முகமைகள் மூலம் உருவாக்கப்பட்ட உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் விவரம்**

| வ. எண் | மாவட்டம் | வேளாண்மை விற்பனைத்துறை (எண்கள்) | பிற முகமைகள் (எண்கள்) | கூடுதல் |
|---|---|---|---|---|
| 1 | அரியலூர் | 11 | 12 | 23 |
| 2 | கோயம்புத்தூர் | 12 | 44 | 56 |
| 3 | கடலூர் | 18 | 40 | 58 |
| 4 | செங்கல்பட்டு | 8 | 16 | 24 |
| 5 | தருமபுரி | 14 | 42 | 56 |
| 6 | திண்டுக்கல் | 12 | 46 | 58 |
| 7 | ஈரோடு | 16 | 61 | 77 |
| 8 | கள்ளக்குறிச்சி | 10 | 24 | 34 |
| 9 | காஞ்சிபுரம் | 8 | 10 | 18 |
| 10 | கன்னியாகுமரி | 5 | 31 | 36 |
| 11 | கரூர் | 9 | 28 | 37 |
| 12 | கிருஷ்ணகிரி | 14 | 52 | 66 |
| 13 | மதுரை | 15 | 40 | 55 |
| 14 | மயிலாடுதுறை | 5 | 18 | 23 |
| 15 | நாகப்பட்டினம் | 7 | 11 | 18 |
| 16 | நாமக்கல் | 12 | 51 | 63 |
| 17 | நீலகிரி | 9 | 23 | 32 |
| 18 | பெரம்பலூர் | 8 | 18 | 26 |

| | | | | |
|---|---|---|---|---|
| 19 | புதுக்கோட்டை | 12 | 39 | 51 |
| 20 | இராமநாதபுரம் | 10 | 47 | 57 |
| 21 | இராணிப்பேட்டை | 10 | 13 | 23 |
| 22 | சேலம் | 14 | 79 | 93 |
| 23 | சிவகங்கை | 10 | 39 | 49 |
| 24 | தென்காசி | 7 | 23 | 30 |
| 25 | தஞ்சாவூர் | 17 | 34 | 51 |
| 26 | தேனி | 9 | 37 | 46 |
| 27 | திருப்பத்தூர் | 6 | 19 | 25 |
| 28 | திருவண்ணாமலை | 20 | 50 | 70 |
| 29 | திருவாரூர் | 11 | 40 | 51 |
| 30 | தூத்துக்குடி | 7 | 35 | 42 |
| 31 | திருச்சிராப்பள்ளி | 15 | 56 | 71 |
| 32 | திருநெல்வேலி | 8 | 34 | 42 |
| 33 | திருப்பூர் | 8 | 36 | 44 |
| 34 | திருவள்ளூர் | 12 | 36 | 48 |
| 35 | வேலூர் | 6 | 19 | 25 |
| 36 | விழுப்புரம் | 11 | 35 | 46 |
| 37 | விருதுநகர் | 11 | **51** | **62** |
| | **மொத்தம்** | **397** | **1,289** | **1,686** |

**5.2.2.1 தமிழ்நாடு சிறுவிவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு**

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மூலம் 397 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் தமிழ்நாடு சிறுவிவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு மற்றும் தமிழ்நாடு நீர்ப்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டு ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன. இவற்றுள் 50 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் ஒன்றிய அரசுத் திட்டமான "10,000 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் (FPOs) உருவாக்கம் மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளன.

இத்துறையின் மூலம் உருவாக்கப்பட்ட 397 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் நிதி செயல்திறன் கீழ்வருமாறு:-




### 5.2.2.2 புதிய உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் ஏற்படுத்துதல்

சிறு, குறு விவசாயிகளை ஒருங்கிணைத்து அவர்களின் விளைபொருட்களுக்கான சந்தை வாய்ப்புகளை மேம்படுத்தி வருமானத்தை அதிகரித்திடும் வகையில் புதிய உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் உருவாக்கப்பட்டு ஒவ்வொரு பங்குதாரருக்கும் சமபங்கு மானியமாக 3 ஆண்டுகளில் மொத்தம் ரூ. 5,000/- வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். நடப்பாண்டில்,

ரூ.12 கோடி மாநில நிதி ஒதுக்கீட்டில் முதலாம் ஆண்டு சமபங்கு மானியமாக ஒவ்வொரு பங்குதாரருக்கும் ரூ.2,000/- வழங்கப்படும்.

**5.2.3 விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டம்**.

வேளாண் விளைபொருட்களில் அறுவடைக்குப் பிந்தைய இழப்பினைக் குறைக்கவும், நுகர்வோர், பதப்படுத்துபவர்கள், ஏற்றுமதியாளர்களுடன் விவசாயிகளை இணைக்கவும், பழங்கள், காய்கறிகள் மட்டுமன்றி சிறுதானியங்கள், பயறுவகைகள் மற்றும் எண்ணெய்வித்துக்களை மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களாக மாற்றி நுகர்வோருக்குத் தடையின்றி வழங்குவதன் மூலம் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவும், விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

தமிழ்நாட்டில், 84 முதன்மைப் பதப்படுத்தும் மையங்கள் 20 மாவட்டங்களில் நிறுவப்பட்டுள்ளன. இம்மையங்களில் சிப்பம் கட்டும் கூடம், குளிர்பதனக் கிடங்கு, சேமிப்புக் கிடங்கு, தரம் பிரிப்புக் கூடம், மற்றும் பதப்படுத்தும் இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன. இம்மையங்கள் சந்தை ஒருங்கிணைப்பு பங்குதாரர்களான (Market Intergration Partner) உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், வேளாண் தொழில் முனைவோர்கள், கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களால் செயல்படுத்தப்படுகின்றன.

### அட்டவணை:5.4 விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டம் (கட்டம் -I) – 64 எண்கள்

| வ. எண். | மாவட்டம் | முதன்மை பதப்படுத்தும் மையங்கள் |
|---|---|---|
| 1. | கிருஷ்ணகிரி (10) | ஓசூர், காமன்தொட்டி, தேன்கனிக்கோட்டை, தட்டிகானப்பள்ளி, இராயக்கோட்டை, ஆலப்பட்டி, குந்தாரப்பள்ளி, கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டினம், போச்சம்பள்ளி |

| | | |
|---|---|---|
| 2. | தருமபுரி (5) | பாலக்கோடு, தருமபுரி, அரூர், பாப்பாரப்பட்டி, பென்னாகரம் (கூட்டுறவு விற்பனை சங்கம்) |
| 3. | கோயம்புத்தூர் (7) | சூலூர், பூலுவாப்பட்டி, பிச்சனூர், வடக்கிபாளையம், பொள்ளாச்சி, ஆனைமலை, சிக்கதாசம்பாளையம். |
| 4. | நீலகிரி (9) | ஒசஹட்டி, அணிக்கொரை, தாவணை, புதுஅலஞ்சி, சுள்ளிக்கூடு, உப்பட்டி, அய்யங்கொல்லி, நீலகிரி (கூட்டுறவு விற்பனை சங்கம்), உதகை ரோஜா பூங்கா |
| 5. | திருச்சிராப்பள்ளி (12) | லால்குடி, எம்.புத்தூர், மண்ணச்சநல்லூர் – I, மண்ணச்சநல்லூர் – II, திருச்செந்துறை, பி.கே. அகரம், அரசலூர், பிடாரமங்கலம், உப்பிலியாபுரம் (தெற்கு), தாத்தையங்கார்பேட்டை, கள்ளிக்குடி, துறையூர் (கூட்டுறவு விற்பனை சங்கம்) |
| 6. | திண்டுக்கல் (5) | பழனி, கோபால்பட்டி, கவுஞ்சி, வேடசந்தூர், பழனி (கூட்டுறவு விற்பனை சங்கம்) |
| 7. | தேனி (5) | தேனி, சின்னமனூர், கம்பம் – I, கம்பம் – II, பெரியகுளம் |
| 8. | இராமநாதபுரம் (3) | பரமக்குடி, முதுகுளத்தூர், கமுதி (கூட்டுறவு விற்பனை சங்கம்) |
| 9. | தூத்துக்குடி (3) | ஸ்ரீவைகுண்டம், புதூர், விளாத்திகுளம் |
| 10. | திருநெல்வேலி (2) | இராமையன்பட்டி, வள்ளியூர் |
| 11. | தென்காசி (3) | சங்கரன்கோவில், கடையநல்லூர், பாவூர்சத்திரம் |

## அட்டவணை:5.5 விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டம் (கட்டம் - II) - 20 எண்கள்

| வ. எண் | மாவட்டம் | முதன்மை பதப்படுத்தும் மையங்கள் |
|---|---|---|
| 1. | சேலம் (5) | உத்தமசோழபுரம், தலைவாசல், வாழப்பாடி, எடப்பாடி, கொளத்தூர் |
| 2. | ஈரோடு (2) | அளுக்குளி, அந்தியூர் |
| 3. | திருவள்ளூர் (2) | திருவள்ளூர், ஆரணி |
| 4. | செங்கல்பட்டு (1) | மதுராந்தகம் |
| 5. | காஞ்சிபுரம் (1) | சுங்குவார்சத்திரம் |
| 6. | திருவண்ணாமலை (2) | படவேடு, குப்பநத்தம் |
| 7. | கடலூர் (2) | பண்ருட்டி, குறிஞ்சிப்பாடி |
| 8. | விழுப்புரம் (2) | ஒலக்கூர், வானூர் |
| 9. | கரூர் (3) | அரவக்குறிச்சி (கொடையூர்), மேட்டுமகாதானபுரம், வேலாயுதம்பாளையம் |

**சிறப்பு கட்டமைப்பு வசதிகள்:**

**i) அப்பீடா தரம் பெற்ற சிப்பம் கட்டும் கூடம்** - போச்சம்பள்ளி, ஓசூர், சூலூர், சின்னமனூர், எம்.புத்தூர் ஆகிய 5 இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

**ii) காமா கதிரியக்கக் கூடம் (Gamma Irradiation Unit)** – போச்சம்பள்ளி முதன்மை பதப்படுத்தும் நிலையத்தில் செயல்பட்டு வருகிறது. 320 மெ.டன் மிளகாய், மஞ்சள் தூள், அப்பளம், கொத்தமல்லி, வெந்தயம், கடுகு, கேழ்வரகு மாவு, முருங்கை இலைப்பொடி, லாக்டோஸ் பொடி, தேநீர் பைகள், நிலக்கடலை, முந்திரி, வெல்லம் ஆகியன சேவைக் கட்டண முறையில் பதப்படுத்தி வழங்கப்பட்டுள்ளன.

**iii) தனித்த துரித உறைநிலைக் கூடம் (Individually Quick freezing Unit)** - போச்சம்பள்ளி முதன்மை பதப்படுத்தும் நிலையத்தில் செயல்பட்டு வருகிறது. 1,784 மெ.டன் சின்ன வெங்காயம், பெல்லாரி வெங்காயம், தக்காளி, கேரட், தேங்காய், முள்ளங்கி, முருங்கை, மாம்பழம், எலுமிச்சை போன்ற விளைபொருட்கள் தனித்த துரித உறைநிலைக் கூடத்தில் பதப்படுத்தப்பட்டு உள்ளூர் உபயோகத்திற்கு வழங்கப்பட்டுள்ளன.

போச்சம்பள்ளியில் உள்ள அப்பீடா சிப்பம் கட்டும் கூடத்தில் 115 மெ.டன் மா, காய்கறிகள், மசாலா பொருட்கள் பதப்படுத்தப்பட்டு ஐக்கிய அரபு அமீரகம், ஜெர்மனி, பிரான்சு, அயர்லாந்து, கனடா, ஜப்பான், இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கு 90 மெ.டன் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

மேலும், வேளாண் ஏற்றுமதி சிறப்பு கட்டமைப்புகளை வலுப்படுத்த ரூ.5.20 கோடி மதிப்பீட்டில் சுங்குவார்சத்திரம், சூலூர், சின்னமனூர், எம்.புத்தூர், ஓசூர் ஆகிய முதன்மை பதப்படுத்தும் மையங்களில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2026-27 ஆம் ஆண்டில் முதன்மை பதப்படுத்தும் நிலையங்களை மேம்படுத்திட நடைபெற்று வரும் பணிகள்:

1) கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளியில், வெப்பநீர் பதப்படுத்தும் இயந்திரம்,

தரம்பிரிப்புகூடம், குளிர்பதனக்கிடங்கு ஆகிய கூடுதல் வசதிகள் ரூ 1.94 கோடி நிதி ஒதுக்கீட்டில் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விவசாயிகள், பதப்படுத்துவோர் மற்றும் ஏற்றுமதியாளர்கள் இவ்வசதிகளைப் பயன்படுத்தி சீனா, தென்கொரியா, ஜப்பான், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு, மாம்பழம், மாதுளை, காய்கறிகள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்ய இயலும்.

2) ஏற்கனவே செயல்பாட்டில் உள்ள நான்கு முதன்மை பதப்படுத்தும் மையங்கள் மற்றும் இரண்டு சிறப்பு சந்தை வளாகங்களின் செயல்திறனை மேம்படுத்தவும், மதிப்புக்கூட்டுதலை அதிகரிக்கவும், அவற்றை இரண்டாம்

நிலை மற்றும் மூன்றாம் நிலை பதப்படுத்தும் மையங்களாக மேம்படுத்தத் தேவையான கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளவும் இயந்திரங்களை நிறுவுவதற்கும் ரூ.3 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அவற்றின் விவரங்கள் கீழ்வருமாறு:

| வ. எண் | கட்டமைப்பு | இடம் |
|---|---|---|
| 1 | முதன்மை பதப்படுத்தும் நிலையம் - வாழை | எம்.புத்தூர், திருச்சிராப்பள்ளி |
| 2 | முதன்மை பதப்படுத்தும் நிலையம் – வெங்காயம் | பி.கே.அகரம், திருச்சிராப்பள்ளி |
| 3 | முதன்மை பதப்படுத்தும் நிலையம் – புளி | கோபால்பட்டி, திண்டுக்கல் |
| 4 | முதன்மை பதப்படுத்தும் நிலையம் – முருங்கை | வேடசந்தூர், திண்டுக்கல் |
| 5 | சிறப்பு வணிக வளாகம் - வெங்காயம் | செட்டிகுளம், பெரம்பலூர் |
| 6 | சிறப்பு வணிக வளாகம் - தென்னை | ராஜேந்திரபுரம், புதுக்கோட்டை |

**5.2.3.1 குளிர்பதனக் கிடங்குகள்**:

அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைப்பதிலும், உணவுப் பொருட்களின் தரத்தைப் பாதுகாப்பதிலும், வேளாண் ஏற்றுமதியை ஊக்குவிப்பதிலும், குளிர்பதனக் கிடங்குகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் மூலம் மொத்தம் 41,705 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 279 குளிர்பதனக் கிடங்குகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவற்றை விவசாயிகள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், தொழில் முனைவோர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

**அட்டவணை : 5.6 கொள்ளளவு அடிப்படையில் மாநிலத்தில் உள்ள குளிர்பதனக் கிடங்குகளின் விவரம்**

| கொள்ளளவு (மெ. டன்) | எண்ணிக்கை | மொத்த கொள்ளளவு (மெ.டன்) |
|---|---|---|
| 5000 | 3 | 15,000 |
| 1001-2000 | 11 | 15,000 |
| 201-1000 | 15 | 6,150 |
| 101-200 | 17 | 1,855 |
| 51- 100 | 12 | 650 |
| 10– 50 | 113 | 2,571 |
| <10 | 108 | 479 |
| **மொத்தம்** | **279** | **41,705** |

மேலும், விவசாயிகளின் கோரிக்கைகளின் அடிப்படையில், பழங்கள் மற்றும் காய்கறிகளை சேமிப்பதற்காக 1,700 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்கு வசதிகள் ஆறு இடங்களில், ரூ.13.31 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகின்றன.

i. ஈரோடு மாவட்டம் – சித்தோடு

ii. திருநெல்வேலி மாவட்டம் – திசையன்விளை
iii. சிவகங்கை மாவட்டம் – இளையான்குடி
iv. திருவண்ணாமலை மாவட்டம் – நாயுடுமங்கலம்
v. இராமநாதபுரம் மாவட்டம் – கமுதி
vi. புதுக்கோட்டை மாவட்டம் – கீரமங்கலம்

இது தவிர, நடப்பாண்டில், துறைமுகம் மற்றும் விமான சேவை முனையங்களுக்கு அருகில் இருக்கும் காஞ்சிபுரம், திருச்சிராப்பள்ளி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் தலா 500 மெ.டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்குகள் பொது–தனியார் கூட்டாண்மை (PPP) முறையில் ஏற்படுத்தப்படும். இதன் மூலம், வேளாண் விளைபொருட்களின் ஏற்றுமதி வாய்ப்புகளை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### 5.2.3.2 வேளாண் விளைபொருட்களுக்கான மதிப்புக் கூட்டும் மையங்கள்:

வேளாண் விளைபொருட்களை மதிப்புக்கூட்டி சந்தைப்படுத்தவும், விவசாயிகளின் வருமானத்தை உயர்த்திடவும், ஏற்றுமதி வாய்ப்புகளை அதிகரித்திடும் நோக்கத்தோடு, மதிப்புக்கூட்டு மையங்கள் அமைக்கப்பட்டு விவசாயிகள், தொழில் முனைவோர்கள் மற்றும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

**அட்டவணை : 5.7 மதிப்புக்கூட்டு மையங்கள்**

| வ. எண் | மதிப்புக்கூட்டு மையங்கள் | அமைந்துள்ள இடம்/ மாவட்டம் |
|---|---|---|
| 1 | தென்னை | செண்பகராமன்புதூர்/ கன்னியாகுமரி |
| 2 | தென்னை | பட்டுக்கோட்டை/ தஞ்சாவூர் |
| 3 | மக்காச்சோள விற்பனை மேம்பாட்டு மையம் | தொழுதூர்/ கடலூர் |

| | | |
|---|---|---|
| 4 | சிறு தானியங்கள் பதப்படுத்தும் மையம் | கோத்தகிரி/நீலகிரி |
| 5 | வாழை ஏல மையம் | களக்காடு/ திருநெல்வேலி |
| 6 | சமையல் எண்ணெய்க்கான நவீன சிப்பம் கட்டும் வசதியுடன் கூடிய சந்தை ஊக்குவிப்பு மையம் | தெள்ளானந்தல்/ திருவண்ணாமலை |
| 7 | காபிக் கொட்டை உடைத்து தரம் பிரிக்கும் இயந்திரம், மிளகு தரம்பிரித்து பொடி செய்யும் இயந்திரம் | அய்யன்கொல்லி/நீலகிரி |
| 8 | மிளகு பதப்படுத்தும் மையம் | கொல்லிமலை/ நாமக்கல் |
| 9 | மஞ்சள் மெருகேற்றும் மற்றும் வேகவைக்கும் இயந்திரங்கள் | ஈரோடு, தருமபுரி மற்றும் கள்ளக்குறிச்சி |

**மேலும், பெரம்பலூர் மாவட்டத்தில் சின்னவெங்காயம் விற்பனையை ஊக்குவிற்பதற்கான மையம் ரூ.3.65 கோடி மதிப்பீட்டிலும், கடலூர் மாவட்டத்தில் பலா மதிப்புக்கூட்டும் மையம் ரூ.16.13 கோடி மதிப்பீட்டிலும், தருமபுரி மாவட்டத்தில்**

ஒருங்கிணைந்த புளி வணிக வளாகம் **ரூ.9.25 கோடி** மதிப்பீட்டிலும் அமைத்திடப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**5.2.3.3 வேளாண் பதப்படுத்துதல் மற்றும் மதிப்புக்கூட்டலில் வேளாண் தொழில் முனைவோரை ஊக்குவித்தல்**

வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களுக்கான நவீன மதிப்புக்கூட்டும் மையங்கள் ஏற்படுத்த முன்வரும் தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் வகையில், ரூ.50 கோடி நிதி ஒதுக்கீட்டில் 100 மதிப்புக்கூட்டும் மையங்களை நிறுவுவதற்கான திட்டம் நடப்பாண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**5.2.3.4 தமிழ்நாடு சிறுதானிய இயக்கத்தின் கீழ் சிறுதானியங்கள் பதப்படுத்தும் மையங்கள் அமைத்தல்:**

தமிழ்நாட்டில், மக்களிடையே சிறு தானியங்களின் பயன்பாட்டை அதிகரித்திடவும்

சிறுதானியங்களை மதிப்பு கூட்டி அதன் மூலம் விவசாயிகளின் வருமானத்தை உயர்த்திடவும் 25 சிறுதானிய பதப்படுத்தும் மையங்கள் ஏற்படுத்தப்படும்.

### 5.2.4 வேளாண் உட்கட்டமைப்பு நிதியின் (AIF) கீழ் கடன் வசதிபெறும் திட்டம்

விவசாயிகள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், வேளாண் தொழில் முனைவோர்கள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் ஆகியோர் வேளாண் கட்டமைப்புகளை உருவாக்க ஒன்றிய அரசின் வேளாண் உட்கட்டமைப்பு நிதித்திட்டத்தில் கடன் உதவி வழங்கப்படுகிறது. அதிகபட்சமாக ரூ.2 கோடி வரையிலான கடனுக்கு ஏழு ஆண்டு காலத்திற்கு, ஆண்டொன்றுக்கு 3 சதவீத வட்டிக் குறைப்பு (Interest Subvention) மற்றும் கடன் உத்தரவாதம் (Credit Guarantee) வழங்கப்படுகிறது. பிற மூலதன மானியத் திட்டங்களின் கடன்

பகுதியையும் இத்திட்டத்தின் கீழ் ஒருங்கிணைத்துப் பயன்பெறலாம்.

### 5.2.5 அக்மார்க் தரம்பிரிப்பு

வேளாண் மற்றும் உணவுப் பொருட்களின் தரம் மற்றும் தூய்மை உரிய பரிசோதனை வாயிலாக உறுதி செய்யப்பட்டு அக்மார்க் முத்திரை அரசால் வழங்கப்படுகிறது. உற்பத்தி செய்யப்படும் நிலையத்திலேயே மாதிரிகள் எடுக்கப்பட்டு சோதிக்கப்படுவதால் கலப்படம் தவிர்க்கப்பட்டு பாதுகாப்பான உணவுப்பொருட்கள் நுகர்வோருக்குக் கிடைக்கச்செய்யப்படுவதுடன் விவசாயிகளின் விளை பொருட்களுக்கு நல்ல சந்தை விலை பெறுவதற்கான வாய்ப்பும் ஏற்படுத்தப்படுகிறது.

தமிழ்நாட்டின் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை, இந்திய அரசின் விற்பனை மற்றும் ஆய்வு (DMI) இயக்குநரகமும்

இணைந்து, 30 மாநில அக்மார்க் தர ஆய்வகங்கள் மற்றும் மாநிலத் தலைமையகத்தில் ஒரு முதன்மை ஆய்வகத்துடன் அக்மார்க் தரம்பிரிப்புத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம், 1937 ஆம் ஆண்டின் வேளாண் விளைபொருள் (தரமதிப்பீடு மற்றும் குறியிடுதல்) (1986-ல் திருத்தப்பட்ட) சட்டத்தால் சட்டப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது மற்றும் 248 வேளாண் விளைபொருட்களுக்கான தர விவரக்குறிப்புகளையும் கொண்டுள்ளது.

தமிழ்நாட்டில், தற்போது நெய், சமையல் எண்ணெய், தானியங்கள், பருப்பு வகைகள், தேன், முழு மற்றும் அரைத்த மசாலாப் பொருட்கள், வெண்ணெய், புளி, சத்து மாவு, பெருங்காயம் போன்ற 26 வேளாண் விளைபொருட்களுக்கு தரமதிப்பீடு செய்யப்படுகிறது.

“**அக்மார்க்**” திட்டத்தின் கீழ் 1,130 சிப்பம் கட்டுவோர் அக்மார்க் உரிமம் பெற்றுள்ளனர்.

உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் பொருட்களுக்கான விற்பனையை அதிகரிக்க உதவும் நோக்கில், 250 நிறுவனங்கள் அக்மார்க் திட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

நடப்பாண்டில், ரூ.1.04 கோடி நிதி ஒதுக்கீட்டில், 42.95 இலட்சம் குவிண்டால் உணவுப்பொருட்களை தரம்பிரிப்பு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

**அட்டவணை: 5.8 மாவட்ட வாரியாக அக்மார்க் தரம்பிரிப்பு ஆய்வகம் அமைந்துள்ள இடங்கள்**

| வ. எண் | மாவட்டம் | ஆய்வகம் அமைந்துள்ள இடங்கள் |
|---|---|---|
| 1 | சென்னை | முதன்மை ஆய்வகம் |
| 2 | காஞ்சிபுரம் (2) (இருப்பு சென்னை) | சென்னை (வடக்கு), சென்னை (தெற்கு) |
| 3 | வேலூர் | வேலூர் |
| 4 | கடலூர் | பண்ருட்டி |
| 5 | தஞ்சாவூர் | தஞ்சாவூர் |
| 6 | திருச்சிராப்பள்ளி (2) | திருச்சிராப்பள்ளி-I , திருச்சிராப்பள்ளி-II |
| 7 | கரூர் | கரூர் |

| வ. எண் | மாவட்டம் | ஆய்வகம் அமைந்துள்ள இடங்கள் |
|---|---|---|
| 8 | மதுரை(2) | மதுரை (வடக்கு),<br>மதுரை (தெற்கு) |
| 9 | தேனி | தேனி |
| 10 | திண்டுக்கல் | திண்டுக்கல் |
| 11 | விருதுநகர் | விருதுநகர் |
| 12 | திருநெல்வேலி | திருநெல்வேலி |
| 13 | தென்காசி | தென்காசி |
| 14 | தூத்துக்குடி | தூத்துக்குடி |
| 15 | கன்னியாகுமரி(2) | நாகர்கோவில், மார்த்தாண்டம் |
| 16 | சேலம் | சேலம் |
| 17 | தருமபுரி | தருமபுரி |
| 18 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் |
| 19 | ஈரோடு(4) | பெருந்துறை, ஈரோடு-I, ஈரோடு-II<br>சித்தோடு |
| 20 | திருப்பூர்(5) | திருப்பூர், பல்லடம், காங்கேயம்-I,<br>காங்கேயம்-II, வெள்ளக் கோயில் |

## 5.2.6 துறைப் பணியாளர்கள் விவரம்

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையில் 1,329 பணியிடங்களும், விற்பனைக்குழுவில் 1,674 பணியிடங்களும் ஒப்பளிக்கப்பட்டுள்ளன.

## அட்டவணை: 5.9- துறைப் பணியாளர்கள் விவரம்

| வ. எண் | பணியிடம் | ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | இயக்குநர் | 1 |
| 2 | வேளாண்மை கூடுதல் இயக்குநர் | 1 |
| 3 | வேளாண்மை இணை இயக்குநர் | 2 |
| 4 | வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) | 40 |
| 5 | வேளாண்மை உதவி இயக்குநர் | 5 |
| 6 | வேளாண்மை அலுவலர் | 170 |
| 7 | துணை வேளாண்மை அலுவலர் | 47 |
| 8 | உதவி வேளாண்மை அலுவலர் | 627 |
| 9 | ஆட்சி அலுவலர் | 1 |
| 10 | உதவி கணக்கு அலுவலர் | 1 |
| 11 | இதர பணியாளர்கள் | 434 |
| | **மொத்தம்** | **1,329** |

## அட்டவணை: 5.10- விற்பனைக்குழு பணியாளர்கள் விவரம்

| வ.எண் | பதவியின் பெயர் | ஒப்பளிக்கப்பட்ட பணியிடம் |
|---|---|---|
| 1 | முதுநிலை செயலாளர்/ வேளாண்மை துணை இயக்குநர் | 4 |
| 2 | செயலாளர் | 22 |
| 3 | கண்காணிப்பாளர்/ உரிமையிட ஆய்வாளர்/மேலாளர் | 202 |
| 4 | மேற்பார்வையாளர் | 346 |
| 5 | பொறியியல் மேற்பார்வையாளர் | 9 |
| 6 | திரைப்படக் கருவி இயக்குநர் | 1 |

| | | |
|---|---|---|
| 7 | இளநிலை உதவியாளர் | 296 |
| 8 | தட்டச்சர்/சுருக்குத்தட்டச்சர் | 21 |
| 9 | பிரச்சார ஆய்வாளர்/விழிப்புக்குழு ஆய்வாளர் | 3 |
| 10 | பணிபார்வையாளர் | 2 |
| 11 | ஓட்டுநர் | 28 |
| 12 | களக்கண்காணி | 94 |
| 13 | பதிவறை எழுத்தர் | 42 |
| 14 | அலுவலக உதவியாளர் | 345 |
| 15 | காவலர் | 225 |
| 16 | தோட்டக்காரர் | 4 |
| 17 | துப்புரவுப் பணியாளர் | 10 |
| 18 | ஆய்வக உடனாள் | 20 |
| | **மொத்தம்** | **1,674** |

## 5.3. தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம்

1970-ஆம் ஆண்டில், விற்பனைக் குழுக்களின் செயல்பாடுகளை முறைப்படுத்தும் நோக்கத்துடன் தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் அமைக்கப்பட்டது. பின்பு, சட்டபூர்வ வாரியமாக தமிழ்நாடு வேளாண்

விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) சட்டம் 1987-இன்படி திருத்தி அமைக்கப்பட்டது.

### 5.3.1. நிதி ஆதாரம்

விற்பனைக் குழுக்கள் வசூலிக்கும் உரிமக்கட்டணம் மற்றும் சந்தைக் கட்டணத்திலிருந்து 15 சதவீதம் தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் பங்குத் தொகையாகப் பெறப்பட்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) சட்டம் 1987-இன்படி சந்தை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன,

### 5.3.2. தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் செயல்பாடுகள்

1. மெகா உணவுப்பூங்கா, வேளாண் பதப்படுத்தும் தொகுப்புகள் - திட்ட செயலாக்க முகமை
2. வேளாண் ஏற்றுமதி ஊக்குவிப்பு நடவடிக்கைகள்

3. விலை ஆதரவுத் திட்டத்திற்கு மாநில அளவிலான முகமை
4. பன்னாட்டு மலர் ஏல மையம் செயல்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல்
5. விவசாயிகள் மற்றும் அலுவலர்களுக்குப் பயிற்சிகள்
6. வாரிய நிதி மற்றும் சந்தை மேம்பாட்டு நிதியை நிர்வகித்தல்
7. பொறியியல் பிரிவின் மூலம் சந்தைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் பராமரித்தல்

**5.3.2.1 உணவுப் பூங்காக்கள் அமைத்தல்**

உணவு பதப்படுத்துதலைத் தமிழ்நாட்டில் ஊக்குவிக்கவும் வேளாண் தொழில் முனையும் ஆர்வலர்கள் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலையினை நிறுவுவதற்காக பொதுவான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும் உணவுப் பூங்காக்கள் மற்றும் வேளாண் பதப்படுத்தும் தொகுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

**i) மெகா உணவுப் பூங்கா**

திருநெல்வேலி மாவட்டம், கங்கை கொண்டானில் உள்ள சிப்காட் தொழிற்பேட்டையில் மெகா உணவுப்பூங்கா 50 ஏக்கர் பரப்பளவில் ரூ.77.02 கோடி திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

சேமிப்புக்கிடங்குகள், குளிர்பதனக்கிடங்கு, பழுக்க வைக்கும் அறை, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், வாகனம் நிறுத்துமிடம், சாலை வசதிகள், விவசாயிகள் சேவை மையம் உள்ளிட்ட அடிப்படை மற்றும் பொதுக்கட்டமைப்பு வசதிகள் 22 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 28 ஏக்கர் பரப்பில் தொழில் மனைகள் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைக்க தொழில் முனைவோர்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

**ii) வேளாண் பதப்படுத்தும் தொகுப்புகள்:**

வேளாண் பதப்படுத்தும் தொகுப்புகள் கடலூர், தேனி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, சேலம், மதுரை ஆகிய ஏழு இடங்களில் சேமிப்புக்கிடங்கு, குளிர்பதனக்கிடங்கு, பழுக்க வைக்கும் அறை, தரம் பிரித்தல் மற்றும் வகைப்படுத்தும் கூடம், சிப்பம் கட்டும் அறை உள்ளிட்ட அடிப்படை மற்றும் பொதுக்கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளன. தொழில் மனைகள் தொழில்முனைவோருக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**5.3.2.2 வேளாண் ஏற்றுமதி ஊக்குவிப்பு நடவடிக்கைகள்**

தமிழ்நாடு அரசு வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த பொருட்களின் ஏற்றுமதியை மேம்படுத்திட பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டு

வருகிறது. அதன் ஒரு பகுதியாக, புவிசார் குறியீடு பெறவும், அங்கீகரிக்கப்பட்ட பயனர் பதிவு (Authorized User Registration) பெறுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 5.3.2.2.1 புவிசார் குறியீடு பெறுதல்

ஒரு குறிப்பிட்ட புவியியல் பகுதியில் உள்ள சிறப்புப் பண்புகள், தரம் மற்றும் பாரம்பரிய முக்கியத்துவத்தைக் கொண்ட தனித்துவமான வேளாண் பொருட்களின் சந்தைத் தேவையை அதிகரிக்கவும், ஏற்றுமதி வாய்ப்புகளை உருவாக்கவும், தமிழ்நாட்டில் 41 வேளாண் பொருட்களுக்குப் புவிசார் குறியீடு பெற விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. இதுவரை, சோழவந்தான் வெற்றிலை, பண்ருட்டி முந்திரி, பண்ருட்டி பலாப்பழம், விருதுநகர் சம்பா வத்தல், புளியங்குடி எலுமிச்சை, செட்டிக்குளம் சின்ன வெங்காயம், இராமநாதபுரம் சித்திரைக்கார் அரிசி,

தூயமல்லி அரிசி மற்றும் கவுந்தம்பாடி நாட்டுச்சர்க்கரை ஆகிய 9 பொருட்களுக்கு புவிசார் குறியீடு (GI) பதிவு பெறப்பட்டுள்ளது.

**அட்டவணை: 5.11 புவிசார் குறியீடு விண்ணப்பிக்கப்பட்டு அங்கீகாரம் எதிர்நோக்கப்படும் விளைபொருட்கள் விபரம்**

| வ. எண் | மாவட்டம் | வேளாண் பொருட்கள் |
|---|---|---|
| 1 | சேலம் | சேலம் கண்ணாடி கத்திரி |
| 2 | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி அரசம்பட்டி தென்னை |
| 3 | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி பன்னீர் ரோஜா |
| 4 | தஞ்சாவூர் | தஞ்சாவூர் பேராவூரணி தென்னை |
| 5 | திருப்பூர் | மூலனூர் குட்டை முருங்கை |
| 6 | தூத்துக்குடி | தூத்துக்குடி விளாத்திகுளம் மிளகாய் |
| 7 | விருதுநகர் | சாத்தூர் வெள்ளரி |
| 8 | கடலூர் | கடலூர் கோட்டிமுளை கத்தரிக்காய் |
| 9 | தஞ்சாவூர் | தஞ்சாவூர் வீரமாங்குடி அச்சு வெல்லம் |
| 10 | மதுரை | மதுரை செங்கரும்பு |
| 11 | சிவகங்கை | சிவகங்கை கருப்புகவுனி அரிசி |
| 12 | கன்னியாகுமரி | கன்னியாகுமரி ஆண்டார்குளம் கத்திரிக்காய் |
| 13 | விருதுநகர் | விருதுநகர் அதலைக்காய் |
| 14 | விழுப்புரம் | திண்டிவனம் பனிப்பயறு |

| வ. எண் | மாவட்டம் | வேளாண் பொருட்கள் |
|---|---|---|
| 15 | கரூர் | கரூர் சேங்கல்துவரை |
| 16 | திருவண்ணாமலை | ஜவ்வாது மலை சாமை |
| 17 | ஈரோடு | சத்தியமங்கலம் செவ்வாழை |
| 18 | நாமக்கல் | கொல்லிமலை மிளகு |
| 19 | இராணிப்பேட்டை | மீனாம்பூர் சீரக சம்பா |
| 20 | திண்டுக்கல் | அய்யம்பாளையம் நெட்டை தென்னை |
| 21 | கரூர், சேலம் | செஞ்சோளம் |
| 22 | கடலூர் | புவனகிரி மிதி பாகற்காய் |
| 23 | கிருஷ்ணகிரி | உரிகம்புளி |
| 24 | திருநெல்வேலி | திருநெல்வேலி அவுரி இலை |
| 25 | தேனி | ஓடைப்பட்டி விதையில்லா திராட்சை |
| 26 | கரூர், திண்டுக்கல், திருப்பூர் | செங்காந்தள் (கண்வலி) விதை |
| 27 | கடலூர் | நல்லூர் வரகு |
| 28 | நாகப்பட்டினம் | வேதாரண்யம் முல்லை |
| 29 | திண்டுக்கல் | நத்தம் புளி |
| 30 | திண்டுக்கல் | ஆயக்குடி கொய்யா |
| 31 | திண்டுக்கல் | கப்பல்பட்டி கரும்பு முருங்கை |
| 32 | கோயமுத்தூர் | பொள்ளாச்சி ஜாதிக்காய் & ஜாதிபத்திரி |

இப்புவிசார் குறியீடு பெற்ற பொருட்கள் சந்தைப்படுத்துவதை மேம்படுத்தும் நோக்கில், அறிவிக்கப்பட்ட புவிசார் பகுதிகளைச் சேர்ந்த

விவசாயிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட பயனர் பதிவு பெறுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதுவரை 1090 விவசாயிகள் அங்கீகரிக்கப்பட்ட பயனர் பதிவு பெற்றிட துறையின் மூலம் புவிசார் குறியீடு பதிவகத்தில் (GI Registry) விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், அவர்கள் தங்களது விளைபொருட்களை பதிவு செய்யப்பட்ட புவிசார் குறியீட்டு (GI) அடையாளத்துடன் சந்தைப்படுத்தி, மேம்பட்ட சந்தைவாய்ப்புகளைப் பெற இயலும்.

### 5.3.2.3 விலை ஆதரவுத் திட்டம்

அறுவடைக்காலங்களில் ஏற்படும் விலை வீழ்ச்சியிலிருந்து விவசாயிகளைப் பாதுகாக்கும் நோக்கத்துடன், பயறு வகைகள், கொப்பரை போன்ற விளைபொருட்களுக்கு "விலை ஆதரவுத் திட்டம்" செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் பயறு வகைகள் (உளுந்து, பச்சைப்பயறு, துவரை), கொப்பரை போன்ற

விளைபொருட்களின் சந்தை விலை, குறைந்தபட்ச ஆதரவு விலையை விடக்குறையும் போது சராசரி தரமதிப்பீட்டுத் தரத்தில் (Fair Average Quality) குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல் செய்யப்படுகிறது, தமிழ்நாடு மாநில வேளாண் விற்பனை வாரியம் (TNSAMB) மாநில அளவிலான முகமையாகவும், தேசிய வேளாண் கூட்டுறவு விற்பனை இணையம் (NAFED) மற்றும் தேசிய கூட்டுறவு நுகர்வோர் கூட்டமைப்பு (NCCF) மத்தியக் கொள்முதல் முகமைகளாகவும், ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் முதன்மைக் கொள்முதல் மையங்களாகவும் (Primary Procurement Centres) செயல்படுகின்றன.

2026 ஆம் ஆண்டில், 1,098 விவசாயிகளிடமிருந்து 974.80 மெட்ரிக் டன் பச்சைப்பயறு ரூ. 8.55 கோடி மதிப்பில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

#### 5.3.2.4 பன்னாட்டு மலர் ஏல மையம்

கிருஷ்ணகிரி மாவட்டம் மோரனப்பள்ளியில் பன்னாட்டு மலர் ஏல மையம் அமைக்கப்பட்டுள்ளது. குளிர்பதனக்கிடங்கு, ஏல மையம், தரம் பிரித்தல், கையாளுதல், சிப்பம் கட்டுதல், பயிற்சி அறை மற்றும் கடைகள் உள்ளிட்ட வசதிகள் இம்மையத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ரோஜாக்கள், சாமந்திப்பூக்கள், கார்நேசன், ஜெர்பரா போன்ற கொய் மலர்கள் மற்றும் கொய்-இலை இரகங்கள் வர்த்தகம் செய்யப்படுகின்றன. நடப்பாண்டில் இதுவரை, 83,870 தண்டுகள் ரூ.9.30 இலட்சம் மதிப்பில் வர்த்தகம் செய்யப்பட்டுள்ளன. இம்மையத்தின் செயல்திறனை மேம்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

#### 5.3.2.5. திறன் மேம்பாட்டுப் பயிற்சி

சேலம் மாவட்டத்தில் மாநில அளவிலான பயிற்சி மையத்தில் வேளாண்மை விற்பனை

மற்றும் வேளாண் வணிகத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கான வேளாண் பொருட்களை சந்தைப்படுத்தல், மின்னணு வர்த்தகம், அறுவடைப்பின் செய் நேர்த்தி, அக்மார்க் ஆய்வகம் மூலம் தரக்கட்டுப்பாடு தொடர்பான பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளும், விவசாயிகளுக்கு, உணவு பதப்படுத்துதல், மதிப்புக்கூட்டுதல், ஏற்றுமதி தொடர்பான பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

2026-27 ஆம் ஆண்டில், 39 பயிற்சிகள் ரூ.25.22 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் நடத்திட திட்டமிடப்பட்டு நடைபெற்று வருகிறது.

**5.3.2.6 கட்டுமானம் / பராமரிப்புப் பணிகள்**

வேளாண்மை விற்பனை வாரியத்தின் பொறியியல் பிரிவின் மூலம் உழவர் சந்தைகள் புதுப்பித்தல், புதிய ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் அமைத்தல், சேமிப்புக் கிடங்குகள் மற்றும் குளிர்சாதன வசதிகள்

அமைத்தல், ஆய்வகங்கள் நவீனமயமாக்கல், வேளாண் வணிக மையங்கள் போன்ற கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும் வலுப்படுத்தவும் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2026–27 ஆம் ஆண்டிலும் இப்பணிகள் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 5.3.2.7 உயிர்ம வேளாண் பொருட்களைச் சந்தைப்படுத்த ஊக்குவித்தல்

உயிர்ம வேளாண் பொருட்களின் சந்தை மற்றும் ஏற்றுமதி வாய்ப்புகளை விரிவுபடுத்தி விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தும் நோக்கில், உற்பத்தியாளர்- வர்த்தகர்கள் இணைப்பு, தேசிய மற்றும் சர்வதேச வேளாண் கண்காட்சிகளில் பங்கேற்பு, சந்தை மேம்பாட்டு நடவடிக்கைகள் ஆகியவை மேற்கொள்ளப்படும். நடப்பாண்டில் வல்லுநர்களைக் கொண்ட தனிப்பிரிவு அமைக்கப்பட்டு, பாரம்பரிய நெல், மிளகாய், மிளகு மற்றும் மஞ்சள் போன்ற உயிர்ம வேளாண் விளை

பொருட்களை சந்தைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

2026-27 ஆம் ஆண்டில், ரூ.3 கோடி நிதி ஒதுக்கீட்டில் இப்பணிகள் செயல்படுத்தப்படும்.

## இணைப்பு -I

## வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ள கட்டமைப்பு வசதிகள் (எண்களில்)

| வ. எண் | மாவட்டம் | ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் | கிடங்குகள் | கிடங்குகளின் மொத்த கொள்ளளவு (மெ.டன்) | பரிவர்த்தனைக் கூடம் | வணிகர் கடைகள் | உலர்களம் | குளிர்பதனக் கிடங்குகள் | குளிர்பதனக் கிடங்குகளின் மொத்த கொள்ளளவு (மெ.டன்) | சிறப்பு வணிக வளாகம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 3 | 9 | 13800 | 2 | -- | 6 | 3 | 15 | -- |
| 2 | செங்கல்பட்டு | 4 | 2 | 2600 | 1 | -- | 2 | 1 | 5 | -- |
| 3 | திருவள்ளூர் | 8 | 9 | 18000 | 5 | -- | 7 | 3 | 7005 | -- |
| 4 | கடலூர் | 11 | 20 | 31600 | 29 | 88 | 13 | 11 | 1602 | -- |
| 5 | விழுப்புரம் | 11 | 22 | 53100 | 22 | 26 | 12 | 4 | 50 | -- |
| 6 | கள்ளக்குறிச்சி | 8 | 20 | 20300 | 12 | 13 | 6 | 3 | 55 | -- |
| 7 | வேலூர் | 3 | 7 | 5800 | 3 | 27 | 3 | 5 | 39 | -- |
| 8 | இராணிப்பேட்டை | 3 | 8 | 7400 | 14 | 16 | 6 | 1 | 5 | -- |
| 9 | திருப்பத்தூர் | 6 | 6 | 6850 | 3 | 4 | 3 | 2 | 30 | -- |

| வ. எண் | மாவட்டம் | ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் | கிடங்குகள் | கிடங்குகளின் மொத்த கொள்ளளவு (மெ.டன்) | பரிவர்த்தனைக் கூடம் | வணிகர் கடைகள் | உலர்களம் | குளிர்பதனக் கிடங்குகள் | குளிர்பதனக் கிடங்குகளின் மொத்த கொள்ளளவு (மெ.டன்) | சிறப்பு வணிக வளாகம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 10 | திருவண்ணாமலை | 18 | 40 | 49000 | 52 | 54 | 27 | 11 | 195 | -- |
| 11 | தருமபுரி | 7 | 6 | 6400 | 5 | 14 | 9 | 10 | 6320 | 1 |
| 12 | கிருஷ்ணகிரி | 9 | 7 | 7800 | 6 | 16 | 11 | 25 | 1567 | 2 |
| 13 | சேலம் | 14 | 19 | 17200 | 20 | 40 | 26 | 16 | 1275 | 1 |
| 14 | நாமக்கல் | 7 | 12 | 10600 | 6 | 0 | 8 | 6 | 84 | 1 |
| 15 | ஈரோடு | 18 | 56 | 74050 | 59 | 22 | 54 | 19 | 3010 | 3 |
| 16 | திருப்பூர் | 15 | 60 | 84725 | 32 | 16 | 60 | 8 | 162 | 2 |
| 17 | கோயம்புத்தூர் | 10 | 34 | 30405 | 18 | 43 | 30 | 23 | 6304 | 3 |
| 18 | நீலகிரி | 4 | 0 | 0 | 0 | 0 | 0 | 10 | 597 | 2 |
| 19 | பெரம்பலூர் | 2 | 2 | 2500 | 1 | 0 | 1 | 4 | 85 | 1 |
| 20 | அரியலூர் | 4 | 5 | 5500 | 14 | 0 | 5 | 1 | 25 | -- |
| 21 | திருச்சிராப்பள்ளி | 10 | 17 | 18375 | 11 | 5 | 11 | 15 | 3312 | 4 |
| 22 | கரூர் | 4 | 2 | 1500 | 4 | 0 | 1 | 1 | 25 | -- |
| 23 | தஞ்சாவூர் | 13 | 28 | 41250 | 22 | 47 | 15 | 8 | 155 | 2 |
| 24 | திருவாரூர் | 8 | 24 | 27600 | 7 | 0 | 15 | 3 | 15 | -- |
| 25 | நாகப்பட்டினம் | 4 | 5 | 6000 | 3 | 0 | 0 | - | - | -- |
| 26 | மயிலாடுதுறை | 4 | 11 | 12520 | 7 | 0 | 5 | - | - | -- |
| 27 | புதுக்கோட்டை | 10 | 7 | 5100 | 4 | 10 | 7 | 5 | 140 | 1 |
| 28 | மதுரை | 6 | 15 | 16800 | 8 | 41 | 8 | 5 | 42 | 2 |

| வ. எண் | மாவட்டம் | ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் | கிடங்குகள் | கிடங்குகளின் மொத்த கொள்ளளவு (மெ.டன்) | பரிவர்த்தனைக் கூடம் | வணிகர் கடைகள் | உலர்களம் | குளிர்பதனக் கிடங்குகள் | குளிர்பதனக் கிடங்குகளின் மொத்த கொள்ளளவு (மெ.டன்) | சிறப்பு வணிக வளாகம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 29 | திண்டுக்கல் | 8 | 19 | 24400 | 6 | 100 | 16 | 14 | 2135 | 1 |
| 30 | தேனி | 7 | 13 | 13500 | 5 | 0 | 10 | 12 | 722 | 2 |
| 31 | விருதுநகர் | 7 | 16 | 17400 | 7 | 54 | 6 | 11 | 190 | -- |
| 32 | சிவகங்கை | 7 | 17 | 16850 | 3 | 0 | 8 | 2 | 30 | -- |
| 33 | இராமநாதபுரம் | 6 | 13 | 17100 | 2 | 126 | 10 | 7 | 2160 | 1 |
| 34 | திருநெல்வேலி | 4 | 10 | 12600 | 5 | 15 | 8 | 9 | 310 | 1 |
| 35 | தென்காசி | 7 | 13 | 22000 | 4 | 50 | 11 | 7 | 1755 | 1 |
| 36 | தூத்துக்குடி | 9 | 23 | 24500 | 8 | 15 | 13 | 12 | 2257 | 1 |
| 37 | கன்னியாகுமரி | 6 | 9 | 7500 | 5 | 83 | 5 | 2 | 27 | 2 |
|  | **மொத்தம்** | **285** | **586** | **7,32,625** | **415** | **925** | **438** | **279** | **41,705** | **34** |

## 6. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், வேளாண் கல்வியில் திறமையான மாணவர்களை உருவாக்குதல், பயனுள்ள ஆராய்ச்சிகளை முன்னெடுப்பது மற்றும் விவசாயிகளுக்கான விரிவாக்க சேவைகளை வழங்குதல் ஆகியவற்றில் அகில இந்திய அளவில் முன்னணி வகிக்கிறது. அறிவியல் அடிப்படையிலான தொழில்நுட்பங்களை உருவாக்கி அவற்றை நேரடியாக விவசாயிகளிடம் கொண்டு சேர்ப்பதன் மூலம் அறிவியல் சார்ந்த வேளாண் முறைகள் மாநிலம் முழுவதும் பரவுவதற்கு வழிவகுத்து, விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதோடு, தமிழ்நாட்டின் வேளாண் வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கி வருகிறது.

## 6.1 வேளாண்மைக் கல்வி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், தனது 18 உறுப்புக் கல்லூரிகள் மற்றும் 28 இணைப்புக் கல்லூரிகள் வாயிலாக வேளாண்மை மற்றும் வேளாண் சார்ந்த துறைகளில் 15 இளநிலை, 34 முதுநிலை மற்றும் 29 முனைவர் பட்டப் படிப்புகளையும் வழங்கி வருகிறது. நான்கு உறுப்பு நிறுவனங்கள் வாயிலாக வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் வேளாண் பொறியியலில் 4 பட்டயப் படிப்புகளை வழங்கி வருகிறது. திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி இயக்ககத்தின் வாயிலாக 2000க்கும் மேற்பட்ட விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் சான்றிதழ் மற்றும் பட்டயப்படிப்பினை மேற்கொண்டு வருகின்றனர். நடப்பு ஆண்டில், ஐந்து புதிய இணைய வழி சான்றிதழ் பாடத்திட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

### 6.1.1. தஞ்சை மாவட்டம் சாக்கோட்டையில் 'நம்மாழ்வார் உயிர்ம அங்கக வேளாண்மை பட்டயப் படிப்புக் கல்லூரி'

தமிழ்நாட்டில் இயற்கை விவசாயத்தினைப் பிரபலப்படுத்த வேண்டும் என்ற தமிழக அரசின் கொள்கையை நிறைவேற்ற இயற்கை மற்றும் உயிர்ம விவசாயத்தில் தேவையான மனித வளம் மற்றும் தொழில்நுட்பங்களை உருவாக்குவது மிக அவசியம். இதனைக் கருத்தில் கொண்டு, தஞ்சை மாவட்டம், கும்பகோணம் அருகிலுள்ள சாக்கோட்டையில், இயற்கை வேளாண்மை விஞ்ஞானி 'நம்மாழ்வார்' அவர்களின் பெயரில் ஒரு புதிய "உயிர்ம வேளாண்மை பட்டயப் படிப்பு கல்லூரி மாண்புமிகு முதல்வரின் தொலை நோக்குத் திட்டத்தின் கீழ், அமைக்கப்படும்.

### 6.1.2.வேளாண்மை மற்றும் தோட்டக்கலைக் கல்லூரிகளில் கட்டமைப்பை உருவாக்குதல்

நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேளூர்-ல் அமைந்துள்ள வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு மாநில நிதியிலிருந்தும் மற்றும் கரூர் மாவட்டம் மணவாசியில் அமைந்துள்ள வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு நபார்டு வங்கியிலிருந்தும் நிதி ஆதாரங்களைத் திரட்டி மாணவர்களுக்குத் தேவையான கட்டமைப்புகளை உருவாக்க துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், கிருஷ்ணகிரி மாவட்டம் பையூரில் அமைந்துள்ள தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நபார்டு வங்கியின் நிதி உதவி மூலம் கட்டுமானப் பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

### 6.1.3. மாணவர் நலன்

#### 6.1.3.1. மாணவ மாணவியருக்கு விடுதி வசதிகளை விரிவுபடுத்துதல்

வேளாண் பல்கலைக் கழகத்தில் மாணவர் சேர்க்கையானது ஒவ்வொரு ஆண்டும் தோராயமாக பத்து விழுக்காடு உயர்ந்து வருகிறது. இவர்களில் மாணவிகளின் எண்ணிக்கை 70 விழுக்காட்டிற்கும் அதிகமாக இருக்கின்றது. கிராமப்புர மாணவர்கள் மற்றும் மாணவிகள் தங்குதடையின்றி வேளாண் கல்வியைத் தொடர்வதை ஊக்குவிக்கும் உயரிய நோக்கில், கோயம்புத்தூர் வேளாண்மைப் பல்கலைக்கழக வளாகத்தில் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் மாணவர்/மாணவியர் விடுதிகள் விரிவாக்கம் செய்யப்பட உள்ளன.

### 6.1.3.2. மாணவர்களின் களப்பயிற்சிக்காக புதிய பேருந்துகள் வாங்குதல்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கோவை வளாகத்தில் மட்டும் 3,000-க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக, மாணவர்கள் வேளாண் வயல்கள், கூட்டுறவு வங்கிகள் / சங்கங்கள், வேளாண் சந்தைகள், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் தமிழ்நாட்டின் பல்வேறு வேளாண் காலநிலை மண்டலங்களுக்கு களப்பயணம் மேற்கொள்கின்றனர். மாணவர்கள் இத்தகைய களப்பயணங்களை பாதுகாப்பாகவும், சிரமமின்றியும் மேற்கொள்ளத் தேவையான போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தும் நோக்கில், நடப்பு ஆண்டில் ஆறு புதிய பேருந்துகள் வாங்கப்படுகின்றன.

### 6.1.3.3. மாணவர் நல மையம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் மாணவர் நல மையம், மாணவர்களுக்கு வளாக நேர்காணல் மூலம் வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித் தருவதை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது. இம்மையம் மூலம், வேளாண் தொழில் நிறுவனங்கள், வங்கிகள், விதை நிறுவனங்கள், உர நிறுவனங்கள், அரசு சாரா நிறுவனங்கள், நிதிச் சேவை நிறுவனங்கள், தொழில் வழிகாட்டுதல் மையங்கள் மற்றும் ஸ்மார்ட் மேலாண்மை நிறுவனங்கள் அழைக்கப்பட்டு வளாக நேர்காணல் மூலம் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும்.

### 6.1.3.4.மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகைகள்

அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயின்ற மாணவிகள் உயர்கல்வி கற்பதை

ஊக்குவிக்கும் தமிழக அரசின் புதுமைப்பெண் திட்டம் இவ்வாண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். தமிழ் வழியில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை படித்த அனைத்து மாணவர்களுக்கும் உயர்கல்வி கற்பதை ஊக்குவிக்கும் தமிழ் புதல்வன் திட்டம் இந்த ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

2026-ஆம் ஆண்டு வரை பல்கலைக் கழகத்தில் சேர்ந்துள்ள 3,916 தகுதியுள்ள மாணவ, மாணவியருக்கு அவர்களுக்கு உரிய சமூக உதவித் தொகையினைப் பெறுவதற்கு அனைத்து உதவிகளும் செய்யப்படும்.

## 6.2. வேளாண்மை ஆராய்ச்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தனது 18 உறுப்புக் கல்லூரிகள் மற்றும் 42 ஆராய்ச்சி நிலையங்கள் வாயிலாக வெவ்வேறு வேளாண் காலநிலை மண்டலங்களில் விவசாயிகள் எதிர் கொள்ளும் பல்வேறு

சவால்களுக்குத் தீர்வு காணும் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு, ஆராய்ச்சி முடிவுகளை நடைமுறை வேளாண் தொழில்நுட்பங்களாக மாற்றி, மாநிலத்தின் உணவு உற்பத்தி மற்றும் விவசாயிகளின் வருமானம் ஆகியவற்றை உறுதி செய்கிறது. கடந்த 55 வருடங்களில், ஆராய்ச்சிகளின் வாயிலாக 965 புதிய பயிர் இரகங்களையும், 1500-க்கும் மேற்பட்ட மேலாண்மைத் தொழில்நுட்பங்களையும் மற்றும் 171 பண்ணைக் கருவிகளையும் உருவாக்கி தமிழக விவசாயிகளின் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்துள்ளது.

### 6.2.1. நீலகிரி மாவட்டம் ஊட்டியில் வேளாண் தொழில்நுட்ப ஆராய்ச்சி மையம்

குறிஞ்சி மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் பயிரிடப்பட்டு வரும் தேயிலை, மலைத்தோட்டக் காய்கறிப்பயிர்கள், நறுமணப்பயிர்கள் மற்றும் மலர்ப்பயிர்கள்

ஆகியவற்றை சர்வதேச சந்தைகளின் தேவைகளுக்கேற்ப உயர்தரமாக விளைவிப்பதற்கும், நஞ்சில்லா வேளாண் முறைகளை ஊக்கப்படுத்தவும், விளைபொருட்களுக்கு உகந்த சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்தித்தரவும் நீலகிரி மாவட்டத்தில் தற்பொழுது செயல்பட்டு வரும் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையமானது, ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் புதிய வேளாண் தொழில்நுட்ப ஆராய்ச்சி மையமாகத் தரம் உயர்த்தப்படும்.

**6.2.2. ஏற்றுமதிக்கேற்ற தோட்டக்கலைப் பயிர்களுக்கான தொழில்நுட்ப மையம்**

தமிழகத்தில் பயிரிடப்படும் ஏற்றுமதிக்கு உகந்த பயிர்களான மா, மஞ்சள் மற்றும் மிளகாய் சாகுபடியாளர்களை ஏற்றுமதி சந்தையுடன் நேரடியாக இணைப்பதற்காக ருபாய் 6 கோடி திட்ட மதிப்பீட்டில் தொழில்நுட்ப மையங்கள்

நிறுவப்படும். இம்மையங்கள் மூலம் விவசாயிகளுக்குத் தேவையான தொழில்நுட்ப ஆதரவுகள், உயர்தரப் பயிற்சிகள் மற்றும் முறையான வழிகாட்டுதல்கள் வழங்கப்படும். இதன்படி, மா தொழில்நுட்ப மையம் கிருஷ்ணகிரி மாவட்டம், பையூரிலும், மிளகாய் தொழில்நுட்ப மையம் இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியிலும், மற்றும் மஞ்சள் தொழில்நுட்ப மையம் ஈரோடு மாவட்டம், பவானிசாகரிலும் புதிதாக நிறுவப்படுகின்றன.

### 6.2.3. கோழிக்கழிவிலிருந்து மண்வள மேம்பாட்டிற்கு உரம் தயாரித்தல்

தமிழ்நாட்டில் நாமக்கல், சேலம், கரூர் மற்றும் சுற்றியுள்ள மாவட்டங்களில் கோழிப் பண்ணைகளில் இருந்து சேகரமாகும் கோழிக் கழிவுகளை உலர்த்தி, பொடியாக்கி, உர உருண்டைகளாகத் தயாரித்து பயன்படுத்தி மண் வளத்தை மேம்படுத்தும் தொழில்நுட்பங்கள்

குறித்த ஆராய்ச்சி ரூபாய் ஒரு கோடி திட்ட மதிப்பீட்டில் சேலம் மாவட்டத்தில் உள்ள சந்தியூர், வேளாண்மை அறிவியல் நிலையம் வாயிலாக செயல்படுத்தப்படும்.

### 6.2.4. மாவட்ட வேளாண் இடையேற்பாட்டுத் திட்டம் (DACP)

தற்போது நிலவி வரும் எல் நினோ சார்ந்த கால நிலை மாற்றங்களைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டில் பருவ மழையில் ஏற்படப்போகும் மாற்றங்கள், அதனால் பயிர்களுக்கு ஏற்படப்போகும் தாக்கங்கள் மற்றும் வறட்சி, வெள்ளம், வெப்ப அலைகள் மற்றும் புயல்கள் போன்ற இடர்களை எதிர்கொள்ளும் வகையில், மாவட்ட வேளாண் இடையேற்பாட்டுத் திட்டங்கள் (District Agriculture Contingency Plans – DACPs) தமிழ்நாட்டின் 38 மாவட்டங்களுக்கும் சம்பந்தப்பட்ட துறைகளின் துணையுடன் வழங்கப்பட்டுள்ளன. மாவட்டத்தின் மண்,

காலநிலை, நீர்வளம் மற்றும் முக்கியப் பயிர்களை அடிப்படையாகக் கொண்டு, "**இடர் ஏற்படும் முன் திட்டமிடுதல் – இடரின்போது துரிதமாக செயல்படுதல் – இடருக்குப் பின் வேளாண்மையை மீட்டெடுத்தல்**" என்ற அணுகுமுறையின் அடிப்படையில் வேளாண்மையை நிலைநிறுத்துவதற்கான பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.

### 6.2.5. வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், ஒவ்வொரு நாளும் அடுத்த ஆறு நாட்களுக்கான கிராம அளவிலான மத்தியகால வானிலை முன்னறிவிப்பினை, ஒரு மணி நேர கால இடைவெளியில் வழங்கி வருகின்றது. 70-80 சதவீத துல்லியமான இந்த கிராம அளவிலான முன்னறிவிப்பின் வாயிலாக கன மழை, சுழல் காற்று, அதிக வெப்பம் போன்ற அசாதாரண

வானிலை விவரங்களை முன்கூட்டியே அறிந்து கொள்ளலாம். இந்திய வானிலைத் துறையுடன் இணைந்து வாரம் தோறும் செவ்வாய் மற்றும் வெள்ளி ஆகிய இரு தினங்களில் உழவர்களுக்கு வேளாண் அறிவுரைகள் 385 வாட்ஸப் குழுக்கள் மூலம் எழுத்து மற்றும் குரல் வழிச் செய்திகளாக வழங்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் தானியங்கி வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை வழங்கும் செயலியில் சுமார் 6.15 இலட்சம் விவசாயிகள் பதிவு செய்து பண்ணை அளவிலான ஆலோசனைகளைப் பெற்று வருகின்றனர். இந்த காலநிலை சார்ந்த வேளாண் அறிவுரைகள் பெருமளவு விவசாயிகளைச் சென்றடையும் வகையில் செவ்வனே செயல்படுத்தப்படும்.

### 6.2.6. ஆராய்ச்சி வெளியீடுகள்

கடந்த கல்வி ஆண்டில் தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழக விஞ்ஞானிகள்

மற்றும் ஆராய்ச்சி மாணவர்கள் 1983 ஆராய்ச்சிக் கட்டுரைகளை சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஆராய்ச்சி இதழ்களில் (Scopus Indexed Journals) வெளியிட்டுள்ளனர். இதனால் தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் இந்தியாவில் உள்ள மத்திய மற்றும் மாநில வேளாண்மைப் பல்கலைக்கழகங்களின் மத்தியில் ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளியிடுவதில் முதல் இடத்தில் உள்ளது.

### 6.2.7. வெளியிடப்பட்ட புதிய பயிர் இரகங்கள்

2026 ஆம் ஆண்டில், வேளாண்மை மற்றும் தோட்டக்கலைப் பயிர்கள் உள்ளடக்கிய 17 புதிய இரகங்கள் தமிழ்நாடு அரசின் மாநில பயிர் இரகங்கள் வெளியீட்டுக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

## அட்டவணை 6.1.: 2026 ஆம் ஆண்டில் புதியதாக வெளியிடப்பட்ட பயிர் இரகங்கள்

| வ. எண் | இரகத்தின் பெயர் | வயது | சிறப்பியல்புகள் |
|---|---|---|---|
| 1. | நெல் ஏடிடீ 61 | 135-140 நாட்கள் | • அதிசன்னரக அரிசி: 1000 நெல் மணிகளின் எடை 12.5 கிராம்<br>• சிறந்த சமையல் பண்புகள்<br>• புரதச் சத்து: 10.5 %<br>• சாயாத தன்மை, குறைந்த இடுபொருட்கள் தேவை, இயற்கை வேளாண் சாகுபடிக்கு ஏற்றது |
| 2. | நெல் ஏடிடீ 62 | 145 நாட்கள் | • சாயாத தன்மை மற்றும் சீரான முதிர்ச்சி<br>• முழுமையாக வெளிவந்த கதிர்<br>• குண்டு அரிசி: 1000 நெல் மணிகளின் எடை :24.3 கிராம்<br>• இட்லி செய்ய ஏற்ற இரகம் |
| 3. | நெல் மேம்படுத்தப்பட்ட கோ 51 எச்.டி | 105-110 நாட்கள் | • நேரடி நெல் விதைப்பிற்கு ஏற்றது<br>• இமேசதைபர் என்னும் களைக் கொல்லிக்கு எதிராக 98.8% கட்டுப்படுத்தும் திறன்<br>• சிறந்த சமையல் பண்புகள் |

| வ. எண் | இரகத்தின் பெயர் | வயது | சிறப்பியல்புகள் |
|---|---|---|---|
| 4. | மக்காச்சோளம் மேம்படுத்தப்பட்ட கோ 6 ப்ரோ-விட் | 105-110 நாட்கள் | • ஒரு வழி வீரிய ஒட்டு ரகம்; இறவைக்கு ஏற்றது.<br>• பீட்டா கரோட்டீன் சத்து (9.60$\mu$g/g) செறிவூட்டப்பட்ட மக்காச்சோளம் (கோ 6-யை விட பத்து மடங்கு அதிகம்)<br>• கேக் மற்றும் பேக்கரி பொருட்கள் தயாரிப்பதற்கு ஏற்றது |
| 5. | துவரை கோ 10 | 120 - 130 நாட்கள் | • குறுகிய கால ரகம்<br>• ஒளிக்கால உணர்வற்றது |
| 6. | கொண்டைக் கடலை கோ 5 | 80-85 நாட்கள் | • தேசி (பழுப்பு நிற விதைகள்) - நாட்டு வகையை சார்ந்தது<br>• பருமனான விதைகள் (30-35 கி / 100 விதைகள்) |
| 7. | கொள்ளு பையூர் 3 | 110-115 நாட்கள் | • தொடர்வளர்ச்சி மற்றும் முதிர்ச்சி நிலையில் பசுமை மாறாத் தன்மை<br>• சிறிய பளபளப்பான இளம் பழுப்பு நிறத்தையும், வெண்மையான விதைக் கணுக்குழியை உடைய விதைகளையும் கொண்டது.<br>• புரதச்சத்து: 26. 2 % |
| 8. | எள் வி.ஆர்.ஐ - 7 | 85-90 நாட்கள் | • பழுப்பு நிற எள் இரகம்<br>• அதிக கிளைகள் கொண்டது<br>• எண்ணெய் சத்து:49 .4 % |

| வ. எண் | இரகத்தின் பெயர் | வயது | சிறப்பியல்புகள் |
|---|---|---|---|
| 9. | பருத்தி விபிடி 3 | 150 நாட்கள் | • நீண்ட இழை பருத்தி (32.3 mm)<br>• வலிமையான இழை (31.5 g/ tex)<br>• 60 ஆம் நம்பர் நூல் நூற்புத்திறன்<br>• நவீன நூற்பு ஆலைகளுக்கு ஏற்றது |
| 10. | கரும்பு காவேரி | 12 மாதங்கள் | • அதிக சர்க்கரை மற்றும் கரும்பு மகசூல்<br>• தூர்க்கும் திறன் கொண்டது<br>• நேராகவும், தடிமனாகவும் வளரும் சாயாத ரகம்<br>• மிதமான வறட்சியைத் தாங்கும் திறன் கொண்டது |
| 11. | கம்பு நேப்பியர் ஒட்டுப்புல் கோ 7 | பல்லாண்டுப் பயிர் | • அதிக உலர் பொருள் மகசூல் (77.54 டன் / எக்டர் / ஆண்டு)<br>• புரதச்சத்து: 12.50 %<br>• அதிக இலை தண்டு விகிதம் (0.48 முதல் 0.52 வரை).<br>• ஆண்டுக்கு ஏழு அறுவடைகள் |
| 12. | பப்பாளி கோ 9 | ஆண்டு முழுவதும் வளர்க்கலாம் | • **இருபாலின ரகம்**; ஒரு குழியில் ஒரு விதை மட்டும் போதுமானது<br>• **ஆண் செடிகளை அகற்ற வேண்டிய அவசியமில்லை**.<br>• பப்பெயின் **உற்பத்திக்கும்** ஏற்றது<br>• மொத்த கரையக்கூடிய திண்மங்கள் (TSS) : **13-14°** பிரிக்ஸ் |

| வ. எண் | இரகத்தின் பெயர் | வயது | சிறப்பியல்புகள் |
|---|---|---|---|
| 13. | சீத்தாப்பழம் ஏபிகே-2 | பல்லாண்டுப் பயிர் | • பருவமில்லா காலத்தில் 15 முதல் 25 காய்கள் காய்க்கும் திறன் கொண்டது<br>• **நடுத்தர அளவுடைய பழங்கள்** *(285* கி (சர்க்கரை அளவு$23^0$ **பிரிக்ஸ்**)<br>• வறட்சியை தாங்கி **வளரக்கூடியது**<br>• ஜாம் மில்க் ஷேக் ,ஜெல்லி , மற்றும் ஐஸ்கிரீம் ஆகிய மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் செய்ய .உகந்தது |
| 14. | வாழை காவேரி பூவன் | 12-13 மாதங்கள் | • பாரா ரெட்ரோ வைரஸ் டிஎன்ஏ மூலக்கூறிலிருந்து (PRV) உருவாகும் எபிசோமல் நச்சுயிரில்லா தரமான வாழை இரகம்<br>• களர் உவர் தன்மையைத் தாங்கும் பண்பு |
| 15. | கத்தரி டி.ஆர்.ஒய் 1 | 180 நாட்கள் | • காய்கள் நீள் வட்ட வடிவமாகவும், ஊதா நிறத்துடன் பின்நுனியில் வெள்ளை நிறத்தில் இருக்கும்.<br>• செடிக்கு சராசரியாக 35 காய்கள்; ஒரு காயின் எடை சுமார் 55-60 கி இருக்கும்.<br>• காய்கள் மெல்லிய தோலுடனும், விரைவாக வேகும் தன்மையுடையதால் தென்னிந்திய பாரம்பரிய சமையலுக்கு ஏற்றது. |

| வ. எண் | இரகத்தின் பெயர் | வயது | சிறப்பியல்புகள் |
|---|---|---|---|
| 16. | சர்க்கரை வள்ளி கிழங்கு கோ 6 | 135 - 150 நாட்கள் | • நீளமான மென்மையான கிழங்குகள்<br>• இளஞ்சிவப்புநிற கிழங்குகள், வெள்ளை நிற சதைப்பற்று கொண்டது,<br>• கிழங்குகள் மிதமான இனிப்பு சுவை கொண்டவை. |
| 17. | முல்லை கோ 3 | பல்லாண்டு பயிர் | • அதிக எண்ணிக்கையிலான மலர் மொட்டுகளைக் (331.98) கொண்ட நீண்ட மலர் மஞ்சரி (42.28 செ.மீ.)<br>• நீண்ட மலர் மொட்டுகள் (3.11 செ.மீ.); நீண்ட மலர்க் காம்பு (2.04 செ.மீ.)<br>• அதிக வைப்புத் திறன் (அறை வெப்பநிலையில் 37.55 மணி நேரங்களும் குளிரூட்டப்பட்ட அறையில் 116.34 மணி நேரங்களும் மலர் மொட்டுகள் விரியாமல் இருக்கும்) |

புதியதாக வெளியிட்ட பயிர் இரகங்களை அரசிதழில் வெளியீடு செய்து, அதன் வல்லுநர்-விதைகளின் உற்பத்தியைப் பெருக்கி, அந்த

இரகங்களை விதைச் சங்கிலித் தொடரில் விரைவில் கொண்டு வரத் திட்டங்கள் செயல்படுத்தப்படும். புதிய இரகங்கள் வயல்வெளி சோதனை மூலம் உழவர்களிடையே பிரபலப்படுத்தப்படும். அதுவரை உண்மை நிலை விதைகள் விவசாயிகளுக்குக் கிடைக்கும் வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

## 6.3. வேளாண் விரிவாக்கம்

வேளாண் விரிவாக்கம் என்பது அறிவியல் அடிப்படையிலான தொழில்நுட்பங்களை விவசாயிகளிடையே பரவலாக்கம் செய்து, பயிர்களின் உற்பத்தித் திறனை உயர்த்தி அதன் மூலம் விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்குவதற்கு வழிவகை செய்வதாகும். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 15 வேளாண்மை அறிவியல் நிலையங்கள் தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்குக் கொண்டு செல்லும் பாலமாக செயல்படுகின்றன.

வேளாண்மை அறிவியல் நிலையங்களின் மூலம் முதல் நிலை செயல் விளக்கத்திடல்கள், வயல்வெளி ஆய்வுகள், விரிவாக்க செயல்பாடுகள், போன்றவை நடத்தப்படுகின்றன. வேளாண் விரிவாக்கக் கல்வி இயக்குநரகத்தின் பயிற்சிப் பிரிவின் மூலமாக வேளாண் விரிவாக்க அலுவலர்கள், உழவர்கள், வளர்ச்சித் துறை அலுவலர்கள் பயனடையும் வகையில் பயிற்சிகள் நடத்தப்படுகின்றன.

### 6.3.1. TNAU TV YouTube: கல்வி ஊடக மையம்

TNAU TV YouTube என்பது வேளாண் தொழில் நுட்பங்களை விரைவாகவும், எளிமையாகவும், காட்சிப்பூர்வமாகவும் விவசாயிகளிடம் கொண்டு சேர்க்கும் ஒரு சிறந்த ஊடகம். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் TNAU TV YouTube சேனலில் 712 வீடியோ நிகழ்ச்சிகள் உழவர்களும், பொதுமக்களும் பயன்பெறும் வகையில்

பதிவேற்றம் செய்யப்பட்டு உள்ளன. இந்த வீடியோக்கள் ஏறக்குறைய 48 லட்சம் நபர்களால் பார்வையிடப்பட்டுள்ளன.

### 6.3.2. வேளாண் தொழில்நுட்ப இணையதளம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் வேளாண் தொழில்நுட்ப இணையதளம் (http://agritech.tnau.ac.in), சுமார் 12 இலட்சம் பக்கங்களில் வேளாண் தொழில்நுட்பங்களை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் உள்ளடக்கியுள்ளது. வேளாண் தொழில்நுட்ப இணைய தளத்தில் உள்ள தகவல்கள் தற்பொழுது செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்துடன் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன.

### 6.3.3. விதை உற்பத்தி

பல்வேறு பயிர்களில் ஆதார நிலை விதைகள், சான்று நிலை விதைகள் மற்றும் உண்மை நிலை விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு

உழவர்கள், விதை உற்பத்தியாளர்கள் மற்றும் மாநில விதைப் பண்ணைகளுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன. 2026-27 ஆம் ஆண்டில், 904.90 டன் ஆதார நிலை விதைகள், 227.60 டன் சான்று நிலை விதைகள், 1553.90 டன் உண்மை நிலை விதைகள் மற்றும் 19.19 இலட்சம் நாற்றுகளை உற்பத்தி செய்து விநியோகிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### 6.3.4. வேளாண் வணிக மேம்பாடு

தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், தனது வேளாண் வணிக மேம்பாட்டு மையத்தின் ஆறு வேளாண் வணிகக் காப்பகங்களின் மூலம் பல்வேறு சேவைகளை விவசாயிகளுக்கும், தொழில் முனைவோர்களுக்கும் மற்றும் மாணவர்களுக்கும் வழங்கி வருகிறது. தொழில்நுட்பங்கள் / வீரிய ஒட்டு இரகங்கள் / இயந்திரங்களை வணிகமயமாக்கல், தொழில் ஆலோசனை சேவைகள், முனைப்பு மூலதனத்

திட்டம், மாணவர் தொழில் முனைவோர் திட்டம் மற்றும் உன்னத பாரத இயக்கம் 2.0 ஆகிய திட்டங்கள் வேளாண் வணிக மேம்பாட்டு இயக்குநரகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், வேளாண் வணிகக் கூட்டமைப்புகளையும், ஆரம்பக்கட்ட தொழில் முனைவோர்களையும் உருவாக்கி, வணிக ரீதியான ஆலோசனைகளையும் வேளாண் வணிக மேம்பாட்டு இயக்குநரகம் வழங்கி வருகிறது.

### 6.3.5. அறிவுசார் சொத்துக் காப்புரிமை

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 80 காப்புரிமைகளைப் பெற்றுள்ளதோடு, 115 காப்புரிமைகளுக்கான விண்ணப்பங்களைத் தாக்கல் செய்துள்ளது.

### 6.4. தரவரிசை மற்றும் விருதுகள்

1. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் இந்திய அரசின் கல்வி அமைச்சகத்தின்

தேசியத் தரவரிசைப் பட்டியலில், மாநில வேளாண்மைப் பல்கலைக்கழகங்களில் 2வது இடத்தையும், வேளாண்மை மற்றும் வேளாண்மைச் சார்ந்த துறைகளின் வரிசைப்பட்டியலில் 6வது இடத்தையும், அனைத்துத் தர அடிப்படையிலான வகைப்பாட்டில் 88வது இடத்தையும், பல்கலைக்கழகங்களின் அடிப்படையிலான வரிசைப்பட்டியலில் 73வது இடத்தையும் மற்றும் மாநில பொதுப் பல்கலைக்கழக வரிசைப் பட்டியலில் 42வது இடத்தையும் பெற்றுள்ளது.

2. 2026-ஆம் ஆண்டிற்கான QS உலகப்பல்கலைக்கழகத் தரவரிசையில், வேளாண்மை மற்றும் வனவியல் பிரிவில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

201-250 தர வரிசைக் கற்றையில் இடம் பெற்றுள்ளது.

3. மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் செயல்படும் மதுரை வேளாண் வணிகக் காப்பகத்திற்கு உலக சுற்றுச்சூழல் நாள் (07.06.2025) நிகழ்வில் மேதகு தமிழக ஆளுநர் அவர்களால் “தமிழ்நாட்டின் சிறந்த சுற்றுச்சூழல் வேளாண் வணிக மேம்பாட்டு மைய விருது” வழங்கப்பட்டது.

4. புவிசார் குறியீடு பெற்ற “விருதுநகர் சம்பா மிளகாய்” குறித்த சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கிய அருப்புக்கோட்டை வேளாண் அறிவியல் நிலையம் நபார்டு அமைப்பின் 2025-26 ஆம் ஆண்டிற்கான விருதைப் பெற்றுள்ளது.

5. அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டக்குழுவின் 2025-26 ஆம் நிதியாண்டிற்கான "அறுவடைக்குப் பிந்தைய பொறியியல் மற்றும் தொழில் நுட்பங்களுக்கான விருதை கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்லைக்கழகத்தின் உணவுப் பதனிடுதல் பொறியியல் துறை பெற்றுள்ளது.

6. 2025 ஆம் ஆண்டிற்கான நெல் வினையியல் ஆராய்ச்சியில் ஆற்றிய சிறப்பான பங்களிப்பை அங்கீகரிக்கும் விதமாக இந்திய நெல் ஆராய்ச்சி நிறுவனம் 20.04.2026 அன்று கோவை மையத்திற்கு சிறந்த நெல் வினையியல் மையத்திற்கான விருது வழங்கிச் சிறப்பித்தது.

## 6.4.1. பணியாளர் விபரம்

### அட்டவணை 6.2: பல்கலைக்கழகப் பணியாளர்களின் விபரம்

| வ. எண் | வகைகள் | தற்போதைய நிலை |
|---|---|---|
| **அ . பேராசிரியர்கள் - கற்பித்தல்** | | |
| 1. | பேராசிரியர்கள் | 403 |
| 2. | இணைப் பேராசிரியர்கள் | 293 |
| 3. | உதவிப் பேராசிரியர்கள் | 264 |
| | **மொத்தம்** (அ ) | 960* |
| **ஆ. அமைச்சுப் பணியாளர்கள்** | | |
| 1. | இதர துணை ஊழியர்கள் | 1150 |
| | **மொத்தம்** (ஆ) | 1150 |
| | **ஒட்டுமொத்தம்** (அ +ஆ) | **2110** |

*அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலிருந்து அயற் பணியிட மாற்றம் செய்யப்பட்ட 110 பேராசிரியர்களை உள்ளடக்கியது.

## 7. விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறை

***"வெண்ணெல் வித்தின் அறைமிசை உணங்கும்" (அகநானூறு 211)***

இந்த அகநானூற்று வரி, அடுத்த பருவத்தில் பயிரிடுவதற்கான நெல் விதைகளை, தூய்மையாக, வெயிலில் காயவைத்து கவனமாக உலர வைத்து, ஈரப்பதத்தை நீக்கிப் பாதுகாத்து வைத்திருந்த பழங்கால விதைப் பாதுகாப்பு முறையை எடுத்துக்காட்டுகின்றது. இது வேளாண்மையில் தரமான விதையின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகிறது.

தரமான விதைகள், வேளாண் உற்பத்தித் திறனை உயர்த்துவதிலும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதிலும் முக்கியப் பங்காற்றுகின்றன. முழுமையான இனத்தூய்மை, முளைப்புத் திறன் மற்றும் புறத்தூய்மை கொண்ட உயர்தர சான்றளிக்கப்பட்ட விதைகளைப்

பயன்படுத்துவது, அதிகமான பயிர் விளைச்சலைப் பெறவும், வேளாண் வருமானத்தை உயர்த்தவும் நீடித்த நிலையான வேளாண் வளர்ச்சியை ஊக்குவிக்கவும் அவசியமாகும்.

இத்துறையின் செயல்பாடு மூன்று முக்கியத் தூண்களைக் கொண்டு அமைந்துள்ளது. – **உத்தரவாதம்** (Assurance), **கிடைக்கும் தன்மை அல்லது இருப்பு** (Availability) மற்றும் **நியாயமான விலை** (Affordability).

தரமான விதைகள் மற்றும் உயிர்ம விளைபொருட்களை சரியான நேரத்தில் வழங்குவதை உறுதி செய்யும் வகையில், இத்துறை **விதைச் சான்றளிப்பு, விதைத் தரக்கட்டுப்பாடு, விதைப் பரிசோதனை மற்றும் உயிர்மச் சான்றளிப்பு** ஆகிய பிரிவுகளில் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. விதை ஆய்வு, பரிசோதனை, சான்றிதழ் வழங்குதல் மற்றும் ஒழுங்குமுறை நடவடிக்கைகள் வாயிலாக,

விதைகள் மற்றும் உயிர்ம விளைபொருட்களின் தரம், தூய்மை மற்றும் நம்பகத்தன்மையை உறுதி செய்வதுடன், விவசாயிகள் மற்றும் பங்குதாரர்களுக்கு நம்பகமான சான்றளிப்புச் சேவைகளையும் வழங்கி வருகிறது.

**7.1 விதைச் சான்றளிப்பு:**

விதைச் சான்றளிப்புப் பிரிவு, விதைச் சட்டம், 1966, விதை விதிகள், 1968 மற்றும் விதை (கட்டுப்பாட்டு) ஆணை, 1983 ஆகியவற்றின் அடிப்படையில் செயல்பட்டு வருகிறது. இப்பிரிவு, இந்திய குறைந்தபட்ச விதைச் சான்றளிப்புத் தரநிலைகள் (Indian Minimum Seed Certification Standards - IMSCS) படி அறிவிக்கை செய்யப்பட்ட பயிர் இரகங்களுக்கான விதைச் சான்றளிப்புப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

அரசு நிறுவனங்கள் மற்றும் தனியார் விதை உற்பத்தியாளர்களால் அமைக்கப்படும் விதைப் பண்ணைகளில், விதை மூல ஆதாரம் சரிபார்ப்பு,

வயல் ஆய்வுகள், விதை சுத்திகரிப்புப் பணிகள், விதைத் தர பரிசோதனைகள் மற்றும் சான்றட்டை பொருத்துதல் ஆகிய சான்றளிப்பு செயல்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் மூலம், விவசாயிகளுக்கு தரமான சான்றளிக்கப்பட்ட விதைகள் வழங்கப்படுவது உறுதி செய்யப்படுகிறது.

விதைச் சான்றளிப்பு உதவி இயக்குநரை உறுப்பினராகக் கொண்ட வல்லுநர் விதை உற்பத்தி கண்காணிப்புக் குழுவினர், வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ள, வல்லுநர் விதை உற்பத்தி வயல்களை ஆய்வு செய்து, நிர்ணயிக்கப்பட்ட, வயல் தரநிலைகள் மற்றும் இனத்தூய்மை பராமரிப்பு ஆகியவற்றை உறுதி செய்கின்றனர்.

ஆண்டுதோறும், சராசரியாக 68,000 எக்டர் பரப்பளவிலான விதைப் பண்ணைகள் பதிவு செய்யப்பட்டு, 1,25,000 மெட்ரிக் டன்

தரமான விதைகள் சான்றளிக்கப்படுகின்றன. 2026-2027 ஆம் ஆண்டில், 70,000 எக்டர் பரப்பளவிலான விதைப் பண்ணைகளைப் பதிவு செய்திடவும், 1,30,000 மெட்ரிக் டன் தரமான விதைகளுக்குச் சான்றளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**7 .1.1 செயல்பாடுகள் :**

விதைச் சான்றளிப்பு முறையை வலுப்படுத்த பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன:

- 2026-27ஆம் ஆண்டில், ரூபாய் 1.00 கோடி மதிப்பீட்டில் QR குறியீடு இணைந்த விதை சான்றட்டைகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன. இதன் வாயிலாக விதைகளின் ஆதாரம், உண்மைத்தன்மை, விதையின் நிலை ஆகியவற்றை விவசாயிகள் எளிதில்

உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். வெளிப்படைத்தன்மை, பொறுப்புணர்வு மற்றும் நம்பகத்தன்மையை மேம்படுத்தும் இந்நடவடிக்கை, உற்பத்தி முதல் விநியோகம் வரை, முழுமையான விதைத் தடம் அறிந்து (Seed Traceability) கண்காணிப்பையும் உறுதி செய்கிறது.

- விதையின் ஆதாரம், உற்பத்தி, வயல் ஆய்வு, விதை சுத்திகரிப்பு, விதைப் பரிசோதனை, சான்றட்டை பொருத்துதல் மற்றும் விநியோகம் ஆகியவற்றை உள்ளடக்கிய முழுமையான இணைய வழி கண்காணிப்பை வழங்கும் வகையில், ஒன்றிய அரசின் SATHI (Seed Authentication Traceability and Holistic Inventory) இணையதளம் மூலம் முழுமையாக ஒருங்கிணைந்த விதைச் சான்றளிப்பு முறை நிறுவப்பட்டு வருகிறது. இதன் மூலம்

சான்றட்டை பெற்ற ஒவ்வொரு விதைக் குவியலின் விதைச் சங்கிலி முழுவதும் தடம் அறிந்து (Seed Traceability) கண்காணிக்க வழிவகை ஏற்படுகிறது.

- தற்போது காய்கறிப் பயிர்களில் விதைச் சான்றளிப்பு நடைமுறை குறைவான அளவிலேயே மேற்கொள்ளப்படுவதால், வல்லுநர் விதை இருப்பு, விவசாயிகள் விழிப்புணர்வு மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் (TNAU) வெளியிடப்பட்ட இரகங்கள் மற்றும் பிற ஆராய்ச்சி நிறுவனங்களால் தமிழ்நாட்டிற்கு அறிவிக்கை செய்யப்பட்ட இரகங்களில் கவனம் செலுத்துவதன் மூலம், மாநிலத்தில் சான்றளிக்கப்பட்ட காய்கறி விதைகள் பயன்படுத்தும் பரப்பளவை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

- நெல், பயறு வகைகள், சிறுதானியங்கள் மற்றும் காய்கறிகளின் பாரம்பரிய இரகங்களை முறையாகப் பெருக்கிப் பராமரிப்பதை ஊக்குவித்து, அவற்றின் இனத்தூய்மை மற்றும் தனித்துவமான பண்புகளைப் பாதுகாத்து, எதிர்கால சந்ததியினருக்கும் காலநிலை மாற்றத்தைத் தாங்கி வளரக்கூடிய பயிர் வகைகளுக்கும் தரமான விதைகள் கிடைப்பதை உறுதி செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

- புதிய, அதிக விளைச்சல் தரக்கூடிய, சிறந்த செயல்திறன் கொண்ட மற்றும் விவசாயிகள் விரும்பும் இரகங்களின், விதைப் பெருக்கத்தை வலுப்படுத்தி, அவற்றின் நன்மைகள் குறித்து, விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி, அவற்றின்

பயன்பாடும், விதைச் சான்று பெறுவதும் ஊக்குவிக்கப்படும்.

## 7.2 விதைத் தரக் கட்டுப்பாடு:

விதைத் தரக் கட்டுப்பாடுப் பிரிவின் மூலம் அரசு நிறுவனங்கள் மற்றும் தனியார் விதை விற்பனையாளர்கள் விற்பனை செய்யும் விதைகளின் தரத்தை உறுதி செய்து விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாநிலம் முழுவதும் விதைத் தரநிலைகளை ஒழுங்குபடுத்துவதற்காக, இப்பிரிவு விதைச் சட்டம், 1966, விதை விதிகள், 1968, விதை (கட்டுப்பாட்டு) ஆணை, 1983 மற்றும் சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986 உள்ளிட்ட பல்வேறு விதை தொடர்பான சட்டங்களை அமல்படுத்தி வருகிறது.

விதை (கட்டுப்பாட்டு) ஆணை, 1983-இன் கீழ், மாநிலம் முழுவதும் 17,351 விதை விற்பனை நிலையங்களுக்கு உரிமங்கள்

வழங்கப்பட்டுள்ளன. விதை விற்பனை நிலையங்கள், விதை ஆய்வாளர்களால், குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒருமுறை ஆய்வு செய்யப்படுகின்றன. விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள விதைக் குவியல்களில் இருந்து ஆய்வு விதை மாதிரிகள் எடுக்கப்பட்டு, அறிவிக்கை செய்யப்பட்ட விதைப் பரிசோதனை நிலையங்களில் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. விதைப் பரிசோதனை நிலையங்களிலிருந்து பெறப்படும் பகுப்பாய்வு அறிக்கைகளின் அடிப்படையில், தரமற்ற விதைக் குவியல்களுக்கு எதிராகத் துறை ரீதியான மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆண்டுதோறும், விதை விற்பனை நிலையங்களில் சராசரியாக, 80,000 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 50,000 ஆய்வு விதை மாதிரிகள் (Official Seed Samples) மற்றும் 20,000 சேவை விதை மாதிரிகள் (Service

Seed Samples) எடுக்கப்பட்டு விதைத் தரப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

2026-2027 ஆம் ஆண்டில், விதை விற்பனை நிலையங்களில் 81,000 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 50,000 ஆய்வு விதை மாதிரிகள் மற்றும் 26,500 சேவை விதை மாதிரிகள் உட்பட மொத்தம் 76,500 விதை மாதிரிகள் தரப் பகுப்பாய்வு செய்யப்படும்.

**7.2.1. செயல்பாடுகள் :**

முறையான ஆய்வு மற்றும் அமலாக்க நடவடிக்கைகள் மூலம், விவசாயிகளுக்குத் தரமான விதைகள் கிடைப்பதை மேலும் உறுதி செய்ய பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

- விதை விற்பனை உரிமம் வழங்கும் செயல்முறை, இணைய வழி கட்டண வாயிலுடன் இணைத்து, முழுமையாக

இணையமயமாக்கிடவும் இதன் மூலம் செயல் திறனையும், வெளிப்படைத் தன்மையையும் மேம்படுத்திடவும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

- தனியார் விதை இரகங்கள் மற்றும் வீரிய இரக விதைகளின் பதிவு மற்றும் கண்காணிப்பை விரைவாகவும், திறம்படவும் மேற்கொள்ளும் வகையில், புதிய பதிவு முறை மாநில அரசின் 'விதை' VITHAI (Variety Identification Trial and Holistic Agricultural Interface) இணையதளம் மூலம் செயல்படுத்தப்படும்.

- தனியார் விதை நிறுவனங்களின் விதை விற்பனையைத் திறம்படக் கண்காணிக்கும் வகையில், விதை விற்பனை (படிவம் D) SPECS (Seed Production Enforcement and Certification System) இணையதளத்தில் அறிமுகப்படுத்தப்படும்.

- காய்கறி மற்றும் பழப் பயிர்களின் தரமான நடவுப் பொருட்கள், விவசாயிகளுக்கு வழங்கப்படுவதை உறுதி செய்யும் வகையில், தோட்டக்கலைப் பயிர்களுக்கான நாற்றங்கால் அலகுகள் திறம்படக் கண்காணிக்கப்படும்.

**7.3. விதைப் பரிசோதனை:**

விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறையின் கீழ், மாநிலம் முழுவதும் 34 அறிவிக்கை செய்யப்பட்ட விதைப் பரிசோதனை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்நிலையங்கள் விதைச் சான்றளிப்புப் பிரிவிலிருந்து பெறப்படும் சான்று விதை மாதிரிகள் (Certified Seed Samples), விதைத் தரக் கட்டுப்பாட்டு பிரிவிலிருந்து பெறப்படும் ஆய்வு விதை மாதிரிகள் (Official Seed Samples) மற்றும் விவசாயிகள், விதை விற்பனையாளர்கள், விதை உற்பத்தியாளர்களால் சமர்ப்பிக்கப்படும்

சேவை விதை மாதிரிகளை (Service Seed Samples) பகுப்பாய்வு செய்வதன் மூலம் விதைத் தரநிலைகளை உறுதி செய்வதில் முக்கியப் பங்காற்றுகின்றன.

இந்திய குறைந்தபட்ச விதைச் சான்றளிப்புத் தரநிலைகளின் (IMSCS) படி, அனைத்து விதை மாதிரிகளும் பரிசோதனை செய்யப்பட்டு, வேளாண் சாகுபடிக்குத் தேவையான தரமான விதைகள் வழங்கப்படுவது உறுதி செய்யப்படுகிறது.

சராசரியாக ஒவ்வொரு ஆண்டும், விதைப் பரிசோதனை நிலையங்களில் 1,12,000 விதை மாதிரிகள் ஆய்வு செய்யப்படுகின்றன. 2026-27 ஆம் ஆண்டில், 1,20,000 விதை மாதிரிகள் ஆய்வு செய்யப்படும்.

**7.3.1. செயல்பாடுகள் :**

- ஏற்கனவே, காஞ்சிபுரம், தருமபுரி, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, தஞ்சாவூர், மதுரை ஆகிய இடங்களிலுள்ள ஆறு விதைப் பரிசோதனை நிலையங்களுக்கு தேசிய அங்கீகார வாரியத்தின் (NABL) அங்கீகாரம் பெறப்பட்ட நிலையில், 2026-27-ஆம் ஆண்டில், நாகப்பட்டினம், தேனி, நாமக்கல், திருவள்ளூர், ஈரோடு, இராமநாதபுரம், திண்டுக்கல், கிருஷ்ணகிரி ஆகிய இடங்களிலுள்ள எட்டு விதைப் பரிசோதனை நிலையங்களுக்கு, ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டில் தேசிய அங்கீகார வாரியத்தின் (NABL) அங்கீகாரம் பெறப்படவுள்ளது. மீதமுள்ள 15 விதைப் பரிசோதனை நிலையங்களுக்கும் வரும் ஆண்டுகளில் NABL அங்கீகாரம் பெற்றிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

- தற்போது நடைமுறையில் உள்ள, சேவை விதை மாதிரிகளுக்கான, பரிசோதனைக் கட்டணம் செலுத்தும் முறையை மாற்றி, இணைய வழிக் கட்டணம் செலுத்தும் முறை அறிமுகப்படுத்தப்படும்.

### 7.3.2 பன்னாட்டு விதைப் பரிசோதனைக் குழும அங்கீகாரம் பெற்ற விதைப் பரிசோதனை நிலையம், கோயம்புத்தூர் (International Seed Testing Association - ISTA):

கோயம்புத்தூரில் உள்ள விதைப் பரிசோதனை நிலையம், 2006 ஆம் ஆண்டு சர்வதேச விதைப் பரிசோதனை குழுமத்தின் (ISTA) உறுப்பினராக இணைந்ததுடன், 2014 ஆம் ஆண்டு INML1600 என்ற சர்வதேச அங்கீகார எண்ணுடன் ISTA அங்கீகாரத்தைப் பெற்றது.

இந்நிலையம், விதை மாதிரி எடுக்கவும், புறத்தூய்மை பகுப்பாய்வு, பிற பயிர் விதை கண்டறிதல், முளைப்புத் திறன் மற்றும் ஈரப்பதப்

பரிசோதனை ஆகியவற்றிற்கான அங்கீகாரத்தை பெற்றுள்ளது. மேலும், தானியங்கள், பயறு வகைகள் மற்றும் காய்கறிப் பயிர்கள் சார்ந்த ஏற்றுமதி விதை மாதிரிகளைப் பரிசோதனை செய்ய அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் விதைப் பரிசோதனை நிலையம் ஆரஞ்சு நிற சர்வதேச விதை குவியல் சான்றிதழ்கள் மற்றும் நீல நிற சர்வதேச விதை மாதிரி சான்றிதழ்கள் வழங்குவதற்கான உரிமம் பெற்றுள்ளது. இதன்மூலம், 115 சர்வதேச விதை பரிசோதனைச் சான்றிதழ்கள் தமிழ்நாட்டு விதை ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

### 7.3.3 மாநில டி.என்.ஏ கைரேகை ஆய்வகம் (DNA Fingerprinting Laboratory)

கோயம்புத்தூரில் உள்ள மாநில டி.என்.ஏ. கைரேகை (DNA Finger Printing) ஆய்வகம், விதைக் குவியல்களின் இனத் தூய்மையை விரைவாகக் கண்டறிந்து உறுதி செய்வதை

எளிதாக்குகிறது. பயிர் வளர்ப்புப் பரிசோதனை (Grow Out Test) மூலம் இனத் தூய்மையைக் கண்டறிய இரண்டு முதல் மூன்று மாதங்கள் வரை ஆகும் நிலையில், டி.என்.ஏ. கைரேகை தொழில்நுட்பத்தின் மூலம் மூன்று முதல் ஐந்து நாட்களுக்குள் இனத்தூய்மையை உறுதி செய்ய முடிவதால், தரமான விதைகளை விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் வழங்குவது சாத்தியமாகிறது.

இவ்வாய்வகம், 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் "மாநில டி.என்.ஏ. கைரேகை ஆய்வகம்" என அறிவிக்கை செய்யப்பட்டு, மாநிலத்தில் சாகுபடி செய்யப்படும் 27 அறிவிக்கை செய்யப்பட்ட நெல் இரகங்களின் இனத் தூய்மையைப் பரிசோதிக்கும் திறனுடன் செயல்பட்டு வருகிறது. ஆண்டுதோறும், சராசரியாக 250 நெல் விதை மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. 2026-2027 ஆம் ஆண்டில்,

300 நெல் விதை மாதிரிகளைப் பகுப்பாய்வு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும், SNP (Single Nucleotide Polymorphism) மரபணுக் குறியீடு தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தி ஆய்வுத் திறன் மேம்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் நிறைவு பெற்ற பின், நெல், மக்காச்சோளம், பருத்தி, காய்கறிப் பயிர்கள் போன்ற முக்கியப் பயிர்களில் மிகத் துல்லியமாக இனத்தூய்மையைக் கண்டறிய இயலும்.

### 7.3.4 பயிர் வளர்ப்புப் பரிசோதனைப் பண்ணை:

பயிர் வளர்ப்புப் பரிசோதனை (Grow Out Test) என்பது பயிர் இரகங்களின் இனத் தூய்மையை மதிப்பீடு செய்வதற்காகப் பயன்படுத்தப்படுகிறது. விதைச் சான்றளிப்பு மற்றும் விதை தரக் கட்டுப்பாடு பிரிவுகளால் அனுப்பப்படும் விதை மாதிரிகள், கோயம்புத்தூர் மாவட்டம்

கண்ணம்பாளையத்தில் உள்ள பயிர் வளர்ப்புப் பரிசோதனைப் பண்ணையில் பரிசோதனை செய்யப்படுகின்றன.

பயிரின் முழு வளர்ச்சிக் காலத்தில் பயிர் வளர்ப்புப் பரிசோதனைத் திடல்களில், பயிர்களின் புறத்தோற்ற குணாதிசயங்கள் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டு பயிர் இரகங்களின் இனத்தூய்மை அறியப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும், சராசரியாக 3,000 விதை மாதிரிகளுக்கு இனத்தூய்மை பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. 2026-27 ஆம் ஆண்டில், 3,500 விதை மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்படவுள்ளன.

**7.3.5 ஒப்பீட்டு விதைப் பரிசோதனை ஆய்வகம்:**

மாநிலத்தில் செயல்பட்டு வரும் 30 அறிவிக்கை செய்யப்பட்ட விதைப் பரிசோதனை நிலையங்களில் விதைப்

பரிசோதனை முடிவுகளைக் கண்காணிக்கவும், நெறிமுறைப்படுத்தவும் ஒப்பீட்டுப் பரிசோதனை ஆய்வகம் (Referral Laboratory), கோயம்புத்தூர் மாவட்டத்தில் செயல்பட்டு வருகிறது.

ஒவ்வொரு அறிவிக்கை செய்யப்பட்ட விதைப் பரிசோதனை நிலையத்திலிருந்தும் மாதிரிகள் பெறப்பட்டு, ஆண்டுதோறும் சராசரியாக சுமார் 2,800 மாதிரிகள் ஒப்பீட்டுப் பரிசோதனை ஆய்வகத்தில் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

### 7.3.6 பி.டி (Bt) விதைப் பரிசோதனை ஆய்வகம்:

பருத்தி விதை மாதிரிகளில் உள்ள பி.டி நஞ்சின் அளவு சதவீதத்தைக் கண்டறிய கோயம்புத்தூரில் பி.டி(Bt) பருத்தி பரிசோதனை ஆய்வகம் செயல்பட்டு வருகிறது. மாநிலம் முழுவதும் இருந்து பெறப்படும் ஆய்வாளர் பருத்தி விதை மாதிரிகள், பி.டி நஞ்சு அளவை மதிப்பிடுவதற்காக இவ்வாய்வகத்திற்கு

அனுப்பப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் இவ்வாய்வகத்தில் சராசரியாக 2,000 பருத்தி விதை மாதிரிகள் பரிசோதிக்கப்படுகின்றன.

**7.4. உயிர்மச் சான்றளிப்பு:**

**7.4.1 நோக்கம் மற்றும் செயல்பாடுகள்:-**

தமிழ்நாடு உயிர்மச் சான்றளிப்புத் துறை, உயிர்ம வேளாண்மை முறைகளுக்கான சான்றளிப்பு அமைப்பாக தமிழ்நாடு அரசால் 2007 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

இத்துறை, தேசிய உயிர்ம உற்பத்தித் திட்டத்தின் (NPOP) கீழ் உயிர்மச் சான்றளிப்பு வழங்குவதற்காக, வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தின் (APEDA) அங்கீகாரம் பெற்றுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஏற்றுமதிக்கான உயிர்ம பயிர் உற்பத்தி,

பதப்படுத்துதல் மற்றும் வர்த்தகத்திற்கு, வாய்ப்பு சான்றிதழ் (Scope Certificate) உயிர்ம விவசாயிகள், பதப்படுத்துவோர் மற்றும் வர்த்தகர்களுக்கு வழங்கப்படுகிறது. துறையால் பின்பற்றப்படும் சான்றளிப்பு தரநிலைகள், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் சுவிஸ் உயிர்ம வேளாண்மை ஒழுங்குமுறை தரநிலைகளுக்கு இணையானதாக இருப்பதால், உயிர்ம விளைபொருட்களை இந்தியாவிற்குள்ளும் மற்றும் வெளிநாடுகளிலும் சந்தைப்படுத்துவதற்கு ஏதுவாகிறது.

செயற்கை இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லிகள், களைக்கொல்லிகள் மற்றும் மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகள் ஆகிய இடுபொருட்கள் உபயோகத்தினை தவிர்ப்பதை, உயிர்ம வேளாண்மை தரநிலைகள் உறுதி செய்கின்றன.

மேலும், ஒன்றிய அரசின் வேளாண்மை மற்றும் உழவர் நல அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தேசிய உயிர்ம மற்றும் இயற்கை வேளாண்மை மையத்தால், பங்களிப்பு உத்தரவாதத் திட்டம் – இந்தியா உயிர்மம் (PGS - India Organic) மற்றும் பங்களிப்பு உத்தரவாதத் திட்டம் – இயற்கை வேளாண்மை (PGS - Natural Farming) திட்டத்தைச் செயல்படுத்துவதற்கும் இத்துறைக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. பங்களிப்பு, வெளிப்படைத் தன்மை, நம்பிக்கை, சமத்துவம் ஆகிய கொள்கைகளை அடிப்படையாக கொண்ட இச்சான்றளிப்பு முறையின் மூலம், உயிர்ம விவசாயிகள் தங்களது விளைபொருட்களை உள்நாட்டு சந்தைகளில் விற்பனை செய்ய வழிவகுக்கப்படுகிறது.

### 7.4.2 உயிர்மச் சான்றளிப்பின் நிலை

தமிழ்நாடு உயிர்மச் சான்றளிப்புத் துறையின் மூலம், மாநிலம் முழுவதும் மொத்தம் 35,369

விவசாயிகள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இதில் 1,291 தனிநபர் விவசாயிகள், 6 பதப்படுத்துவோர், 387 பழங்குடியின விவசாயிகளை உள்ளடக்கிய 4 வனப் பொருட்கள் சேகரிப்புக் குழுக்கள் மற்றும் 33,685 விவசாயிகளைக் கொண்ட 1,298 விவசாயிகள் குழுக்கள் அடங்கும்.

மேலும், விவசாயிகளுக்கு, ரூ.57.02 இலட்சம் மதிப்பிலான 63.22 மெட்ரிக் டன் உயிர்ம விளைபொருட்களுக்கு பரிவர்த்தனைச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. தேங்காய், தேங்காய் எண்ணெய், பாரம்பரிய நெல் மற்றும் எள் ஆகிய விளைபொருட்களுக்கு இச்சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

**7.4.3 செயல்பாடுகள்:-**

- 2026–2027 ஆம் ஆண்டில், தேசிய உயிர்ம உற்பத்தித் திட்டம், பங்களிப்பு உத்தரவாதத் திட்டம் (PGS)-இந்தியா உயிர்மம்

மற்றும் PGS-இயற்கை வேளாண்மை ஆகியவற்றின் கீழ் 1.26 இலட்சம் ஏக்கர் பரப்பளவு பதிவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், அடுத்த ஐந்து ஆண்டுகளில் உயிர்ம மற்றும் இயற்கைச் சான்றளிப்பின் கீழ் உள்ள பரப்பளவை 2.47 இலட்சம் ஏக்கராக விரிவுபடுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

- சான்றளிக்கப்பட்ட உயிர்ம விளைபொருட்களின் தரம் மற்றும் நம்பகத்தன்மையை உறுதி செய்வதற்காக, உயிர்ம விளைபொருட்களில் எஞ்சிய நச்சு மதிப்பீடு பரிசோதனை செய்ய அரசால் ரூ.25.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒரு பகுப்பாய்விற்கு சராசரியாக தேவைப்படும் பகுப்பாய்வு கட்டணம் ரூ.10,000/- ஆகும். இப்பரிசோதனை மூலம், எஞ்சிய நச்சு

“இல்லை” என உறுதி செய்யப்பட்ட உயிர்ம வேளாண் விளைபொருட்களுக்கு அதிகவிலை கிடைப்பதால், இதனை அரசே ஏற்று, 100 சதவிகித மானியத்தில் பகுப்பாய்வுக் கட்டணத்தை வழங்கி, உயிர்ம வேளாண்மையை ஊக்குவித்து, விவசாயிகளின் பொருளாதாரம் உயர வழிவகை செய்கிறது.

- தேசிய உயிர்ம உற்பத்தித் திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டு, உயிர்மச் சான்றளிப்பு பெற புதிதாகப் பதிவு செய்யும் விவசாயிகளுக்குப் பதிவுக் கட்டணத்தில் முழு விலக்கு அளிக்கப்பட்டது. எனினும், உயிர்ம வேளாண்மையைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கான நிதிச்சுமையை மாறுதல் காலத்தில் உள்ள உயிர்ம விவசாயிகளால் ஏற்க இயலவில்லை. எனவே, உயிர்ம வேளாண்மையில்

மாறுதல் காலத்திலும் விவசாயிகள் தொடர்ந்து உயிர்ம வேளாண்மை நடைமுறைகளைக் கடைப்பிடிப்பதை ஊக்குவிக்கும் வகையில், இவ்வாண்டு முதல் புதிதாகப் பதிவு செய்யும் விவசாயிகளுக்கான பதிவுக் கட்டண விலக்குடன், மாறுதல் காலத்தில் உள்ள விவசாயிகளுக்கான புதுப்பித்தல் கட்டணத்திற்கும் முழு விலக்கு அளித்து உயிர்ம "வாய்ப்புச் சான்றிதழ்" (Scope Certificate) இலவசமாக வழங்கப்படும். இதன் மூலம் உயிர்ம சான்றளிப்பின் கீழ் பதிவு செய்யும் விவசாயிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

- தடமறிதல் (traceability) மற்றும் வெளிப்படைத் தன்மையை எளிதாக்கவும், சான்றளிக்கப்பட்ட இயற்கை மற்றும் உயிர்ம

விவசாயிகளை நுகர்வோருடன் இணைத்து சந்தை இணைப்புகளை மேம்படுத்தவும், ரூ.20 இலட்சம் செலவில் தேசிய உயிர்ம உற்பத்தித் திட்டம், PGS-இந்தியா உயிர்மம் மற்றும் PGS-இயற்கை வேளாண்மை ஆகியவற்றின் கீழ் பதிவு செய்யப்பட்ட விவசாயிகளின் தரவுகள் அடங்கிய ஒருங்கிணைந்த தரவுத்தளம் உருவாக்கப்படும்.

- நடப்பு ஆண்டில், உயிர்மச் சான்றளிப்பின் கீழ் சான்று பெற்ற விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.4,000/- சிறப்பு ஊக்கத்தொகை வேளாண்மைத் துறையின் மூலம் 20,000 ஏக்கர் பரப்பளவிற்கு வழங்கப்படவுள்ளது. இப்பரப்பளவிற்கும் பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ்

வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறையினால் பதிவு செய்யப்படும் 7,500 ஏக்கர் பரப்பளவோடு இயற்கை வேளாண்மைக்கான தேசிய இயக்கத்தில் புதிதாக பதிவு செய்யப்படும் 3,125 ஏக்கர் பரப்பளவிற்கும் நடப்பாண்டில் இத்துறையின் மூலம் சான்றளிக்கப்படும்.

**7.5 தகவல் தொழில்நுட்பம் தொடர்பான முன்னெடுப்புகள் :**

இத்துறை, தகவல் தொழில்நுட்பத்தின் வாயிலாக மக்களை மையப்படுத்தி தனது செயல்பாடுகளை மேலும் செம்மையானதாகவும், வெளிப்படையானதாகவும் மாற்றியுள்ளது. விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறையினால் உருவாக்கப்பட்ட SPECS (Seed Production Enforcement and Certification System) வலைதள மென்பொருள்

பயன்பாடு, இந்நோக்கத்தினை அடைவதைச் சாத்தியமாக்கியுள்ளது. இவ்வலைத்தளம் இத்துறையின் அனைத்துப் பிரிவுகளிலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. SPECS மூலம், துறையின் பல்வேறு செயல்பாடுகள் இணையமயமாக்கப்பட்டு, செயல்முறைகளை எளிமையாக்கி, கண்காணிப்பு, வெளிப்படைத்தன்மை மற்றும் திறமையான சேவை வழங்கலை மேம்படுத்தியுள்ளது.

மேலும், ஒன்றிய அரசால் SATHI (Seed Authentication Traceability and Holistic Inventory) இணையதளம் அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, இத்துறையின் விதைச் சான்றளிப்பு நடவடிக்கைகள் SATHI இணையதளத்திற்கு மாற்றப்பட்டுள்ளன. இத்துறையின் மற்ற பிரிவுகளின் செயல்பாடுகளை ஒருங்கிணைக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், முன்னோடி முயற்சியாக, தனியார் விதை நிறுவனங்களின் உண்மை நிலை விதைகளை (Truthfully Labelled Seeds) நிர்வகிக்கும் வகையில், VITHAI (Variety Identification Trial and Holistic Agricultural Interface) எனும் தனித்துவ இணையதளம் இத்துறையால் உருவாக்கப்பட்டு வருகிறது. புதிய பதிவு முறை, இணைய வழிக் கட்டணத்தை உள்ளடக்கியது. இதன் மூலம் தனியார் விதை நிறுவனங்களின், பதிவு தொடர்பான நடவடிக்கைகளை, வெளிப்படையாகவும், திறமையாகவும் மேற்கொள்ள வழிவகுக்கும்.

**7.6. பணியாளர்கள் விவரம்:**

விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு துறை, ஒப்பளிக்கப்பட்ட 345 தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் 500 அமைச்சுப் பணியாளர்களுடன் செயல்பட்டு வருகிறது.

# அட்டவணை 7.1. பணியிடங்களின் விவரம்

| பதவி | ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் | பணியில் உள்ளோர் எண்ணிக்கை | காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| **அ. தொழில்நுட்ப அலுவலர்கள்** | 345 | 339 | 6 |
| விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு இயக்குநர் | 1 | - | 1 |
| விதைச் சான்றளிப்பு இணை இயக்குநர் | 1 | 1 | - |
| விதை ஆய்வு இணை இயக்குநர் | 1 | 1 | - |
| விதை ஆய்வு துணை இயக்குநர் | 15 | 14 | 1 |
| தரமேலாளர் (உயிர்மச் சான்றளிப்பு) | 1 | 1 | |
| விதைச் சான்றளிப்பு உதவி இயக்குநர் (விதைப் பகுப்பாய்வு ) | 1 | 1 | - |
| விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர் | 29 | 28 | 1 |
| மதிப்பீட்டாளர் (உயிர்மச் சான்றளிப்பு) | 1 | 1 | - |
| விதைப் பரிசோதனை அலுவலர் | 7 | 7 | - |
| விதைச் சான்று அலுவலர் | 119 | 118 | 1 |
| விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு ஆய்வாளர் | 26 | 26 | - |
| வேளாண்மை அலுவலர் | 63 | 63 | - |
| விதை ஆய்வாளர் | 70 | 68 | 2 |
| உயிர்மச் சான்றளிப்பு ஆய்வாளர் | 10 | 10 | - |
| **ஆ, அமைச்சுப் பணியாளர்** | **500** | **289** | **211** |
| **மொத்த பணியாளர்கள் (அ + ஆ)** | **845** | **628** | **217** |

## 8. தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை

தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை 2002ஆம் ஆண்டு சங்கமாகப் பதிவு செய்யப்பட்டு இயற்கை வளங்களான நிலம் மற்றும் நீர்வள ஆதாரங்களை நீர்வடிப்பகுதிகளில் மேம்படுத்தும் நோக்கத்தோடு நிறுவப்பட்டது. மாநிலத்தில் பல்வேறு நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்த மாநில அளவிலான இணைப்பு முகமை 2009ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இம்முகமை இரண்டு பிரதான திட்டங்களுக்கு செயல்பாட்டு முகமையாகவும், ஒன்பது திட்டங்களுக்கு இணைப்பு முகமையாகவும் செயல்பட்டு வருகிறது.

### 8.1 முகமை செயல்படுத்தும் பிரதான திட்டங்கள்:

i. பிரதம மந்திரியின் வேளாண் பாசனத் திட்டத்தின் ஓர் அங்கமான நீர்வடிப்பகுதி மேம்பாடு 2.0 திட்டம் - ஒன்றிய அரசின் பங்களிப்பு திட்டம் (60:40) (Watershed

Development Component - Pradhan Mantri Krishi Sinchayee Yojana 2.0 (WDC-PMKSY 2.0)).

ii. பருவநிலை மாற்றத்திற்கான தேசிய தகவமைப்பு நிதியின் கீழ் சேலம், விருதுநகர் மாவட்ட மானாவாரி நீர்வடிப்பகுதிகளில் பருவநிலை பாதுகாப்புத் திட்டம் - ஒன்றிய அரசின் 100 சதவீத மானிய திட்டம் – (National Adaptation Fund for Climate Change (NAFCC))

**8.1.1. நீர்வடிப்பகுதி மேம்பாடு – பிரதம மந்திரியின் வேளாண் பாசனத் திட்டம் – 2.0:**

இத்திட்டமானது பெரம்பலூர், தூத்துக்குடி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, இராமநாதபுரம், தருமபுரி, விருதுநகர் ஆகிய 7 மாவட்டங்களில் 34 திட்டங்களின் கீழ், 357 நீர்வடிப்பகுதிகளில் 1.66 இலட்சம் எக்டர் பரப்பில், ரூ368.66 கோடி நிதி ஒதுக்கீட்டில் 2021-22 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது 27 திட்டங்கள் முடிவுற்ற நிலையில், இதர திட்டங்களின்

திட்டக்காலம் செப்டம்பர் 2026 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. பெரம்பலூர் மாவட்டத்தில் அனைத்துத் திட்டங்களும் முடிவடைந்துள்ளன. இத்திட்டத்தில் ஆகஸ்ட் 2026 வரை ரூ.358.08 கோடி நிதி ஒப்பளிக்கப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**8.1.1.1. திட்டத்தின் நோக்கம்** :

i. **பொருளாதாரம்**- நிலம், நீர் மற்றும் **இதர** இயற்கை வளங்களை, ஒருங்கிணைந்த, நிலையான, சமச்சீரான திறன்மிகு முறையில் பயன்படுத்துவதன் மூலம் பயிர்களின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதுடன் நீர்வடிப்பகுதிகளிலுள்ள கிராம சமுதாயத்தின் வருமானத்தை மேம்படுத்துவதற்கு உதவுதல்.

ii. **சூழலியல்**– நீர்வடிப்பகுதி மக்கள் மற்றும் குழுக்களைக் கொண்டு சமூக அமைப்புகளை உருவாக்கி எளிய,

சாத்தியமான தொழில்நுட்பங்களையும் நடைமுறைகளையும் ஊக்குவிப்பதன் மூலம் இயற்கை வளங்களைப் பாதுகாத்தல், பயன்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்.

iii. **சமபங்கு** - மேம்படுத்தப்பட்ட நிலம் மற்றும் நீர் வளங்களைப் பயன்படுத்தி விவசாயம் செய்தல், ஏழை, நிலமற்றோர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் பெண்கள் ஆகியோரை பல்வேறு சமுதாய நிறுவனங்கள் மற்றும் குழுக்களில் ஈடுபடுத்தி சமூக மற்றும் பொருளாதார நிலையை மேம்படுத்துவதோடு சமபங்கு கிடைப்பதை உறுதி செய்தல்.

**8.1.1.2. திட்ட செயலாக்க அமைப்பு** :

தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை, மாநில அளவிலான இணைப்பு முகமையாக செயல்பட்டு, பிரதம மந்திரியின் வேளாண் பாசனத் திட்டம்- நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத்

திட்டம் 2.0-வை செயல்படுத்துகிறது. மாவட்ட அளவில் மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை, மாவட்ட ஆட்சியர் தலைமையில் வேளாண்மை மற்றும் வேளாண் பொறியியல் துறை சார்ந்த தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்டு உருவாக்கப்பட்டு செயல்படுகிறது. திட்டத்தின் களப்பணிகளை மேற்கொள்வதற்காகவே வேளாண்மை, சமூகவியல் மற்றும் பொறியியல் பணியாளர்களைக் கொண்டு நீர்வடிப்பகுதி மேம்பாட்டுக்குழு திட்ட அளவில் அமைக்கப்பட்டுள்ளது. இந்திய அரசின் வழிகாட்டு விதிமுறைகளின் படி அங்கீகரிக்கப்பட்ட பணிகள் கிராம அளவில் நீர்வடிப்பகுதிக் குழுக்களால் மேற்கொள்ளப்படுகின்றன.

**8.1.1.3. திட்டசெயல்பாடுகள்:**

இத்திட்டம் பின்வரும் இனங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**இயற்கைவள மேம்பாட்டுப் பணிகள் :**

இந்த இனத்தின் கீழ் சிறு, நடுத்தர மற்றும் பெரிய தடுப்பணைகள், கம்பி வலை தடுப்பணை, உதிரிக் கற்கள் தடுப்பணை, கசிவுநீர்க்குட்டைகள், பண்ணைக்குட்டைகள், கிராமக்குட்டைகள் அமைத்தல், ஊருணிகள் மற்றும் நீர்வரத்துக் கால்வாய்களைத் தூர்வாருதல், நீர் செறிவூட்டும் அமைப்புகள், கிணறுகளை சீரமைத்தல், அமிழ்வுநீர் குட்டைகள், சுனைநீர் தேக்கத்தொட்டி, நிலத்தடி நீர் நிறுத்தும் சுவர், நீர்பிடிப்பு அகண்ட குழி அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**பண்ணை உற்பத்திப் பணிகள் :**

இந்த இனத்தின் கீழ் வேளாண் காடுகள், தோட்டக்கலைப் பயிர்கள், தீவனப்புல் வளர்த்தல், மலர்ப்பயிர்கள் மற்றும் பயிர் செயல்விளக்கங்கள் அமைத்தல், விசைத் தெளிப்பான், கைத்தெளிப்பான், பேட்டரி தெளிப்பான், களை எடுக்கும் கருவி, தட்டை வெட்டும் கருவி, தார்ப்பாய், புல்வெட்டும் கருவி ஆகியவை விநியோகித்தல் மற்றும் மண்புழு உரம் தயாரித்தல் ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன.

**8.1.1.4. சுனை நீர்வடிப்பகுதி மேம்பாடு:**

2023-24ஆம் ஆண்டு பிரதம மந்திரி விவசாயப் பாசனத்திட்டம் 2.0 திட்டத்தின் கீழ், தருமபுரி மாவட்டத்தில் பென்னாகரம் மற்றும் அரூர் வட்டாரங்களிலுள்ள பிக்கிலி மற்றும் சிட்டிலிங்கி மலைத் தொகுப்புகளிலுள்ள சுனைகளை மேம்படுத்தும் திட்டத்திற்கு

ஒன்றிய அரசு ரூ.14.00 கோடி ஒப்புதல் வழங்கியது. மலைப்பகுதியில் அமைந்துள்ள சுனைகள், அப்பகுதி மக்கள், கால்நடைகள், வேளாண் பணிகள் ஆகியவற்றுக்கு ஆதாரமாக விளங்குகின்றன. இச்சுனைகளை மீட்டுருவாக்கம் செய்து மேம்படுத்துவதன் மூலம் நீர்த் தேவையைக் கணிசமாக நிறைவு செய்யலாம். மேலும், ரூ.63 லட்சம் மதிப்பீட்டில் கூடுதலாக 9 சுனைகளை மேம்படுத்தும் பணிகள் ஒப்பளிக்கப்பட்டு, இதுவரை ரூ.12.91 கோடி நிதி விடுவிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**8.1.1.5. சாதனைகள்** :

இதுவரை ரூ.358.08 கோடி நிதி விடுவிக்கப்பட்டு, நுழைவுக் கட்டப் பணிகளின் கீழ் 381 பணிகள், இயற்கை வள மேம்பாட்டுப் பணிகளின் கீழ் 8,741 பணிகள், பண்ணை உற்பத்திப் பணிகள் 11,716 எக்டரிலும் இதர உற்பத்திப் பணிகள்

36,809 எண்ணிக்கையிலும், வாழ்வாதாரப் பணிகளின் கீழ்-9,368 பணிகளும் மற்றும் நீர்வடிப்பகுதி குழுக்களுக்கும், சுய உதவிக் குழுக்களுக்கும், தனிநபர்களுக்கும் 729 பயிற்சிகள் மற்றும் பட்டறிவுப் பயணங்கள் ஆகியனவும் மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டம் செப்டம்பர் 2026 வரை தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**8.1.2. பருவநிலை மாற்றத்திற்கான தேசிய தகவமைப்பு நிதியின் கீழ் (National Adaptation Fund for Climate Change - NAFCC) சேலம் மற்றும் விருதுநகர் மாவட்ட மானாவாரி நீர்வடிப்பகுதிகளில் பருவநிலை பாதுகாப்பு திட்டம்.**

இத்திட்டம், ஒன்றிய அரசின் சுற்றுசூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தின் நிதி உதவியுடன், நபார்டு வங்கியை தேசிய செயலாக்க நிறுவனமாகவும், தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையை திட்ட

செயலாக்க நிறுவனமாகவும் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**8.1.2.1.திட்டத்தின் நோக்கம்** :

காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் விளைவுகளை மண் மற்றும் நீர் பாதுகாப்பு மேலாண்மை மூலம் தகவமைத்தல், பல்வகைப் பயிர்களை ஊக்குவித்தல், மாற்று வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதன் மூலம் நீடித்த நிலையான வாழ்வாதாரங்களை உறுதி செய்தல் மற்றும் காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப சமுதாயத்தின் திறனை உருவாக்குதல் ஆகியனவே இத்திட்டத்தின் நோக்கங்களாகும்.

**8.1.2.2. திட்டத்தின் இனங்கள்** :

நுழைவுகட்டப்பணியாக கிராம மக்களுடன் இணக்கமான உறவை ஏற்படுத்துவதற்காக, நீர்வடிப்பகுதி மக்களின் அத்தியாவசியத் தேவையான குடிநீர் சேமிப்புத் தொட்டிகள்

அமைக்கப்பட்டுள்ளன. நீர்வள, மண்வள மேலாண்மை செயல்பாடுகளான தடுப்பணைகள், பண்ணைக்குட்டைகள், கசிவுநீர்க் குட்டைகள் அமைத்தல், நீர் செறிவூட்டும் அமைப்புகள் ஆகியவற்றை ஏற்படுத்துதல், வாழ்வாதாரத்திற்கு உதவும் வகையில், சிறு / குறு தொழில் செயல்பாடுகளான மண்புழு உரம் தயாரித்தல், வீடுகளில் கோழிவளர்ப்பு ஆகியனவும் ஊக்குவிக்கப்படுகின்றன. பருவநிலை பாதுகாப்பு செயல்பாடுகளான மாற்றுப்பயிர்கள், பருவகால மாற்றங்களைத் தாங்கக்கூடிய பயிர் இரகங்கள், பொது மற்றும் தனியார் நிலங்களில் காடு வளர்த்தல், சூரிய ஒளியால் இயங்கும் நீர் இறைப்பான், உயிரியல் முறையில் மக்கும் உரம் தயாரிப்பு ஆகியன ஊக்குவிக்கப்படுகின்றன.

சேலம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் 15,990 எக்டர் பரப்பளவில் ரூ.23.80 கோடி ஒதுக்கீட்டில் இத்திட்டம் 2019-20 முதல்

நான்காண்டுகளுக்கு ஒப்பளிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2022-2023ஆம் ஆண்டு வரை ரூ.11.52 கோடி விடுவிக்கப்பட்டு, ரூ.10.82 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மூன்றாம் தவணையாக ரூ.12.26 கோடி 2026-27ல் ஒன்றிய அரசிடமிருந்து பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**8.2. இணைப்பு முகமையாக செயல்படுத்தப்படும் திட்டங்கள்:**

தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையானது ஒன்றிய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் கீழ்க்கண்ட ஒன்பது திட்டங்களுக்கான இணைப்பு முகமையாக உருவாக்கப்பட்டு ஒன்றிய அரசு, மாநில அரசு மற்றும் திட்ட செயலாக்கத் துறைகள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து செயல்படுத்தி வருகின்றது.

இத்திட்டங்கள் 2008ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு வருடமும் ஒன்றிய அரசால் ஒப்பளிக்கப்பட்டு பல்வேறு திட்ட செயலாக்கத் துறைகள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**8.2.1.பிரதம மந்திரி தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள் (Pradhan Mantri – Rashtirya Krishi Vikas Yojana – PM-RKVY ):**

1. விரிவான திட்ட அறிக்கை அடிப்படையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள்- Detailed Project Reports (DPR) – Projects based
2. மானாவாரிப் பகுதி மேம்பாடு – Rainfed Area Development (RAD)
3. மண் நலம் மற்றும் மண் வளம் – Soil Health and Fertility (SHF)
4. பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டம் – Paramparagat Krishi Vikas Yojana (PKVY)
5. வேளாண் காடு வளர்ப்பு – Agroforestry (AF)

6. **வேளாண் இயந்திரமயமாக்குதலுக்கான துணை இயக்கம் –**
   Sub-Mission on Agricultural Mechanization (SMAM) மற்றும்
7. **துளி நீரில் அதிக பயிர்** – Per Drop More Crop (PDMC)

**8.2.2.பிரதம மந்திரி வேளாண் பாசனத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் இரண்டு திட்டங்கள் :**

1. வயல் தோறும் நீர்ப்பாசனம் – Har Khet Ko Pani (HKKP) மற்றும்
2. துரிதப்படுத்தப்பட்ட பாசனப் பயன் திட்டம் – Accelerated Irrigation Benefit Programme (AIBP)

இவ்வாறு நீர்வடிப்பகுதிகளை மேம்படுத்துவதோடு, ஒன்றிய, மாநில அரசுத் திட்டங்கள் சிறப்பாகச் செயல்படுத்தப்படும் வகையில் ஒருங்கிணைப்பை மேற்கொள்ளவும் தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை சிறப்பான பங்களிப்பை வழங்கும்.

# கோரிக்கை 05-வேளாண்மை – உழவர் நலத்துறை

## 2026–2027-இல் செலவிற்கு வேண்டியுள்ள தொகை பற்றிய மதிப்பீடு

## 2026–2027 திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடு

(ரூபாய் ஆயிரத்தில்)

| | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| மானியக் கோரிக்கை அனுமதித்தது | 14,780,71,16 | 201,74,69 | 2,00,02 | 14,984,45,87 |
| மொத்த தொகை சாட்டியது | 14,88 | --- | --- | 14,88 |

**நிகர செலவு**

(ரூபாய் ஆயிரத்தில்)

| கணக்குத் தலைப்பு | | 2024 – 2025 கணக்குகள் | 2025 – 2026 திருத்த மதிப்பீடு | 2026 – 2027 இடைக்கால வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | 2026-2027 திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| **2059** | பொதுப்பணிகள் | 4,12,81 | 4,34,05 | 4,34,05 | 4,34,05 |
| **2401** | பயிர் வளர்ப்பு | 10,964,14,13 | 11,587,75,33 | 13,950,85,41 | 13,341,73,25 |

| கணக்குத் தலைப்பு | | 2024 – 2025<br>கணக்குகள் | 2025 – 2026<br>திருத்த மதிப்பீடு | 2026 – 2027<br>இடைக்கால வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | 2026-2027<br>திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| **2402** | மண்வள, நீர்வளப் பாதுகாப்பு | 102,86,59 | 90,49,37 | 102,44,74 | 202,44,72 |
| **2408** | உணவு சேமிப்பு – கிடங்கு வசதி | --- | 50,35,02 | 50,35,02 | 50,35,01 |
| **2415** | வேளாண்மை ஆராய்ச்சியும் மற்றும் கல்வியும் | 662,27,00 | 750,68,29 | 765,01,72 | 775,01,72 |
| **2435** | ஏனைய வேளாண்மைத் திட்டங்கள் | 253,20,49 | 287,14,72 | 299,47,89 | 325,97,95 |
| **2501** | ஊரக வளர்ச்சி சிறப்புத் திட்டங்கள் | 39,79,37 | 60,88,12 | 52,65,50 | 52,65,53 |
| **2551** | மலைப் பகுதிகள் | 41,85 | 59,74 | 1,25,87 | 1,25,87 |
| **2702** | சிறுபாசனம் | 5,36,99 | 4,94,52 | 5,26,58 | 5,26,58 |
| **2705** | பாசனப் பகுதி மேம்பாடு | --- | 1 | 1 | 1 |
| **3054** | சாலைகளும் பாலங்களும் | --- | 1 | 1 | 1 |
| **3451** | தலைமைச் செயலகம் – பொருளாதாரப் பணிகள் | 18,30,18 | 20,59,09 | 21,81,35 | 21,81,34 |
| **4070** | ஏனைய நிர்வாகப் பணிகள் குறித்த மூலதனச் செலவு | --- | --- | 6 | 6 |
| **4401** | பயிர் வளர்ப்பு குறித்த மூலதனச் செலவு | 87,80,49 | 44,80,38 | 120,00,04 | 83,34,55 |
| **4402** | மண்வள நீர்வளப் பாதுகாப்பு குறித்த மூலதனச் செலவு | 3,96,66 | 1,38,22 | 18,22,37 | 55,82,84 |

| கணக்குத் தலைப்பு | | 2024 – 2025 | 2025 – 2026 | 2026 – 2027 | 2026-2027 |
|---|---|---|---|---|---|
| | | கணக்குகள் | திருத்த மதிப்பீடு | இடைக்கால வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
| **4408** | உணவுப் பொருள் சேமிப்பு மற்றும் கிடங்கு வசதி குறித்த மூலதனச் செலவு | -2,55,00 | --- | --- | --- |
| **4415** | வேளாண்மை ஆராய்ச்சி, கல்வி குறித்த மூலதனச் செலவு | 52,62,77 | 67,48,95 | 40,00,00 | 40,00,00 |
| **4435** | ஏனைய வேளாண்மைத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு | 25,18,37 | 16,57,91 | 14,89,26 | 22,57,24 |
| **6401** | பயிர் வளர்ப்புக்கான கடன்கள் | 120,00,00 | 115,00,00 | 1 | 1 |
| **6425** | கூட்டுறவு குறித்த கடன்கள் | 109,70,41 | 142,29,00 | --- | --- |
| **6435** | ஏனைய வேளாண்மைத் திட்டங்களுக்கான கடன்கள் | 12,68,47 | 1 | 1 | 1 |
| **7610** | அரசுப் பணியாளர் முதலியோருக்குக் கடன்கள் | 2,18,32 | 1,80,00 | 2,00,00 | 2,00,00 |

# கோரிக்கை 05 வேளாண்மை – உழவர் நலத்துறை

## 2026 – 2027 திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடு

(ரூபாய் ஆயிரத்தில் (தொகு மொத்தம்)

| வ. எண் | துறைத் தலைவர் | | | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 005 01 | வேளாண்மை – உழவர் நலத்துறை - தலைமைச் செயலகம் | அனுமதித்தது | 21,81,34 | 6 | 2,00,00 | 23,81,40 |
| 2. | 005 02 | வேளாண்மை இயக்ககம் | அனுமதித்தது | 11,029,80,31 | 83,34,55 | 1 | 11,113,14,87 |
| 3. | 005 03 | வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்ககம் | அனுமதித்தது | 300,11,53 | 22,57,24 | 1 | 322,68,78 |
| 4. | 005 04 | விதைச் சான்று இயக்ககம் | அனுமதித்தது | 78,41,43 | --- | --- | 78,41,43 |
| 5. | 005 05 | தோட்டக்கலை, மலைத்தோட்டப் பயிர்கள் இயக்ககம் | சாட்டியது | 2,85 | --- | --- | 2,85 |
| | | | அனுமதித்தது | 1,739,72,34 | 37,60,47 | --- | 1,777,32,81 |
| 6. | 005 06 | வேளாண்மைப் பொறியியல் துறை | சாட்டியது | 12,03 | --- | --- | 12,03 |
| | | | அனுமதித்தது | 604,98,97 | 18,22,37 | --- | 623,21,34 |
| 7. | 005 07 | வேளாண் பொறியியல் பணிகள் | அனுமதித்தது | 46,21 | --- | --- | 46,21 |

| வ. எண் | துறைத் தலைவர் | | | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 8. | 005 08 | தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர் | அனுமதித்தது | 741,79,28 | 40,00,00 | --- | 781,79,28 |
| 9. | 005 09 | அங்ககச் சான்றளிப்பு இயக்ககம் | அனுமதித்தது | 1,85,75 | --- | --- | 1,85,75 |
| 10. | 005 10 | சர்க்கரை இயக்ககம் | அனுமதித்தது | 261,74,00 | --- | --- | 261,74,00 |
| மொத்தம் | | | சாட்டியது | **14,88** | --- | --- | **14,88** |
| | | | அனுமதித்தது | **14,780,71,16** | **201,74,69** | **2,00,02** | **14,984,45,87** |

## நிறைவுரை

**நீர்விழாக் கொளவளர்ந்த நிலமெல்லாந் தம்முடைய,**
**சீர்விழாக் கொளவிளக்குந் திருவிழாப் பெருக்காளர்,**
**ஏர்விழாக் கொளினன்றி யெறுழ்க்கரிதேர் மாப்படையாற்,**
**போர்விழாக் கொளமாட்டார் போர்வேந்த ரானோரே**

**(ஏரெழுபது )**

"உழவு நாட்டின் அடிப்படை; உழவரின் உழைப்பே மன்னனின் ஆட்சிக்கும் போர்வலிமைக்கும் ஆதாரம்." என்று கம்பர் பெருமான் வேளாண்மை மேற்கொண்டால் உழவர்களும் மக்களும் வாழ்வாங்கு வாழலாம் என்று போற்றிக் கூறியதற்கேற்ப வேளாண் பெருங்குடி மக்களின் நலனிலும் உயர்விலும் மிகுந்த அக்கறை கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி வேளாண்மை - உழவர் நலத்துறையானது 2026 - 27 ஆம் ஆண்டிற்கான வேளாண் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட பல்வேறு திட்டங்கள் யாவும் விவசாயிகளைச் சென்றடைந்து அவர்கள் மென்மேலும் உயரும்

வகையில் முழுமுயற்சியுடன் முனைப்புடன் செயல்படும்.

சாகுபடிப்பரப்பை உயர்த்துதல், பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரித்தல், மண் வள மேலாண்மை, சான்று பெற்ற விதை விநியோகம், பாசன நீர் மேலாண்மை, மும்முனை மின்சாரம் வழங்குதல், புதிய உயர் விளைச்சல் இரகங்கள் மற்றும் வீரிய இரகங்கள் பயன்பாடு, மாற்றுப்பயிர் சாகுபடி, உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு, உயிர்ம வேளாண்மை மற்றும் இயற்கை வேளாண்மையை ஊக்குவித்தல், ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை, நுண்ணீர்ப்பாசனம், வேளாண் காடுகள் ஊக்குவிப்பு, வேளாண் இயந்திரமயமாக்கல், மதிப்புக்கூட்டுதல் மற்றும் உணவு பதப்படுத்துதல் போன்ற பல்வேறு வேளாண் உத்திகளைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள சிறப்புத் திட்டங்களை வேளாண்மை - உழவர் நலத்

துறையின் மூலம் முனைப்புடன் செயல்படுத்திட தமிழ்நாடு அரசு உறுதிகொண்டுள்ளது.

தமிழ்நாட்டில், வேளாண்மை - உழவர் நலத்துறையில், வேளாண்மைக்கென தனி நிதிநிலை அறிக்கையினை தற்போதைய அரசும் தொடர்ந்து சமர்ப்பித்து வேளாண் பெருமக்களின் உயர்விற்காகத் தொடர்ந்து பாடுபடுகிறது. உழவர்கள் நலனைக் காத்து, வேளாண் உற்பத்தி மூலம் மக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்திடவும் உறுதிபூண்டுள்ள தமிழ்நாடு அரசு, **வெற்றி விவசாயிகளை** உருவாக்கும்.

இயற்கை சீற்றங்களின்போது ஏற்படும் பயிர் பாதிப்புகளினால் வாட்டமுறும் உழவர்களின் துயர்துடைக்க பயிர்க்காப்பீட்டு இழப்பீட்டு தொகை வழங்கி, உழவர்கள் நலனை எப்போதும் காத்திடும். மேலும், இயற்கைப் பேரிடர்கள் நிகழும்போதும், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பயிர் சேதங்களுக்குரிய நிவாரணம் உடனடியாக

வழங்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

**“குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்**
**வடுவன்று வேந்தன் தொழில்”**

**-திருக்குறள் 549**

மக்களைப் பாதுகாத்து, குற்றங்களை நீக்கி, நீதியுடன் ஆட்சி செய்வது அரசனின் கடமை. தீமை செய்பவர்களைத் தண்டித்து, நல்லாட்சியை நிலைநிறுத்த வேண்டும் என்று திருவள்ளுவர் கூறியுள்ளது போல், நல்ல முறையில் மக்களாட்சி செய்து வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலில், வேளாண் பெருங்குடி மக்களின் முன்னேற்றத்திற்காக முனைப்புடன் செயல்படும் தமிழ்நாடு அரசு, 2026 - 27 ஆம் ஆண்டின் வேளாண் நிதிநிலை அறிக்கையில் வழங்கியுள்ள அனைத்து சிறப்புத் திட்டங்களும் செவ்வனே செயல்படுத்தப்படும்.

**ர. வினோத்**
**வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர்**



16.07.2026 அன்று **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. ச. ஜோசப் விஜய் அவர்கள்,** தலைமைச் செயலகத்தில், வேளாண்மை - உழவர் நலத்துறையின் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்து ஆய்வுக் கூட்டத்தை நடத்தினார்.




27.08.2026 அன்று **மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர் திரு. ச. ஜோசப் விஜய் அவர்கள்,** தலைமைச் செயலகத்தில், வேளாண்மை - உழவர் நலத்துறை சார்பில் 2025 - 2026ஆம் ஆண்டிற்கான சிறந்த உயிர்ம உழவர்க்கான **“நம்மாழ்வார் விருதினை”** வழங்கிச் சிறப்பித்தார்.




2026-27 ஆம் ஆண்டுக்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கை தொடர்பான கருத்துக்கேட்புக் கூட்டம் 02.07.2026 அன்று சேலம் மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் **மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் திரு. ர. வினோத் அவர்களின்** தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் **மாண்புமிகு கைத்தறி, துணி நூல் மற்றும் கதர்த்துறை அமைச்சர் திரு. ம. விஜய் பாலாஜி அவர்களும், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. வே. சம்பத் குமார் அவர்களும்** கலந்து கொண்டனர். மேலும், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர், சேலம் மாவட்ட ஆட்சியர், மற்றும் வேளாண்மை - உழவர் நலத்துறை சார்ந்த அனைத்து துறைத் தலைவர்கள், அலுவலர்கள், விவசாயிகள் மற்றும் விவசாய சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.



2026-27 ஆம் ஆண்டுக்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கை தொடர்பான, 8 மாவட்டங்களுக்கான விவசாயிகள் கருத்துக்கேட்புக் கூட்டம்,வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் **மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் திரு.ர.வினோத் அவர்கள்** தலைமையில், **மாண்புமிகு மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் திரு. த. சரத்குமார் அவர்கள்** முன்னிலையில் 09.07.2026 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர், வேலூர் மாவட்ட ஆட்சியர் மற்றும் வேளாண்மை - உழவர் நலத்துறை சார்ந்த துறைத் தலைவர்கள், அலுவலர்கள், விவசாயிகள் மற்றும் விவசாய சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.





**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. ச. ஜோசப் விஜய் அவர்கள்** வழிகாட்டுதலின்படி,
**மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் திரு. ர. வினோத் அவர்கள்**
06.08.2026 அன்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2026-2027 ஆம் ஆண்டிற்கான
வேளாண்மை நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்தார்.



சேலம் மாவட்டத்தில், மழை பற்றாக்குறையால் பாதிக்கப்பட்ட நிலக்கடலைப் பயிரின் நிலை குறித்து, மாவட்ட வேளாண்மைத் துறை அலுவலர்கள் மற்றும் வேளாண் அறிவியல் மைய (KVK) விஞ்ஞானிகள் இணைந்து கள ஆய்வு மேற்கொண்டு, நீர்ப்பற்றாக் குறையால் ஏற்படும் பாதிப்பினைத் தடுக்க, PPFM (Pink Pigmented Facultative Methylotroph) கரைசலை இலைவழித் தெளிப்பு மூலம் பயன்படுத்த விவசாயிகளுக்கு அறிவுறுத்தினர்.



தேசிய தோட்டக்கலை இயக்கம் –
பரப்பு விரிவாக்கம் –சம்பங்கி –மானியம்
ரூ.1 இலட்சம்/எக்டர் - அரியலூர் மாவட்டம்



தேசிய தோட்டக்கலை இயக்கம் –
பசுமைக்குடில் – மானியம் ரூ. 600/ ச.மீ –
கிருஷ்ணகிரி மாவட்டம்






தேசிய தோட்டக்கலை இயக்கம் – சிறிய அளவிலான காளான் உற்பத்திக் கூடம் -
மானியம் ரூ.1 இலட்சம்/அலகு – நீலகிரி மாவட்டம்



தேசிய தோட்டக்கலை இயக்கம் – நிரந்தர மண்புழு உரக் கூடம் – மானியம் ரூ. 50,000/அலகு – நாகப்பட்டினம் மாவட்டம்




தேசிய தோட்டக்கலை இயக்கம்- குளிர்பதன சேமிப்புக் கிடங்கு – மானியம் ரூ. 3,360/மெ.டன் – கிருஷ்ணகிரி மாவட்டம்





தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் – விரிவான திட்ட அறிக்கை -
நிரந்தர பந்தல் அமைப்பு - மானியம் ரூ. 3 இலட்சம்/ எக்டர்



பனை பாதுகாப்பு இயக்கம்- பனை ஓலை மதிப்புக் கூட்டும் பயிற்சி



அரசு தாவரவியல் பூங்கா, உதகை



சிம்ஸ் பூங்கா, குன்னூர்



அரசு ரோஜா பூங்கா, உதகை



ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்,
அம்மூர், வேலூர் மாவட்டம்



காமா கதிரியக்கக்கூடம், போச்சம்பள்ளி,
கிருஷ்ணகிரி மாவட்டம், கேழ்வரகு மாவு சுத்திகரிப்பு




10.06.2026 அன்று **மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் திரு. ர. வினோத் அவர்கள்**, கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள 114 ஆண்டுகள் பழமையான நெல் இனப்பெருக்க நிலையத்தைப் பார்வையிட்டார்.




10.06.2026 அன்று **மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் திரு. ர. வினோத் அவர்கள்,** தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் ட்ரோன் இயக்கும் வசதியை நேரில் பார்வையிட்டார்.



தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள
அதி சன்ன இரகப் புதிய நெல் ஏடிடீ 61.






திருவள்ளூர் விதைச் சான்று உதவி இயக்குநர் அவர்களால் வல்லுநர் விதை உற்பத்தித் திடலில் வல்லுநர் விதைக் கண்காணிப்பு குழுவினருடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது

விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறை , விதை பரிசோதனை அலுவலர், தஞ்சாவூர் அவர்களால் விதைப் பரிசோதனை நிலையத்தில் முளைப்புத் திறன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது



கள்ளக்குறிச்சி மாவட்டம், மூங்கில்துறைப்பட்டில் அமைந்துள்ள கள்ளக்குறிச்சி–1 கூட்டுறவு சர்க்கரை ஆலையில் **மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர், திரு. ர. வினோத் அவர்களால்,** சிறப்பு அரவைப்பருவம் துவங்கப்பட்டது.




தஞ்சாவூரில் 03.07.2026 அன்று நடைபெற்ற விவசாயிகள் கருத்துக்கேட்புக் கூட்டத்தின் போது காட்சிப்படுத்தப்பட்ட வேளாண் இயந்திரங்களை **மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர், திரு. ர. வினோத்** மற்றும் **மாண்புமிகு சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர், திரு. ஏ. எம். ஷாஜஹான்** ஆகியோர் பார்வையிட்டனர்.



திருநெல்வேலியில் 11.07.2026 அன்று நடைபெற்ற விவசாயிகள் கருத்துக்கேட்புக் கூட்டத்தின் போது காட்சிப்படுத்தப்பட்ட வேளாண் இயந்திரங்களை **மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர், திரு. ர. வினோத் அவர்கள்** பார்வையிட்டார்.

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை—600 001.